சுடர்

சத்தியமூர்த்தி மலர்

மலர்-12

தில்லித் தமிழ் சங்கம்

விலை 40 காசு

1963

Sarojini Market, Sarojini Nagar, New Delhi-3.

A. & F. HARVEY LTD.,

MADURAI

S. INDIA

•

MANAGING AGENTS

FOR

MADURA MILLS CO., LTD.,

COTTON YARNS OF ALL DESCRIPTION
TYRE CORD WARP SHEET AND OTHER INDUSTRIAL PRODUCTS

PUNALUR PAPER MILLS LTD.,

ALL VARIETIES OF PAPER

THE INDIAN TEXTILE PAPER TUBE CO., LTD.,

ALL TYPES OF PAPER CONES, TUBES, ETC., FOR TEXTILE INDUSTRY
ALL TYPES OF PAPER CONTAINER

FENNER, COCKILL LIMITED.

V-BELTS, TEXTILE RUBBER ACCESSORIES
OIL SEALS 'O' RINGS ETC., ETC.

SERVING THE NATION
FROM 1932

Union Dairy

97. BAIRD ROAD-NEW DELHI

13822

Leading Manufacturers of

BUTTER & GHEE
FROM
FRESH CREAM

PURITY AND FRESHNESS GUARANTEED
HOME DELIVERY UNDERTAKEN

Please Ring up: **45263**

தில்லியில்
உயர்தர வெண்ணெய், நெய்,
புத்தம் புது 'கிரீம்'
தயாரிப்பாளர்கள்

யூனியன் பால் பண்ணை,
97, பேர்டு ரோடு, புதுதில்லி.

Certified by:

The Hon'ble Minister for Food & Agriculture, Government of India (1952), Commanders-in-Chief of Indian Army & The Navy, Royal Houses, High Government officials, Embassies, Clubs, Hotels & Schools.

BUY

GOVERNMENT OF INDIA

PREMIUM PRIZE BONDS

LARGER PRIZES

10% Premium on Maturity

After 5 Years

Prizes and Premium Free of Income Tax

AVAILABLE AT

All Post Offices, Offices of the Reserve Bank of India Branches of the State Bank of India and its subsidiaries.

NATIONAL SAVINGS ORGANIZATION

அழகுக்கும் சிக்கனத்துக்கும்

சிக்கனத்தையும் வனப்பையும்
சேர்த்துக்கொடுப்பது
கோ-ஆப்டெக்ஸ் ஆடைகளே
புடவைகள் - வேஷ்டிகள் - செக்குகள்
ஷர்டிங்குகள் - சோளிரகங்கள் முதலியன.
கண்ணைப் பறிக்கும் வர்ணங்கள் -
ரம்யமான டிஸைன்கள், நேர்த்தியான நெசவு
- இத்தனையும் - அத்துடன் சிக்கனமும்.

கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்

The Tamil Nadu (Madras State) Handloom Weavers' Co-op. Society Ltd. Madras 8

Available at all our Selling Units:

1. KHAN MARKET SALES EMPORIUM
   22-B, Khan Market, New Delhi.
2. KAROLBAGH SALES EMPORIUM
   10174, Gurudhwara Road, Karolbagh, New Delhi.
3. CO-OPTEX SALES EMPORIUM
   185, Sarojini Market, Sarojini Nagar, New Delhi-3.

சுடர்

சோபகிருது ௵ | மலர் 12 | 1963

பொருளடக்கம்

வாழ்த்து	கி. வா. ஜகந்நாதன்	... 8
மேன்மைநெஞ்சம்-சிம்மக்குரல்	சி. சுப்பிரமணியம்	... 11
அமரர் சத்தியமூர்த்தி	எஸ். எஸ். வாசன்	... 14
சத்தியமூர்த்தி	'சிட்டி'	... 17
சத்தியமூர்த்தியின் கலை ஆர்வம்	ஈ. கிருஷ்ணய்யர்	... 30
தீரர் சத்தியமூர்த்தி	'கல்கி'	... 33
ஒலிப்பதிவு வேண்டுகோள்	சத்தியமூர்த்தி	... 40
சத்தியமூர்த்தியும் பாரதியும்	வில்லி	... 42
என் தந்தையார்	லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி	... 45
மேயர் சத்தியமூர்த்தி	தி. கோ. அனந்தஸ்வாமி	... 53
தளசிங்கம்	கி. சந்திரசேகரன்	... 57
அருட்செல்வன்	கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி	61
குணவான் சத்தியமூர்த்தி	எஸ். எஸ்.	... 63
சொல் அமுதச் செல்வர்	தி. ஜ. ர.	... 65
சத்தியமூர்த்தி – சில நினைவுகள்	பெ. நா. அப்புஸ்வாமி	... 73
மோதிலால் நேருவும் சத்தியமூர்த்தியும்	சுந்தரராஜன்	... 85
கல்லூரி நினைவுகள்	எஸ். ஸ்ரீனிவாசன்	... 89
யானறிந்த சத்தியமூர்த்தி	கே. ஆர். ஆர். சாஸ்திரி	... 92
ரசிகத் திருஉருவம்	தி. சா. ராஜு	... 93
தமிழ் ஓசை	எம். பக்தவத்சலம்	... 97
மலராள்!	சு. கிருஷ்ணமூர்த்தி	... 101
சிலப்பதிகாரத்தில் இலக்கியம்	ராஜம் ராஜாமணி	... 109
கருமி	எஸ். நாராயணன்	... 123
யாரே கண்டார்!	நா. வேணுகோபால நாயகர்	129
ஆராய்ச்சியும் ஆதாயமும்	'தூன்'	... 143
தியாகி யார்?	'தமிழன்'	... 151
மேகம் விடு தூது	'பத்மம்'	... 166
சுதந்திர இந்தியாவில் விஞ்ஞான வளர்ச்சி	பெ. நா. அப்புஸ்வாமி	... 171
கலைமான்	வண்ணமுத்து	... 182
வெண்ணிலா	ஹா. கி. வாலம்	... 185

C. RAJAGOPALACHARI

60, BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS-17

22—4—63

அகாலத்தில் யமன் கொண்டுபோய் விட்டான், நண்பரும் தேசத்தொண்டரும் மேதாவியுமான சத்தியமூர்த்தி அவர்களை. தற்போது அவர் இருந்திருந்தால் எவ்வளவு உதவியாக இருந்திருப்பார் என்று எண்ணும்போது துக்கம் பொங்குகிறது.

(ஒப்பம்) இராஜகோபாலாச்சாரி.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களுக்கு சென்னை மாநில முதலமைச்சர்

ஸ்ரீ காமராஜ் அவர்களின்

பாராட்டு

*

தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் நமது விடுதலைப் போரை முன்னின்று நடத்திய தலைவர்களில் ஒருவராவார்.

எந்தவிதக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். நாடு முழுவதும் சென்று அவர் அன்னிய ஆட்சியை எதிர்த்து சிம்மக்குரல் கொடுத்தார். தமிழ்நாட்டில் அவர் விஜயம் செய்யாத கிராமமே இல்லையென்று சொல்லலாம். பெரும் வருவாய் வரக்கூடிய வக்கீல் தொழிலை விட்டு விட்டு கடைசி மூச்சு உள்ளவரை சுதந்திரப்போர் வீரராக வாழ்ந்தார். சட்ட சபையிலும் வெளியிலும் அவர் இட்ட முழக்கம் அன்னிய ஆட்சியை நடுங்க வைத்தது. ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாழ்க்கை நம் எல்லோருக்கும் நல்ல வழிகாட்டியாகும். அவர் காட்டிய வழி நின்று நாம் தன்னலமின்றி மக்களுக்கு சேவை செய்வோமாக!

வாழ்க அவர் நாமம்!

[ஸ்ரீ சத்தியமூர்த்தியின் 75வது பிறந்த தினத்தை யொட்டி 19-8-62இல் சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட விசேஷ வாழ்க்கைச் சித்திரத்திற்காக சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் அளித்த பாராட்டுரை.]

No. JE—3(20)/62/4351

OFFICE OF THE COMMISSIONER OF
IMCOME TAX, DELHI & RAJASTHAN

Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha, 1884 (S)

To

The Hon. Secretary,
Delhi Tamil Sangam,
M. G. 1/3038, Parliament Street,
Connaught Circus, New Delhi-1.

Dear Sir,

Sub: EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961 TO THE DELHI TAMIL SANGAM

Donations made to "The Delhi Tamil Sangam, New Delhi" will be exempt under Section 88 of the Income-Tax Act, 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,

Sd. R. N. MUTTOO

Commissioner of Income Tax.

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

அமரர் சத்தியமூர்த்தி

கி. வா. ஜகந்நாதன்

வளம்சிறந்து புறநாட்டார் வியக்கவளர்ந் திருந்தநிலம்,
மலையி லெல்லாம்
தளம்சிறந்த இமயமலை தனையுடைய தான்மநெறி
சார்ந்த ஞான
உளம்சிறந்த பெரியோர்கள் பிறக்கின்ற திருநாடென்
றுலகோர் போற்றக்
களம்சிறந்த பாரதநா டடிமைநிலை மாற்றுதற்குக்
காந்தி வந்தான். (1)

அன்னவன்றன் தலைமையிலே சாந்தநெறிப் போராட்டம்
ஆற்று தற்கு
முன்னடைந்த பெருவீரர் பலர்; தமிழ்த்தாய் புதல்வர்களா
முந்தி வீரம்
துன்னியவர் பலர்; அவருள் வலிமையுறு பெருவாக்கும்
துணிவும் மேதை
மன்னியநற் பாங்குமுறு பெரியவன்சத் தியமூர்த்தி
மாட்சி ஓர்மின். (2)

ஆங்கிலத்தில் பேசுங்கால் சொல்கின்ற பொருளையெல்லாம்
அலசிக் காட்டிப்
பாங்குபெறத் தன்கருத்தைப் பகைவர்களும் வியக்கும்வணம்
பரப்ப வல்லோன்;
தேங்குபலர் கூடுசட்ட சபையினிலே அவனுரையைச்
செவிசாய்ப் போர்கள்
ஈங்கிவனோர் சங்கீதக் கச்சேரி செய்தானென்
றெண்ணு வார்கள். (3)

எதிராளி சொலும்சொல்லுக் குடனெதிர்மாற் றங்கொர்டுக்க
எழும்போ தன்னேன்
சதுர்வேறு யார்மட்டும் காணஇய லாதாரும் ;
சபாஷென் றேத
விதம்விதமாய் அவன் தொடுத்து மொழிதிறனே யாவரே
வியவார் ; வாக்கில்
பதம்அவனைத் தேடிவந்தே எனைக்சொல்க எனஏங்கிப்
பணிந்து நிற்கும். (4)

தேசபக்தி ஊட்டுதற்கா அவன்ஏறிச் சொற்பொழிந்து
சேவை செய்த
ஆசரிய மேடைகளுக் கெல்லேயுண்டோ ? ஆங்கிலமோ
அதனே டின்னும்
வீசுபுகழ்த் தமிழுரையில் வீரமிகக் கொப்புளிக்கும் ;
மேற்கோ ளாகத்
தேசுடைய பாரதமும் ராமாய ணக்கதையும்
சிறந்து நிற்கும். (5)

வடமொழியி லிருந்துகவி இடைச்சொல்வான்; ஆங்கிலத்தில்
வளஞ்சேர் பாட்டைத்
திடமுடனே எடுத்துரைப்பான்; தமிழ்க்குறளும் இடையிடையே
சேர்ப்பான் ; வாக்கில்
நடனமிடும் கலேமகளின் பேராட்சி காணும்வகை
நண்ணி நின்றன்.
படமதனைக் காட்டுதல்போல் அவன்பேச்சில் பொருள்தெளிவாப்
பதிந்து காட்டும். (6)

பலபெரிய அவையினிலே சொல்லுக்கிங் கிவனொருவன்
பார்த்தன் போலென்
றுலகறியச் செய்துநின்றான்; பலதொண்டும் செய்துயர்ந்தான்
ஓங்கு தொண்டர்
பலர்தனைப்போல் ஆவதற்காப் பயிற்சிதந்தான்; தன்நலத்தைப்
பாரா தென்றும்
நிலவுபிறர் நலம்எண்ணித் தியாகிகளில் சிறந்தவனா
நின்றான் அம்மா. (7)

அலங்காரப் பிரியன்;இசைப் பிரியனிலக் கியப்பிரியன்;
அன்னை நாட்டின்
விலங்காரத் தறிக்கும்தொண் டினிற்பிரியன்; காந்திமகான்
விதித்த வாறே
துலங்கார்வச் சாந்திநெறிப் போர்செய்வ திற்பிரியன்;
சூதொன் றில்லா
திலங்கார்க்கும் உபகாரம் செய்வதிலே மிகப்பிரியன்;
இவன்போ லுண்டோ? (8)

வயிரமென வருமொழியான்; வைரமிலாத் திருவுளத்தான்;
மாண்பார் நண்பர்
உயிரிவனென் றன்புசெய நின்றபண்பன்; தான்தலைமை
உறுதல் வேண்டிச்
செயிருடைய செயல்செய்யா நேர்மையுடை யோன்; இன்று
தெய்வ மாகி
உயர்வுறுகின் றனன்; சத்ய மூர்த்தியவன் பெரும்புகழ்தான்
ஓங்கி வாழி! (9)

ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி

தோற்றம்: 19-8-1887 மறைவு: 28-3-1943

மென்மை நெஞ்சம் – சிம்மக்குரல்

சி. சுப்பிரமணியம்

சத்தியமூர்த்தி என்றால் சிம்மக்குரல்தான் ஞாபகம் வருகிறது. பொது மேடைகளில் பேச எழுந்தால், அவர் பேச்சில் இடி இடிக்கும். கண்டனக் கணைகள் எதிரிகளைத் துளைத்து எடுக்கும். சத்தியமூர்த்தி பேச்சில் எதுகை மோனைகளைக் காண முடியாது, இப்போதும் தான் சிலர் பேச்சைக் கேட்கிறோம். 'கா'னாவில் ஆரம்பித்து 'கா'னாவிலேயே அடுக்குமொழிகளை அடுக்கி முடிக்க வேண்டும் என்று அதில் அவசியமற்ற, அர்த்தமற்ற வார்த்தைகளைப் புகுத்தி, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு போகிறார்கள். கேட்போருக்கும் பேசுகிறவர் என்ன சொல்கிறார், என்ன சொல்ல முயலுகிறார் என்று புரியாது. தான் என்ன பேசுகிறோம் என பேசுபவருக்கும் தெரியாது. எல்லாவற்றையும் போட்டுக் குழப்பி, தன்னையும் கேட்போரையும் குழப்புவதுதான் இன்றையச் சில பேச்சாளர்களின் திறமையாக இருக்கிறது. ஆளும் கட்சியை அர்த்தமின்றி திட்டுவது அவர்கள் மற்றொரு வேலை. ஆளும் கட்சியை கண்டிப்பது எதிர்க் கட்சியின் கடமை, உரிமை. ஆனால் கண்டிக்கும்போது எதை, எதற்காகக் கண்டிக்கிறோம், ஆளும் கட்சி தவறு செய்தால், எங்கே தவறு, அதை எப்படி நிவர்த்திக்க வேண்டும், என்று ஒரு வரையறையின்றி, ஆனால் அடுக்கு மொழியில் பேசுவது தான் இன்றைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலருடைய பொதுமேடைப் பேச்சாகக் கேட்கிறோம்.

சத்தியமூர்த்தியின் பேச்சு அப்படி இராது. பேச்சில் கோவை யிருக்கும். பொருளிருக்கும். சொன்னதையே பலமுறை பல வழிகளில் திருப்பிச் சொல்ல மாட்டார். அன்றைய ஏகாதிபத்தியத்தைச் சூடு பறக்கத் தாக்கிப் பேசுவார், ஆனால் பேச்சில் தவறு காண முடியாது. கேட்கின்ற மக்கள் வீறுகொண்டு எழச் செய்யும் வீரக்கனல் தெறிக்கும். அன்று அடிமையில் கட்டுண்டு கிடந்த மக்களைத் தட்டி எழுப்பும் ஆவேசம் இருக்கும், யாவரும் வியக்கும் வண்ணம் அதில் பொருள் பொதிந்து கிடக்கும்.

அக்காலத்தில் மேடை ஏறிப் பேசத் தெரிந்தவர் மிகக் குறைவு. எனவே சத்தியமூர்த்தியின் பேச்சு என்றால் திரள்திரளாக மக்கள் கூடுவர், அத்தகைய கூட்டத்தை

இன்று நாம் நம்து பிரதமர் கூட்டங்களில்தான் காண முடியும்.

அவர் தனக்குத் தோன்றியதை வெட்ட வெளிச்சமாகச் சொல்ல என்றுமே தயங்கியதில்லே. இன்றைக்கும் யாருடைய பொதுக் கூட்டப் பேச்சையாவது ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானுல் மக்கள் சத்தியமூர்த்தியின் பேச்சுடந்தான் ஒப்பிட்டுப் பார்க்கிருர்கள். அவ்வளவு தூரம் அவர் பேச்சு மக்களைக் கவர்ந்திருந்தது. ஆனுல் அவர் மேடையைவிட்டு இறங்கியதும் நாம் காணும் சத்தியமூர்த்தியே வேறு. மேடையில் பேசிய சிம்மக் குரல்தானு இப்படிக் குழைந்து பேசுகிறது என்ற ஐயம் நமக்கு ஏற்படும். உடல் நலம் கெட்ட காலங்களிலும் கூட, பொதுக் கூட்டங்களுக்குச் சென்று பேசுவதை அவர் நிறுத்தியதில்லே ஒரு நாளில் **10** முதல் **20** கூட்டங்களில் கூட இடைவிடாது பேசுவார்.

சட்டசபையில் அங்கத்தினராக இருந்த காலத்தில், சட்டசபையில் அன்றைய ஆளும் தலேவர்களேப் பேச்சுப் பின்ன

- தலேநகரில் வாழும் தமிழ் அன்பர்களே ஒன்றுகூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலேகளே அனுபவிக்கச் செய்கிறது.
- தமிழகக் கவிஞர்களேயும் ஏனைய பெரியோர்களேயும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.
- பொங்கல், புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களேக் கொண்டாடுகிறது.
- சத்தியமூர்த்தி நினைவு நூல்நிலேயம், இலவச வாசகசாலே, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.
- ஆண்டுதோறும்' 'சுடர்' மலரை உயர் கலே மலராக வெளிபிடுகிறது.
- தலேநகர மக்களுக்கு நல்ல தமிழ்நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.
- அவ்வப்போது கூடும் கருத்தரங்குகள் மூலம் தமிழ் மொழி தமிழரைப் பற்றிப் பிற மொழியினரும் அறிந்து கொள்ள வழி செய்கிறது,
- பிற மொழிகளின் இலக்கியச் செல்வங்களே தமிழ்ப் பெயர்ப்பு நூல்கள் மூலம் அறிந்து கொள்ள வகை செய்கிறது,

லில் சிக்கித் திக்கு முக்காடச் செய்வார். கேள்விக்கு மேல் கேள்வி போட்டுப் படாதபாடு படுத்தி வைப்பார். சட்டசபையில் கேள்வி நேரம் என்ருல், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அன்று தலைவலிதான். சத்தியமூர்த்தி அப்படி அவரை ஆட்டி வைப்பார். ஏதோ பதில் சொல்லி மழுப்பிவிடலாம் என்று முடியாது. ஆனால் அவரே சட்ட சபையை விட்டு வெளி வந்ததும், அந்த அதிகாரியின் தோள் மேல் கை போட்டுக்கொண்டு அன்புடன் அளவளாவுவார்.

வாலிபர்களிடம் அவருக்கு எப்போதுமே தனி அன்பு உண்டு. ஒருக்கால் அவர் உள்ளமும் என்றுமே வாலிபத் துடிப்புடன்தான் இருந்ததோ என்னவோ? வாலிபர்களைக் கண்டால் அவர்களிடம் தன்னை மறந்து அளவளாவ ஆரம்பித்து விடுவார். வருங்கால பாரதம் அவர்கள் கையில்தான் புதுமுகம் பெறப் போகிறது என்பது அவர் கருத்து. எனவே வருங்கால பாரதத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்று அவர்களைத் தட்டிக் கொடுத்து புத்திமதிகள் கூறுவார். அவர் தந்த உற்சாகம்தான் பல வாலிபர்களை வீறுகொண்டு எழச் செய்து தேச சேவையில் — அன்றைய சுதந்திர இயக்கத்தில் — வீராவேசத்துடன் குதிக்கச் செய்தது. அவர் தட்டிக் கொடுத்த வாலிபர்கள்தான் இன்று தலைவர்களாகி நாட்டு முன்னேற்றத்திற்கு உழைத்து வருகிருர்கள்.

மக்களிடம் அவருக்கு இத்தனை செல்வாக்கு இருந்தபோதிலும் அவருக்கு எதிர்ப்பும் இல்லாமலில்லை. அவர் மேல் அவதூறு கூறுபவர்களும் அப்போது இருக்கத்தான் செய்தார்கள். ஆனல் சத்தியமூர்த்தி இதற்கெல்லாம் கோபப்படுவதே கிடையாது. சமூகத்தொண்டு செய்ய ஆரம்பித்தால் ஏச்சுக்கும் தயாராகத்தான் இருக்க வேண்டும் என்று அறிந்திருந்த அவர் இதைக் கண்டு புன்னகை பூப்பார்.

அவர் நாட்டுக்காகவே, நாட்டின் சுதந்திரத்திற்காகவே தன் ஆயுள் முழுதும் உழைத்தார். இடைவிடா உழைப்பும், அடிக்கடி சிறைவாசமும் அவர் உடல்நலத்தைப் பெரிதும் பாதித்தது. எனவே அவர் சிறைச்சாலைக்குச் செல்ல அஞ்சாவிட்டாலும் அவர் உடல் நலம் அதற்கு ஒத்துவரவில்லை. அதனல்தான் அவர் தன் 56-ம் வயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர் எதற்காக முழுமூச்சுடன் பாடுபட்டாரோ அந்தச் சுதந்திரத்தை, அதன் பிற்கால வாழ்க்கையை அனுபவிக்க இயலவில்லை. இருப்பினும் அவர் எந்த லட்சியத்திற்காக உழைத்தாரோ அது கைகூடி இன்று பாரத நாடு சுதந்திர நாடாக உலகில் திகழ்வது அவரதுஆன்மாவிற்குப்பெரும் சாந்தியாக இருந்துவரும்.

❋

அமரர் சத்தியமூர்த்தி

எஸ். எஸ். வாசன்

தலைநகரில் தமிழர்களுக்கு தில்லி தமிழ்ச் சங்கம் ஒரு தாயகமாக விளங்கி வருகிறது. கலைஞர்களையும். கவிஞர்களையும், நடிகர்களையும் மற்றுமுள்ள பிறமுகர்களையும் தமிழர்கள் சார்பாக வரவேற்று டில்லியில் உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் வடக்கு தெற்கு இரண்டையும் இணைக்கும் ஒரு அரிய பாலமாக அது பணி புரிந்து வருவதோடு அரிய தமிழ் நூல்களையும், **சுடர்** என்னும் பத்திரிகையையும் வெளியிட்டு வருகிறது. இவ்வாண்டு **சுடர்** மலரை சத்தியமூர்த்தி மலராக அவர்கள் வெளியிட முன்வந்து இருப்பதைப் பாராட்டுகிறேன்.

அமரர் திரு. சத்தியமூர்த்தியை அறியாதவர்கள் யாரும் கிடையாது. அவரை நினைத்தவுடன் நம் கண்முன் காந்தி யுகம் வருகிறது. நமது சுதந்திரப் போராட்டத்தின் பொற்காலம் ஓரளவு நம் நெஞ்சைப் பரவசப் படுத்துகிறது. முதன் முதலில் நான் அவர் பிரசங்கத்தை எனது ஊராகிய திருத்துறைப்பூண்டியில் தான் கேட்டேன். அது இன்னும் என் மனதில் அப்படியே பசுமையுடன் இருக்கிறது. சொல்லுக்கு ஒரு வல்லமை உண்டு என்பதை சத்தியமூர்த்தி போன்றவர்களின் பேச்சில் கண்டோம். இல்லாவிட்டால், நான் மாணவனக இருந்த காலத்தில் கேட்ட ஒரு பிரசங்கம் இன்றும் என் மனதில் எவ்வாறு அப்படியே பதிந்திருக்கக்கூடும் ?

அன்று அவர் பேசும்போது கோட்டு, டர்பன், அங்கவஸ்திரம், பஞ்சகச்சம், கீற்று சந்தனம் முதலிய அலங்காரங்களுடன் ஒரு பள்ளிக்கூடத் தலைமை உபத்தியாயரைப் போல் காட்சி யளித்தார்.

அவர் பேசிய காலத்தில் பேச்சுக்கு அவசியம் இருந்தது. அன்றைய அரசியல் பேச்சுக்களெல்லாம் சுதந்திரம், தியாகம் என்ற உயர்ந்த கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்பட்டன. மக்களின் கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும் ?

பல வருஷங்களுக்குப் பிறகு, நான் சென்னைக்கு வந்து ஆனந்த விகடனை நடத்தத் தொடங்கினேன். அப்பொழுது திரு. சத்தியமூர்த்தியை அடிக்கடி சந்திக்கும்பாக்கியம் எனக்கு கிடைத்தது. என் இல்லத்திற்குள் நுழையும் போது அவர் வாய் நிரம்ப

"என்ன ஸ்ரீநிவாசா, சௌக்கியமா?" என்று மணிபிரவாளமாக என் பெயரை கூப்பிட்டுக் கொண்டே நுழைவார். அவர் குரலில் மனம் நிறையும்.

அவரைச் சில காலம் என் விருந்தினராக இருக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவரும் சம்மதித்தார். பெங்களூரில் என்னோடு கூட அவர் இருந்த காலத்தை நான் என்றும் மறக்க முடியாது. அப்பொழுதுதான் அவருக்கு இலக்கியத்தில் எத்தனை ஈடுபாடு உண்டோ அத்தனை ஈடுபாடு குழந்தைகளிடத்திலும் உண்டு என்பதை அறிந்தேன். பொதுக் கூட்டங்களுக்குப் போகும் நேரம் போக, மீதி நேரங்களில் அவர் தன் அருமை மகள் லட்சுமியுடனும் என் குழந்தைகளுடனும் விளையாடிக்கொண்டிருப்பார். 'குழந்தைகள் எல்லாம் இறைவன் எழுதிய இலக்கியங்கள். இவர்களிடமிருந்து நாம் பல அற்புதங்களை கற்றுக்கொள்ள முடியும்' என்று கூறுவார். குழந்தைகளுக்குக் கொடுக்காமல் எதையும் அவர் சாப்பிட்டதை நான் பார்த்ததில்லை. ஆம். குழந்தைகளுக்குக் கொடுக்க முடியாத ஒன்றை அவர் சாப்பிடுவதும் இல்லை.

அவர் ஒரு சுக புருடர். சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பதுமட்டுமல்ல அவரது ஆசை. சுதந்திரத்தின் மூலம் மக்கள் எல்லோருக்கும் சுக வாழ்வு கிடைக்க வேண்டுமென்பதே அவர் ஆசை. ருசியான உணவு ருசியான பேச்சு, ருசியான வாழ்க்கை, ருசியான சங்கீதம், நாட்டியம், சினிமா, டிராமா போன்றவை எல்லாம் வாழ்வில் நிரம்பி இருக்க வேண்டும் அவருக்கு. 'ஆசையை அடக்கு; உப்பு இல்லா பத்தியம் இரு; சிரிக்காதே; சினிமா பார்க்காதே' என்ற இதுபோன்ற உபதேசங்களை அவர் செய்ததே இல்லை.

அரசியல் வாழ்வில் அவரை எதிர்க்காத கட்சிகளே கிடையாது. ஆனாலும் அவருக்கு எதிரிகளே கிடையாது. அவரது பேச்சும் நடத்தையும் எதிரிகளையும் நண்பர்களாக்கிவிடும். அவருடைய போர் கொள்கையுடன்தான்; மனிதர்களுடன் அல்ல.

தேர்தல் என்று வந்து விட்டால் திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் சத்தியமூர்த்தி அவர்களும் போட்டி

VISITING DELHI?

THEN

REMEMBER US FOR

Excellent Boarding and Lodging in SOUTH INDIAN STYLE

The South Indian Boarding House

AND FOR

Clean, Wholesome, Delicious North and South Indian Dishes

Modern Coffee House

(Opp. TELEPHONE EXCHANGE)

Connaught Circus, New Delhi.

PHONE No. 48188 GRAMS: 'SIBHOUSE

யிடுவார்கள். இரண்டும் இரண்டு சிங்கங்கள். இருவரும் சிறந்த பேச்சாளர்கள். இருவரும் இலக்கிய மேதைகள். அவர்களது தேர்தல் பேச்சை இலக்கியக் கூட்டம்போல் பொதுமக்கள் ரசிப்பார்கள். பேச்சிலே வேகம் இருக்கும். காரம் இருக்கும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரையொருவர் மதிக்கும் உயர்ந்த பண்பு அதில் தெரியும்.

இன்று நாம் சுதந்திரம் அடைந்துவிட்டோம். பாராளு மன்றத்தில் நமது அங்கத்தினர்கள் பலர் இருக்கிறார்கள். ஆயினும் சத்தியமூர்த்தியின் குரல் அங்கு முழங்கவில்லையே என்ற கவலை தமிழர்களுக்கு இன்றும் உண்டு.

சமீபத்தில் சத்தியமூர்த்தியின் சிலை ஒன்றை சென்னை நகரசபைக் கட்டிடத்தில் பாரதப் பிரதமர் நேருஜி திறந்து வைத்தார். இத்தனை வருடங்களுக்குப் பிறகா அவருக்கு ஞாபகார்த்தச் சின்னம் என்று தோன்றலாம். ஆனால் என் போன்றோர்களுக்கு அந்தக் கவலை ஏற்படாததற்கு காரணம் உண்டு. அதுதான் இங்கு சத்தியமூர்த்தியின் நினைவுச் சின்னமாகவே இருந்து நமது காமராஜ் பணி புரிந்து வருவது. மக்களுக்கு சுகவாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தன் சுகத்தை எல்லாம் தியாகம் செய்துவிட்டு அல்லும் பகலும் நாட்டுக்கு உழைக்கும் ஒரு காமராஜ் அவர்களை சத்தியமூர்த்தி எங்களுக்கு அளித்து இருக்கிறார்.

வாழ்க அமரர் சத்தியமூர்த்தியின் நினைவு!

Grams: MURSOKS

Phone: 51388

Regd. No. 141241

WHITE HORSE SOAP

A Superfine Soap

For Silk and Linen Wash

MANUFACTURERS

D. BANGARU CHETTY,

NATIONAL INDUSTRIES,
220, T. H. Road, Madras-21

Stockists: SOUTH INDIAN CONCERNS LTD.,
Matunga, Bombay-19.
MADRAS STORES, 96, Baird Road, New Delhi.

சத்தியமூர்த்தி

' சிட்டி '

நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட நூற்றுக்கணக்கான வீரர்களில் சத்தியமூர்த்தி சில அம்சங்களில் இணையற்றவராக விளங்கினர். தென் பாரதத்தில், சிறப்பாகத் தமிழகத்தில், சுதந்திரத்திற்காக, வாழ்நாளையே அர்ப்பணித்த தியாகிகளில் சத்தியமூர்த்தி தலைசிறந்தவர். ஓர் இயக்கத்தின் தலைவருக்குத் தேவையான பண்புகளை இயற்கையாகப் பெற்றிருந்த சத்தியமூர்த்திக்கு மற்றவர்களிடையே காணப்படாத விசேஷமான திறமை வாய்த்திருந்தது. அதுதான் அவருடைய சொல்வன்மை.

தூய்மையான தேசபக்தியின் அடிப்படையில் மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலைப் போராட்டத்தின் தளபதிகளில் ஒருவராக நின்று போர் முழக்கம் செய்த சத்தியமூர்த்தியின் சக்தி வாய்ந்த ஆயுதம் அவருடைய பிரசார வன்மைதான். மேடைப் பிரசங்கங்களில் நிகரற்று விளங்கிய சத்தியமூர்த்தி தம்முடைய திறமை முழுவதும் மக்கள் நலனுக்குப் பயன்படும் வகையில் தம் வாழ்க்கையைப் பொது நல சேவைக்கு அர்ப்பணித்துக்கொண்டார். தமக்கு இயல்பாக வாய்த்திருந்த ஆற்றலைத் தம்முடைய சொந்த நலனுக்காக அவர், என்றும் பயன்படுத்தவில்லை. ஒரு போர் வீரனுக்கு இன்றியமையாத தைரியம், கடும் உழைப்பு, அபாயத்திற்கு அஞ்சாமை முதலிய குணங்களுடன் உழைப்பு, கட்டுப்பாடு முதலிய பண்புகளும் அவரிடம் நிறைந்திருந்தன.

சத்தியமூர்த்தி 1887-ம் ஆண்டு ஆகஸ்டு 19-ந் தேதி புதுக்கோட்டை ராஜ்யத்தில் திருமயத்தில் பிறந்தார். புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியிலும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி பயின்று பட்டம் பெற்ற பின் தமது தந்தை ஸ்ரீ சுந்தர சாஸ்திரிகளைப் போலவே வக்கீல் தொழில் புரிவதற்காகச் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார்.

சட்டப் படிப்பு முடிந்த பின் சத்தியமூர்த்தி வக்கீல் தொழிலைத் தமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளவில்லை. அந்தப் பயிற்சியை அரசியல் சேவைக்கு ஒரு படியாகவே அவர் கருதினார்.

அந்தக் காலத்தில் நாட்டு மக்களிடையே ஓர் எழுச்சி ஏற்பட்டிருந்தது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் அடிமைப்பட்ட பாரத மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்று விடுதலை பெற விரும்பினார்கள். அரசியல் துறையில் அனுபவம் பெற்ற பல தலைவர்கள் ஆளும் வர்க்கத்தினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி நாட்டுக்குப் படிப்படியாகச் சுதந்திரம் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கம் அவ்வப்பொழுது சீர்திருத்தங்கள் என்ற பெயரில் நம் நாட்டுக்கு அளித்து வந்த சலுகைகளே இந்தச் சுதந்திரத்தின் அம்சங்களாக விளங்கின. காங்கிரஸ் மகாசபையின் ஆதரவில் 1918-ம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் சத்தியமூர்த்தி முதன்முதலாக முன்னணிக்கு வந்தார். அப்பொழுது அரசாங்கம் அளிக்க முன் வந்த சீர்திருத்தங்களில் அடங்கிய சலுகைகள் போதாது என்று சத்தியமூர்த்தி வாதாடினார். ஸ்ரீமதி சரோஜினி தேவியின் தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் அனுபவம் முதிர்ந்த பெஸன்ட் அம்மையார் போன்ற பல தலைவர்களைச் சத்தியமூர்த்தி எதிர்க்க நேரிட்டது. அந்தச் சமயத்தில் ஆற்றிய சொற்பொழிவு பிற்காலத்தில், சத்தியமூர்த்தி ஓர் ஒப்பற்ற பேச்சாளராக வளர்ச்சியடைவதற்கு அடிகோலிற்று.

இத்தகைய வெற்றிகரமான அரசியல் பிரவேசத்தைச் சத்தியமூர்த்தி வெகு விரைவில் தம்முடைய பொதுப் பணிக்குத் துணையாகப் பயன்படுத்திக் கொண்டார். பொதுக் கூட்டங்களில் பேசும்பொழுது தாம் விளக்குவதற்காக எடுத்துக்கொண்ட கருத்து கேட்போர் மனதில் எளிதில் பதியும்வண்ணம் அவர் தமது வாதங்களைத் தயாரிப்பதில் இடைவிடாது பயின்று வந்தார். பிரசாரம் செய்வதில் அவருக்கு ஏற்பட்டிருந்த திறமையைக் கண்டு வயது முதிர்ந்த தலைவர்களும் வியந்து பாராட்டினர். விரைவிலேயே தம்மைவிட அனுபவத்தில் தேர்ந்த தலைவர்களுடன் உழைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

சுதந்திர உணர்ச்சி பெற்று விழிப்படைந்த பாரத மக்களை அடக்குவதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் அப்

பொழுது கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. மக்களிடையே அச்சத்தை விளைவிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் சட்டபூர்வமாக்க முயன்ற பொழுது மகாத்மா காந்தி அத்தகைய கொடுங்கோன்மையை எதிர்க்க வேண்டுமென்று தீர்மானித்தார். அந்த எதிர்ப்பின் விளைவாக ஏற்பட்ட விபரீத நிலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொடுமைக்கு உட்பட்டனர். பஞ்சாப் படுகொலை என்று வர்ணிக்கப்படும் சம்பவத்தில் பிரிட்டிஷ் ராணுவத்தின் அடாத செய்கையினுல் பஞ்சாப் மாகாணத்தில் பலர் உயிரிழந்ததோடு மற்றும் பலர் பலவிதத்திலும் துன்புறுத்தப்பட்டனர். இந்த விளைவுகளினுல் மகாத்மா காந்தி போன்ற தலைவர்கள் வேதனையுற்று மேலே நடக்கவேண்டியதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது பிரிட்டிஷ் அரசாங்கம் சீர்திருத்தங்கள் அளிக்கும் விஷயங்களில் ஈடுபட்டிருந்தது. இதற்காக இங்கிலாந்தில் அரசாங்கம் அமைத்திருந்த பார்லிமெண்ட் கமிட்டியின் முன் சாட்சியம் அளிப்பதற்காக நம் நாட்டிலிருந்து சில தூது கோஷ்டிகள் சென்றன. காங்கிரஸ் மகாசபையின் சார்பாக அனுப்பப்பட்ட தூது கோஷ்டிக்குக் காரியதரிசியாக சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டார்.

தம்முடைய முப்பத்திரண்டாவது வயதில் தம்மைவிட வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்த தலைவர்களுடன் இங்கிலாந்திற்குச் சென்ற அவர் அந்த நாட்டு மக்களின் பாராட்டுதலை உடனடியாகப் பெற்றுவிட்டார். இங்கிலாந்துக்குப் புறப்பட வேண்டுமென்று உத்தரவு வந்தவுடன் அவர் தம்முடைய வக்கீல் தொழில் விவகாரங்களை அப்படியே விட்டுவிட்டு நாட்டுப் பணியைப் பெரிதெனக் கருதிப் புறப்பட்டுவிட்டார். சொற்பொழிவுத் துறையில் ஆற்றல் மிகுந்த சீனிவாச சாஸ்திரியாருடன் பிரிட்டனுக்குச் சென்ற அவர் சீக்கிரத்தில் தம்முடைய சொந்த வாக்கு வன்மையால் பெரும்புகழ் பெற்ருர். அந்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த ஆறு மாத காலத்துக்குள் சத்தியமூர்த்தி பிரிட்டனிலும், அயர்லாந்திலும் எல்லா முக்கிய நகரங்களுக்கும் விஜயம் செய்து நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்களில் பாரத மக்களின் சுதந்திர வேட்கையைப் பற்றி எடுத்துரைத்தார். மேடைப் பிரசங்கத்தில் மேதையென விளங்கிய அவரின் சொற்களைக் கேட்க பிரிட்டிஷ் மக்கள் நூற்றுக்கணக்காகக் குழுமி வந்தனர். பிரிட்டிஷ்

அரசியல் ஸ்தாபனங்கள் மட்டுமின்றி அமெரிக்க ஸ்தாபனங்களும், பிரபல பத்திரிகைகளும் அவரின் சொற்பொழிவுகளுக்கும், கட்டுரைகளுக்கும் எண்ணற்ற கோரிக்கைகள் சமர்ப்பித்தன. பாரத மக்களின் முன்னேற்றத்திற்காகச் சத்தியமூர்த்தி பிரிட்டனில் செய்த சேவை அந்நாட்டிலும், நம் நாட்டிலும் பல பிரமுகர்களால் பாராட்டப்பட்டது. இவ்வளவு இளம் வயதில் சொல்வன்மையால் எதிரிகளின் மனதையே மாற்றும் திறமையை வெளியிட்ட சத்தியமூர்த்தி தாய்நாடு திரும்பியதும் காங்கிரஸ் மகாசபையின் முக்கிய பிரசாரகராகப் பணியாற்ற முற்பட்டது, அவருடைய பொது வாழ்வின் இயற்கையான வளர்ச்சியாக விளங்கிற்று.

நாட்டின் விடுதலை இயக்கம், மகாத்மா காந்தியின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கமாக மாறி ஆளும் வர்க்கத்தினருக்கு ஓர் அறைகூவலாக வளர்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து நாட்டின் விடுதலையைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் காங்கிரஸ் தலைவர்களிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்ற தலைவர்கள் சட்டசபைகளின் மூலம் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்று திட்டமிட்டனர். இதன் விளைவாகக் காங்கிரஸ் மகாசபைக்குள்ளேயே ஸ்வராஜ்யக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டபோது சத்தியமூர்த்தி அந்தக் கட்சியின் முக்கிய அங்கத்தினராக விளங்கினார். 1925-ம் ஆண்டில் அவர் மீண்டும் ஒரு முறை பிரிட்டனுக்குச் சென்று ஸ்வராஜ்யக் கட்சியின் கொள்கைகளை அந்நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கினார். இந்த முறையில் அவர் செய்த சேவையைப் பண்டித மோதிலால் நேரு வெகுவாகப் பாராட்டினார். பின்னர் வட பாரதம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து அவர் ஸ்வராஜ்யக் கட்சிக்காகப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

சட்டசபைகளில் அங்கம் வகிப்பதன் மூலம் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேண்டுமென்று ஸ்வராஜ்யக் கட்சி திட்டமிட்டபோது சத்தியமூர்த்தியின் திறமையைப் பற்றி மகாத்மா காந்தி விசேஷமாக வர்ணித்தார். "அரசாங்கத்தின் ஏகபோக நடத்தையை எடுத்துக் காட்டுவதற்குத்தான் சட்டசபைகளுக்குள் செல்ல வேண்டுமென்றால் அதற்குச் சத்தியமூர்த்தி ஒருவர் மட்டும் போதுமே" என்று மகாத்மா காந்தி அவரைப் புகழ்ந்தார். சென்னை சட்ட

ச்சபையில் அக்காலத்தில் அங்கத்தினராக விளங்கியபோது தான் சத்தியமூர்த்தியின் திறமை, மகாத்மா காந்தி சொல்லியது போல் வெளியாயிற்று. அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்பதிலும், அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசுவதிலும் சத்தியமூர்த்தியின் நாவினுற் சுட்ட வடுக்கள் என்றும் ஆறுமலேயே இருந்தன.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்திடையே அச்சம் விளைவிக்கும் முறையில் சத்தியமூர்த்தி தம்முடைய கடமையைச் செலுத்தி வந்தார். ஆளும் வர்க்கத்தினர் அவருடைய சொல்லம்புகளைக் கண்டு அஞ்சி நடுங்கியதுடன் அவருடைய வாக்கு சாதுர்யத்தைப் பற்றிப் பாராட்டவும் முற்பட்டனர். சட்டசபைப் பணியில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் சத்தியமூர்த்தியின் அரசியல் வாழ்க்கையில் இன்னும் அதிகமான வேகம் காண்பதற்குத் துணையாக இருந்தது. எதிரியின் பலவீனத்தை எடுத்துக்காட்டுவதிலும், வாதங்களைத் தகர்ப்பதிலும், தம்முடைய கட்சியின் கொள்கைகளை விளக்குவதிலும் மக்கள் என்றுமே காணுத புது முறைகளைக் கையாண்ட சத்தியமூர்த்தி இத்துறையில் இணையற்று விளங்கினுர். இடித்துரைத்தலை இயந்கை ஆயுதமாகக் கொண்டு, எடுத்துச் சொல்வதில் வெற்றி பெறும் வழிகளைச் சத்தியமூர்த்தி மிகவும் எளிதாகப் பயன் படுத்தினுர். இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்பதற் கென்றே கூடிய பல்லாயிரக்கணக்கான மக்களிடையே நாட்டு விடுதலைக்காகக் காங்கிரஸ் ஆற்றி வந்த பணியைச் சத்தியமூர்த்தி பலன் தரும் முறையில் பிரசாரம் செய்து வந்தார். நாளுக்கு நாள் இந்தத் துறையில் வளர்ச்சி பெற்று வந்த இத்தலைவர் 1935-ம் ஆண்டில் மத்தியச் சட்டசபை அங்கத்தினர் பதவிக்காக ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஏ. இராமசாமி முதலியாருக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றியடைந்தது, தமிழகத்தில் சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு சம்பவம்.

மத்திய சட்டசபையின் அங்கத்தினராக சத்தியமூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அதுவரை சென்னை மாகாண சர்க்கார் மட்டுமே அனுபவித்து வந்த கஷ்டங்கள் மத்திய சர்க்காருக்கு ஏற்பட்டன. சட்டசபைத் துறையில் தமக்கு இயற்கையாக வாய்த்திருந்த திறமை, அனுபவம், இரண்டையும் கொண்டு சத்தியமூர்த்தி மத்திய சர்க்காருடன்



1936 இல் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியும்

போராடத் தொடங்கினர். அச்சமும், வியப்பும் மேலிட அரசாங்கம் அவருடைய எதிர்ப்பைச் சமாளிப்பதில் அரும் பாடுபட நேரிட்டது.

மாகாண சுயாட்சியின் அடிப்படையில் 1935-ம் ஆண்டு ஏற்பட்ட சீர்திருத்தங்களின் பயனாக நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டிருந்தது. சென்னை மாகாண சட்ட சபைகளுக்காகப் பல கட்சி அங்கத்தினர்கள் போட்டி யிட்டனர். அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பெரும் வெற்றிக்குக் காரணம் சத்தியமூர்த்தியின் பிர சாரமே. உடல் நலம் குன்றியிருந்தபோதும் சத்தியமூர்த்தி இடைவிடாது உழைத்து மாகாணம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து நாள்தோறும் பல கூட்டங்களில் சொற் பொழிவாற்றிக் காங்கிரஸ் கட்சியின் தேசியக் கொள்கை களை எடுத்துரைத்தார்.

இந்தத் தேர்தலில் சென்னை பல்கலைக் கழகத்தின் சார்பாகச் சட்டசபை அங்கத்தினர் பதவிக்குச் சத்திய

மூர்த்தி அபேட்சகராக நின்ருர். கடைசி நேரத்தில் அவர் போட்டியிலிருந்து விலகிக்கொண்டு தாம் அடைய இருந்த ஸ்தானத்தைச் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வகிப்பதற்கான வழி செய்தார். சொந்தத் திறமையினுலும் உழைப்பினுலும் தமக்குக் கிடைக்கவிருந்த வெற்றியைச் சத்தியமூர்த்தி தியாகம் செய்ததைத் தலைவர்கள் எல்லோரும் வெகுவாகப் பாராட்டினுர்கள். முக்கியமாகச் சர்தார் வல்லபாய் படேல், சத்தியமூர்த்தியின் சுயநலமற்ற செய்கையை மனமாரப் போற்றியது குறிப்பிடத்தக்கது.

தம்முடைய பிரசாரத் திறமையினுல் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி மந்திரி சபையமைத்து நிர்வாகப் பொறுப்பேற்றதைக் கண்டு மகிழ்ந்ததே சத்தியமூர்த்தியின் சுயநலமின்மைக்குச் சான்ருயிருந்தது. இதற்கிடையே அவர் மத்திய சட்டசபையில் கேள்விகள் மூலமும் விவாதங்கள் மூலமும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குறைகளை எடுத்துக் காட்டி நாட்டு மக்களின் சுதந்திர வேட்கையை உலகமறியச் செய்து வந்தார்.

அவருடைய பொதுநலசேவை, சட்டசபைகள் போன்ற பெரு மன்றங்களில் மட்டுமின்றி ஸ்தலஸ்தாபனத் துறையிலும் பயன்பட்டது. சென்னை நகர கார்ப்பொரேஷன் மேயராக அவர் 1939-ம் ஆண்டு இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகம் முழுவதும் இரண்டாவது மகாயுத்தத்தில் ஈடுபட்டிருந்த அந்த நெருக்கடியான காலத்தில் சத்தியமூர்த்தி மேயர் பதவிப் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றியதோடு மத்திய சட்டசபை அங்கத்தினர் பொறுப்பையும் தொடர்ந்து நிர்வகித்து வந்தார். மக்கள் தொகை பெருகிவரும் சென்னை நகரத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சத்தியமூர்த்தி கண்ணும் கருத்துமாய் இருந்தார். சென்னையை எழில்மிகுந்த நகரமாக்குவதே மேயர் சத்தியமூர்த்தியின் முக்கிய கொள்கையாய் இருந்தது. மேயர் பதவிவகித்த காலத்தில் சத்தியமூர்த்தி நிறைவேற்றிய பல்வேறு சாதனைகளில் குடி தண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காகப் பூண்டி நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டது மிகவும் முக்கியமானது. நீர்ப்பாசனம் போன்ற பல சிக்கல்களுக்குட்பட்ட இந்தத் திட்டத்தைத் துவக்கி வெற்றி கண்டது, சத்தியமூர்த்தியின் விடாமுயற்சிக்கும் பொதுநல உணர்ச்சிக்கும் ஓர் அத்தாட்சியாகும். இந்தத் திட்டத்தினுல் பெரும் பயனடைந்த சென்னை மக்கள்

பின்னர் பூண்டி நீர்த்தேக்கத்திற்குச் 'சத்தியமூர்த்தி ஸாகர்' எனப்பெயரிட்டுத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

1940-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சத்தியமூர்த்தி அந்த நாட்டில் பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றினர். இந்தியா சுதந்திரம் அடைவதோடு இலங்கையும் சுதந்திரம் அடையவேண்டு மென்பதுதான் பாரத மக்களின் விருப்பம் என்று அவர் விளக்கினர். அவருடைய இலங்கை விஜயத்தின் பலனுக இலங்கைவாழ் இந்தியர்களின் நிலைமையில் அந்த நாட்டு அரசாங்கம் அதிக கருத்துச் செலுத்தியது.

பிரிட்டிஷ் அரசாங்கம் பாரத மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்டசபைகளின் அனுமதியின்றி நம் நாட்டை இரண்டாவது மகாயுத்தத்தில் ஈடுபடச் செய்ததைக் காங்கிரஸ் மகாசபை கண்டித்தது. யுத்த முயற்சியை எதிர்க்கும் முறையில் தலைவர்கள் சத்தியாக்கிரஹம் செய்யவேண்டு மென்று மகாத்மா காந்தி கட்டளையிட்டார். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திட்டம் வகுக்கப் பட்டது. இவ்வகையில் நடந்த தனி நபர் சத்தியாக்கிரஹத்தில் சத்தியமூர்த்தியும் ஈடுபட்டார். 1940-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதன் விளைவாகக் கைது செய்யப்பட்டு ஒன்பது மாதம் சிறைத் தண்டனை அடைந்தார். தண்டனைக் காலம் முடிந்து விடுதலையடைந்தபோது சத்தியமூர்த்தி உடல் நலம் குன்றியிருந்தார். ஆனல், மகாத்மா காந்தி கட்டளையிட்டால் தாம் மீண்டும் சிறை செல்லத் தயார் என்று அவர் கூறினர். விடுதலை அடைந்தபோது ஐம்பத்திரண்டு வயது நிரம்பியிருந்த சத்தியமூர்த்தியும் மகாத்மா காந்தி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில், "நீங்கள் நல்ல ஓய்வு எடுத்துக்கொண்டு முற்றிலும் குணமடைவதோடு நூறு வயது வாழ வேண்டும்" என்று ஆசி கூறியிருந்தார்.

சிறைவாசத்தினின்றும் விடுதலையானபிறகு உடனடியாகச் சத்தியமூர்த்தி பொது வாழ்வில் ஈடுபட்டார். காங்கிரஸ் கட்சி மீண்டும் மந்திரி சபை வகித்து நிர்வாகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இடைவிடாது பிரசாரம் செய்து வந்தார். மகாத்மா காந்தியின் தலைமையையே மக்கள் பின்பற்றவேண்டுமென்றும் அவர் வற்புறுத்தி வந்தார். பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ்

அரசாங்கத்தாருக்கு இடைஞ்சலாக ஒன்றும் செய்யக் கூடாது என்று மகாத்மா காந்தி போதித்த அஹிம்சா கொள்கையின் அடிப்படையில் அவர் தம்முடைய பிர சாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார். தம்முடைய கருத்தை மக்களிடையே வெளியிட்டுப் பிரச்சாரம் நடத்து வதற்கு அவர் மகாத்மா காந்தியின் அனுமதியும் பெற் றூர். அரசியல் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மீருத ஒழுக்கம் கொண்டவர் சத்தியமூர்த்தி என்பதற்கு இது ஓர் அத் தாட்சி. மேலும், நாட்டு விடுதலைக்கு எந்த வழியைக் கைப் பற்றினுலும் அந்த முறைக்கு மகாத்மா காந்தியின் அங்கீ காரம் அவசியம் என்பதை அவர் நன்ருய் உணர்ந்திருந்தார். சட்டசபை வேலையை மீண்டும் மேற்கொண்டு காங்கிரஸ் கட்சி நிர்வாகம் புரிய வேண்டும் என்ற கொள்கையைச் சத்தியமூர்த்தி திடமாக நம்பியிருந்தாலும், மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்மத்திற்கே முக்கியத்துவம் கொடுத் துப் பிரசாரம் செய்து வந்தார். தம்முடைய உடல் நலம் நாளுக்கு நாள் குன்றிவருவதை சிறிதும் கருதாமல் சத்திய மூர்த்தி பொதுப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அவரு டைய உடல் நலத்தைக் கருதி அவர் மீண்டும் சத்தியாகிரகம் செய்யத் தேவையில்லை என்று மகாத்மா காந்தி யோசனை கூறியிருந்தார்.

யுத்தத்தில் ஜெர்மனியும் ஜப்பானும் அந்தச் சமயத்தில் அடைந்துவந்த வெற்றியினுல் ஏற்பட்ட நிலையில் மக்கள் கலவரமடையாமலிருப்பதற்காக யோசனைகளையும் சத்திய மூர்த்தி அடிக்கடி கூறிவந்தார். சட்டசபைக்குத் திரும்பிச் செல்வதையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்துவந்த சத்தியமூர்த்தி பொதுவாழ்வில் மற்றத் துறைகளிலும் தொடர்ந்து பணியாற்றி மக்களை உற்சாகப்படுத்தினுர். யத்த காலத்தில் ஏற்படும் நெருக்கடியால் மக்கள் மனந் தளராமல் இருக்க வேண்டியதின் அவசியத்தை அவர் பொதுக் கூட்ட்ங்களில் அடிக்கடி எடுத்துரைத்தார்.

மக்கள் சம்மதமின்றிப் பாரத நாட்டை யுத்தத்தில் ஈடுபடச் செய்த பிரிட்டிஷ் அரசாங்கத்தை வலிமையாகக் கண்டித்துப் பேசி, நாட்டுச் சுதந்திரத்திற்கு அந்த அரசாங் கம் ஒரு நிலையான கொள்கை வகுக்காததை தெளிவு படுத்தி னுர். ஆளும் வர்க்கத்தினரின் பொறுப்பற்ற பேச்சுக்களை யும், நியாய விரோதமான செயல்களையும் சத்தியமூர்த்தி தம்முடைய பிரசங்கங்களிலும் பத்திரிகைக் கட்டுரைகளி லும் திறம்பட விளக்கினுர். காங்கிரஸ் கொள்கைக்கு

முரணுக, முஸ்லிம்களுக்குத் தனி உரிமையாக, பாகிஸ்தான் உரிமையை அங்கீகரிக்கும் இயக்கம் ஒன்று தோன்றிற்று. இந்த முயற்சியைச் சத்தியமூர்த்தி தீவிரமாக எதிர்த்துக் காங்கிரஸ் கொள்கையான ஒன்றுபட்ட தேசிய உணர்ச்சி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். குறைந்த அதிகாரத்துடன் ஒரு கூட்டு மந்திரிசபை அமைத்துப் பதவியேற்கும் யோசனையைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளக் கூடாது என்று சத்தியமூர்த்தி வாதாடினர். சட்டசபை அலுவல்களிலும், மந்திரி சபை வகிப்பதிலும் காங்கிரஸ் ஈடுபட வேண்டுமென்று அவர் வற்புறுத்தி வந்தாலும் பூரண அதிகாரம் கொடுக்கப் படா விட்டால், இத்தகைய முயற்சிகளினுல் பலன் கிடைக்காது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். தாம் பிரசாரம் செய்து வந்த கொள்கையும், தாம் விளக்கிவந்த கருத்துக்களும் நாட்டின் விடுதலைக்கு உதவி செய்யும் முறையில் இருக்க வேண்டுமென்பதைச் சத்தியமூர்த்தி அடிப்டையாக நம்பியிருந்தார்.

யுத்த காலத்தில் நம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடுவதில் மகாத்மா காந்தியும் காங்கிரஸ் மகாசபையும் செய்த முயற்சிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனப்பான்மையால் பலனளிக்காமல் போயின. உள்நாட்டு விவகாரங்களில் மட்டுமே சிறிதளவு சுதந்திரம் கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. இறுதிப் போராட்டம் ஒன்று நடத்திப் பூரண சுதந்திரம் பெறுவதென்று மகாத்மா காந்தியின் யோசனைப்படி காங்கிரஸ் தீர்மானித்தது. இந்த போராட்டத்திற்கான வழி வகைகளை வகுப்பதற்காக 1942 ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடிற்று. அன்றைய தினமே மகாத்மா காந்தி உள்பட காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டனர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரான சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டு மற்ற தலைவர்களைப் போலவே விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டார்.

ஏற்கெனவே மிகவும் நலிந்து போயிருந்த சத்தியமூர்த்தியின் உடல் நிலை, சிறைவாசத்தில் மேலும் சீர்கெட்டது. 1943-ம் ஆண்டு ஆரம்பத்தில் அவர் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். பொதுவாழ்வில் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பணியாற்றிய சத்தியமூர்த்தியின் ஆரோக்கியம் சிகிச்சையால் அதிக விருத்தியடையவில்லை. நாட்டு விடுதலை ஒன்றையே மனதில் கொண்டு

த்ம்முண்டிய நோயைச் சகித்து வந்த சத்தியமூர்த்தி 1943-ம் ஆண்டு மார்ச் 28-ம் தேதியன்று காலை ஆஸ்பத்திரியில் காலமானார்.

சத்தியமூர்த்தி மறைவு நாடு முழுவதையும், குறிப்பாக சென்னை மக்களை ஆறாத துக்கத்தில் ஆழ்த்திற்று. அரசியல் வாழ்விலும் தேச சேவையிலும் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றித் தலைவர்கள் குறிப்பிட்டு, அவருடைய தியாகத்தைப் பாராட்டினர். நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் அவருடைய திறமையைப் பற்றிப் புகழுரைகள் வரைந்து அஞ்சலி செலுத்தின. தேசீயம் என்பதையே உயிர் மூச்சாகக்கொண்டு விடுதலைக்குப் போராடிய சத்தியமூர்த்தி சுதந்திர உதயம் நெருங்கி வரும்போது அதன் பலனை அனுபவிக்க முடியாது மறைந்துவிட்டார்.

சத்தியமூர்த்தியின் சேவை அரசியல் துறையில் மட்டுமின்றி கலாசாரம், கல்வி முதலிய துறைகளிலும் பரிமளித்தது. பள்ளிச் சிறுவனாயிருந்தபோதே காங்கிரஸ் தொண்டராகப் பணியாற்றிய சத்தியமூர்த்தி நாளடைவில் சமூக வளர்ச்சியின் பல்வேறு வழிகளிலும் நடந்து பயின்று தம் திறமையால் மக்கள் பயனடையச் செய்தார். பதினைந்து ஆண்டுகளுக்கு அதிகமாக அவர் சென்னை நகரசபையில் அங்கம் வகித்து, மேயர் பதவியும் அடைந்து, சென்னையை எழில் நிறைந்த நகரமாக்குவதிலும், நகர மக்கள் ஆரோக்கிய வாழ்வுக்கும் பல வழிகளில் பணியாற்றினார். கூட்டுறவு இயக்கத்தில் மிகுந்த அக்கறை கொண்டு அத்துறையில் பல மகாநாடுகளில் கலந்துகொண்டு சிறப்புரைகள் ஆற்றினார். சென்னையில் திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்பரேடிவ் சொஸைடியின் வளர்ச்சிக்கும் அந்த ஸ்தாபானத்தின் இன்றைய அமைப்புக்கும் சத்தியமூர்த்தி பெருமளவில் உதவி செய்தார். மகத்தான நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கிடையே இத்தகைய அலுவல்களில் அவர் ஈடுபட்டது பொதுவாழ்வின் எல்லா அம்சங்களிலும் அவருக்கு ஏற்பட்ட ஆர்வத்திற்கு அறிகுறியாகும்.

சென்னை சர்வகலாசாலை நடவடிக்கைகளில் சத்தியமூர்த்தி பெரும் பங்கு ஏற்று கல்வித் துறை வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கு அடிகோலினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாவதற்கும் அவர் பல வகையில் உழைத்ததோடு அக்கழகத்திலும், சென்னைப் பல்கலைக்கழகத்திலும், செனட் சிண்டிகேட், அகடெமிக் கவுன்சில் ஆகிய மூன்று சபைகளி

லும் அங்கம் வகித்தார். கல்விச் சீர்திருத்த விஷயத்தில் அவ்வப்போது பல யோசனைகளைக் கூறி வந்ததோடு பல மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.

கலை விஷயங்களில் சத்தியமூர்த்திக்கு ஆர்வம் அதிகம். சென்னை நாடக அரங்குகளில் புகழ்பெற்ற சுகுண விலாஸ் சபையின் முக்கிய அங்கத்தினராகப் பல வருஷங்கள் தொண்டாற்றி நாடகக் கலைக்குப் புத்துயிரும் புதிய அந்தஸ்தும் அளிப்பதில் பங்குகொண்டார். சங்கீதத் துறையிலும் ஈடுபாடு கொண்ட சத்தியமூர்த்தி பல இசை மகாநாடுகளில் சொற்பொழிவாற்றி இசைக் கலைஞர்களுக்கு உற்சாகம் கொடுத்தார். சினிமாத் தொழிலும் சத்தியமூர்த்தியின் ஆதரவினால் பயனடைந்தது. 1939-ஆம் ஆண்டில் நடந்த முதல் அகில இந்திய திரைப்படத் தொழில் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தென்னிந்திய பிலிம் வர்த்தகக் கழகம் உருப்பெற்று அமைவதற்கும் இவரே காரணமாயிருந்தார்.

காங்கிரஸ் மகாசபையின் பல பிரிவுகளிலும் சத்தியமூர்த்தி அங்கம் வகித்துப் பணியாற்றியதோடு மத்திய சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராகவும் இருந்தார். சட்டசபை நடவடிக்கைகளில் விவாதங்களின் போதும், கேள்விகள் கேட்டதிலும் சத்தியமூர்த்தி காண்பித்த திறமை அரசாங்கத்தாரும் வியக்கும் முறையில் இருந்தது. வாழ்நாள் முழுவதும் இடைவிடாது உழைத்துத் தம்முடைய 56-வது வயதில் அரசியல் கைதியாக நோய் வாய்ப்பட்டு உயிர் நீத்த சத்தியமூர்த்தி பொது வாழ்வில், கட்டுப்பாட்டுக்கும், கடுமையான உழைப்புக்கும் சான்றாக விளங்கினார். அவருடைய சொல் வலிமையும், பிரசாரத் திறமையும் இணையற்ற பண்புகளாக இருந்தன.

அனுபவம் மிகுந்த தலைவர்களுடன் சரிநிகர் சமமாகப் பொறுப்பேற்று செயல்புரிந்த சத்தியமூர்த்தி அரசியல் துறையில் பல இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருந்தார். சத்தியமூர்த்தியின் பிரதம சீடரும், பிரியாத துணைவருமாகத் தொண்டாற்றிய திரு. காமராஜ் இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றுவது, சத்தியமூர்த்தியின் கனவு நனவாவதற்கு அத்தாட்சியாகும். சேவை, தியாகம், இரண்டிற்கும் விளக்கமாக மலர்ந்த சத்தியமூர்த்தியின் வாழ்க்கை தேச பக்தி என்னும் உணர்ச்சிக்கு விரிவுரையாகவே இருந்தது. ★

தொண்டர் வரவுக்குக் காத்திருக்கும் தலைவர்.

கதர் விற்பனை செய்யும் தொண்டர் தலைவன்.

சத்தியமூர்த்தியின் கலை ஆர்வம்

ஈ. கிருஷ்ணய்யர்

காலஞ்சென்ற திரு. எஸ். சத்தியமூர்த்தியுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றிருந்தேன். நான் காலஞ்சென்ற சுப்ரீம் கோர்ட்டு மாஜி பிரதம நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியாரிடம் ஓராண்டு அப்ரென்டிஸ்ஆகப் பயிற்சி பெற்று 1922-ஆம் ஆண்டில் சென்னை ஹைகோர்ட்டில் வக்கீலாகச் சேர்ந்து தொழில் செய்ய ஆரம்பித்தேன். அதே கோர்ட்டில் ஏற்கனவே வக்கீலாகயிருந்த ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் அதுமுதல் பழக்கம் ஏற்பட்டது, அவர் அப்போதே அரசியல் வாதியாகவும் சிறந்த பேச்சாளராயும் இருந்ததோடு அக்காலத்துப் புகழ்பெற்ற அமைச்சூர் நாடக சபையான சுகுணவிலாச சபையிலும் நடிகராகவும், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் உள்ள நாடகங்களுக்குச் சில வருஷங்களில் கண்டக்டராகவும் இருந்தார். நானும் 1923-ல் அச்சபையில் சேர்ந்து நடிகரான போது அவருடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. என்னுடன் பல நாடகங்களில் நடித்தார். சம்ஸ்கிருத 'மிருச்சகடி'யில் நான் வசந்தசேனுவாகவும், 'மாளவிகாக்நிமித்ர'த்தில் நான் மாளவிகாவாகவும் நடித்தபோது அவர் அந்த நாடகங்களில் விதூஷகனுக நடித்தார். 'சபலா' என்ற தமிழ் நாடகத்தில் நான் அபலாவாக நடித்தபோது, அவர் அதில் ஸ்வாமிநாதன் என்ற ஒரு முக்கிய ஆண் பாத்திரத்தைத் தாங்கி நடித்தார். வேணீ ஸம்ஹாரம் என்ற நாடகத்தில் அச்வத்தாமாவாக நடித்திருக்கிருர். இதேமாதிரி சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட சம்ஸ்கிருத அகாடெமி நடத்திய நாடகங்களிலும் நாங்கள் இருவரும் பங்கெடுத்துக்கொண்டு நடித்து வந்தோம், நான் அக்காலங்களில் சுப்ரமணியபாரதியாரின் தேசியப் பாடல்களை உணர்ச்சியுடன் பாடுவதைக் கேட்டு, அவைகளை தேசத் தொண்டுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்து, அப்போது ஸ்வராஜ்யக் கட்சித் தலைவராக விளங்கிய எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரிடம் என்னை அறிமுகப்படுத்தி, விடுதலைப் போருக்கான பிரசாரப் பொதுக்கூட்டங்களில் என்னை பாடுபடும்படி செய்தார். ஒரு விதத்தில் அதன் விளைவாகத் தான் நான் தீவிரமாக அரசியல் துறையில் ஈடுபட்டு அத்துறையில் நானும் அவரும் பல வருஷங்களாக ஒத்துழைத்தோம் எனலாம். அத்துடன்

நான் பரத நாட்டியத்தை மிலட்டூர் நடேசய்யரிடம் நன்கு கற்று 1926 முதல் பல மேடைகளில் ஆடி, நசிக்கும் தருவாயிலிருந்த அந்தக் கலைக் குப் புத்துயிரளிக்கப் பிரசாரம் செய்துவந்தபோது திரு. சத்தியமூர்த்தி எனக்குப் பேராதரவு அளித்தார்.

அவருக்கு சம்ஸ்கிருதத்தில் நல்ல அறிவுண்டு. நமது புராதன கலாச்சாரங்களிலும் பண்பாடுகளிலும் பற்றுண்டு. ஆகவே சங்கீதம் நாட்டியம் நாடகம் முதலியவைகளின் மறுமலர்ச்சிக்கும் ஆதரவு கொடுத்து வந்தார். சங்கீதக் கச்சேரிகளை நன்றாய்க் கேட்பார், நடனங்களையும் நாடகங்களையும் விடாது பார்ப்பார். அவைகளிலுள்ள குண தோஷங்களை அப்பட்டமாய் எடுத்துச் சொல்லுவார். எந்தக் கலை நிகழ்ச்சியும் 3 மணி நேரத்துக்கு மேல் வளரக் கூடாது என்று வற்புறுத்துவார். பல நூற்றாண்டுகளாக உயர்ந்த லக்ஷியங்களுடன் வளர்க்கப்பட்ட நமது கலைவகைகளே, நமது பழம் பெரும் பாரத நாட்டுக்குப் பெருமையளிப்பவை, ஆகவே அவைகள் நசித்துப் போகாவண்ணம் பாதுகாத்து மறுமலர்ச்சி கொடுத்து வளர்ப்பது தேசீயப் புனருத்தாரண வேலையின் ஒரு முக்கிய அங்கமாகும் என திரு. சத்தியமூர்த்தியும் நானும் நினைத்து ஒத்துழைத்தோம்.

1928-ல் சென்னை மியூஸிக் அகாடெமி என்ற சங்கீத வித்வத் சபை ஸ்தாபிக்கப் பட்டபோது அவரும் நானும் அதன் ஸ்தாபனக் குழுவில் அங்கத்தினராயிருந்ததோடு, அது முதல் பல வருடங்களாக அவர் உப தலைவர்களில் ஒருவராகவும் நான் காரியதரிசிகளில் ஒருவராகவும் பணியாற்றி வந்தோம்.

1930-32 ஆண்டுகளில் தேசீய விடுதலைக்கான சத்யாக்ரகப்போர் மகாத்மா காந்தியின் தலைமையில் தீவிரமாகியதும், அதில் ஸ்ரீசத்தியமூர்த்தி, நான், மற்றுமுள்ள தலைவர்கள் ஈடுபட்டு சிறைசென்று வந்தது பொது ஜனங்கள் அறிந்த விஷயம், இதன் நடுவே நான் எனது ஆடல்கள் மூலமாயும், பிரசங்கங்கள் மூலமாயும் பரத நாட்டிய மறுமலர்ச்சிக்காக 1926 முதல் பிரசாரம் செய்து வந்தது கொஞ்சம் கொஞ்சமாக பலன் கொடுக்கத் தொடங்கியது. அக்காலங்களில், சென்னையில் எந்த சங்கீத சபையிலும் தேவதாசிகளின் பரத நாட்டியக் கச்சேரியை வைக்கமாட்டார்கள். அப்படியிருந்தும், 1931-வருடம் சென்னை மியூஸிக் அகாடெமி மேடையில் அதன் காரியதரிசியாக நான், முதன் முதலாக, திருவாளப் புத்தூர் கல்யாணி பெண்களின் பரத நாட்டியத்தை, தைரியமாய் ஏற்படுத்தினேன். எங்கள்கமிட்டியில் சிலர் அதை ஆக்ஷேபித்தார்கள். ஆனால் திரு. சத்தியமூர்த்தியும், அப்போது ஹிந்து ஆசிரியராக இருந்த திரு. ஏ. ரங்கசாமி அய்யங்காரும் என்னை ஆதரித்தார்கள். அவர்கள் பலத்தினால்,பரதநாட்டியக்

கச்சேரி நன்குநடந்தது. ஆனால் நாட்டிய எதிர்ப்புக்கட்சியிலும் சமூக சீர்திருத்த வட்டாரங்களிலும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இப்படி இரண்டு மூன்று நாட்டியக் கச்சேரிகள் பின்னால் நடக்கவே, நாட்டிய எதிர்ப்புக் கட்சியாருக்குக் கோபம் வளர்ந்துவிட்டது. தேவதாசிகளின் பரதநாட்டியத்தால்தான் சமூகம் கெட்டுப்போய் விட்டது. ஆகையால் அதை அழிக்க வேண்டும் என்று தாங்கள் 50 வருஷ காலமாய் செய்து வந்த நாட்டிய எதிர்ப்புப் பிரசாரம், என்னுடைய மறுமலர்ச்சி பிரசாரத்தால் சிதைந்து விட்டதே, அது தகாது என்று அந்த நாட்டிய எதிர்ப்புக் கட்சித் தலைவர்களில் ஒருவர் 1932 டிஸம்பரில் பத்திரிகைகளில் தாக்கி எழுதினார். நாட்டியத்தின் தெய்வீகத் தன்மையையும், அதற்கான மறுமலர்ச்சியின் அவசியத்தையும் பற்றி விளக்கி நான் பதில் உரை எழுதினேன். இந்தப்பத்திரிகை வாதப் பிரதி வாதத்தில் ஸ்ரீசத்தியமூர்த்தி நாட்டிய மறுமலர்ச்சிக்குச் சாதகமாகவே வாதாடினார் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தப் பத்திரிகை வாதத்தின் பயனாக 1933 ஜனவரியில் பரத நாட்டியத்தின் முதல் மறுமலர்ச்சி உதயமானது. அத்துடன் நிற்கவில்லை.

ஸ்ரீ சத்யமூர்த்தி பல வருஷங்களாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராயிருந்தார். அக்கமிட்டியின் சார்பில் ஆண்டுதோறும் ஒரு பொருட்காக்ஷியும் சங்கீத நாட்டியக் கச்சேரிகளடங்கிய ஒரு கலைக்காட்சியையும் நடத்தி வந்தார். அக்கலைக் காட்சிகளுக்கு நானே காரிய தரிசியாய் இருப்பது வழக்கம்.

பரத நாட்டியத்தில் மறுமலர்ச்சி வந்தபோதிலும் அப்போது அக்கலை தேவதாசிகளிடமேயே இருந்து வந்தது. நற்குலப் பெண்களும் அதைக் கையாள முன்வரும்படி செய்ய வேண்டும் என்பதற்காக ஸ்ரீ சத்தியமூர்த்தியும் நானும் யோசனை செய்து வந்தோம். 1935-ல் காங்கிரஸ் மகாசபையின் பொன்விழா நடந்தது. அதையொட்டி ஒரு கலைக்காட்சியையும் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஏற்பாடு செய்தார். வழக்கத்துக்கு மேலான தனி அலங்கார மேடை நிறுவப்பட்டு சிறந்த பரதநாட்டியப் பாணிகளைக் கையாளும் நடிகைகள் எல்லோரும் ஆடிக் காட்டுவதற்காக அழைக்கப்பட்டனர். பெரும்பாலான நற்குணப் பெண்கள் அந்த ஆடல்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அனேக குடும்பங்களுக்கு அழைப்புகள் அனுப்பப் பட்டன. ஏராளமான பெண்மணிகள் வந்து பார்த்து நாட்டியம் கற்றுக்கொள்வதில் ஆர்வம் கொண்டார்கள். அடுத்த வருஷத்தில் இரண்டு நற்குலப் பெண்மணிகள் பரத நாட்டியத்தைக் கற்று வெளிவந்தார்கள். எனவே ஸ்ரீசத்தியமூர்த்தி ஒருபுறம் அரசியல் துறையில் இடைவிடாது வேலை செய்வதும், மறுபுறம் கலைவளர்ச்சியில் ஈடுபடுவதுமாய் தன் வாழ்வை நடத்தினார். ❋

தீரர் சத்தியமூர்த்தி

'கல்கி'

ஸ்ரீ சத்தியமூர்த்தியுடைய இருபத்தைந்து வருஷத்து அரசியல் வாழ்க்கையில் அமைதி என்பதே அணுவளவும் கிடையாது. ஒரே புயலும், மழையும், போர் முழக்கமும், வீர கர்ஜனையுந்தான்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி மிதவாதிகளுடன் போரிட்டிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியாருடன் பெரும் போர் நடத்தியிருக்கிறார். அதிகார வர்க்கத்துடன் இடைவிடாத கடும்போர் புரிந்து வந்திருக்கிறார். காங்கிரஸிற்குள்ளேயே தமக்குச் சரியென்று தோன்றிய வேலைத் திட்டங்களுக்காகத் தீவிரமாகச் சண்டை போட்டிருக்கிறார். மகாத்மாவுடனேயே போரிட்டிருக்கிறார்.

பிரம்மதேவன் பேனவை விஷத்தில் ஒரு தடவையும் அமிர்தத்தில் ஒரு தடவையும் தோய்த்து எடுத்து ஸ்ரீ சத்தியமூர்த்தியின் நாவில் எழுதியிருக்க வேண்டும்! எதிராளிகளைத் தாக்கும் போது அவருடைய நாவிலிருந்து விஷந் தோய்ந்த சொல்லம்புகள் சரசரவென்று கிளம்பும்.

சில சமயம் ஒரே வார்த்தையினால் எதிராளிகளை மடக்கி உட்கார வைத்துவிடுவார். மறுபடியும் அவர்கள் தலை கிளம்ப முடியாதபடி அடித்துவிடுவார். இதற்கு ஒரு பிரசித்தமான உதாரணம் உண்டு. 1920-ம் ஆண்டில் திருநெல்வேலியில் நடந்த தமிழ் மாகாண மகாநாட்டில் இது நேர்ந்ததென்று ஞாபகம். ஸ்ரீ சத்தியமூர்த்தி பிரபலமாகி வந்த காலத்தில் தமிழ் நாட்டில் ஸ்ரீ வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரின் பெயர் ரொம்பவும் பிரபலமாயிருந்தது. சாஸ்திரியார் அரசியலில் மிதவாதி. அதாவது, பிரிட்டிஷ் சார்க்காருடன் ஒத்துழைத்து மனுச்செய்து அவர்களுடைய தயவைக் கொண்டு இந்தியா முன்னேற வேண்டுமென்று நம்பிய கூட்டத்தைச் சேர்ந்தவர்.

"இங்கிலீஷ் பேச்சுக் கேட்க வேண்டுமென்றால் சீனிவாச சாஸ்திரியாரிடம் கேட்கவேண்டும். அவர் மாதிரி சுத்தமாகவும் மதுரமாகவும் இங்கிலீஷ் பேசக் கூடியவர்கள் இங்கிலாந்திலேயே இரண்டொருவர் தான் உண்டு" என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள்.

அதோடு, கோகலே சென்னைக்கு வந்து சீனிவாச சாஸ்திரியை அரசியல் தொண்டுக்கு

அழைத்ததும், சாஸ்திரியார் தியாக வாழ்க்கையை மேற்கொண்டு கோகலேயின் 'இந்திய ஊழியர் சங்க'த்தில் சேர்ந்ததும், கோகலேக்குப் பிறகு சாஸ்திரியார் மேற்படி சங்கத்தின் தலைவரானதும் அப்போது புதிய சம்பவங்களாயிருந்தன.

அப்படிப்பட்ட நிலைமையில் சாஸ்திரியாரைத் தாக்கி அவருடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டிய அவசியம் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு ஏற்பட்டது.

ஒரே ஒரு வார்த்தையில் இந்தக் காரியத்தை அவர் செய்துவிட்டார்!

அப்படியொன்றும் ரொம்பக் கடுமையான வார்த்தையில்லை — அவலட்சணமான வசை மொழி இல்லை — நல்ல அழகான சம்ஸ்கிருத வார்த்தைதான்!

அவருடைய தனித்த கம்பீரமான குரலில் — தீர்க்கமான உச்சரிப்பில் — "ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரி..." என்று சொல்லி ஒரு கணம் நிறுத்தினார். பிறகு இன்னும் தீர்க்கமாக "மகானுபாவன்" என்றார். உடனே அந்தப் பெரிய சபையில் ஒரு கலகலப்பும் சிரிப்பும் கரகோஷமும் கலந்து கிளம்பின. அந்தச் சிரிப்பானது, ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியின் அரசியல் கொள்கையைப் பார்த்துத் தேசமே சிரித்தது போலிருந்தது.

* * *

திருச்சி டவுன்ஹாலுக்கு எதிரில் பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. (அப்போதெல்லாம் இரண்டாயிரம் பேர் கூடினாலே கூட்டம் 'பிரம்மாண்டந்'தான்!) பெரும்பாலும் மாணாக்கர்கள். அப்போதுதான் ஸ்ரீ சத்தியமூர்த்தி இங்கிலாந்துக்குக் காங்கிரஸ் தூதராய்ப் போய் விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். எனவே, அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் ஒரு பெருமிதம் காணப்படுகிறது. இங்கிலாந்தில் தாம் செய்த பிரசங்கங்களைப் பற்றியும் தம்மைக் கேட்கக் கூடிய கூட்டங்களைப் பற்றியும் விவரித்து வருகிறார். நாங்கள் எல்லோரும் வாயில் யானை புகுந்தால்கூடத்

இங்கிலாந்தில் சத்தியமூர்த்தி

தெரியாதநிலையில் அண்ணாந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்போதெல்லாம் பிரசங்கிகளை உற்சாகப் படுத்துவதற்குக் கரகோஷம் செய்யக்கூட நம்மவர்களுக்குத் தெரியாது.

ஸ்ரீ சத்தியமூர்த்தி சொல்கிறார் :—

"அயர்லாந்திலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசினேன். இங்கே கூடியிருக்கும் கூட்டத்தைவிடப் பெரிய கூட்டம். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆணித் தரமாக நான் எடுத்துச் சொல்லி வந்தேன். அப்போது கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து ஒரு ஆங்கிலேயன் 'இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதில்லையா ?' என்று கேட்டான். உடனே, நான், 'ஐயா! இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால், ஆண்டவன் இங்கிலீஷ்காரனை உலகத்தின் ஸ்பெஷல் போலீஸ் காரனாக எப்போது நியமித்தார் ?' என்று கேட்டேன்...'

ஸ்ரீ சத்தியமூர்த்தி இவ்விதம் சொன்னதும் எங்களில் உற்சாகிகள் சிலர் கையைத் தட்டி ஆர்ப்பரித்தோம். பிரசங்கி அரை நிமிஷம் சும்மா இருந்துவிட்டுத் தொடர்ந்து பேசினார்:

"நான் சொன்ன பதிலைக் கேட்டு நீங்கள் கை தட்டினீர்கள். ரொம்ப சந்தோஷம். ஆனால் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். அவ்வாறு நான் அந்த ஆங்கிலேயனுக்குப்பதில் சொன்னபோது அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் உங்களைக் காட்டிலும் நூறுமடங்கு உற்சாகத்துடன் கையைத் தட்டினார்கள் !'' என்றார்.

நாங்கள் மறுபடியும் கை தட்டினோம். ஆனால், "இதிலேகூட இங்கிலீஷ்காரர்களுக்கு நாம் குறைந்துவிட்டோமே?" என்று வெட்கத்தினால் முன்னைக் காட்டிலும் ஸ்வரம் குறைந்துதானிருந்தது.

* * *

அந்த நாளில் தமிழ்நாடெங்கும் ஒரு அரசியல் பல்லவி அதிகமாக அடிபட்டு வந்தது. ஸ்ரீசத்தியமூர்த்தியின் ஸாஹித்யந்தான் அது. நாலு பேர் சேர்ந்து அரசியலைப் பற்றிப் பேசத் தொடங்கினால் அவர்களில் யாராவது ஒருவர், திடீரென்று,

"அவன்தோல் வெளுப்பாம் !
என்தோல் கறுப்பாம்!''

என்று தீர்க்கமான குரலில் சொல்லுவார். மற்றவர்களின் முகத்தில் ஒரு உற்சாகம் காணப்படும். "அடாடா! சத்தியமூர்த்தியின் பேச்சே பேச்சு!'' என்பார்கள்.

மேற்படி பல்லவியைச் சில காலம் ஸ்ரீசத்தியமூர்த்தி தமது பிரசங்கங்களில் கையாண்டு கேட்கும் ஜனங்களைப் பைத்தியமாக அடித்து வந்தார். இந்த தேசத்தில் இங்கிலீஷ்காரர்கள் அநுபவிக்கும் தனி உரிமைகளையும் சலுகைகளையும் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி மேற்படி பல்லவியுடன் முடிப்பார். உதாரணம் :-

"ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவ

னுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்; அதே உத்தியோகத்தை நான் பார்த்தால் எனக்கு எண்ணூறு ரூபாய் தான் சம்பளம். இந்த வித்தியாசம் எதனுல் தெரியுமா? அவன் தோல் வெளுப்பாம்! என்தோல் கருப்பாம்!...''

இப்படியாக உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போவார். பிரசங்கத்தில் ஜனங்களின் மனதைக் கவர்ந்து அவர்களுடைய ஆவேசத்தைக் கிளப்புவதற்கு இம்மாதிரி அநேக உத்திகளை அவர் கையாள்வதுண்டு.

* * *

சமீபத்தில் ஒரு தடவை சத்தியமூர்த்தி வட நாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பினுர். வரும்போது வர்தாவில் இறங்கி மகாத்மாவைப் பார்த்துவிட்டு வந்தார். வந்து கொஞ்ச நாள் வரையில் ஒரே மகாத்மா மயமாக இருந்தார். "என்னதான் சொல்லு; மகாத்மா என்ருல் மகாத்மா தான்! அவருக்கு எவ்வளவு வேலை? எவ்வளவு தொல்லை? என்னைப் பார்த்ததும், 'லக்ஷ்மி சௌக்யமா?' என்று கேட்டாரே? குழந்தையைப் பற்றி ஞாபகம் வைத்துக் கொண்டு கேட்பதென்ருல்' – மகாத்மாவைத் தவிர வேறு யாரால் முடியும்?'' என்று சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போனுர்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் செல்வப் புதல்வியின் பெயர் லக்ஷ்மி என்று நேயர்கள் அறிந்திருக்கலாம். மகாத்மா சௌ. லக்ஷ்மியைப் பற்றிக் கேட்டுவிட்டதற்காக ஸ்ரீ சத்தியமூர்த்தி இவ்வளவு பரவசமடைகிருரே என்று அப்போது எனக்குச் சிறிது வியப்பாகத் தானிருந்தது. இந்த வியப்பு திருச்சி சிறையிலே மாறிற்று. இந்திய சுயராஜ்யத்துக்கு அடுத்தபடியாக ஸ்ரீ சத்தியமூர்த்தியின் உள்ளத்தின் ஆசையை யெல்லாம் கொள்ளை கொண்டவள் லக்ஷ்மி என்று அங்கே தெரிந்து கொண்டேன். லக்ஷ்மி வெள்ளிக்கிழமை 'இண்டர்வியூ'வுக்கு வருவதா யிருந்தால் இவர் புதன்கிழமை முதலே 'லக்ஷ்மி நாளன்று வருகிருள்!' என்று பார்த்தவர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார். வியாழக்கிழமை இரவு, சாதாரணமாய் ஒரு மணிக்கு வருகிற தூக்கங்கூட அவருக்கு வராது. வெள்ளிக்கிழமை காலையிலிருந்து இருப்புக் கொள்ளாத பரபரப்பு. சிறை வாசலில் லக்ஷ்மி வந்தாயிற்று என்று கேட்டதும், பிளாக்கிலிருந்தே 'லக்ஷ்மி!' என்று கூவிக் கொண்டு விரைந்து போவார்.

* * *

மகாத்மாவிடம் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பக்தி வளர்ந்துவந்தது போலவே, மகாத்மாவுக்கும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமையில் மரியாதை வளர்ந்து வந்தது. ஒரு சமயம் காந்தி மகான் வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு தனிச் சிறப்பை ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அளித்தார். "என் இஷ்டத்துக்கு விடுவதாயிருந்தால், சட்டசபை வேலைக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருவரை மட்டும்

நியமித்து அனுப்புவேன்!'' என்றூர். இதிலிருந்து சத்தியமூர்த்தியின் சட்டசபை வேலையை மகாத்மா எவ்வளவு தூரம் மதித்தார் என்று அறியலாம். சட்டசபைத் திட்டத்தை ஓரளவு மகாத்மா சகித்துக் கொள்வதற்குக் காரணமாயிருந்ததே ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வேலைத் திறம் என்பதில் சந்தேகமில்லை.

1933-ல் மறுபடியும் ஸ்ரீ சத்தியமூர்த்தி "கிராமப் பஞ்சாயத்துச் சபையிலிருந்து இந்திய சட்டசபை வரையில் எல்லா ஸ்தாபனங்களையும் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டும்'' என்னும் தமது கொள்கையைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். டாக்டர் அன்ஸாரி, ஸ்ரீ புலாபாய் தேசாய், டாக்டர் பி.ஸி. ராய் முதலியவர்களும் இந்த இயக்கத்தில் கலந்துகொண்டார்கள். கடைசியாக, காங்கிரஸே அதை ஒப்புக்கொண்டது. 1934-ல் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வாதிகள் பிரமாதமான உற்சாகத்துடன் ஈடுபட்டார்கள்.

"என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே.........'' என்று அழைத்து அவர் செய்த பிரசங்க முழக்கங்கள் இன்னமும் சென்னையின் மேல்வான வெளியில் நிறைந்திருக்குமென்றே நினைக்கிறேன். ஒரு நாளைக்கு நாலைந்து பொதுக் கூட்டங்களில் பேசுவது சர்வ சாதாரணம்.

கூட்டங்களில் பேசுவதுமட்டுமல்ல; தனித்தனியாக வோட்டர்களின் வீடு தேடிச் சென்று அவர் வோட்டுக்கேட்ட விதம் தேசத் தொண்டர்களுக்கெல்லாம் ஓர் அபூர்வ உதாரணமாகயிருந்தது.

எங்கேயோ ராயபுரத்தின் ஒரு மூலையில் ஒரு கிராமணியாரின் வீட்டில் ஒரு மூதாட்டிக்கு வோட்டு இருக்கும். அந்த வீட்டைத் தேடிக்கொண்டு ஸ்ரீ சத்தியமூர்த்தி போவார். பின்னேடு வருகிறவர்கள் பேசட்டுமென்று காத்திருக்க மாட்டார். வோட்டர் பெண்மணி வாசலில் வந்ததும் ஆரம்பித்து விடுவார்:—

"அம்மா! நான்தான் சத்தியமூர்த்தி. காங்கிரஸ் மகாசபையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு இந்திய சட்டசபைக்கு நிற்கிறேன். உங்களுடைய வோட்டை அபேட்சிக்கிறேன். எனக்கு உங்கள் வோட்டைக் கொடுத்தால் இந்தியா சுயராஜ்ய மடைவதற்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடுவேன்'' என்று விநயமாகத் தெரிவித்துக் கொள்வார். இவ்விதம் அந்தத் தேர்தலின் போது இந்திய சட்டசபை வோட்டர் ஒவ்வொருவரையும் அநேகமாக அவர் நேரில் பார்த்துச் சொல்லி யிருக்கிறூர் என்றூல், ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரை இருந்த இடம் தெரியாமல் அடித்துத் தேர்தலில் மகத்தான வெற்றி யடைந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

ஸ்ரீ சத்தியமூர்த்தி இந்திய சட்டசபைக்குப் போன பின்

னர், அவருடைய திறமை இந்தியா முழுவதற்கும் தெரியலாயிற்று. தென்னாட்டின் கௌரவமே ஒருபடிஉயர்ந்தது.

எதிராளிகளின் வாயடைத்துப் போகும்படி காரசாரமான கேள்விகளைக் கேட்டு, பளிச்சுப் பளிச்சென்று பதில் சொல்லும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமை இந்திய சட்டசபையில் வெகு நன்ருக சோபித்தது.

அப்போது வைஸ்ராய் நிர்வாக சபையில் சட்ட இலாகா அங்கத்தினராக யிருந்தவர் ஸர் என். என். சர்க்கார். இவர் வங்காளத்தின் பிரசித்த வக்கீல்; மாஜி அட்வகேட் ஜெனரல், சென்னையில் ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயருக்கு எவ்வளவு பிரபலமோ அவ்வளவு பிரபலம் வங்காளத்தில் அடைந்தவர்.

ஒரு சமயம் ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசும் போது "சட்ட மெம்பர் தனது சட்ட ஞான மனச்சாட்சியை உபயோகப் படுத்த வேண்டும்!" என்ருர்.

"எனக்கு மனச்சாட்சி உண்டென்று கனம் அங்கத்தினர் குற்றம் சாட்டுகிருரா?" என்று சாதுர்யமாய்க் கேட்டார், என். என். சர்க்கார்.

"தப்புத்தான்; மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!", என்று உடனே பதில் கொடுத்தார் சத்தியமூர்த்தி.

வாக்குப் போர் என்று வரும் போது எதிராளி கடைசி வார்த்தை சொல்லுவதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருநாளும் விடுவதில்லை. இவருடைய வார்த்தைதான் கடைசி வார்த்தையாயிருக்கும்.

அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியார் கொண்டு வந்த மசோதாவின் பேரில் ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசிக் கொண்டிருந்தார். அப்போது நிர்வாக சபையிலுள்ள இந்திய அங்கத்தினரைத் தாக்கத் தொடங்கினர்.

என். என். சர்க்கார்: — நீங்களும் மந்திரியானல் அடியோடு மாறிப் போவீர்கள்.

சத்தியமூர்த்தி:— அப்படி மாருமலிருக்க உங்களுடைய உதாரணமே எச்சரிக்கையாயிருக்குமே!.........

அக்கிராசனர் (ஸர் அப்துர் ரஹீம்) :— தனிப்பட்ட மனிதர்களைத் தாக்குவது ரொம்ப அதிகமாகி வருகிறது.

என். என். சர்க்கார்;— நான் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இன்னும்கொஞ்சம் தாக்கட்டும். (சிரிப்பு)

சத்தியமூர்த்தி:— அப்படியானல் நிறுத்தி விடுகிறேன். நான் சொல்லுவது எதுவும் அவருக்கு உறைக்கவில்லை யென்று தெரிகிறது! மனுஷர் கொஞ்சம் சுரணை யுள்ளவர் என்று நினைத்திருந்தேன்!

மேற்கண்ட விவாதத்தின் போதே பின்னல் ஒரு தடவை என். என். சர்க்காருக்கும் சத்தியமூர்த்திக்கும் போராட்டம் மூண்டது.

"மாகாணங்களில் மந்திரிகளின் சர்க்கார் ஏற்படும்

போது, அந்த மந்திரிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்து விரோதம் உண்டுபண்ணுவிட்டால், ஒரு மந்திரி சபை மாறி இன்னொரு மந்திரி சபை எப்படி ஏற்பட முடியும்?'' என்பது ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாதங்களில் ஒன்று.

சத்தியமூர்த்தி:— நல்லது; நாளைக்கு நான்தான் மந்திரியாகவே இருக்க விரும்புகிறேன். எனது கனம் நண்பர் (என். என். சர்க்கார்) என்ன செய்வார்? என் பேரில் 'விரோதம்' துவேஷம்' உண்டு பண்ணுதபடி எப்படி எதிர்ப் பிரசாரம் செய்வார்?

சர்க்கார் :— 'எனது நண்பர் ரொம்ப தங்கமான மனுஷர்; ஆனால் தப்புகள் செய்திருக்கிறார்' என்று சொல்லுவேன்.

சத்தியமூர்த்தி :— அப்படிச் சொன்னால் வோட்டே கிடைக்காது. (சிரிப்பு)

சர்க்கார்:— இது வோட்டுப் பிடிக்கும் வேலை யென்று அப்போதே சந்தேகித்தேன்.

சத்தியமூர்த்தி :— ஆமாம்; ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்தான். நாங்கள் வோட்டுப்பிடிப்பவர்கள்தான்; வைஸ்ராய்கள் — கவர்னர்களுடைய வால் பிடிப்பவர்கள் அல்ல! (சிரிப்பு)

கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் மசோதாவின் மீது விவாதம் நடந்துகொண்டிருந்தது. மிஸ்டர் எப். இ. ஜேம்ஸ் (சென்னை ஐரோப்பியர் பிரதிநிதி) சர்க்காரின் ஆட்சியை ஆதரித்துப் பேசி வந்தார்.

ஜேம்ஸ்:— பயங்கர இயக்கத்தைச் சாதாரண சட்டங்களால் அடக்க முடியாது. மசோதாவை எதிர்ப்பவர்கள் வேறு என்ன வழி காட்டுகிறார்கள்?

சத்திய :— சுயராஜ்யம். (கேளுங்கள் கேளுங்கள்.)

ஜேம்ஸ்:— உலகத்திலேயே சுதந்திரத்தில் அதிகப் பற்றுள்ள தேசம் இங்கிலாந்துதான்.........

சத்திய:— எகிப்தையும், அயர்லாந்தையும், அமெரிக்காவையும் கேளுங்கள்!

ஜேம்ஸ்:— பின், யார் கீழே இருக்க விரும்புவீர்கள்? ஜெர்மனியின் கீழா? இத்தாலியின் கீழா?

சத்திய:— ஜெர்மனியின் கீழுமில்லை, இத்தாலியின் கீழுமில்லை, உங்கள் கீழேயுமில்லை. உங்கள் எல்லோரையும் உதைத்து வெளியேற்றுவோம்! (We will kick you-all out!)

ஸ்ரீ சத்தியமூர்த்தி, அஞ்சா நெஞ்சத்துடன் தாய்நாட்டு விடுதலைக்கு உழைத்த வீரர்களில் ஒருவர். பாராளுமன்றச் சம்பிரதாய மறிந்தவர்களில் அவரை மிஞ்சியவர் ஒருவர் இருப்பது சந்தேகமே... தம்முடைய உழைப்பின் வெற்றியைக் கண்டு மகிழும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்காதது பரிதாபமே. — ஏ. லட்சுமணசுவாமி முதலியார்

ஸ்ரீ சத்தியமூர்த்தி 1936 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்.

[இதை ஒலிப்பதிவு செய்து எல்லாக் கூட்டங்களிலும் ஒலிபரப்பப்பட்டது.]

❋

''அன்பார்ந்த தமிழ்நாட்டு சகோதர சகோதரிகளே, நான் உங்கள் ஒவ்வொருவரையும் நேரடியாகவே கண்டுபேச அசக்தனாக இருப்பதால், இந்த ரிகார்டு மூலம் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் நீங்கள் எல்லோரும் காங்கிரஸ் அபேட்சகருக்கே உங்கள் வோட்டுகளைக் கொடுக்க வேண்டும். வோட்டு என்பது, தேசத்தின் க்ஷேமத்திற்காக உபயோகப்படுத்த வேண்டிய, உங்கள் கையில் இருக்கும் ஓர் அதிகாரம்.''

''இத்தேசத்தின் விடுதலைக்காகவும், க்ஷேமத்திற்காகவும் 51 வருஷமாய் நம் மக்களுக்காக, முக்கியமாக ஏழைகளுக்கு ஜாதிமத வித்தியாசமின்றி உழைத்து வருவது காங்கிரஸ் மகாசபை. வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் உங்கள் வோட்டுகளையெல்லாம் அபரிமிதமாக காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே கொடுத்து, காங்கிரஸ்தான் தேச மக்கள், தேசமக்கள்தான் காங்கிரஸ் என்பதை நேரடியாக நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் அபேட்சகர்கள் சட்டசபைக்குச் சென்று, தன்னல மறுப்புடன் தேசத்திற்காகவே உழைப்பார்கள். பட்டம், பதவி வேட்டையாடமாட்டார்கள். கட்டுப்பாடுடன் தேசபக்தியுடன் ஒற்றுமையுடன் தைரியமாய் உழைப்பார்கள். காங்கிரஸ் அங்கத்தினர்கள் சட்டசபைகள் மூலமாகவும், இதர வகைகளில் உயர்ந்த பூரண சுயராஜ்ய லட்சியத்திற்குப் பாடுபடுவார்கள். ஜனங்களுக்கு அனுகூலமான காரியங்கள் செய்ய

முயலுவார்கள். கதரை அபிவிருத்தி செய்வார்கள், சோசலிஷத்தை ஆதரிப்பார்கள். கட்குடியை ஒழிக்க முயலுவார்கள், ஏழைக்குடியானவர்களின் நில வரியைக் குறைக்க வேலை செய்வார்கள். கிராமப்புனருத்தாரண வேலையில் ஈடுபடுவார்கள். குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய பாடுபடுவார்கள். ஆதலால் அவர்களையே நீங்கள் ஆதரிக்க வேண்டும். எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாக இம்மாகாணத்தில் பதினைந்து வருஷமாக ஆட்சிப் புரிந்து வந்த பிற்போக்கான சமூக வாதக் கட்சியை, அதனுடைய உடன்பிறந்தானுகிய புதுக்கட்சியை சட்டசபைக்கு வராமல் தடுப்பது உத்தமமான தேச கைங்கரியம். அவர்கள் உள்ளே வந்தால், தங்கள் காரியங்களைப் பார்ப்பார்களே யொழிய தேசத்திற்காக உழைக்கமாட்டார்கள்.

''என் தமிழ்நாட்டு சகோதர சகோதரிகளே, நான் மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே வோட்டுக்கொடுங்கள். காங்கிரஸ் கட்சி, ஜமீன்தாரர்கள் கட்சியல்ல, முதலாளிகளின் கட்சியல்ல, உங்களையும் என்னையும் போன்ற சாதாரண ஏழை ஜனங்களின் கட்சி. நீங்கள் எல்லோரும் தேர்தல் தினம் கால் நடையாக வோட்டுப்போடும் இடங்களுக்குச் சென்று, அந்தரங்கமாய் பகவானை பிரார்த்தித்துக்கொண்டு, உங்கள் வோட்டுகளை மங்களமரமான மஞ்சள் காங்கிரஸ் பெட்டியில் போட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.''

''உங்கள் வேலையை நீங்கள் செய்யுங்கள். காங்கிரஸ் நிச்சயமாய் உங்கள் க்ஷேமத்தைக் கோரி இடைவிடாது வேலை செய்யும். தேசம், நம் நாடு விடுதலை அடையும். நாம் எல்லோரும் நம் நாட்டு மன்னராய் வாழலாம் — வந்தேமாதரம்.''

சத்தியமூர்த்தியும் பாரதியும்

வில்லி

கவியரசன் பாரதியும், சொல்மன்னன் சத்தியமூர்த்தியும் நம் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக தங்கள் வாழ்நாட்களை முழுவதும் அர்ப்பணித்தார்கள். நாடு சுதந்திரம் பெறுவதைக் காணுமல் மறைந்து விட்டார்கள். அன்று பாரதி தீர்க்க தரிசனமாகப் பாடிய பாடல்கள்தான் இன்றும் நமக்கு உறுதுணையாக இருக்கின்றன. அன்று சத்தியமூர்த்தி முழங்கிய சொற்கள்தான் இன்று நம்முடைய சுதந்திரவாழ்க்கைக்கு இசையாக அமைந்திருக்கின்றன. ஒருமைப்பாடு, பாதுகாப்பு முயற்சிகள் முதலிய அம்சங்களுக்கு நாம் அந்தத் தலைவர்களுடைய பாடல்களையும் சொற்களையும், இன்று சேமிப்பு நிதிப்பணம் போல் எடுத்துக் கொள்கிறோம்.

நாற்பது வருஷங்களுக்கு முன்பு, சென்னை சட்டசபையில் ஆளும் வர்க்கத்தினரின் சகாக்களாக அமர்ந்திருந்த பாரத மக்களாகிய மந்திரிகளின் செவிகளில் எதிரொலிக்கும் வகையில் சத்தியமூர்த்தி பாரதியின் பெருமைகளைப்பற்றி எடுத்துரைக்கிறார். இரட்டையாட்சியின் விபரீத விளைவான மந்திரி சபையின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது சத்தியமூர்த்தி பேசுகிறார். மந்திரி சபைத் தலைவர் ஜஸ்டிஸ் கட்சியின் அமைப்பாளர்களில்ஒருவரான பனகல் ராஜா. அதுதான் சட்டசபையில் சத்தியமூர்த்தியின் முதற் சொற்பொழிவு. அந்தச் சமயத்தில் பள்ளிக் குழந்தைகளின் பாட சம்பந்தமாக சத்தியமூர்த்தி பேசியது மிகவும் பொருத்தமாக இருந்தது.

“தமிழ் நாட்டில் பாரதி என்ற மனிதன் ஒருவர் இருந்தார்.” என்று சத்தியமூர்த்தி மந்தபுத்தி படைத்த குழந்தைகளுக்கு கதை சொல்லும் வகையில் ஆரம்பித்தார். “அந்த மனிதன் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அரசாங்கக் கவிஞராக நியமிக்கப்பட்டிருப்பார். அவருடைய கவிதைகள் உயர்ந்தவை. தேசிய உணர்ச்சி ஊட்டுபவை. திருநெல்வேலி தாலுகா போர்டு அந்த மனிதரின் பாடல்களை பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தபோது, கனம் முதன் மந்திரி அவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டு விட்டது.

இந்தப் பாடல்களின் மூலம் புரட்சி ஏற்பட்டுவிடும் என்று அவர் நினைத்தார்.'' என்று சத்தியமூர்த்தி கர்ஜித்தார். இந்தச் சொற்களில் அந்த முதன் மந்திரிக்கு ஒரு பாராட்டுக் கூட தொனித்தது என்றும் சொல்லலாம். சுதந்திர வேட்கை கொண்ட நாட்டில் பாரதியாரின் பாடல்களால் புரட்சி ஏற்படக்கூடும் என்று முதன் மந்திரி உணர்ந்ததை சத்தியமூர்த்தி எடுத்துக் காட்டினார்.

ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு சத்தியமூர்த்தி மீண்டும் பாரதி பாடல்கள் விஷயமாக சட்ட சபையில் பேசினார். போலிசார் பாரதி பாடல் புத்தகங்களைக் கைப்பற்றி விட்டார்கள். இது பற்றி கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றின்மீது சத்தியமூர்த்தியின் சொற்பொழிவு. அந்தச் சந்தர்ப்பத்தில் சத்தியமூர்த்தியின் பிரசங்கம் சட்ட சபை அங்கத்தினர்களுக்குப் பாரதியின் பாடல் பற்றிய இலக்கிய விளக்கமாக அமைந்தது. ''காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியின் நாவில் சரஸ்வதி தேவி நாட்டுப்பற்று நடனம் ஆடிக்கொண்டிருந்தாள். இந்தியா தவிர வேறு எந்தச் சுதந்திர நாட்டில் பிறந்திருந்தாலும், பாரதி அந்த நாட்டின் அரசாங்கக் கவிஞராக இருந்திருப்பார். ஆனால் அடிமை நாடாகிய இந்தியாவில் பிறந்ததால் அவர் புதுச்சேரியில் தேசப் பிரஷ்டராக வாழ்ந்து மனம் நொந்து

With the Compliments

of

MAHINDRA & MAHINDRA LIMITED

BOMBAY - CALCUTTA - NEW DELHI - MADRAS

மறைய வேண்டிய துர்ப்பாக்யம் ஏற்பட்டது. இந்த மாதிரி தான் அவருக்கு முன்பும் தேச பக்தர்களும் தியாகிகளும் வாழ்ந்து மறைந்தார்கள். சுப்பிரமணியபாரதிக்கும் அதே கதிதான் நேர்ந்தது. சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். பாரதி பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் எல்லாவற்றையும் நீங்கள் கைப்பற்றிவிடலாம். எழுத்தில் பொறிக்கப்படாத வேதங்கள் கர்ணபரம்பரையாக தொன்றுதொட்டு தலைமுறை தலைமுறையாக வழங்கி வருவதைப்போல், தமிழ் உள்ளவரையிலும், தமிழன் என்று ஒருவன் உள்ளவரையிலும், பாரதியின் பாடல்கள் தமிழ் மக்களின் மதிப்பற்ற செல்வமாக நிலைத்து நிற்கும்.''

ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி மற்றொரு தீர்க்கதரிசி கூறிய சொற்கள் இன்று நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

சத்தியமூர்த்தி தம்முடைய அரசியல் பணி முழுவதிலும் பாரதியாரின் பாடல்களை விரிவாகக் கையாண்டு வந்தார். ''பாரதி தேசபக்திப் பாடல்கள் மட்டுமே பாடினார் என்று நினைப்பது தவறு'' என்று 1933 ம் ஆண்டு நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் சத்தியமூர்த்தி கூறினார். பாரதியாரின் பாடல்கள், வரலாறு, பொருளாதாரம், சமூக இயல் போன்ற எல்லாத்துறைகளையும் பற்றிய விளக்கங்களாகும். அவருடைய பாடல்களில் காணும் கருத்துச்செறிவு வியக்கத்தக்கது. அந்தப் பாடல்கள் அவைகளின் பொருளுக்கேற்ப இசைக்கப்பட வேண்டும். நன்றாய் பொருள் அறிந்து பாடினால் பாரதியின் பாடல்கள் தேசிய உணர்ச்சியை எழுப்புவதுடன் சஞ்சலமடைந்த மனத்துக்கு ஆறுதலாகவும் அமையும்'' என்று சத்தியமூர்த்தி விளக்கினார். மீண்டும் 1939 ம் ஆண்டில் பாரதி தின விழாவில் பேசும்போது அவர் தமிழ் நாட்டில் தேசிய எழுச்சி ஏற்பட்டதற்கு பாரதியின் பாடல்களே முக்கியகாரணம் என்று கூறினார். ''காந்தி சகாப்தத்திற்கு நெடு நாட்களுக்கு முன்னதாகவே வாழ்ந்த பாரதி ஒரு தீர்க்கதரிசியின் திருஷ்டியுடன் பாடி வைத்த பாடல்கள் மனிதருக்கு என்றும் உற்சாகம் கொடுக்கும் சக்தியாக உருவெடுத்தன. சுதந்திரப் போராட்டத்தில் யாருக்காவது சந்தேகங்கள் ஏற்பட்டால் பாரதியின்பாடல்களைப் படித்து விளக்கம்பெற வேண்டும். அந்தப்பாடல்களைப் படித்தறிந்தவர்களுக்கு புதிய நம்பிக்கையும் ஊக்கமும் உண்டாகும்'' என்று சத்தியமூர்த்தி எடுத்துரைத்தார். இன்று தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும், அயல் நாட்டுக்கு அறைகூவலாய் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிப்பதிலும் மக்களின் உணர்ச்சி முழுவதிலும் பாரதியாரின் பாடல்களின் மூலம் எதிரொலிப்பது சத்தியமூர்த்தியின் தீர்க்கதரிசனத்திற்கும் ஒரு சான்றாகும்.

என் தந்தையார்

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

டிசம்பர் மாதம், 1931-ஆம் ஆண்டு, சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் பின்புறம் இருக்கும் திடலில் பிரும்மாண்டமான பந்தலில் 'மியூஸிக் அகாடமியின்' சங்கீத விழா கோலாஹலமாக நடந்து கொண்டிருந்தது. அகாடமியின் நிர்வாகிகளில் ஒருவராதலால் அப்பா காலை முதல் இரவு கடைசிக் கச்சேரி தீரும் வரை அங்கேயேதான் இருப்பார். நானும், அம்மாவும் கச்சேரிகளுக்கு மட்டும் போய் விட்டு அப்பாவுடன் இரவு திரும்புவோம். எனக்குத் தேதி சரியாக நினைவில்லை. ஆனால் அன்று கச்சேரி முடிந்ததும் அப்பா எங்களுடன் வழக்கம்போல் வரவில்லை, நேரங்கழித்து வருவார் என்று சொல்லி என்னை அம்மா அழைத்து வந்து விட்டார். ஆனால் நாங்கள் வந்த காரிலேயே அப்பாவுக்குச் சாப்பாட்டை 'செட்டில்' அனுப்புவது கண்டு, என்னை விட்டு விட்டு, சொல்லிக் கொள்ளாமல் அப்பா வெளியூருக்குப் போய்விட்டாரோ என்று எனக்கு ஒரே சந்தேகம். வீட்டிலிருந்தவர்களின் சமாதானமெல்லாம் எனக்கு ஆறுதல் அளிக்கவில்லை. அழுது அழுது அப்பாவின் படுக்கையிலேயே கிடந்து தூங்கிவிட்டேன்.

மறுநாள் என் சிற்றப்பா ஸ்ரீராமச்சந்திர அய்யர் என்னை அப்பா விசாரணை செய்யப்படும் கோர்ட்டுக்கே அழைத்துப் போனார். அங்கு ஒரே கூட்டம். அப்பாவிற்காக கொண்டு வந்திருந்த உணவை அவருக்குக் கொடுத்து விட்டு, அன்றைய விசாரணை முடிந்து போலீஸ் வானில் அவரை அனுப்பிய பிறகே நாங்கள் வீடு திரும்பினோம். போலீஸ் காவலுடன் அப்பா இருப்பதைப் பார்ப்பது,

ஸர்தார் வல்லபாய் படேலுடன் சத்தியமூர்த்தி குடும்பத்தினர்

நேருஜியுடன் திரு. சத்தியமூர்த்தி குடும்பத்தினர்
சத்தியமூர்த்தி, லட்சுமி, நேருஜி, ஸ்ரீமதி சத்தியமூர்த்தி

ஐந்தரை வயதான எனக்கு அதுதான் முதல் அநுபவமாத லால் அழியாச் சித்திரமாக என் நினைவில் அது பதிந்து விட்டது. 1931 – 43க்கும் இடையே இருந்த பன்னிரண்டு ஆண்டுகளில் நான்கு தடவை சிறைவாசம் செய்து அதனால் உடல் நிலை சீர்கெட்டு ஒவ்வொரு தடவையும் ஆஸ்பத்திரி யில் சிகிச்சை பெற்றே வெளிவருவது பிற்பாடு எங்களுக்கு சகஜமாகிவிட்டது.

அப்பா இரண்டாம் முறை சிறை சென்ற பொழுது ஸ்ரீ ராஜாஜி எனக்காக சிறை சூப்பிரெண்டிடம் பிரத்யேக அநுமதி கோரி ஜெயிலின் உள்ளே எல்லாம் சுற்றிக் காண் பித்தார். கைதிகள், மாடுபோல் செக்கிழுப்பதையும், கல் உடைப்பதையும் கண்டு, அப்பாவும் அவர் நண்பர்களும் இதுபோல கடும் வேலை செய்ய வேண்டுமோ என்ற என் பயத்தை நீக்க, 'அரசியல் கைதிகளுக்கு இந்த மாதிரித் தண்டனைகள் இல்லை' என்று விளக்கினார் அப்பா. அவர் அங்கிருக்கும் அச்சகத்தில் வேலை செய்வதாகச் சொன்னார்.

சிறை சென்று எதிர்த்தால் மட்டும் போதாது, ஆக்க வேலைகளிலும், சட்ட சபைகளிலும் பங்கு கொண்டு சுய ராஜ்யம் அடைய வேண்டுமென்ற கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டவர் அப்பா. அவர் அபிப்பிராய வித்தியா சங்கள் நேரிட்டபோதெல்லாம் அது காந்திஜியானாலும் தன் வழிக்குக் கொண்டுவர முயல்வாரே தவிர ஒரு நாளும் கட்சியைவிட்டு பிரிந்ததில்லை. அவருடைய கட்சிப் பற்று அசைக்க முடியாதது.

அதேபோல் அவர் மதப்பற்றுடையவர். தினசரி பாரா யணம் செய்யாமல் காலை ஆகாரம்கூட செய்ய மாட்டார். எந்த ஊருக்கு மீட்டிங்குக்காக சென்றாலும் இரவு எவ்வளவு நேரமானாலும் அங்குள்ள கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்யாமல் இருக்கமாட்டார். ஆழ்ந்த ஈசுவரப் பக்தியுடன் மூட ஆசாரங்களில் அவநம்பிக்கையும் இருந்தது. ஹரிஜன ஆலயப் பிரவேசம் தொடங்கிய உடனே மதுரையிலிருக்கும் சனாதனிகள் "மீனாட்சியம்மன் இந்த அக்கிரமம் தாளாமல் கோவிலிலிருந்தே போய்விட்டாள்"

என்று கூக்குரலிட்டார்கள். அச்சமயம் மதுரை கோவிலுக்கு அதுவரை போகாத ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ வி. ஐ. முனுசாமிப் பிள்ளை (ஹரிஜன்) முதலியவர்களுடன் சென்று அர்ச்சனை செய்து தேவியை வழிபட்ட பின்னர் "மதுரை மீனாட்சியம்மன் எங்கும் போய்விடவில்லை, தெய்வ சாந்நித்யத்திற்கு யாதொரு குறைவுமில்லை" என்று பத்திரிகையில் அறிக்கை விடுத்தார்.

மதுரை பொற்றாமரைக் கரையில் அரசியல் குருவும் சீடர்களும்

அப்பாவிற்கு முன்கோபம் ஜாஸ்திதான், இருந்தாலும் அது வந்த சூட்டோடு போய்விடும், வன்மமே வைத்துக் கொள்ளமாட்டார். அரசியலில் அப்பாவுக்கும் ராஜாஜிக்கும்கொள்கை வேற்றுமை அடிக்கடி எழும். இருப்பினும் இருவரும் நட்பை ஒருபோதும் துறந்ததில்லை. ஒரு தீபாவளியன்று கங்கா ஸ்நானம் செய்த பின்னர் அம்மாவையும் என்னையும் அழைத்துச் சென்று ராஜாஜியை நமஸ்கரித்து

வந்தோம். அந்நிய தேசத்தவராயினும் சரி, ஆளும் வர்க்கத்தினராயினும் சரி, அரசியல் வேறு, நட்புரிமை வேறு என்பதையே வாழ்க்கை முறையாக கடைப்பிடித்தார். அன்றைய நிதி அமைச்சர் ஸர் ஜேம்ஸ் கிரிக், ஸர் H. E. ஜேம்ஸ், ஸர். ஹென்ரி க்ரெயிக் போன்றவர்கள் அப்பாவின் நட்பு கொள்ளும் சரள சுபாவத்தை வெகுவாகக் கொண்டாடுவார்கள். ஒரு தரம் ஸிம்லாவில் ஸர். ஜேம்ஸ் கிரிக்கின் வீட்டில் நடந்த ஒரு 'Cocktail Party'க்கு அப்பா போனதைக் குறித்து தினமணிப் பத்திரிகையில் மத்திய சட்டசபையின் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் ஆளும் வர்க்கத்தினருடன் உறவு கொண்டாடலாமா? என்று வன்மையாக கண்டித்து தலையங்கம் கூட எழுதினார்கள்!

மேயராக அப்பா தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவருடைய பால்ய நண்பர் ஸ்ரீ ஆர். ராஜகோபாலய்யர் அப்பாவுக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில் — "புதுக்கோட்டையில் இண்டர்மீடியட் முடிந்ததும், சென்னை சென்று படிப்பதைத் தொடர்வதா வேண்டாமா என்று குடும்பத்தின் பொருளாதார நிலையினால் ஆலோசித்தாயே; இன்று அதே சென்னை நகரின் மேயராகவே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாய். எனக்கு டிக்விட்டிங்டனின் கதையில் மாதாகோவிலின் மணியோசை அவனுக்கு' மறுபடியும் திரும்பு, மறுபடியும் திரும்பு – லண்டன் மாநகரின் மேயர்ப் பிரபுவே என்று ஒலித்தது என்பார்களே அதுதான் நினைவுக்கு வருகிறது"- என்று எழுதியிருந்தார்.

சென்னையை சௌந்தர்ய நகரமாக்க நினைத்த அவர் சொல்லளவில் மாத்திரமல்லாது, செயலளவிலும் வெகு பிரயாசைகளை மேற்கொண்டார். மேயர் பதவி வகித்த சமயம், தினம் காலை ஏழுமணி முதல் 10 மணி வரை நகரசுத்தி வேலையை மேற்பார்வையிட டிவிஷன் தோறும் போய்விடுவார். அந்த ஒரு வருஷ காலமும் கடும் உழைப்புத்தான். உழைப்பு ஒன்றினாலேதான் அவர் புகழ் பெற்றார்.

சட்டசபைக் கூட்டமானாலும் சரி, வேறெந்த கூட்டமானாலும் சரி பிரசங்கத்திற்குரிய விஷயத்தை சிரத்தையுடன் தயாரித்துக் கொண்டுதான் போவார். பிரசங்கிக்க

With Best Compliments

from

DHRANGADHRA CHEMICAL WORKS LTD.,

SAHUPURAM,

ARUMUGANERI P. O.,

TIRUNELVELI DISTRICT,

MADRAS STATE

அழைத்து நம்மை அவர்கள் கௌரவிக்கும்போது நாம் முன் கூட்டியே தயார் செய்வதுதான் பதில் மரியாதை என்பார். பிரசங்கத்தில் அப்பாவிற்கு இருக்கும் மங்காப் புகழின் ரகஸ்யம் அவருடைய தளராத உழைப்புதான்.

கடைசியில் தேக நலம் வெகுவாக குன்றிவிட்ட போதிலும் எப்படியும் வெள்ளையனை வெளியேற்றி நம் நாட்டை நாமே ஆளுவோம் என்ற நம்பிக்கை சற்றும் குறையவில்லை. அவருக்கு "இதோ சுயராஜ்யம் கிடைத்துவிடும், நான் இங்கிலாந்துக்கே இந்தியத் தூதனுக (Ambassador) போய் சேவை செய்வேன்" என்று கடைசி காலத்தில் கூட கூறிவந்தார். அவர் உறுதிகூறி பிரதிக்ஞை செய்தபடி இன்று சென்னைக் கோட்டையிலும், தில்லி செங்கோட்டையிலும் நம் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. "நான் பார்க்காமல் போனுலும் அடுத்த தலை முறையினர் கட்டாயம் சுயராஜ்யத்தைக் கண்டு களிப்பார்கள்" என்று தீர்க்க தரிசனத்துடன் அப்பா கூறியது இன்று நனவாகி விட்டது.

ஜெய் ஹிந்த்!



சத்தியமூர்த்தியின் சிலையைத் திறந்து வைப்பதற்காக சென்னைக்கு வந்தபோது நேருஜி, சத்தியமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று சத்தியமூர்த்தியின் மனைவியைச் சந்திக்கும் காட்சி



தியாகராயநகரிலுள்ள சத்தியமூர்த்தியின் வீட்டுக்கு நேருஜி விஜயம் செய்து விடைபெறும் காட்சி

ஸ்ரீசத்தியமூர்த்தி இணையற்ற பிரசங்கியாக விளங்கினர். தென்னிந்தியாவில் பாமர மக்களிடையேயும் அரசியல் அறிவைப் புகுத்திய தலைவர்களுள் அவரே முதன்மையானவர். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தட்டுத் தடங்கலின்றிப் பேசினர். இலக்கியங்களைப் படிப்பதிலும் நாடகம் சங்கீதம் முதலியன உட்பட அழகுக் கலைகளை அனுபவிப்பதிலும் அவருக்கு அதிக ஆசை.

— சர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்

மேயர் சத்தியமூர்த்தி

தி. கோ. அனந்தஸ்வாமி

ஆண்டொரு வகுப்பினர் மேயராய் ஆளவேண்டும் என்று சம்பிரதாயமுள்ள சென்னைமா நகராண்மைக் கழகத்தில், பன்னிரண்டு வருடங்களாய் கௌன்ஸிலராகப் பணி செய்து வந்த சத்தியமூர்த்தி 1939 ஆம் வருடம் நவம்பர் மாதம் 6ம் நாளன்று மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சூழ்நிலை ஸாதகமாயிருந்ததென்று சொல்ல முடியாது. இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்துச் சில வாரங்களேயாயிருந்தன. தேசத்தின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளாமலே அன்னிய அரசாங்கத்தினர் இந்தியாவை யுத்தத்தில் பங்கு எடுக்கச் செய்தனர். மாபெரும் ராஜீயக் கட்சியான காங்கிரஸ் ஒத்துழைப்பை நீத்ததின் பயனாக சென்னை மாகாணத்தில் ஆலோசகர்கள் உதவியுடன் கவெர்னர் அரசாங்கம் நடத்திய காலம்.

ஒரு வருஷ காலத்துக்குள் மேயராயிருந்து என்ன சாதிக்க முடியுமென்று சத்தியமூர்த்தி கவலைப்படவேயில்லை. ஒரு குறிக்கோளுடன் உண்மையாய் உழைத்தால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பணி செய்ய ஆரம்பித்தார். தான் நகரத்தின் அலங்காரத் தலைவனாயிராது பிரதம சேவகனாயிருப்பதென்று தீர்மானித்தார்.

இயற்கை அழகு படைத்த சென்னையை அறியாமையினாலும், அநாகரீக நடத்தைகளாலும் அழகைக் கெடுக்கும் சமுதாயத்தை அறிவாளிகள் நிறைந்ததாகச் செய்து "அழகு மிகு நகரம்" என்று சென்னைக்குப் பெயர் கிடைக்கச் செய்வதே முதல் குறியாக வைத்தார். சென்னையிலுள்ள பல டிவிஷன்களுக்கும் தானே சென்று நோக்கி சுகாதாரக் குறைவுள்ள இடங்களைச் சுத்தம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். சென்னை மக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றார். பாட்டாளி மக்கள் நலனில் கவனம் செலுத்தினார். அவர்களுக்கு வீட்டு வசதிகள் கிடைக்கச் செய்தார்.

வளரும் சென்னைக்கு அதிகாரம் உள்ள நகர அபிவிருத்தி நிறுவனம் வேண்டுமென்று அரசாங்கத்தினரிடம் மன்றாடினார். அரசாங்கம் வழக்கம்போல் தாமதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது. சத்தியமூர்த்தியின் தீர்க்க தரிசனத்தின் பலனை தற்காலம் சென்னையின் பல்வேறு பாகங்களிலுள்ள 'நகர்'களிலும் 'காலனி'களிலும் உள்ள மக்கள் அனுபவிக்கின்றனர்.

சென்னை மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியை அதிகரிக்க பூண்டியில் குசஸ்தலை நதியில் அணை கட்டிட வேண்டுமென்று பிரேரேபித்து, அரசாங்கத்தாரை இணங்கச் செய்தார். எத்தனையோ சிக்கல்களைத் தவிர்த்து ஒரு பங்கு கடனாகவும் மிச்சமெல்லாம் கொடையாகவும் அரசாங்கத்தினரிடமிருந்து வாங்கியது சத்தியமூர்த்தியின் ஸாமர்த்தியத்தினால்தான் என்பதில் சந்தேகமில்லை, சத்தியமூர்த்தி தன்னால் உருவான நீர்த் தேக்கத்தைக் கண்டார், ஆனால் நன்றியுள்ள நகரம் அதற்கு "சத்தியமூர்த்தி ஸாகரம்" என்று நாம கரணம் செய்வதைக் காண விடாது விதி செய்தது.

மேயர் வேலையை முழுநேர வேலையாக ஊதியம் பெறும் ஊழியர்போல் செய்தார். தன்னுடைய ஆர்வமிகு பணியால் சென்னை மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும், எல்லாவித வசதி

களையும் அனுபவிக்க வேண்டும் என்று உயர்ந்த எண்ணத்துடன் அவர் அல்லும் பகலும் உழைத்தார்.

தன்னுடைய ஒரு வருட ஆட்சிக்குள் அவர் இரண்டு மாநாடுகள் கூட்டினார். அகில இந்திய—சிலோன்—பர்மா மேயர்கள் கூட்டம் சென்னையில் கூடியது; அதற்குத் திறமையுடன் தலைமை வகித்தார். சென்னை மாகாணத்திலிருந்த நகராட்சிக் கழகங்களின் தலைவர்கள் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்து அதற்கும் தலைமை வகித்தார். அந்தக் கூட்டங்களில் நகராட்சித் தலைவர்களும், மேயர்களும் தங்கள் ராஜீயக் கட்சிகளை மறந்து நகர நலனையே முக்கியமாகக் கருதி நடக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். நகராண்மைக் கழகங்களில் பகுதிகளின் பிரதிநிதிகளாய் உழைப்பவர்கள் தங்கள் பகுதிகள் மட்டும் நல்ல வசதிகளடைய வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையுடன் நடக்கக் கூடாது என்று உபதேசித்தார்.

சத்தியமூர்த்தி 1940 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாலாந் தேதியன்று கடைசியாக மேயர் ஆசனத்தில் அமர்ந்து பிரிவு

* அழகுக்கு அழகு செய்ய
பலவகை ஜவுளி தினுசுகள்

* நவராத்திரி, தீபாவளி மற்றும் இதர
பண்டிகை, விசேஷ நாட்களுக்கேற்ற
பலவண்ணத் துணி வகைகள்,

உங்கள் எல்லாத் தேவைகளுக்கும்
வருகை புரியுங்கள்.

*

பங்கஜம் ஸ்டோர்ஸ்

4/69, WEA, கரோல் பாக்,
புது தில்லி-5.

உபசாரம் பெற்ருர். அந்தக் கூட்டத்தில் ஒரு இந்திய அதிகாரியும், ஒரு ஆங்கிலேயரும் பாராட்டுரைகள் வழங்கினது மறக்க முடியாத சம்பவம், கமிஷனராகவிருந்த ஓ. புல்லா ரெட்டி, ஐ. ஸி. எஸ். — அனேக விஷயங்களில் சத்தியமூர்த்தியுடன் கருத்து வேற்றுமை கொண்டவர். சத்தியமூர்த்தியின் உண்மை உழைப்பையும் கொஞ்சமேனும் தளராமல் ஓராண்டில் ஆயிரம் கடிதங்கள் அவருக்கு எழுதினதையும் பற்றி எடுத்துரைத்தார். ஆங்கிலேய அங்கத்தினர் ஆர். டப்ள்யூ. தியோபால்ட் "திரு. மேயரவர்களே—நீங்கள் கடைசி முறையாக இன்று மேயர் பீடத்தில் இருக்கப்போவதைப் பற்றி மிகவும் உண்மையாக வருத்தப்படுகிருேம். இன்றுகாலை இதைப்பற்றி நினைக்கும்போது வகுப்புவாரி பிரதிநிதித்வம் இந்த தேசத்தில் இருப்பது எவ்வளவு அதிருப்திகரமானதென்று எனக்குத் தோன்றிற்று......உம்மைப் போன்ற அரிய திறமையுள்ளவர்கள் ஒரு வகுப்பில் பிறந்தமையால், சம்பிரதாயத்தின் வலிமையால் மேயர் அரியாசனத்தை விட்டு அகலவேண்டுமென்பது வெட்கக்கேடு" என்ருர்.



பூண்டி நீர்த் தேக்கத்தில் கவர்னர் திரு. ஆர்ச்பால்டு நையும் திரு. சத்தியமூர்த்தியும்

தளசிங்கம்

கி. சந்திரசேகரன்

பிறந்த நாட்டைப் பற்றிப் பெருமை பாராட்டிப் பேசுகிறவர்கள் பலர் உண்டு, எங்கள் தந்தையர் நாடென்றதும் மூச்சில் சக்திப் பிறப்பதை நேரில் காட்டியவர்கள் சிலரே. அவ்விதப் பெருமையில் புதிய சக்தியையும், அவ்விதச் சக்தியில் தனிப் பெருமையையும் உணர்ந்தவர்கள் அதைவிட மிகச் சிலரே. அவர்களுள் தலை நிமிர்ந்து ஒப்பற்ற பேச்சுக்கும் ஓய்வில்லா உழைப்பிற்கும் உரைகல்லாக நின்றவர் சத்தியமூர்த்தி ஒருவரே என்றால் நம்பமுடியாத விஷயமல்ல.

ஆனால் ஏனோ ஈசன் அவருக்கு உடலைக் கல்லால் அமைக்கவில்லை. நெஞ்சில் மட்டும் உரம் குன்றாமல் கடைசி வரையில் எமனுடன் போராடினார். "சுயராஜ்யம் நம் நாட்டிற்குக் கிட்டுவதற்குள் என் உயிர் போய்விடுமோ!" என்று தம்மை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்த சினேகிதர்களைக் கேட்டார். உடலில் உயிர் உள்ளளவும், சதையில் சக்தி சிதையாத வரையிலும், "பிழைப்பேன்; பிறக்கப் போகும் நாட்டின் விடுதலையையும் உச்சி முகர்ந்து விட்டுத்தான் செல்வேன்." என்று நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு இருந்தார். ஆனால் தமக்கு முன்பு மடிந்த மாவீரர்கள் எல்லோரும் கூட ஒரு நாள் இப் பூத உடலை விட்டார்களே என்பதை உணராதவரல்ல. அந்த ஞாபகம் வரும்போது தான், "செயலைத் தடுக்க இந்தச் சாவு ஒன்றுதான் எதற்காகக் குறுக்கிட வேண்டும்?" என்று பொறுமை இழந்த உணர்ச்சி வேகம் அவரிடம் தோன்றும்.

1943-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ஆம் தேதி காலையில் வாய்ப்பேச்சு இல்லாமல் கிடந்த அவருடைய உடலைப் பார்த்தபோது. ',எங்கேயோ மாயமாய் மறைந்தனவே, சங்கநாதம் போன்ற உன் குரலும், கடலலையின் ஆரவாரத்தையும் அடக்கி ஆண்ட உன் வாய்ச் சொல்லும்" என்று வந்தவர்கள் ஓலமிட்டு அழுதனர். ஆம்; சென்னை சமுத்திரக் கரையின் பரந்த மணலின்மேல் கூடும் திரள் திரளான பொதுக் கூட்டங்களை, "நண்பர்களே!" அல்லது "சகோதர சகோதரிகளே!" என்று ஆரம்பிக்கும் வேறு எவருடைய பிரசங்கத்தின் தொனியும் அவ்விதம் கவர்ந்ததில்லை; இனிக் கவரப் போவ

தும் இல்லை. சத்தியமூர்த்தி பின்னே பேசுவார் என்ற ஓர் அறிவிப்பு மட்டும் போதும், எந்தக் கூட்டத்தையும் அலங் கோலமாக்காமல் பாதுகாப்ப தற்கு. சாமர்த்தியமுள்ள நிர் வாகர்களும் இதற்காகவே கூடிய வரையில் சத்தியமூர்த்தி யின் பேச்சை முதலிலேயே வைக்காமல், சிலராவது பேசிய பின்னரே வைக்க விரும் பினர்கள்.

தென்னுட்டிலே உயர்தர வாக்குவன்மையுள்ள வீரர்கள் என்றைக்கும் இல்லாமலில்லை. அழகாகப் பேசுகிறவர்களும் ஆழ்ந்த கருத்துக்களைத் தொடர்பாக விளக்குகிறவர் களும் நம்மிடையே உள்ளார் கள். ஆயினும் பேசத் தொடங் கியதும், சபையில் உள்ளவர் கள் உட்கார்ந்திருக்கும் இடத் திலிருந்து எழும்பிஎழும்பிப் பார்த்து, கரகோஷம் செய்து தம் உள்ளங்களில் புகைந்து கொண்டிருந்த எண்ணங்களே ஒளிபெற்று ஓங்கி வெளிவருவ தைக் கேட்டு அனுபவிக்கும் படிச் செய்த மற்ருெருவரைக் கண்டதில்லை.

தமிழும் ஆங்கிலமும் ஒரே அளவில் அவரிடம் பலித்தன. ஒன்றிலுள்ள நயங்களை அறிந்தவாறே மற்ருென்றில் உள்ளவற்றையும் அறிந்திருந் தார். சங்கோசமும்தயக்கமும், ஆற்றின் பிரவாகம் போன்ற அவர் சொற்பொழிவை ஒரு நாளும் தயங்கவைத்த தில்லை. மொழிகளையும் தரா தரம்தெரிந்து ஏற்ற விதத்தில் தான் பிரயோகிப்பார். ஆனுல் தணியாத சுதந்திர தாகத்தை விளக்கும் சொற்களாகவே அவை இருக்கும். சில சந்தர்ப் பங்களில் திரிபுரத்தை எரிக் கும் பரிகாசம் அவரிடம் கலந்து வரும். ஆட்சி வர்க் கத்தின் அநீதிகளைக் கண்டிக் கும் போதும், அரசியல் துறை யில் சுயநலவாதிகளைக் கடுஞ் சினத்தால் திணற அடிக்கும் தருவாயிலும் யாவராயினும் அவர் எதிரே நிற்கத் தயங்கு வார். பெரியவர், சிறியவர் என்று கூடப் பாராமல் நாட் டின் விரோதிகளை இடம் தெரி யாமல் ஒட்டமெடுக்கச் செய் யும் சண்ட மாருதம் போன்ற சொற்ருெடர் அவரிடம்தான் கிளம்பும்.

காந்தி அடிகளின் ஆவேசங் களை ஒழிக்கும் சாந்தி தர்மத் தைப் பின்பற்றியவரல்ல சத்தியமூர்த்தி. தேசவிடுதலைக் காக மகாத்மாவைத் தவிர வேறு எவரையும் தமக்குத் தலைவராக நினையாவிடினும், ஒவ்வோர் ஆத்ம குணத்திலும் அவரையே பின்பற்ற வேண் டும் என்னும் கடும் விரதத்தை ஒரு நாளும் இவர் மேற் கொள்ளவில்லை. இக்காரணம் பற்றியே மற்ற அரசியல் தலை வர்களை அணுகியதைவிட இவ ரிடத்தில் சலுகையையும், சிபா ரிசையும் நாடியவர்கள் பலர். எல்லாம் உயர்ந்த தேச சேவை யைக் குறித்தனவே என்ப தால், அவரிடம் தோன்றிய, சாமான்யர்களுக்கு உவந்த சிற்சில சுபாவங்களும் அவரை அதிகமாகப் பிறர் நேசிக்கும் படியே செய்தன.

...VANMIYUR, MADRAS-41

ஒரு சமயம் சத்தியமூர்த்தி தம் 52-ஆவது பிறந்த நாள் கொண்டாடும் பொருட்டு, 52 நெருங்கிய நண்பர்களைத் தமது கிரகத்தில் விருந்திற்கு அழைத்து இருந்தார். அன்று வந்தவர்களில் ஒருவர் அவரைப் புகழ்ந்து சில வார்த்தைகளைச் சம்பாஷணையில் கலந்து கொட்டி விட்டார். சிலரைப் போல் முகத்தின் எதிரே சொல்லப்படும் பொருத்தமான புகழைக் கேட்க வெறுப்பவர் அல்ல அவர். ஆகையால் சும்மாயிராமல் அவர், "என்னைப் பற்றி நல்ல வார்த்தையை யாராவது சொன்னால் எனக்குக் கேட்கப் பிடிக்கும். வேறு சிலரைப்போல் பிறரை நான் புகழாமலும், அல்லது பிறர் என்னைப் பாராட்டிச் சொல்லும் வழிகளைக் கவனியாமலும் இருப்பதை உயர்ந்த குணமென்று மேற்கொள்ளுவது என்னால் முடியாத காரியம்" என்று விருந்தினர்களின் மத்தியில் போட்டு உடைத்துவிட்டார். வாஸ்தவத்தில் வால்மீகியின் விலை மதிக்க முடியாத பாத்திரங்களில் ஒருவரான அனுமானும், ஜாம்பவானுடைய துதிப் பாடல்களைக் கேட்டு உத்ஸாகம் பெற்று, முதலில் தாம் தாண்ட முடியாதென்று நினைத்த கடலையும் ஒரே தாவில் தாவினார் என்பதை அறிந்த நாம், சத்தியமூர்த்தி அன்று கொஞ்சமும் தயக்கமின்றிச் சொன்ன சொற்களின் உண்மையை மறக்க முடியுமா? கர்மயோகிகள் ஒருவர் இருவர் மட்டும் புகழையும் புறக்கணிப்பதை நாம் உணர்ந்தாலும், உலகில்

மனோகரன் வேடத்தில்
சத்தியமூர்த்தி

உழன்று கொண்டு உயர்ந்த செயல்களைச் செய்யும் புத்திமான்களுக்கு, பொருத்தமான பாராட்டுதல் முக்கியமான தூண்டுகோல் என்று கூட சாதித்து விடலாம்.

உலகின் சுபாவங்களை சற்றும் வெறுக்காத காரணத்தால், உலகில் உள்ள சந்தோஷங்களையும், சத்தியமூர்த்தி, பிணிகள் என்று பாவிக்கவில்லை. இசையும், கவியும், நாடகமும் அவருடைய உள்ளத்தை இன்புறச் செய்தன. வெறிகொண்ட அசுவத்தாமனாக வேணீஸம்ஹாரத்திலும், ஐஸ்வரிய சம்பத்தின் சக்தியைக் கண்டு தலைவணங்காத சார்ங்கரவனாகச் சாகுந்தல நாடகத்திலும், தாய்க்கு

நேரிட்ட அவமானத்தைத் தாளாத வீராவேசம் கொண்ட மனோகரனாகவும் மேடையின் மேல் நடிப்பதில் மிகவும் ஆற்றலைப் பெற்றவர் சத்திய மூர்த்தி. அவரிடம் உள்ள சுபாவங்களுக்கும் முன் கூறிய பாத்திரங்களில் அமைக்கப்பெற்ற இயல்புகளுக்கும் உள்ள ஒற்றுமையின் பலன்தான், ஓரளவு அவைகளில் அவர் சோபித்ததற்குக் காரணமாக இருக்கலாம்.

எதை மறந்தாலும் ஒன்றை மட்டும் நம்மால் மறக்க முடியாது. சத்தியமூர்த்திக்கு தாய் பாஷையான தமிழின் வளம் சித்தித்த போதிலும் ஸம்ஸ்கிருத மொழியினிடம் உள்ள பேரன்பு அழிவில்லா பெருமைக்கு இடம் தந்தது. பாரத பூமி பழம்பெரு நாடு என்று சொல்லிவிட்டு பழமையின் கௌரவத்தை அழிவில்லாமல் பதினாயிரம் ஆண்டுகளாகப் போஷித்து வந்த ஸம்ஸ்கிருத இலக்கிய சமுத்திரத்தின் அலைகளில் தாமும் அமிழ்ந்து நீராடாமல் இருப்பதை எந்த இந்திய தேச பக்தனும் விரும்ப மாட்டான். சத்தியமூர்த்தி ஸம்ஸ்கிருதத்தில் தம் ஆசையை வெளியிட்ட விதமே தனி. எங்கே பிரசங்கங்கள் செய்தாலும் ஒரு முறையாகிலும் வால்மீகியின் வரம் பெற்ற வாக்கின் அழகைக் காட்டும் ஒரு சுலோகத்தை யாவது கேட்கின்றவர்களின் செவியில் நுழைத்து விடுவார். வீட்டில் இராமாயண பாராயணத்தை விடாமல் செய்தவரானதால் வேண்டிய அளவில் வடமொழிப் பண்புகளையும் உணர்ந்திருந்தார்.

இதயத்தில் தெய்வத்தை என்றும் தொழுதவர் அவர். தேவியைப் புகழும் தோத்திரங்களைப் பிறர் அழகாகச் சொன்னால் செவி சாய்த்துக் கேட்டு ஆனந்திப்பார். தாமும் ஒழிவு காலங்களில் அவைகளைத் தம் நாக்கினால் பல தடவை உச்சரிப்பார். ஸ்ரீ கஞ்சி காமாக்ஷி அம்மன்பேரில் மூககவி பாடிய "மூகபஞ்சசதி" என்னும் கவி மாலையை அவர் உள்ளம் சதா நாடியது. அதிலும் "ஆர்ய ஸதகம்" என்னும் நூறு சுலோகங்கள் கொண்ட பிரதியை ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாக இருக்கையிலும் விரல்களின் இடையே பிடித்து வாசித்து மனனம் செய்தார்.

அவருடைய ஒற்றை நாடியான தேகமும், சற்றுக் கடுகடுப்புக் கொண்ட முகமும், கண்களில் வீசிய தழற்பொறியும் எல்லாம் மறைந்து விட்டன.

இறந்தவரின் ஆவியை எமனுடைய பாசத்திலிருந்து மறுபடியும் மீட்டுக்கொண்டு வரக் கூடிய ஒருவர் மட்டும் இந்தியாவில் இன்று இருந்தால், சத்தியமூர்த்தியின் ஆவியை அகாலத்தில் எடுத்துச்சென்ற யமனைச் சும்மா விட்டுவிடுவாரா?

– 'கலைமகளி'ல் வெளிவந்தது - ஆசிரியரின் அனுமதி பெற்றது.

அருட்செல்வன் சத்தியமூர்த்தி

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

ஸ்ரீ சத்தியமூர்த்தியை நான் நன்றாக அறிவேன். அந்த மேதையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறும் வாய்ப்புக் கிடைத்ததில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அவர் சென்னை மேயராக ஆற்றிய பணிக்கு ஒப்புவுமை கூற முடியாது. இன்று கார்ப்பொரேஷன் கூட்டத்தின் எதிரே அவருக்கு சிலை எடுத்திருப்பதைக் காண மனம் பூரிக்கிறேன். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசங்கம் செய்யும் திறமை பெற்றவர். சம்ஸ்கிருதத்தில் பாண்டித்திய முள்ளவர். ஒரு சமயம் அவர் தம்முடைய பிரசங்கத்தில் கூறிய வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது. ''பாரதம் மடிந்தால் வாழ்பவர் எவர்? பாரதம் வாழ்ந்தால் மடிபவர் எவர்?'' என்பவையே அந்தச் சொற்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் உள்ளத்திலும் நாவிலும் தேச பக்தி ஒளி வீசிற்று. அவர் மகாத்மா காந்தியின் விசுவாச மான சிஷ்யன். சிறந்த சட்டசபையாளர். சென்னை சட்ட சபையிலும் தில்லி சட்டசபையிலும் அவர் கீர்த்தியுடன் சேவை செய்தார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியை நினைவுகூர ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சமயம் அவர் குற்றாலத்தில் திருவாங்கூர் திவான் மாளிகையில் தங்கியிருந்தார். நான் அவரைப் பார்க்கச் சென்றேன். அந்தச் சமயத்தில் அவர் சுந்தரகாண்டம் பாராயணம் செய்துகொண்டிருந்தார். ஹனுமான் சீதாதேவியிடம் தன்னை ராமபக்தன் என்று அறிமுகம் செய்துகொள்ளும் கட்டம், சீதாதேவியின் துக்கம் ஆனந்த பஷ்பமாகிறது. அவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு வால்மீகி ராமாயணத்திடம் உள்ள பக்திக்கு ஈடானது பாரத நாட்டிடமுள்ள பக்தியே. அவர் பாரத நாட்டின் தவப் புதல்வன். பாரத தர்மத்தின் பிரதிநிதி, பரமாத்மாவின் அருள்பெற்ற சிறந்த புருஷன்.

SAKTHI PIPES LIMITED.

Registered Office : **"Sakthi Nilayam"**

POLLACHI, MADRAS STATE.

MANUFACTURERS OF:

CAST IRON SPUN PIPES & SPECIALS

(WITH BELGIAN COLLABORATION)

Location of Factory:

ELAVOOR (Near Madras)

Expected to commence production during Second half of 1964

BOARD OF DIRECTORS

1. Sri K. R. Sundaram Iyer (Chairman)
2. ,, N. Mahalingam, B.Sc. M.I.E. M.L.A.
3. ,, N. Chandappa, M. S. (Alfred)
4. ,, D. Balasundaram, B. Eng. (Sheffield)
5. ,, A. Vellingiri
6. Dr. M. Chidambaram
7. Sri M. S. Nataraja Gounder
8. Dr. V. R. Palanisamy
9. Sri V. R. Thirumalaisamy
10. ,, S. P. Krishnaswamy Gounder
11. ,, P. R. Kandaswamy Gounder
12. ,, V. S. R. Vanavarayar

MANAGING AGENTS

Messrs. SAKTHI ENTERPRISES

"SAKTHI NILAYAM", POLLACHI, MADRAS STATE.

குணவான் சத்தியமூர்த்தி

எஸ். எஸ்.

சத்தியமூர்த்தி தேச விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்தபோது நடந்த சில நிகழ்ச்சிகள் மறக்கவே முடியாதவை. அவைகளில் அவருடைய அரிய குணங்கள் வெளியாயின.

அடக்கம்

1919 ல் தூது கோஷ்டியாரில் ஒருவராய்ச் சென்று இங்கிலாந்தில் நடத்திய சொற்பொழிவுகளைக் கேட்ட ஒருவர் 'ஆஹா ஆங்கிலத்தில்-உங்கள் தாய் மொழி அல்லாத பிற மொழியில், தங்கு தடையின்றி எவ்வளவு சரளமாய்ப் பேசுகிறீர்கள்? காங்கிரஸில் உள்ள யாவருமே இப்படித் தான் பேசுவார்களோ" என்றாராம். வால்மீகி ராமாணத்திலேயே தமது வாழ் நாட்களில் பெரும் பகுதியைச் செலவிட்ட சத்தியமூர்த்தி "இராமபிரானின் பெரிய சைனியத்தில் நான்தான் கடைசி குரங்கு" என்றாராம். காந்தியடிகளை ஸாக்ஷாத் இராமபிரானாகவும், நேரு, ராஜாஜி, வல்லபாய் படேல், ராஜேந்திரப் பிரசாத் முதலியவர்களை ஹனுமான், ஜாம்பவான், நீலன், அங்கதன், போன்றவர்களாகவும் ஒப்பிட்டு தன்னைச் சாதாரண குரங்கு போன்ற ஒரு தொண்டனாகப் பாவித்தே அவருக்கும் நாட்டுக்குமே பெருமையைத் தேடித் தந்தார்.

மனக்கசப்பின்மை

1934 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் மத்திய சட்டசபைத் தேர்தலில் சத்தியமூர்த்திக்கு எதிராக நின்றவர் ஸர். ஏ. ராமஸ்வாமி முதலியார். இவர்கள் இருவரும் நடத்திய தேர்தல் போட்டி தேர்தல் வரலாற்றுக்கே ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. தினம் மாலையில் இவ்விரு பெருவீரர்களும் ஒரே மேடையில் ஏறி தம்தம் கட்சியின் உயர்வுகளை ஜனங்களுக்கு எடுத்துக் கூறி வந்தார்கள். சென்னை ஆங்கிலோ இந்தியன் அஸோஸியேஷன் அமைத்துத் தந்த அரங்கில் இவர்கள் இருவரும் மனக் கசப்பில்லாமல், ஒருவரையொருவர் ஏசிக் கொள்ளாமல் தரம் உயர்ந்த பாணியில் பேசி அங்கு குழுமியிருந்த ஆங்கிலோ இந்தியர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றது இன்னும் என் காதில் ஒலிக்கின்றது.

சலியாமை

1935 இல் இந்திய சட்டசபைக்கு காங்கிரஸ் சார்பில் சென்னை நகரத் தொகுதியிலிருந்து சென்ற சத்தியமூர்த்தி ஸ்ரீ புலாபாய் தேசாயின் தலைமையின் கீழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றினர், கிரிமினல் லா அமென்ட்மென்ட் பில்

சம்பந்தமாக அவர் செய்த மகத்தான பேருரை இந்திய சட்ட சபை சரித்திரத்திலேயே ஒரு உயரிய இடத்தைப் பெற்று விட்டது. அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் சட்ட நிபுணர்களெல்லாம் வாய் திறந்து பார்த்திருக்க தொடர்ந்து எட்டரை மணி நேரம் பேசினர். சட்டசபையில் அரசாங்கத்தினரை திகைக்க வைக்கும் வகையில் கேள்விகளைக் கேட்டும் மசோதாக்களைக் கொண்டு வந்தும் இன்னும் பல வகையிலும் வெள்ளையர் ஆட்சியைத் திணறச் செய்தார். கேள்வி நேரத்தில் ஒரு அப்பாவி அடிக்கேள்வி கேட்பார். அதற்குப் பதில் கிடைத்ததும் புதை வாணம் போல் உப கேள்விகள் ஒன்றன்பின் ஒன்ருக கிளம்பிக் கொண்டேயிருக்கும். இதைக் கண்டு நிதி மெம்பராக இருந்த ஸர். ஜேம்ஸ் கிரிக் ஒரு முறை "உமது பெயர் சத்தியமூர்த்தி யல்ல: ஸப்ளி (Supple-) மூர்த்தி" என்று சபையில் உள்ள எல்லோரும் நகைக்கும் வண்ணம், அவரைப் புகழ்ந்தார்.

தன்னம்பிக்கை

சென்னை சுகுண விலாச சபையில் ஸ்ரீ பம்மல் சம்பந்த முதலியாரின் தூண்டுதலின் பேரில் சத்தியமூர்த்தி பல நாடகங்களில் பங்கு கொண்டார். அப்போதெல்லாம் பாட்டில்லா நாடகம் நாடகமாகாது. அந்த எண்ணத்தை மாற்றி "பாட்டுக் கலவாத நாடகமாக சுவை குன்ருமல் நடித்துக்காட்ட முடியும்" என்று இவர் காண்பித்தார். "மனோஹரா" நாடகத்தில் நாடகத் தலைவனுக வேடம் தரித்து இவர் நடித்தது சென்னை மக்களின் கண்களைவிட்டு அகலாத காட்சியாகும். ❋

With Best Compliments

from

❋

❋

❋

ZENITH TIN WORKS PVT. LTD.,

POST BAG NO. 6254, BOMBAY - 11.

சொல் அமுதச் செல்வர்

தி. ஜ. ர.

ஸ்ரீ ஸத்யமூர்த்தியை நினைக்கும் போதெல்லாம் மூன்று நிகழ்ச்சிகள் எனக்கு நினைவில் வருகின்றன: ஒன்று, மன்னார்குடியில் நடந்த ஒரு பிரசங்கம்; இரண்டு, அவருக்கும் ஸ்ரீ ராமஸ்வாமி முதலியாருக்கும் நடந்த கடுமையான ஒரு வாக்கு வாதம்; மூன்று, மாகாணச் சுய ஆட்சியில் முதல் முதலாகக் காங்கிரஸ் கட்சி பதவி ஏற்குமுன் நடந்த தேர்தலில் மாகாணச் சட்டசபைக்கு நிற்காமல் மத்தியச் சட்டசபைக்கு அபேட்சகராக ஸத்யமூர்த்தி நின்றது.

அப்போது—அதாவது 1920 ஆம் ஆண்டு வாக்கில் மன்னார்குடியில் வித்வத் ஸதஸ் ஒன்று நடப்பது வழக்கம். (அது இப்போது நடக்கிறதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது.) கோட்டூர் முதலியாரின் ஆதரவால் தான் அந்த ஸதஸ் நடந்ததாகக் கேள்வி. பிரஸித்தமான ஸம்ஸ்க்ருத வித்வான்கள் பலர் வந்து அந்த ஸதஸில் கலந்து கொள்வார்கள். அரிய தத்து வார்த்தங்கள் பற்றிய சர்ச்சைகளும் இதிஹாஸ புராண உபந்யாஸங்களும் அதில் நடைபெறும். அல்பசொல்பமான பண்டிதர்களுக்கு அதில் இடம் கொடுப்பதில்லை. அரசியல் பிரசங்கிகளுக்கும் அங்கே மேடை கிடைக்காது. அரசியலை அந்த ஸதஸில் பேசுவதும் இல்லை. ஆனால், ஸத்யமூர்த்திக்கு மாத்திரம் விலக்கு அளித்து, அவரை அந்த ஸதஸில் பேச அழைத்தார்கள். அவரும் இசைந்தார். ஸ்ரீமத் ராமாயணத்தைப் பற்றிய பேச்சு.

"நமது பைதா மஹமான ஸம்பத்து மஹோந்நத (இதிஹாஸம்) வால்மீகி ராமாயணம்" என்று ஆரம்பித்தார் ஸத்யமூர்த்தி. வர்ஷதாரை போல் அரிய கருத்துக்களைப் பண்டிதரெல்லாம் மூக்கில் விரல் வைத்துப் பிரமிக்கும்படி சொரிந்தார். ஸம்ஸ்க்ருத சுலோகங்களை அவர் உச்சரித்த காம்பீர்யமும் அழகும் எல்லார் உள்ளத்தையும் கவர்ந்தன. அரசியலை நேரடியாகக் கலக்க வில்லை, ஆனால் மறைமுகமாகக் குறிப்பிட்டார் பல முறை. அப்போதெல்லாம் ஒரே கரகோஷந்தான்.

இந்திய மக்கள் உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது; தங்கள் ஸ்வதர்மத்தைப் புரிய வேண்டும்; அதை மறந்து இழிந்த அடிமைத் தனத்திலே

With Best Compliments

of

❋

RALLIS INDIA LIMITED

NEW DELHI

வாழலாகாது-இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்டினுர் ஓரிடத்தில் ஸத்யமூர்த்தி.

வனத்திலே ராமபிரான் உறங்கிக் கொண்டிருக்கிருர். சூர்யோதயம் ஆகிவிட்டது. அப்போது அவரை எழுப்புகிற விச்வமித்ர முனிவரின் வாக்கு என்று நினைக்கிறேன்:

'உத்திஷ்ட நர சார்தூல கர்த்தவ்யம் தைவம் ஆஹ்நிகம்.'

இதன் பொருள்:

'ஏ மனிதர்களுள்ளே சிம்மத்தைப் போன்றவனே! எழுந்திரு. தெய்வத்துக்குரிய சந்தியாவந்தனத்தைச் செய்ய!'

"உத்திஷ்ட நரசார்தூல' என்று நிமிர்ந்து நின்று வெண்கலக் குரலில் அழுத்தந்திருத்தமாக ஸத்யமூர்த்தி உச்சரித்த தோரணையையும் சுலோகத்துக்கு அவர் விரிவுரை கூறிய சாதுர்யத்தையும் அன்று எல்லோரும் பாராட்டினுர்கள். நாற்பது ஆண்டுகளுக்குப்பின் இன்று எனக்கு அந்தக் காட்சி மட்டும் அப்படியே நினைவிருக்கிறது; விரிவுரையின் விவரம் நினைவில்லை. ஆனுல் ஒன்று: அதற்கு முன்னும் சரி, பின்னும் சரி; வால்மீகி ராமாயணத்தை நான்படித்ததில்லை. ஆயினும் அன்று ஸத்யமூர்த்தி உச்சரித்தபோது கேட்டதிலிருந்தே, 'உத்திஷ்ட...ஆஹ்நிகம்' என்ற சுலோக வாக்கியம் என் மனத்தில் நிரந்தரமாய்ப் பதிந்து விட்டது.

ஸத்யமூர்த்தி தமிழிலும் சரி, ஆங்கிலத்திலும் சரி, தட்டுத்தடங்கலில்லாமல் அற்புதமாய்ச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அவருக்குத்தமிழிலக்கியத்திலும் ஸம்ஸ்க்ருத இலக்கியத்திலும் இருந்த நெருங்கிய பரிசயமும் ஆங்கிலத்தில் இருந்த ஆழ்ந்த ஞானமும் அவருடைய சொற்பொழிவுகளிலே பிரதிபலிக்கும், பார்லிமெண்டரி ஜனநாயகத்துக்கு மிக்க அவசியமான வாக்குவன்மையும்வாத ஸாமர்த்தியமும் அவரிடம் நிறைந்திருந்தன. •

இரண்டாவது நிகழ்ச்சியை இனிப் பார்ப்போம். அந்த நாளில் ஜஸ்டிஸ் கட்சி மிக்க வலிவோடு இருந்தது. சென்னைக் கார்ப்பொரேஷனில் ராமஸ்வாமி முதலியார் மேயர் பதவி வகித்திருந்தார். சட்டசபைகளைக் காங்கிரஸ் பகிஷ்கரித்திருந்தது என்று நினைக்கிறேன். ஆயினும், சென்னைக் கார்ப்பொரேஷன் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ்காரர் பிரவேசித்திருந்தார்கள். கார்ப்பொரேஷனில் ஸத்யமூர்த்தி ஒரு கவுன்ஸிலர். அன்று காங்கிரஸிலும் தமிழ் நாட்டு ஸ்வராஜ்யக்கட்சியிலும் பெருந்தலைவராய் விளங்கினுர் ஸ்ரீ எஸ். சீனிவாஸையங்கார். சீனிவாஸையங்காரைப் பற்றி முதலியார் ஏதோ குறைவாகச் சொன்னுர். அந்தச் சொல் பொறுக்காமல் உடனே சற்று அனுசிதமான வார்த்தைகளில் முதலியாருக்குப் பதில் அளித்தார் ஸத்யமூர்த்தி.

வகுப்பு உணர்ச்சி கடுமையாக இருந்த சூழ்நிலை நிலவிய காலம் அது. காங்கிரஸுக்கு

ஒரு ஸத்யமூர்த்தி என்றால், ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு ராமஸ்வாமி முதலியார் என்று சொல்லும்படி,வாக்கு வன்மைச் செல்வ முதலியார். ஸத்யமூர்த்திக்குப் பதில் சொல்லு முகத்தால், கடற்கரையில் அவர் ஒரு பிரஸங்கம் செய்தார். ஜூலியஸ் ஸீஸரில் வரும் ஆண்டனியின் பிரசங்கம் மாதிரி மகா ஆக்ரோஷமான பேச்சு; கேட்பவரின் உணர்ச்சியைக் கொதிக்கச் செய்யும் பேச்சு. பல சொற்பிரயோகங்கள் கூட ஷேக்ஸ்பியர் நாடக ஆண்டனியின் பிரயோகங்கள் மாதிரியே அதில் அமைந்திருந்தன.

அந்தநாளில் நான் சென்னைக்கு வரவில்லை. எனவே, பத்திரிகைகளில்தான் பிரசங்கத்தைப் படித்தேன். அந்தப் பிரசங்கத்தைச்சென்னையில் நேரில் செவியுற்ற சிலர் இன்றும் கூட நினைவில் வைத்திருப்பதைக் கேட்டு எனக்கு வியப்பேற்படவில்லை. படித்த நானே மறக்கவில்லையே! அவர்கள் எப்படி மறப்பார்கள்? அவ்வளவு அழுத்தமான — ஆணித்தரமான — பேச்சு. இன்னொருவரா யிருந்தால், அந்தப் பேச்சுக்குப் பின் மனமொடிந்து போயிருப்பார்; இந்தத் தொல்லை பிடித்த அரசியலே வேண்டாம் என்று நீங்கியிருப்பார். ஸத்யமூர்த்தி அப்படி மனநோய்மை உடையவர் அல்ல. அரசியலிலே 'அடி' கொடுப்பதும் திரும்ப வாங்கிக் கொள்வதும் ஸகஜந்தான். எனவே அவர் சற்றும் மனந்தளரவில்லை. பின்பும் நிமிர்ந்தே நின்றார். அதே கார்ப்பொரேஷனில் தாமே அதே பதவியைக் கைப்பற்றினார், மேயரானார். சீரும் சிறப்பும் பொலிய அந்தப் பதவியை வகித்தார். இன்று அந்தக் கார்ப்பரேஷனின் ரிப்பன் கட்டடத்திலே சிற்பி 'ஆர்யா'வின் எட்டடி உயர ஸத்யமூர்த்தி வெண்கல உருவம் ஏறக்குறைய அதே எட்டடி உயர அளவான பீடத்தின் மீது நிற்பது முற்றும் பொருத்தம் என்பது இதனால்தான். ஆனால், திலகர் கட்டத்திலும் இதே மாதிரி இன்னொரு சிலை அவருக்கு இருக்குமானால், அதுவும் பொருத்தமாகவே இருக்கும். ஏனென்றால், திலகர் கட்டத்தின் 'சொற்பொழிவு மன்னன்' ஸத்யமூர்த்தி.

மூன்றாவது நிகழ்ச்சிதான் விநோதமானது; ஸத்யமூர்த்தியின் அன்பர் பலருக்கு அது ஒரு வித ஆசங்கையும் தந்தது. இரட்டையாட்சியில் காங்கிரஸ் கலந்து கொள்ளவே யில்லை. அடுத்துவந்த அரசியல் சட்டத்தில் மாகாணங்களில் ஜனப் பிரதிநிதிகளின் மந்திரிகளுக்கே முழுப் பொறுப்பும் மத்திய ஸமஷ்டி அரசாங்கத்தில் மீண்டும் ஒரு வகை இரட்டை ஆட்சியுமாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியது. இதனால் காங்கிரஸுக்குள்ளே பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. மாகாண மந்திரிப் பதவிகளை ஏற்க வேண்டும் என்று மூர்த்தன்யமாக நின்று வாதித்துப் பிரசாரம் செய்தார் ஸத்யமூர்த்தி. மாகாண மந்திரிப் பதவிகளைச் சுயராஜ்யப் போரின் நெம்புகோல்களாக உபயோகித்து, வெற்றி

பெற்றுச் சுயராஜ்யப் பாதையிலே முன்னேற முடியும் என்பது அவருடைய எண்ணம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் 'கோட்டை'க்குள்ளேயே புகுந்து அதனுடன் போரிட அவர் விரும்பினர். அவருடைய கோஷ்டிக்குக் காங்கிரஸுக்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி, பலத்த எதிர்ப்பு இருந்தது. ராஜாஜி, நேரு போன்ற பெருந் தலைவர்களெல்லாம் பதவி வேண்டாத கட்சியினர். 'பதவிப் பித்தர்' என்றே கூட இதன்மூலம் ஸத்யமூர்த்தி ஒரு பழிச் சொல்லை நாட்டிலே வாங்கிக் கட்டிக் கொண்டார். ஆயினும், கடைசி வரையில் அவர் தமது கட்சியை விடவில்லை. கவர்னர்களிடம் தக்க உறுதிமொழிபெற்று மந்திரிப் பதவி ஏற்பது என்று இறுதியில் காங்கிரஸ் முடிவு செய்தது.

'மஞ்சள் பெட்டிக்கு ஜே!' தேர்தல் நடந்தது. "மங்கள கரணமான மஞ்சள் பெட்டியிலே (காங்கிரஸ் பெட்டியிலே) உங்கள் வோட்டைப் போடுங்கள்' என்ற கோஷம் நாடெங்கும் முழங்கியது. அந்தத் தேர்தலில்தான் முதல் முதலாகச் சட்ட சபைக்கு ராஜாஜி போட்டியிட்டார், ஸத்யமூர்த்தியின் 'ஏகபோக' உரிமையாக அதுவரையில் இருந்த பல்கலைக்கழகத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக ராஜாஜி நின்றார்; ஸத்யமூர்த்திக்கோ சென்னைச் சட்டசபையின் எந்தத் தொகுதியில் நிற்கவும் காங்கிரஸ் சீட்டுக் கிடைக்கவில்லை. மத்திய அசெம்பிளியில் அவர் இருப்பது அவசியம் என்று சொல்லி அதில் ஒரு ஸ்தானத்துக்குப் போட்டியிட அவருக்குக் காங்கிரஸ் சீட்டுக் கொடுத்து விட்டார்கள். 'இதில் ஏதோ சூது இருக்கிறது' என்று ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

கடற்கரையில் முதல் முதலாகக்கூட்டம் நடைபெற்றது. அப்போதுதான் ராஜாஜியின் 'ஓட்டைக் கப்பல்' உபமானத்துக்கு அடுத்தபடி பிரசித்தமான 'ஒற்றைக்காலில் நிற்றல்' உபமானமும் 'சாக்கடையில் விழுந்த தங்கக்கட்டி' உபமானமும் பிறந்தன. இன்றைய கம்யூனிஸ்டுகளில் பிரபலமான ஸ்ரீ பி. ராமமூர்த்தி போன்றவர் அன்று காங்கிரஸ் சோஷலிஸ்டுகள். இவர்களெல்லாம் அந்தக் கூட்டத்தில் மண்ணைத் தூற்றி அவந்தரை விளைவிக்கப் பார்த்த முயற்சியெல்லாம் சற்றும் பலிக்காமல் அமுங்கி விட்டது. ராஜாஜி ஐந்தாறு உபமானங்கள் சொன்னர். 'ஒற்றைக் கால்', 'தங்கக் கட்டி' இந்த இரண்டு உபமானங்களை அன்று கேட்ட எவரும் இன்றும் மறந்திருக்க முடியாது.

எப்போதும் சட்டசபைக்குள் வேலை செய்த-மந்திரிப் பதவி வேண்டுமென்று வாதித்துப் பழிச் சொல்லும் வாங்கிக் கொண்ட - ஸத்யமூர்த்தியை டில்லிக்கு ஏன் 'பார்ஸல்' செய்ய வேண்டும்? அது வரையில் மாறுதல் வேண்டாதவராயிருந்த தீவிரவாதியான ராஜாஜி ஏன் அந்த ஸத்யமூர்த்தியின் ஸ்தானத்தில் இப்போது நிற்க வேண்டும்? ராஜாஜிசொன்ன சமாதானம்

எல்லாவிதமான கட்டிட வேலைகளுக்கும்

திட்டமாக குறிக்க வேண்டியது

சங்கர் SANKAR IC BRAND பிராண்டு

சிமெண்ட்

●

தயாரிப்பாளர்கள் :

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

●

தொழிற்சாலை :

சங்கர்நகர் போஸ்ட்

திருநெல்வேலி ஜில்லா.

●

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :

தன் பில்டிங், 4வது மாடி,

175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

விற்பனையாளர்களும், வினியோகஸ்தர்களும்,

சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

இது: ஒரு மனிதன் நெடு நேரம் நின்று கொண்டே பிரசங்கம் செய்கிறுன். கொஞ்ச நேரம் வலது காலை ஊன்றி நிற்பான். பிறகு அதைத் தளர்த்தி இடது காலை ஊன்றி நிற்பான். 'ஓஹோ ஹோ! இதில் ஏதோ சூது இருக்கிறது' என்று நாம் நினைப்போம்? இதே மாதிரி தான் நாம் எல்லோருமே காங்கிரஸின் கால்கள். ஒரு வேலையைச் செய்துகொண்டிருந்தவர், அதை விட்டு இன்னெரு வேலைக்குச் செல்வது சகஜம். எவனும் ஒற்றைக்கால் தவமே செய்துகொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கலாமா? கால் மாற்றினுல் ஏதோ சூது என்று நினைப்பது தவறு.''

ராஜாஜியின் தங்கக் கட்டி உதாரணம் இங்கே தேவையில்லை; என்றுலும் அதையும் சொல்லி விடுகிறேன். அதற்கு முன்பு வரையில் ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு ஜஸ்டிஸ்கட்சியில் இருந்தார். அப்போதுதான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தேர்தலுக்கு காங்கிரஸ் டிக்கட் பெற்றுர். ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர் ஒருவரைத் திடீரென்று எப்படி நம்புவது? இப்படிச் சந்தேகப்பட்டவர்களுக்கு ராஜாஜி சொன்ன பதில் இது: "சோற்றுக் கட்டி சாக்கடையில் விழுந்தால், அதை மீட்டு எடுத்துக் கொள்ள மாட்டோம். தங்கக் கட்டி சாக்கடையில் விழுந்தால் (எந்தச் சாக்கடையில் என்று மொரார்ஜி விழுந்தடித்துக் கொண்டு ஓடி வராதிருப்பாராக!) அதையும் அப்படியா விட்டுவிடுவோம்? அதை எடுத்துக் கழுவி வைத்துக் கொள்ள மாட்டோமா? வேங்கடசாமி அப்படிப்பட்ட தங்கக் கட்டி.''

கூட்டம் மிக்க வெற்றிகரமாகவே நடந்தது. ஸத்யமூர்த்தியையும் அந்தக் கூட்டத்திலே பேசவிட்டார் ராஜாஜி. ஸத்யமூர்த்தியின் பேச்சு வழக்கம்போல் சுரத்தாயில்லை. இருந்தது; அவ்வளவு தான் சொல்லலாம்.

தேர்தலுக்குப் பின் சென்னையிலே ராஜாஜி முதல் மந்திரியாளுர். ராஜாஜியைப் போலவே பதவி எதிர்ப்புப் பேசி வந்த ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஐக்கிய மாகாணத்தில் ஒரு மந்திரியாளுர். பதவி வேண்டாம் என்று கோஷமிட்டு வந்தவர்களே இப்படிப் பதவி பெற்ற போது, பதவியே வேண்டும் என்று பகிரங்கமாய்ப் போராடி வந்த ஸத்ய மூர்த்திக்குப் பதவி பெறும் வாய்ப்புக்கே இடமில்லாதபடி மத்தியச் சட்டசபைப் 'புரமோஷன்' கிடைத்தது மட்டும் எல்லாருக்கும் ஒரு புதிராகவே இருந்தது.

ஆனுல், ஸத்யமூர்த்தியையே தம் அரசியல் குருவாய்க் கொண்டு, கடைசி வரையில் அவரது வலது கைபோல் இருந்து, அவருக்காகக் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் சில போராட்டங்களும் நடத்திய வீரரான காமராஜ் இன்று நேருவின் பெரு மதிப்புக்குப் பாத்திரராய், நாடெங்கும் புகழ் பெற்றவராய்த் தனிச் சிறப்புடன் சென்னை முதல்

மந்திரிப் பதவி வகித்து வருவது, அந்தக் குறைக்கு ஓரளவு ஈடாகும் என்று நாம் மகிழத் தான் வேண்டும்.

ஸத்யமூர்த்தியின் பிரசங்கம் என்றால், அரிய சங்கீதக் கச்சேரிக்குச் சேரும் கூட்டம் போல் மக்கள் திரண்டு விடுவார்கள். பிரசங்கத்திலே 'ஸத்யமூர்த்தி பாணி' என்றே ஒரு நடை ஏற்பட்டு விட்டது. இன்றுங்கூட அவருடைய பாணியைப் பின்பற்றுவோர் சிலர் இருக்கிறார்கள். சட்ட சபைகளில் ஸத்யமூர்த்தி புகுந்துவிட்டால், 'வெண்கலக் கடையில் யானை புகுந்தது' மாதிரிதான் 'கலகல' என்றிருக்கும். இன்று சட்டசபை நிகழ்ச்சிகளைப் பத்திரிகையில் படிக்க 'உப்புச் சப்பு' இல்லாமல் போகிறதோ இப்படி ஒரு போதும் போவதில்லை. அந்த நாள் சட்டசபை நிகழ்ச்சிகள் அவற்றில் சாட்டையடி போல் கேலியும் நகைப்பும் சில சமயம் பளிச்சிடும்; சில சமயம் உருக்கமான சொல் வேகம் நம் உணர்ச்சியைத் தூண்டும்; சில சமயம் கம்பீரமான சொற்கள் நம்மை நிமிர்ந்தோங்கச் செய்யும். ஸத்ய மூர்த்தியைப் போன்ற சொல்லமுதச் செல்வர்கள் இருந்ததால்தான் அந்த அடிமை நாள் சட்டசபை நிகழ்ச்சிகள் கூட இன்றைப் போலிராமல் படிக்கச் சுவையூட்டின; அரசியலில் ஈடுபாடில்லாத பெருவாரியான மக்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டும் சாதனமாயின.

தேசத்துக்காகக் கடைசி வரையில் பணிசெய்த ஸத்ய மூர்த்தி, இன்றைய சுதந்தர இந்தியாவைக் காணக் கொடுத்து வைக்கவில்லை; எந்த விதமான பிரதிப்ரயோஜனத்தையும் அடையாமலே உயிர் நீத்த தியாகி அவர். அவரைத் இந்தியா என்றென்றும் நினைவு கூரும். ✻

தில்லி தமிழ்ச் சங்கம் சத்தியமூர்த்தியின் நினைவுப் பணியிலீடுபட்டிருப்பது பொருத்தமுடைய செயலாகும். அவருடைய அகால மரணத்தால் நம் தாய்நாடு மாபெரும் தேச பக்தனை இழந்தது ; நான் இனிய நண்பனை இழந்தேன்.

சத்தியமூர்த்தியை அவருடைய கல்லூரி நாளிலிருந்து அறிவேன். அவர் ஓர் தீவிரமான காங்கிரஸ்காரர், வாசாலகர், சட்டசபையினர் என்றுதான் வட இந்திய நண்பர்களுக்குத் தெரியும். ஆனால் அவர் தமிழில் சொற்பொழிவாற்றும் திறமைமிக்கவர் என்பது தென்னிந்திய நண்பர்களுக்கு மட்டுமே தெரியும். என்னுடைய நட்புக் கிடைத்த பிறகும் சுகுண விலாச சபையில் உறுப்பினராகச் சேர்ந்த பிறகும் தான் தமிழில் பேசுந்திறன் தமக்கு ஏற்பட்டதாக அவர் அடிக்கடி கூறுவதுண்டு. என்னைப் பொருத்த மட்டில் அந்தப் பாராட்டை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. சத்தியமூர்த்தி பேசும் திறமையைப் போல நடிப்புத் திறமையும் கைவரப்பெற்றவர். அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

— ராவ்பகதூர் சம்பந்த முதலியார்.

சத்தியமூர்த்தி — சில நினைவுகள்

பெ. நா. அப்புஸ்வாமி

ஸ்ரீ சத்தியமூர்த்தியோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல். அப்பொழுது நாங்கள் இருவரும் கல்லூரி மாணவர்களாக இருந்தோம். அவர் சில ஆண்டுக் காலம் எனக்கு வயதில் மூத்தவர்; அதுபோலவே சில வகுப்புகள் முற்பட்டவர்.

கல்லூரி மாணவராக இருக்கும் பொழுதே அவருடைய பேச்சு வன்மை பலரையும் கவர்ந்தது; சிலரை அஞ்சவும் செய்தது. இனிமையாகப் பேசுவதில் போலவே சுடச் சுடப் பேசுவதிலும் அவர் மிக நல்ல திறமை உடையவர். அதோடு அவருடைய அறிவின் ஒளி மின்னலைப் போல் பளிச்சென்று வீசிற்று. பேச்சும் கணீரென்றும் தெளிவாகவும், அவர் விரும்பிய வாறெல்லாம், வெளிப்பட்டது. பிற்காலத்தில், அவர் பொது மேடைகளில் பேசியபோது குறுக்கே பேசியவர்களுக்குச் சாட்டையடி கொடுத்ததையும், சட்டசபையில் பேசிய போது அழுத்தமாகவும், நகைச் சுவையோடும், இகழ்ச்சி தோற்றுமாறும், சமயத்துக்கு ஏற்றபடி, பேசியதையும் கேட்டு வியந்தவர்களுக்கு இதைப் பற்றி அதிகம் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. விளையும் பயிரின் குருத்து அப்பொழுதே நன்கு தெரிந்தது.

திருநெல்வேலியில் அரசியல் மாநாடு

மகாத்மா காந்தி 1920 வாக்கில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி, வக்கீல்கள், மாணவர்கள், முதலியோர் தம் தம் தொழில்களை விட்டு விட்டு, நாடு சுதந்தரம் பெறுவதற்கான அமைதிப்போரில் ஈடுபட வேண்டும், சட்டங்களை மறுக்க வேண்டும், என்றெல்லாம் கூறியபோது மக்களிடையே பெரும் பரபரப்பு எழுந்தது. ஒத்துழையாமை நீதியா? சட்ட மறுப்பு நல்லதாக முடியுமா? அல்லது கெடுதியாக முடியுமா? என்றெல்லாம் அரசியல்த் துறையிலும் நீதித் துறையிலும் ஈடுபட்ட அறிஞர்கள் கவலையோடு வினவினர்கள். அப்

போது ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தமது அட்வொகேட்-ஜெனரல் (மாநில அரசாங்கத் தலைமை வழக்கறிஞர்) பதவியை ராஜிநாமாச் செய்தார். திருநெல்வேலியில் நடக்க இருந்த அரசியல் மாகாண மகாநாட்டிற்குத் தலைமை தாங்குவதாக ஒப்புக் கொண்டார்.

திருநெல்வேலி எங்கள் ஊர். ஆதலால் வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று வேண்டிய உபசாரங்களைச் செய்யவும்; மகாநாட்டுக் கென்று வீரராகவபுரத்துக்கும் கைலாசபுரத்துக்கும் நடுவே உள்ள ஒரு திறந்த வெளியில், தாமிரபரணி ஆற்றின் கரையில், அமைக்கப்பட்ட பெரும் பந்தலின் உள்ளும் வெளியிலும், மகாநாடு சிறப்பாக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும், அங்குக் கூட்டங்கள் நடைபெறும் போதும், முன்னரும் பின்னரும், தேவையான ஒழுங்கு முறைகளைக் கையாளவும்; பெரிய தொண்டர்-படை ஒன்று திரட்டப்பட்டது. அதன் அதிகாரிகளில் நான் ஒருவன். சென்னையிருந்து வந்த பல பெரியோர்களையும், திருநெல்வேலி மதுரை இராமநாதபுரம் முதலிய பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் அனைவரையும், மற்ற ஊர்த் தலைவர்கள் சிலரையும், எனக்கு

THE HOUSE OF REPUTE THAT SERVED YOU FOR 35 YEARS OFFERS YOU THE FOLLOWING PRESTIGE PRODUCTS

MURPHY Radio
KAMCOS 16mm Projectors & Water Heaters
KHIRA Steel & Wooden Furniture
EVEREST Sewing Machines
DUNLOPILLOW Cushions & Mattresses
Electrical Appliances
Mecom Intercom sets
AHUJA Amplifiers
FOLDELUXE Steel Folding Furniture
RALLIS Fans
PRESTIGE Pressure Cookers
HIMALUX refrigerators
Gramophones and Records
Radio Parts.

MAHOMED EBRAHIM & Co. (Pvt) Ltd.

7/8, Mount Road, MADRAS-2. 113-H, Brigade Road, BANGALORE. Abid Road, HYDERABAD.

நேரில் நன்கு தெரியுமாதலால், அவர்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாயிற்று.

அந்த மகாநாட்டின் சிறப்பாகக் கூறவேண்டிய மற்ெறாரு முக்கிய விஷயம் உண்டு. அதுவரை அம்மாதிரியான கூட்டங்களில் எல்லாம் மேடையில் பேசுபவர்கள் வழங்கிய மொழி ஆங்கிலம் மட்டுமே. ஆனால் அந்த மகாநாட்டிற்குச் சற்று முன் மக்களிடையே பொங்கி எழுந்த ஆர்வம் காரணமாக, பலரும் தமிழில்தான் பேசவேண்டும் என்ற ஒரு நினைப்பு பொது மக்களிடையே எழுந்தது.

அன்று தலைவரின் பேருரை முடிந்ததும், அப்போது முக்கியப் பிரச்சினையாக இருந்த ஒத்துழையாமையைப் பற்றிய தீர்மானம் தொடங்கப்பட்டது. ஓரிருவர் தமிழில் ஆதரித்துப் பேசினார்கள். அங்கு அன்று அதை எதிர்த்து நின்ற தலைவர்களில் முக்கியமானவர்கள் மூவர்-பெஸன்ட் அம்மையார், சி. பி. ராமஸ்சுவாமி ஐயர், ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள். முதலில் பெஸன்ட் அம்மையார் வழக்கம் போலக் கணீர் என்ற குரலில், மிகவும் அழகாக ஆங்கிலத்தில் பேசி முடித்தார். அப்போது ஒன்றும் நிகழவில்லை. அதன் பின் சி. பி. ராமஸ்வாமி ஐயர் பேச முன் வந்தார். தலைவரையும் சபையோரையும் வழக்கம் போல் ஆங்கிலத்தில் விளித்தார். உடனே 'தமிழ்! தமிழ்!' என்ற கூக்குரல்கள் பெரும் பந்தலின் நாற்புறமும் இருந்து எழுந்தன. ஒரு கணம் சி. பி. பேசாமல் நின்றார். அதற்குள்ளே அவருடைய கூரிய புத்தியில் அங்குள்ள மக்களின் மனநிலை தெரிந்துவிட்டது. உடனே புன்னகையோடு தலை வணங்கி விட்டு, தமிழில் பேசத் தொடங்கி விட்டார். அப்போது அவர் பேசிய தமிழ் பண்டிதர் வழங்கும் தமிழ் அன்று; அடுக்குமொழியில் கைதேர்ந்த இக்காலத்துப் பேச்சாளர்கள் வழங்கும் தமிழும் அன்று. சிறிது இலக்கணமும், சிறிது கொச்சை மொழியும், சிறிது வட மொழிச் சொற்களும் சொற்றொடர்களும், ஓரளவு ஆங்கில இலக்கண மரபும், கலந்த பேச்சு. அவர் தமது கட்சியைக் கூறி முடித்தார். அவர் நன்றாகப் பேசி, தமது கட்சியை வலிமையோடு எடுத்துரைத்ததால், அதை மறுத்துப் பேசக் கூடியவரை மக்கள் எதிர்பார்த்தார்கள். 'சத்தியமூர்த்தி! 'சத்தியமூர்த்தி! என கூச்சலிட்டார்கள் சிலர். சத்தியமூர்த்தி சிலை போல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் பேசத்

தொடங்கினார். மக்களின் மனப்பான்மை தெரிந்துவிட்டபடியால், அவர் ஆங்கிலத்தில் தொடங்காமல் தமிழிலேயே தொடங்கினார். மிக மிக அழகாகப் பேசினார். சி. பி. யின் பேச்சில் உள்ள சிற்சில குறைபாடுகள் அவருடைய பேச்சிலும் இருந்தன. ஆனால் நிறைந்த பொருளும், ஆழ்ந்த கல்வியும், மக்களோடு நிரம்பப் பழகிய சிறந்த அனுபவமும், நாட்டுப் பற்றும், நன்மையில் ஆர்வமும் இருந்தபடியால், அவருடைய பேச்சு மிகவும் பாராட்டத்தக்கதாக அமைந்திருந்தது.

மறுபடியும் பந்தலில் ஒரு சல சலப்பு. முன்னால் பேசிய மூவரும் தங்கள் கட்சியை நன்கு எடுத்துப் பேசிவிட்டார்கள். அதைத் தாக்குவதற்கு உரியவர், தக்க திறமை உடையவர் என்று அங்குள்ள மக்கள் சத்தியமூர்த்தி ஒருவரையே கருதினார்கள். ஆகவே மறுபடியும் 'சத்தியமூர்த்தி! சத்தியமூர்த்தி!' என்று கூச்சல் எழுந்தது. சத்தியமூர்த்தி மெதுவாக எழுந்து முன்வந்தார். ஒரே ஆரவாரம். அப்பொழுது அவர் பேசிய முதல் வாக்கியம் அன்று அதைக் கேட்டவர்கள் ஒருவராலும் மறக்க முடியாதது. பலமுறை நான் அதை எண்ணிப் பார்த்து மகிழ்ந்ததால், அது இன்றும் எனக்கு நினைவிருக்-

கிறது. 'ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் மிகவும் சாமர்த்தியசாலியான படியால், சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிவது போல் பேசி விட்டார்' என்றுதான் அந்த வாக்கியம். அதைக் கேட்டதும், அங்குள்ள மக்கள் அனைவரும் அவரது சொல் நயத்தையும், எதிர்க் கட்சியினரான ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளின் அற்புதமான பேச்சை அவர் மனமார வியந்து பாராட்டிய பெருந்தன்மையையும், இனிச் சத்தியமூர்த்தி பேசப் போகும் பேச்சையும், எண்ணி ஐந்து நிமிஷம் போல் இடைவிடாமல் கரகோஷம் செய்தார்கள். அவர்கள் நினைத்தபடியே அவரது பேச்சும் அமைந்தது. எதிர்க்கட்சி தோல்வியுற்றது என்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

சென்னையில் தமிழ் அன்பர் மகாநாடு

சத்தியமூர்த்திக்குத் தமிழில் பேச்சுத் திறமை மட்டுமே உண்டு என்று நினைக்கலாகாது. ஓரளவு படிப்பும், மட்டில்லா ஆர்வமும் உண்டு. ஆதலால், 1933 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் ஜார்ஜ்டவுன், பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டில் அவர் கலந்து கொண்டது பொருத்தமே. அப்போது கல்வி மந்திரியாக இருந்த எஸ். குமாரசாமி ரெட்டியார் அந்த மகாநாட்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அன்று பல வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானது மகாத்மா காந்தி தமிழில் கையெழுத்திட்டு அனுப்பிய செய்தி.

பிறகு குமாரசாமி ரெட்டியார் தலைமை தாங்க வேண்டும் என்று திரு.வி. கலியாணசுந்தர முதலியார் பேசினார். அதை ஆதரித்துப் பேசும் போது சத்தியமூர்த்தி குமாரசாமி ரெட்டியாரை நேரில் பார்த்துப் பேசுகையில் அவரை 'நீர்' என்று சுட்டிக் கூறினார். உடனே கூட்டத்தின் ஒரு பகுதியினர், 'நீர்' என்பது ஒருமைச் சொல் என்றும், அதை சத்தியமூர்த்தி வழங்கியது தலைவருக்கு அவமரியாதை என்றும் கூச்சலிட்டனர். உடனே, அங்கிருந்த உ. வே. சாமிநாதையர், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், எஸ். வையாபுரிப் பிள்ளை, ஆகியோர் அது பன்மைச் சொல், பண்டை இலக்கியங்களிலும் கம்பனிலும் நாட்டு வழக்கிலும் பன்மையாகவும் மரியாதைச் சொல்லாகவும் வழங்கப்படுகிறது என்று எடுத்துக் காட்டியும், அவர்களுடைய கூச்சல் அடங்க

வில்லை. அந்தச் சொல்லை 'வாபஸ்' வாங்க வேண்டும் என்ருர்கள். 'நான் சொல்லியது சரி. நீங்கள் சொல்வது தப்பு, அதனுல் வாபஸ் வாங்கப் போவதில்லை' என்று சத்தியமூர்த்தி துணிவோடு கூறினுர். பக்கத்திலிருந்த எங்களிடம், மெதுவாக, 'தப்பாயிருந்தாலும் அவர்களுக்கு அஞ்ச மாட்டேனே. சரியாயிருக்கும் போது பின் வாங்குவேனு ?' என்ருர். அவருடைய வாழ்க்கையைத் தெரிந்தவர்கள் இந்த நிகழ்ச்சி அதைக் கண்ணுடி போல் காட்டுகிறது என்பதை அறிவார்கள்.

பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேச்சு

ஒருமுறை சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் சத்தியமூர்த்தி ஒரு பேருரை நிகழ்த்திஞர். அது ஸெனட்-ஹௌஸின் பின்புறமாடியில் நடைபெற்றது. வழக்கமாகக் குறிப்போ எழுத்தோ இல்லாமல் பேசும் ஆற்றல் மிக்கவர் சத்தியமூர்த்தி. அன்று அவர் பேசிய பொருளின்மீது அவருக்கு இருந்த மதிப்பினுலும், அன்று பேச்சைக் கேட்கப் பல பேரறிஞர்கள் வருவார்கள் என்று தெரிந்து, அவர்களின் மீதுள்ள மதிப்பினுலும், பேச்சு முழுவதையும் எழுதித் தயார் செய்திருந்தார். மார்பளவு உயரமுள்ள சிறு மேசையின்மீது அதை அவர் விரித்து வைத்துப் படித்தார் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனுல் சற்றே அப்பாலிருந்து அந்தப் பேச்சைக் கேட்டவர்களுக்கு, அவர் ஏதோ சில குறிப்புக்களை வைத்துக் கொண்டு, வழக்கம் போல் உடனடியாகப் பேசுகிருர் என்றே தோன்றிற்று. பெரும்பான்மையும் கேட்போரின் முகங்களையே நோக்கிப் பேசிய முறையும், தட்டுத் தடங்கல் சிறிதுமின்றி நீரொழுக்குப் போல் பேசிய போக்கும், அத்தகைய நினைப்பையே அளித்தது. அவர் எத்துணை சிறந்த நடிகர் என்பதை அது எங்களுக்கு நினைப் பூட்டிற்று. எவ்வளவு கண்ணும் கருத்துமாக அது வீட்டில் தயாரிக்கப்பட்டது என்பதை அந்தப் பேச்சின் செஞ்சொல் அமைப்பு சொல்நயம் தெரிந்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்தது.

வால்மீகி ராமாயணப் பேச்சு

சென்னை, வி.வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரை அறியாதார் இருக்க முடியாது. அவர் சிறந்த இலக்கிய ஆசிரியர், நாடகம் எழுதுவதில் அரிய திறமை உடையவர், நடிகர், நீதிபதி, மிகச் சிறந்த பக்தர், அதனினும் சிறந்த கொடையாளி, புகழ்பெற்ற வழக்கறிஞர், ரஸிகர். அவர் மயிலாப்பூரில் 'லக்ஷ்மி விலாஸத்தில்'

மிகச் சிறப்பாக வாழ்ந்த காலத்தில், ஸம்ஸ்கிருத அகாடெமியின் கூட்டங்கள் அங்கே நடைபெற்று வந்தன. அத்தகைய கூட்டம் ஒன்றில் சத்தியமூர்த்தி அனுமனைப் பற்றிப் பேசுவதாக ஒப்புக் கொண்டார். அவருக்கு வட மொழியிலும் நல்ல புலமை உண்டு; அதன் மீதுள்ள பற்றும் அளவில்லாதது. சில வட மொழி நாடகங்களில் அவர் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அனுமனைப்பற்றி அவர் நன்றாகப் பேசுவார் என்பதில் ஒருவருக்கும் ஐயம் இல்லை. ஆனால், ஊன்றிப் படிக்காவிட்டால்,இலக்கியத் துறையில் சீராகப் பேச முடியாது அல்லவா? அவருக்கு அப்போது மேன்மேலும் ஏற்பட்ட வேலைகளால், நன்கு ஆராய்ந்து, அலசி, ஊன்றிப் படிக்க நேரம் இல்லை. என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்தார். அவர் வழக்கறிஞராகவும் இருந்தார் அல்லவா?

'குட்டி' வக்கீல்கள் கட்டைப் படித்தும், ஆதரவுகளைத் தேடியும், பெரிய வக்கீல்களுக்குத் துணை செய்வது வழக்கம். அதுபோல், அவர் எனதுநெருங்கிய உறவினரும் எம்.ஏ., எம்.எல்., பட்டம் பெற்றவரும், வட மொழி, ஆங்கிலம், தமிழ் என்னும் மூன்றிலும் மிக்க புலமை உடையவரும், அடக்கமே உருவானவருமான, வே. நாராயண ஐயரின் துணையை நாடிப் பெற்றார். அவரும் மனம் உவந்து, உடலும் அறிவும் சோராது தேடி, அனுமனைப் பற்றிய பல விஷயங்களையும் திரட்டி, ஒழுங்கு படுத்தி, சத்தியமூர்த்தியிடம் கொடுத்ததோடு, சில குறிப்புக்களையும் நேரில் கூறினார். 'பேஷ்' என்று சத்தியமூர்த்தி தட்டிக் கொடுத்தார்.

உரிய நாளன்று மாலையில் சத்தியமூர்த்தி லக்ஷ்மி விலாஸத்தில் நிகழ்த்திய பேருரை அங்கே கூடியிருந்த பாமரர், பண்டிதர் அனைவரையும் வியப்பும் களிப்பும் அடையச் செய்தது. அப்பேச்சு மிகமிக அழகாகவும் அற்புதமாகவும் இருந்தது. அச்செய்திகளைத் திரட்டிய நாராயணய்யரால் அத்தகைய பேருரையே நிகழ்த்தியிருக்க முடியாது; வேறு ஒருவராலுமே நிகழ்த்தியிருக்க முடியாது. சத்தியமூர்த்தியின் அரிய மேதாவிலாசத்தின் ஒளி அன்று பல்வேறு கோணங்களிலிருந்தும், பன்னிற ஒளிகளோடும், பற்பல புதுமைகளோடும், வீசி அனைவரையும் மெய்ம் மறந்திருக்கச் செய்தது. இயற்கையாகப் பெற்ற திறமையைத் தமது அரிய முயற்சியால் மேம்படுத்தியவர் சத்தியமூர்த்தி.

பொலிவுறும் தமிழகம்

தரம் தாழாமல் விதவிதமாகச் செய்திகளைக் கவர்ச்சிகரமாக வெளியிடுவது மட்டும் போதாது; புதியதொரு லட்சிய சமுதாயத்தைப் படைப்பதில் உள்ள பல்வேறு பிரச்னைகளை அறிஞர்களைக்கொண்டு ஆராய்ந்து விளக்குவது அவசியம். இன்று தமிழ்நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகள் எவை?

- பஞ்சாயத்து ஆட்சி சீராக இயங்கவேண்டும்.
- கிராம, நகர, மாவட்ட மக்களின் குறைகளுக்கு பரிகாரம் தேடவேண்டும்.
- ஆட்சியில் தாமதம் குறைந்து வேகம் பெருக வேண்டும்.
- உணவு, உடை மற்றும் கல்வி வசதிகளில் தன்னிறைவு வேண்டும்.
- தமிழகத்தின் பண்பு புதுப் பொலிவு பெற வேண்டும்.

இந்த லட்சியம் நிறைவேற வேண்டுமாயின் அந்தந்த இடங்களிலேயுள்ள பல்வேறு பிரச்னைகளையும், மக்கள் தேவைகளையும் நேரே சென்று கண்டு எடுத்துரைப்பது முக்கியமல்லவா?

இவற்றையொட்டிய தொடர்க் கட்டுரைகளைப் பிரத்யேக முறையில் அளிக்கும் பணியில்தான் இன்று ஈடுபட்டுள்ளது.

சுதேசமித்திரன்

ஒவ்வொரு மித்திரன் தின இதழும் உங்கள் கருத்துக்கு ஒரு விருந்து

மொழிபெயர்ப்புத் திறமை

இது எந்த ஆண்டில் நடந்தது என்பது நினைவில்லை. மதுரைக்கு சி. ஆர். தாஸ் வந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி. மகாத்மா காந்தி சட்ட சபைக்குக் காங்கிரஸ் கட்சியினர் ஒருவரும் போகலாகாது, அதைவிட்டு விலகியிருக்க வேண்டும், என்று கூறினார். சி. ஆர். தாஸ் போன்ற வேறு சிலர் – அவர்களும் இணையற்ற தேசபக்தர்கள்தான் – அந்த முடிவை ஒப்பவில்லை. சட்டசபைக்கு உள்ளிருந்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுப்பது நன்று என்று அவர்கள் நினைத்தார்கள்; தங்களுடைய கருத்தை எங்கும் வற்புறுத்தி வந்தார்கள். சி. ஆர். தாஸ் கொண்ட இந்தக் கொள்கையை ஆதரித்தவர்களுள் சத்தியமூர்த்தியும் ஒருவர். அவரும் சி. ஆர். தாஸ் முதலியோரோடு தென்னாடு எங்கும் சுற்றி வந்தார்.

அவர்கள் மதுரைக்கு வந்தார்கள். கிருஷ்ணராயர் தெப்பக்குளமாக இருந்து, மேடிட்டு, தரையோடு தரையாக உயர்ந்த புல்லற்ற வெளியில் கூட்டம் கூடிற்று. மதுரை நகர் நண்பர் ஏ. வைத்தியநாத ஐயரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. வைத்தியநாத ஐயர் நூறுக்கு நூறு காந்தியின் கட்சியினர். ஆதலால் அங்கே சுவையான விவாதமோ, குறுக்குக் கேள்விகளோ, நிகழக்கூடும் என்று நினைத்தோம். திரளான கூட்டமும் கூடியிருந்தது – அதாவது அந்தக் காலத்தில் கூடி வந்த கூட்டங்களோடு ஒப்பிடும்போது.

சி. ஆர். தாஸ் பேசத் தொடங்கினார். அவர் பேசியது ஆங்கிலத்தில். அதை மொழிபெயர்த்து மக்களுக்கு வழங்க, பெரும் தமிழ்ப் புலவரும், மதுரை வழக்கறிஞரும், தேசபக்தரும், அஞ்சா நெஞ்சுடையவருமான சோமசுந்தர பாரதி அருகில் நின்றார். பேருரை தொடங்கிற்று. வாக்கியம் வாக்கியமாக, பாரதி மொழி பெயர்த்து வந்தார். பேச்சில் சூடு ஏறிற்று, வேகம் மிகுந்தது, படபடப்பான சொற்கள் பொங்கித் தெறித்து வீசின. பாரதியின் பெரும் புலமை அவரது மொழி பெயர்ப்புக்குச் சற்றே இடையூறாக இருந்தது. அவர் இடை இடையே சற்றே தயங்கினார். வேகம் மட்டுப் பட்டது. சி. ஆர். தாஸுக்குத் தமிழ் தெரியாது. ஆயினும், அவர் அந்த நிலையை உணர்ந்தார்.

மிகவும் அன்போடும் பரிவோடும் அவர் பாரதியை நோக்கி, 'என்னுடைய நடையின் வேகமும் போக்கும் உங்களுக்குச் சிரமம் கொடுக்கின்றன என்று தோன்றுகிறது.

அவை உங்களுக்குப் புதிது. சத்தியமூர்த்தி என்னோடு கூடவே எங்கும் சென்று வந்திருக்கிறார். என்னுடைய மனம் செல்லும் போக்கும் அவரது மனப்போக்கும் இந்த நெருங்கிய தொடர்பால் கிட்டத்தட்ட ஒன்றாகி விட்டன. உங்களுக்கு மன வருத்தம் இல்லாவிட்டால், சத்தியமூர்த்தி மொழி பெயர்க்கட்டுமே' என்றார். அவர் சொல்வதன் உண்மையை உணர்ந்த பாரதி, 'நான் அமர்ந்திருந்து இன்னும் நன்றாக அனுபவித்துக் கேட்கலாம்—இரண்டு மொழிகளின் மூலமாக' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். சத்தியமூர்த்தி எழுந்து முன்வந்தார்.

உடனே, தாஸ் 'We shall gird up our loins and challenge the world' என்ற வாக்கியத்தை மிகவும் கம்பீரமாக, துணிவு தொனிக்கக் கூறினார். இதை எப்படி மொழிபெயர்க்கப் போகிறார் என்று நாங்கள் நினைப்பதற்குள்ளேயே கணீரென்று ஒலித்தது சத்தியமூர்த்தியின் குரல். 'நாங்கள் கச்சை கட்டித் தோள் தட்டுவோம்' என்பது அவருடைய அற்புதமான மொழி பெயர்ப்பு. அதில் அடங்கிய வீராவேசக் கருத்தின் நிமித்தமோ, அல்லது அந்த வியக்கத்தக்க மொழி பெயர்ப்புக் கலையின் நிமித்தமோ, என்னால் உறுதியாகக் கூற முடியவில்லை, ஐந்து நிமிஷம் போல் மக்கள் தொடர்ந்து கரகோஷம் செய்தார்கள். சத்தியமூர்த்தியைப் பற்றி நாங்கள் கொண்டிருந்த நன்மதிப்பு இன்னும் பல படிகள் உயர்ந்தது என்று கூறவும் வேண்டுமோ?

காஸ்மாபாலிட்டன் கிளப்பில்

சத்தியமூர்த்தியும் அவரது குடும்பத்தாரும் என்னோடும் என் குடும்பத்தோடும் நெருங்கிப் பழகியவர்கள். அவரது அருமைப் புதல்வி லக்ஷ்மியைக் குழந்தை முதலே நாங்கள் கொஞ்சி, எங்கள் வீட்டுக் குழந்தை போல் பாராட்டி வந்தோம். சத்தியமூர்த்தி பெற்ற பொற்பதக்கத்தைச் சங்கிலியில் கோத்து அவள் அணிந்து வந்தது மிகவும் பொருத்தமானது என்று எங்களுக்குத் தோன்றிற்று. தேச பக்தியும், மகாத்மா காந்தி அடியின் கொள்கைகளும், அந்தச் சிறுவயதிலே அவளுடைய இரத்தத்தில் ஊறிக்கிடந்தன.

ஒரு சமயம், நாங்கள் சில நண்பர்கள் சத்தியமூர்த்திக்கு சென்னை, காஸ்மாபாலிட்டன் கிளப்பில் ஒரு விருந்துபசாரம் நடத்தினோம். அப்போது லக்ஷ்மிக்கு ஐந்துவயது போல் இருக்கலாம். அவளை

யும் விருந்துக்கு அழைத்து வரவேண்டும் என்று சத்திய மூர்த்திக்கு உத்தரவிட்டிருந் தோம். கிளப்பின் பெரிய முன் மண்டபத்தில் அயல் நாட்டுமகமல்போர்த்திருந்த அழகிய சோபாக்களில் நாங் கள் உட்கார்ந்து அவர்களு டைய வரவை எதிர்பார்த் திருந்தோம். அவர்கள் வந் தார்கள். மனமார வரவேற் ருேம். உட்காரச் சொன் ேனும். சத்தியமூர்த்தி உட் கார்ந்தார். பலர் பலமுறை வேண்டியும், லக்ஷ்மி உட்கார வில்லை. அவளுடைய முகத் தில் ஏதோ ஒரு பரபரப்பு இருந்தது. 'அவள் கூச்சப்படு கிருள். சும்மா இருங்கள். சரி யாய்ப் போய்விடும்' என்ருர் சத்தியமூர்த்தி.

எனக்குக் குழந்தைஉள்ளம் ஓரளவு தெரியும் என்பது என் நம்பிக்கை. கூச்சத்தால் அவள் அவ்வாறு நடக்க வில்லை என்பதைப் பற்றி எனக்கு ஐயமே இல்லை. ஆத லால், நான் எழுந்து, அவள ருகில் சென்று, சற்றே பேசி விளையாடிவிட்டு 'என்னிடம் காதோடு சொல். நான் இப் போது ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்' என்றேன். அவள் மெல்ல என் காதில், 'அந்த அயல் நாட்டுத் துணியை நான் தொட மாட்டேன்', என்று சோபாத் துணியைக் காட்டினுள். உடனே நானும் அதே குரலில் 'வேண்டாம். நான் கதர் வேஷ்டிதான் கட்டிக் கொண்டிருக்கிறேன். நான் சோபாவின்மீது உட் காருகிறேன். நீ என் மடியில் உட்கார்ந்து கொள்' என் றேன். குழந்தையின் முகத் தில் தோன்றிய கவலை பறந்து போய் விட்டது. வழக்கம் போல் புன்சிரிப்பு அவளு டைய இனிய முகத்தில் தவழ்ந்தது. குதித்து வந்து, என்மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அங்குள்ள மற்றவர்கள் அந்த மாயத் தைக் கண்டு வியந்தார்கள். 'எப்படிச் செய்தாய்?' என் ருர்கள். நான் வாக்களித்த படி, ஒருவருக்கும் சொல்ல வில்லை. ஏழெட்டு ஆண்டு களுக்கு முன், கேரளத்தில், கோட்டயத்தை அடுத்த, 'நாட்டகம்' என்னும் பகுதி யில் அவளுடைய வீட்டுக்கு விருந்தாளியாய்ச் சென்ற போது, அவளுக்கு இந்தப் பழைய நிகழ்ச்சியை நினைப்பு மூட்டினேன். பழைய நினைவு களைப்போல் இனிமை அளிப் பவை வேறு எவையும் இல்லை, அல்லவா?

அவருடைய கலகலத்த சிரிப்பும் நறுக்கித் தறித்தது போல் தெளிவான பேச்சு இன்றும் என் காதில் ஒளிக் கின்றன. சத்தியமூர்த்தி அவற்ருல் இன்றும் வாழ் கிருர்.

Grams: 'PHARMLAB'

Phone: 73170

MOUNT METTUR PHARMACEUTICALS PRIVATE LTD.

3, Greenways Road, P. B. No. 902,

MADRAS-28

MANUFACTURERS OF PHARMACEUTICAL SPECIALITIES, VITAMIN INJECTION VIALS ETC.

MAJOR SUPPLIERS TO ALL INSTITUTIONS I.V. DRIP SOLUTIONS OF DIFFERENT VARIETIES

GLUCOSE SALINE,	Molar Lactate,
GLUCOSE SOLUTION in	1/6th Molar Lactate,
5, 10, 20, & 25%,	Darrows, Lactate,
Sod. Sulph. 4·285%,	Hypertonic Saline

CYNOPLEX: A combination packing of B-Complex (essential factors in concentrated form) c B12 – proved to be very effective, especially for ulcerative stomatitis.

LIVO - PROTEIN - 12: A Good tonic found very useful, especially for children, with sufficient B12 and Lysine for daily requirement in post-operative and convalescence etc.

METAZYME: An enzyme preparation found to be very effective in digestive troubles, gastric fermentation etc.

TERPECOL: Dependable Cough Remedy.

PROTEINOSOL: Palatable Protein Hydrolysate of Animal origin.

AND OTHER SPECIALITIES, TABLETS (Sulphas and Vitamins), and COMMON AMPOULES

மோதிலால் நேருவும் சத்தியமூர்த்தியும்

சுந்தரராஜன்

பாரத தேசிய காங்கிரஸ் மஹா சபையின் வளர்ச்சியில் 1923 ஆம் வருஷம் நடந்த கயா காங்கிரஸ் ஒரு முக்கியமான கட்டம். இந்த மகாசபையில்தான் பண்டித மோதிலால் நேரு, தேச பந்து தாஸ் முதலிய தலைவர்களின் முயற்சியின் பயனாக காங்கிரஸ் அங்கத்தினர்கள் சட்ட சபைத் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ளும் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது.

சட்டசபைக்குள் புகுவதன் மூலம் பிரிட்டிஷ் ஆதிக்கத்துடன் நெருங்கிப் போராட முடியும் என்று இந்தத் தலைவர்கள் கருதினார்கள்.

இந்த முயற்சியை வேறு சில தலைவர்கள் எதிர்த்ததால் காங்கிரஸுக்குள்ளேயே இது விஷயமாக கருத்து வேற்றுமை வலுத்தது. 1922 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் பலனாக இந்தப் பிரச்னை கயா காங்கிரஸ் பரிசிலனைக்கு ஒத்திப் போடப்பட்டது. அந்த மஹா சபையில் தம்முடைய கட்சிக்கு வெற்றி தேடுவதற்காக பண்டித மோதிலால் நேரு முன் கூட்டியே முனைந்து விட்டார். இதற்காக தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில் ஸ்ரீ சத்யமூர்த்தியின் உதவியை நாடினார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் நடந்த முடிவைப் பற்றி அவர் அப்பொழுது ஸ்ரீ சத்யமூர்த்திக்கு எழுதிய கடிதத்தில், இது விஷயமாக வெற்றி காண்பதற்கு ஸ்ரீசத்தியமூர்த்தியும் ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்காரும் சேர்ந்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பண்டிதமோதிலால் நேரு ஸ்ரீ சத்யமூர்த்தியின் பிரசாரத் திறமையை வெகுவாக நம்பியிருந்தார் என்பது அந்த ஐந்தாண்டுகளில் அவர் அடிக்கடி ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு எழுதிய கடிதங்களிலிருந்து புலனாகிறது. சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதென்று தீர்மானித்தவுடன் ஸ்ரீ சத்தியமூர்த்தி சென்னை மாகாண சட்டசபைக்கு அபேட்சகராக நிற்க முடிவு செய்தார். இது பற்றி 1923 மே மாதம் 10 ஆம் தேதி பண்டித மோதிலால் நேரு

BEST FOR

SOUTH INDIAN DISHES

MADRAS HOTEL

HOTEL & RESTAURANT

Connaught Circus,
New Delhi - I.

Phone : 40595

எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார். "மாகாண சட்ட சபைக்கு நிற்கத் தீர்மானித்து நீங்கள் அறிக்கை விடுத்திருக்கிறீர்கள்.

முக்கியமான காரியம் நடக்க வேண்டிய மத்திய சட்டசபைக்கு நீங்கள் நிற்பதையே நான் விரும்பியிருப்பேன்......"

"என்னுல் முடிந்தவரை உங்கள் அபேட்சைக்கு நான் மகிழ்ச்சியுடன் ஆதரவு கொடுப்பேன்"

ஸ்ரீ சத்தியமூர்த்தி சட்டசபைக்கு வராததைப் பற்றி மீண்டும் ஒரு முறை பண்டித மோதிலால் நேரு குறிப்பிட நேரிட்டது. "மத்திய சட்டசபையில் நடந்தேறிய அலுவல்களைப் பற்றி நீங்கள் பாராட்டியிருப்பதற்கு நன்றி. இங்கு எனக்கு உதவி செய்வதற்கு நீங்கள் இல்லாதது ஒரு குறை தான்" என்று 1924 அக்டோபர் மாதத்தில் எழுதிய கடிதத்தில் பண்டித நேரு குறிப்பிட்டார்.

சென்னை மாகாண சட்டசபையில் சுயராஜ்ய கட்சியின் பலம் குறைவாயிருந்தபோதிலும் சத்தியமூர்த்தியும் அவருடைய சகாக்களும் அங்கு மிகவும் திறமையுடன் சர்க்காரை எதிர்த்துப் போராடி வந்தனர். பனகல் ராஜாவின் தலைமையில் இயங்கி வந்த மந்திரிசபைக்கு சத்தியமூர்த்தியின் கண்டனங்கள் பெரும் தொல்லையாக இருந்தன.

சுயராஜ்ய கட்சியின் சட்டசபைக்கு கொறடா என்ற முறையில் தமது திறமை முழுவதையும் பயன்படுத்தி அவர் போராடி வந்தார்.

இதற்கிடையே வங்காளத்தில் அடக்குமுறை ஆட்சியின் பயனுக ஏற்பட்ட பல பிரச்னைகள் காங்கிரஸ் தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்தன. இந்தப் பிரச்னைகளை சமாளிப்பதில் மோதிலால் நேருவும் தேசபந்து தாஸும் அடிக்கடி சத்தியமூர்த்தியுடன் கடிதப் போக்கு வரத்து கொண்டிருந்தனர். 1924–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வங்காள சட்டசபையின் முக்கியமான கூட்டம் நடக்க இருந்ததை உத்தேசித்து சுயராஜ்ய கட்சி அலுவல்களில் சென்னை மாகாணம் வங்காளம் இரண்டின் பிரச்னைகளையும் கட்சி அங்கத்தினர்கள் பகிர்ந்து பொறுப்பேற்க வேண்டும் என்று பண்டித மோதிலால் நேரு கருதினர். இந்த ஏற்பாட்டின் அவசியத்தை வற்புறுத்தும் வகையில் அவர் சத்தியமூர்த்திக்கு அப்பொழுது அனுப்பிய தந்தி குறிப்பிடத் தக்கது.

1924 ஆகஸ்டு 27-ஆம் தேதி சிம்லாவில் நடக்க இருந்த கட்சி கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் எல்லோரும் அவசியம் வரவேண்டுமென்றும் சத்தியமூர்த்தி வந்து நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்றும் கூறி, மோதிலால் நேரு அத்தந்தியில் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

தாய் நாட்டில் சுயராஜ்யகட்சி இயங்குவது மட்டும் போதாது என்று சத்தியமூர்த்திக்கு தோன்றிற்று. 1919-ஆம் ஆண்டில் காங்கிரஸ் தூது கோஷ்டியுடன் இங்கிலாந்து சென்று பிரசாரம் செய்த அனுபவத்தின் அடிப்படையில் மீண்டும் அந்நாட்டுக்கு விஜயம் செய்து சுயராஜ்ய கட்சியின் கொள்கைகளை விளக்க அவர் முடிவு செய்தார். இதைப் பற்றி 1925-ஆம் ஆண்டு ஜனவரி 29 தேதியன்று சத்தியமூர்த்திக்கு எழுதிய கடிதத்தில் பண்டித மோதிலால் நேரு பின்வருமாறு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

''நீங்கள் இங்கிலாந்து செல்வது பற்றி மகிழ்ச்சி. நீங்கள் அந்நாட்டிலிருக்கும் பொழுது சுயராஜ்யக்கட்சியின் நோக்கங்களை விளக்குவதோடு நமது லட்சியங்களைப் பற்றி பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துரைப்பீர்களென்று நம்புகிறேன்.''

ஸ்ரீ சத்தியமூர்த்தி இங்கிலாந்தில் புரிந்த சேவையைப் பற்றி பின்னர் மோதிலால் நேரு குறிப்பிடுகையில் 'இங்கிலாந்தில் பல நகரங்களில் நீங்கள் வெற்றிகரமாகச் சுற்றுப் பயணம் செய்து வந்ததைப் பாராட்டுகிறேன். நீங்கள் பேசிய பல பொதுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நான் மிகவும் கவனத்துடன் படித்தேன். உங்களுடைய இந்த சாதனையை நான் எதிர்பார்த்ததுதான். இங்கிலாந்தில் இந்தக் குறுகிய காலத்தில் உங்களால் இயன்றதெல்லாம் செய்திருக்கிறீர்கள்.''

சத்தியமூர்த்தியின் பிரசாரம் உள் நாட்டில் பின்னர் மிகவும் வியக்கத்தக்க முறையில் நடந்தது. 1926-ஆம் ஆண்டில் நடந்த தேர்தல்களுக்காக வட பாரதத்தில் பல மாகாணங்களில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்தார். மூன்று வார காலத்திற்குள் ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், பம்பாய், முதலிய மாகாணங்களில் பல இடங்களுக்கு விஜயம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றினர்.

சுயராஜ்ய கட்சியின் தேர்தல் வெற்றிக்கு பண்டித மோதிலால் நேரு சத்தியமூர்த்தியின் பிரசாரத் திறமையை எவ்வளவு தூரம் நம்பியிருந்தார் என்பதற்கு இது

With Best Compliments

from

CENTRAL NEWS AGENCY

CONNAUGHT CIRCUS,

NEW DELHI-1.

TELEPHONE: 44762, 46516

ஒரு அத்தாட்சி. சென்னை மாகாண மக்களுக்கு சத்திய மூர்த்தியின் மூலம் மோதிலால் நேரு அனுப்பிய செய்தியில் ''சென்னை மாகாணம் ஏற்கனவே மத்திய சட்டசபைக்கு நான்கு அங்கத்தினர்களையும் மாகாண சட்டசபைகளுக்கு ஐந்து அங்கத்தினர்களையும் போட்டியின்றி தேர்ந்தெடுத்திருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இதனால் மற்ற இடங்களிலும் காங்கிரஸ் ஊழியர்கள் உற்சாகமடைந்திருக்கிறார்கள். இதற்காக சென்னை மாகாண வோட்டர்களைப் பாராட்டுவதுடன் அவர்கள் இன்னும் அதிக அளவில் சட்டசபைகளுக்கு சுயராஜ்ய கட்சி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நம்புகிறேன்'' என்று தெரிவித்தார்.

மேடைப் பிரசங்கத்தில் இணையற்று விளங்கிய சத்தியமூர்த்தி தம்முடைய பிரசாரத் திறமையினால், தம்முடைய கட்சிக்கு வெற்றிகண்டதோடு, சட்டசபையில் அங்கம் வகித்தபோது, கடும் உழைப்பினால் சர்க்காரின் அநீதிகளை எடுத்துக் காட்டி வந்தார். விடுதலைப் போராட்டத்தின் முக்கிய அம்சங்களான சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் முதலிய நடவடிக்கைகளுக்கு உத்தரவு கிடைத்தபோதும் அவர் தயங்கவில்லை.

சட்டசபை அலுவல்களில் எவ்வளவு ஊக்கத்துடன் ஈடுபட்டாரோ அதே அளவில் தம்முடைய வசதிகளைத் தியாகம் செய்து சிறைவாசம் செய்யவும் முன் வந்தார். மகாத்மா காந்தியின் ஆணைப்படி நாடு முழுவதும் உப்பு சட்டமறுப்பில் ஈடுபட்டபோது சத்தியமூர்த்தியும் உற்சாகத்துடன் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அந்த சமயத்தில் பண்டித மோதிலால் நேருவின் உடல் நிலைகுன்றி மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. சட்ட மறுப்பின் விளைவாகக் கைது செய்யப்பட்டு காவலில் இருந்த சத்தியமூர்த்தி மோதிலால்நேருவுக்கு பின்வரும் கடிதம் எழுதினர். ''நாட்டு மக்கள் எல்லோருடனும் சேர்ந்து நானும் உங்களுடைய உடல் நிலையைப் பற்றி மிகவும்கவலை அடைந்திருந்தேன். இப்பொழுது நீங்கள் குணமடைந்து வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். விரைவில் முற்றிலும் குணமடைந்து விடுவீர்கள் என்று நம்புகிறேன். இவ்வாண்டு ஜனவரி 8-ம் தேதியன்று நான் சிறைவாசத் தண்டனை அடையும் பாக்கியத்தைப் பெறுவேன் என்று கேட்டு நீங்கள் மகிழ்ச்சி யடைவீர்கள். தேசியக் கொடி ஏற்றுவித்ததற்காக எனக்கு ஆறுமாதம் சிறை தண்டனை விதிக்கப்படும். உங்களுக்கு முடியுமானல், நான் சிறை செல்லு முன் உங்களுடைய நல் வாழ்த்துக்களைப் பெற விரும்புகிறேன். நான் மீண்டும் வரும் பொழுது உங்கள் உடல் நிலை முற்றிலும் குணமடையும் என்று நம்புகிறேன்.''

துணிச்சலும் திறமையும் படைத்த ஒரு போர் வீரன் தன்னுடைய தளபதியிடம் காட்டும் இயல்பான நம்பிக்கை, மரியாதை, எல்லாம் அவரிடம் இருந்தன. போரில் எல்லாவற்றையும் தியாகம் செய்து வெற்றி தேடித்தரும் வீரனிடம் ஒரு தலைவன் கொள்ளும் நம்பிக்கையை பண்டித மோதிலால் நேரு சத்திய மூர்த்தி விஷயத்தில் எப்பொழுதும் கொண்டிருந்தார்.

கல்லூரி நினைவுகள்

எஸ். ஸ்ரீனிவாஸன்

1929-ஆம் ஆண்டு. அப்போது நான் பாளையங்கோட்டையிலுள்ள செயின்ட் ஸேவியர் கல்லூரியில் முதல் வருஷ பி.ஏ. வகுப்பில் படித்து வந்தேன். அவ்வாண்டுதான் கல்லூரிகளின் நிர்வாகத்தை சீரிய முறையில் அமைக்க வேண்டி சென்னை பல்கலைக் கழகத்தாரால் ஒரு கமிஷன் நிறுவப்பட்டது. அதில் திரு. சத்தியமூர்த்தி ஒரு உறுப்பினர்.

கமிஷன் எங்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தது, திரு. சத்திய மூர்த்தியின் பொறுப்பு விளையாட்டுத்துறை-நூலகம் இவற்றைக் கவனிப்பது. முதல் நாள் கமிஷனின் சில உறுப்பினர்களை திரு.சத்தியமூர்த்தி உள்பட கல்லூரியைச் சுற்றிலும் அழைத்துச் சென்றார்கள். நேராக கால் பந்து விளையாடும் மைதானத்திற்குச் சென்றார் திரு. சத்தியமூர்த்தி. முன் தினம் தான், துடைத்துச் சீர்செய்து, வர்ணம் தீட்டப் பட்டிருந்த goal post களைச் சென்று தொட்டுப் பார்த்தார். கையில் காயாத புதுச் சாயம் ஒட்டிக் கொண்டது. அருகில் நின்ற கல்லூரி முதல்வர் ஆக இருந்த பூஜ்யர் ஞானப்பிரகாசம் அவர்களிடம் தன்னுடைய கைச் சாயத்தைக் காட்டி, "நாங்கள் வயது முதிர்ந்தவர்கள். கால் பந்தும் ஹாக்கியும் விளையாடும் பருவத்தைத் தாண்டியவர்கள். நாங்கள் விளையாடுவதற்குத்தான் அவகாசம் ஏது? எதற்காக தாங்கள் சிரமப்பட்டு இவைகளை யெல்லாம் புதுப்பிக்க வேண்டும்? விளையாடல்களுக்காக இவ்வளவு பண உதவி தேவை என்று சொல்லியிருந்தால் போதாதா?" என்று கேட்டார். அருகில் நின்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மறுநாளும் கமிஷனில் சில அங்கத்தினர்கள், சத்திய மூர்த்தி உள்பட, கல்லூரிக்கு வந்தனர். இம்முறை, உதவி பிரின்ஸ்பாலாக இருந்த பூஜ்யர் அருள்சாமி திரு. சத்திய மூர்த்தியை புத்தகசாலையைப் பார்க்க அழைத்துச் சென்றார். திரு. சத்தியமூர்த்தி இரண்டு ஷெல்புகளைத் தாண்டிச் சென்றார். அங்கு ஒரு சிறு ஏணி வைக்கப்பட்டிருந்தது.

ஏணியில் இரண்டு படிகள் ஏறி மூன்றுவது நான்காவது தட்டுக்களில் வைக்கப்பட்டிருந்த புத்தக வரிசைகளுக்குப்

With the compliments

of

EVEREST HANDLOOMS

G. T. Road, Ghaziabad

Manufacturers of

FURNISHINGS, TAPESTRIES, CASEMENTS, BED & TABLE LINEN, TOWELS AND DRESS MATERIAL.

பின்னால் ஏதோ தேடுபவரைப் போல் தன் கையை நீட்டினார். அங்கு பின் வரிசையில் வைக்கப்பட்டிருந்த ஆறு ஏழு புத்தகங்களை எடுத்து நூலக நிர்வாகியிடம் கொடுத்து ஒரு மேஜையில் வைக்கச் சொன்னார். ஏணியிலிருந்து கீழே யிறங்கி மேஜையின் அருகே சென்று அமர்ந்தார். பூஜ்யர் அருள்சாமியும் அவருடன் சென்று ஒரு துண்டை எடுத்து கையைத் துடைத்துக் கொள்ள உதவினார். திரு. சத்தியமூர்த்தி துண்டை வாங்கி கையையும் துடைத்துக் கொண்டு, பல நாட்கள் தட்டப் படாமல் இருந்த புத்தகத்தின் மேல் படிந்துள்ள தூசியையும் தட்டின பிறகு பெருத்த நம்பிக்கையுடன் சட்டைப் பையிலுள்ள கத்தி ஒன்றைப் பிரித்து அருள்சாமி அவர்களிடம் பேசிய வண்ணமே கிழிக்கப் படாமல் இருந்த புதுப் புத்தகங்களின் பக்கங்களை நிதானமாக கிழிக்க ஆரம்பித்தார். இரண்டு மூன்று புத்தகங்கள் இவ்வாறு கிழிக்கப்பட்டவுடன் புத்தகசாலை நிர்வாகியை அழைத்து இதுபோன்று கிழிக்கப்படாமல் பின்புற வரிசையில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களையும் கிழித்து அவைகளை உபயோகத்திற்குக் கொண்டு வரும்படி சொல்லி விட்டு, பூஜ்யர் அருள்சாமியை அழைத்துக் கொண்டு புத்தகாலயத்தை விட்டு நீங்கினார்.

அந்த வருஷமும் பிறகு தொடர்ந்து இரண்டு மூன்று வருஷங்களுக்கும் அக்கல்லூரி கோரியிருந்த நூல் நிலைய மான்யம் வாயில் மண் விழுந்தது. பழம் புத்தகங்களே பிரிக்கப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டு வர முடியாத இந்நிலைமையில் புதுப் புத்தகங்கள் வாங்க மான்யம் எதற்கு ?

அன்று மாலை கமிஷனின் சில உறுப்பினர்கள், இந்து கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டனர். ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குச் சென்று கொண்டிருந்த திரு. சத்தியமூர்த்தி அவர்களை ஒரு மாணவன் இடைமறித்து நிறுத்தினான். "மன்னிக்க வேண்டும். தாங்கள் காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர்களில் ஒருவராயிற்றே. தாங்கள் கூட பேசுவது ஒன்று செய்வது ஒன்றா ? இப்போது தாங்கள் அணிந்திருக்கும் கோட் விதேசியல்லவா ? தாங்கள்கூட இப்

படிச் செய்வது முறையா?'' என்று வினவினான்.

திரு. சத்தியமூர்த்தி சிரித்துக் கொண்டே கல்லூரி தலைவர் அறைக்குச் சென்றார். தன்னை வழிமறித்து கேள்வி கேட்ட மாணவனை அழைத்து வரச் சொன்னார். கல்லூரித் தலைவர் அழைக்கிறார் என்றவுடன் பயந்துக் கொண்டே பையனும் வந்து சேர்ந்தான். அவனை அருகில் அழைத்து, சற்றும் கடிந்து கொள்ளாமல் ''தம்பி, நீ கேட்ட கேள்விக்கு மெச்சினேன். இப்படித்தான் நாட்டு நலனில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இளைஞர்கள் இப்படி அக்கறை காட்டினால்தான் நம் நாட்டுக்கு நல்லது'' என்று சொல்லி மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த கத்தரிக்கோல் ஒன்றை யெடுத்து தான் அணிந்திருந்த சட்டையின் கீழ் புறத்தில் நுனியில் ஒரு சிறிது கத்தரித்து அந்த மாணவன் கையில் கொடுத்து ''இது சுத்த கதர். மேலும், கதர் பட்டு. இது நம் நாட்டில் உற்பத்தியானது, நம் நாட்டில் நெய்யப்பட்டது. கதர் இவ்வளவு நன்றாக அயல் நாட்டுத் துணிக்குச் சமமாக முன்னேறியிருப்பதை நீ அறிந்திருக்க, பாவம், சந்தர்ப்பம் ஏது?' என்று சொன்னவுடன் அந்தப் பையனும் இதர ஆசிரியர்களும் பிரமித்து நின்றனர்.

சீக்கிரமாக தீங்கில்லாமல் நிவாரணம்

மூலநோய்

ரத்தக்குழாய் வீக்கம், ரத்தக்கசிவு, வெடிப்புகளினின்றும் நிவாரணம்.



ஹெடன்ஸா சீக்கிரமாக ரத்தக்குழாய்களை சுருங்கச் செய்து, ரத்தக்கசிவை நிறுத்தி, வலி, மற்றும் நமைச்சலினின்றும் உடனடி நிவாரணம் தருகிறது. எல்லாம் ரண சிகிச்சை ஏதுமில்லாமலேயே! இந்த பிரபல ஜெர்மன் ஔஷத மெழுகு நீடித்த நோயாக இருப்பினும் துரிதமாகப் பயனளிக்கிறது.
ஹெடன்ஸா கறையுண்டாக்காது. உபயோகிப்பதும் சுலபம். இதில் உணர் வழிக்கும் மருந்து ஏதுமில்லை. உங்கள் உபத்திரவம் மூலநோய் தான் என்றால் அதற்கு ஒரே விடை ஹெடன்ஸாதான். இன்றே ஹெடன்ஸா உபயோகித்துப் பாருங்கள். குழாயுடன் (கான்னுலா) கிடைக்கும். இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

இந்த சின்னம் உள்ளதே அசல தயாரிப்பு.

ஹெடன்ஸா

DZ-1363 TH

யானறிந்த சத்தியமூர்த்தி

பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி

தென்னாட்டிலோ, அகில இந்தியாவிலோ ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தியை அறியாதோரில்லை. நம் தாய்நாடு சுதந்திரமடைவதற்கு, பலர் தியாகம் செய்தனர். வாக்கு வன்மையாலும், தளரா முயற்சியாலும், நாடெங்கும் சென்று, சிறைப்பட்டு, நாட்டிற் குழைத்த மகா கம்பீரப் பேச்சாளரே சத்தியமூர்த்தி.

அவர் வாக்கு வன்மையையும் பதில் சொல்லும் திறமையையும் அந்தப் பதிலில் எதிராளியைப் பதரச்சிதறச் செய்யும் சக்தியையும் பலர் அறிவர்.

அவருடன் அடியேன் நெருங்கிப் பழகி பல தத்துவங்களை அறிந்தது, கல்வி ஸ்தாபனங்களிலும், டி. யூ. ஸி. எஸ். என்ற கோவாபரேடிவ் ஸ்டோரிலும்.

அவருடன் அண்ணாமலை சர்வகலாசாலை ஸெனெட்டில், அவர் ஸிண்டிகேட்டிலிருந்தபொழுது, கூட ஒத்துழைத்து வந்தேன். அவர் கல்வி விஷயங்களிலும் மகா சிரத்தையுள்ளவர். ஏழையாய்ப் பிறந்து, வளர்ந்ததால், தன்னம்பிக்கையுடன் எந்த வேலையிலும் ஈடுபட்டவர். தேவ பாஷையான சம்ஸ்கிருதத்தில் பாண்டித்தியமுள்ளவர்.

திருவல்லிக்கேணியில் பிரசித்தி பெற்ற "டி.யூ.ஸி.எஸ்." என்ற கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் பொது வருஷாந்திர கூட்டங்களில் திறமையுடன் தலைமை வகித்தவர். தான் தில்லி சென்றதும் அதில் அடியேனை இழுத்து வேலை செய்யச் செய்தவர்.

ஒருவர் தன் மேன்மையை சீடர்களுக்கு விட்டுச் சென்றதால் அச்சீடர்களால் குருவின் பெயர் இன்றும் உபநிஷதங்களென்னும் ஜீவ நூல்களாக விளங்குகின்றன. அம்மாதிரி ராஜீயத் துறையில் தன் உண்மை சீடராக ஸ்ரீகாமராஜ் அவர்களைக் கொடுத்திருக்கிறார் ஸ்ரீ சத்தியமூர்த்தி. அன்னாருடன் நெருங்கிப் பழகியோர் அவரை மறக்க முடியாது.

அநேக வம்பர்கள் ஸ்ரீ எஸ். சத்யமூர்த்திக்கு மந்திரிப் பதவி கொடுக்காதது ஸ்ரீ ராஜாஜியின் பிடிவாதம் என்கிறார்கள். அதற்குத் தக்க பதில் ஸ்ரீ ராஜாஜியே கொடுக்க முடியும். எனினும் மந்திரிப் பதவியோ, அல்லது எப்பதவியோ கிடைத்தால் மட்டும் ஒருவன் பெரியவனாக முடியாது — தற்காலத்தில் எல்லா விதமான மந்திரிகளையும் நாம் பார்த்து, சலித்தாகி விட்டது. ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி எந்தப் பதவிக்கும் பட்டத்திற்கும் ஆசைப்படவில்லை. உத்தம தேசத் தொண்டர்களில், ஸரஸ்வதி கடாட்சம் பெற்று, வாக்கு வன்மையைப் பாரதமாதாவின் சேவையில் அர்ப்பணம் செய்த தீரர்.

*

ரசிகத் திரு உருவம்

தி. சா. ராஜு

> சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
> வகை தெரிவான் கட்டே உலகு.

இந்த உலகத்தில் பலர் பிறந்து விட்டதனுல் வாழ்கிருர்கள். சிலர் வாழ்வதற்காகவே பிறக்கிருர்கள்.

முன்னவர்களை 'வேடிக்கை மனிதர்' என்று குறிப்பிடுகிருர் அமரகவி. 'உண்டுறங்கி இடர் செய்து செத்திடும் கலக மானுடப் பூச்சிகள்' என்று அவர்களைக் காய்கிருர்.

பின்னவர்களை வானுறையும் தெய்வத்துடன் ஒப்பிடுகிருர் வள்ளுவர். இந்த இருவகையினரையும் பூமகள் தாங்கி நின்ருலும் பின் பகுதியினர் போற்றப்படுவதற்கு உரியவர்கள் என்ற உண்மையைப் பெரும்பாலோர் எப்போதாவது உணர்ந்து கொள்ளுகிருர்கள். அந்தத் துறையில் இந்தப் புகழ்மாலை ஒரு புதிய வண்ணம் காட்டுவதாகும்.

தீரர் சத்தியமூர்த்தி வாழ்ந்தகாலம் (1887—1943) இந்திய நாட்டிலும், சிறப்பாகத் தமிழகத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது. அன்னிய ஆட்சியின் கடுமை சிறிது சிறிதாக உறைக்க மக்கள் சமுதாயத்தின் சத்தான பகுதி, அதை அறிவின் வழியாகவும் பாமர மக்கள் உணர்ச்சிபூர்வமாகவும் எதிர்க்கத் தொடங்கினுர்கள். அப்போது மக்களுடைய எண்ணங்களை ஒருமுகப் படுத்தி அவற்றிற்குச் செயலுருவம் கொடுக்கப் பல தலைவர்கள் தேவைப்பட்டார்கள். அத்தகைய தலைவர்களுள் முன்னணியில் நின்றவர் தீரர் சத்தியமூர்த்தி.

தலைவர் சத்தியமூர்த்தி சிறந்த பேச்சாளர், திட்டமிட்டுப் பணிபுரியும் செயல் வீரர், ஜனநாயக சபையின் நெறிமுறைகளைப் பழுதறப் பயின்றவர், ஆழ்ந்த நாட்டுப்பற்றும், இலக்கியப் புலமையும் கொண்டவர், என்பவையெல்லாம் பலருக்குத் தெரியும். ஆனுல் அவர் ஒரு மகா ரசிகர் என்ற உண்மையை எடுத்துக்காட்ட ஒருசில நிகழ்ச்சிகளை மட்டுமே இங்கு காண்போம். சத்தியமூர்த்தி அவர்கள் சமுதாய வாழ்க்கையில் காணும் முறைகேடுகளை வெறுத்தார். அவை நிலவுவதற்கான காரணங்களை நீக்க வழி தேடினுர். கூடவே அந்த வாழ்க்கையில் உள்ள நறுமணத்தையும், இன்ப அனுபவங்களையும் துய்க்க

CROWN BRAND

Serves the Nation......

Besides UTENSILS of all varieties & Sizes, WE MAKE......

FOR RAILWAYS & GENERAL PUBLIC :—

Roof Water Tanks of various capacities, Caution Boards, Alarm Signal Boards, 'Seat Capacity' and 'Coach Number' plates, Water Troughs, Inspection Covers, Reflectors Washers, Shelf, Lavatory Chutes Louvers, Portable Ladders, Counter Shunk Washers, — Toilet Paper Boxes, Handholds, etc. —

FOR TEXTILE INDUSTRY :—

Carding Cans, Separators, Barrels, Doffing Cans, Can Inserts, Bobbin holders, Spools, etc.

It is sheer joy to possess our special products like 'Crown' Thermic Jug Deluxe, 'Crown' Brand Picnic Tiffin Carreir, Convenient Tiffin Carrier for office-goers and school going children, Student Boxes for carrying books, Suitcases for Travellers and beautiful Anodised Articles in eye-pleasing, fast colours:

Any Specification, Any Size, Any Quantity,
If it is of Aluminium, you can rely on us.

JEEWANLAL (1929) LIMITED

Head Office: **CROWN ALUMINIUM HOUSE,**
23, Brabourne Road :: CALCUTTA-I.

Branches: ADEN, BOMBAY, DELHI, MADRAS RAJAHMUNDRY.

விழைந்தார். மற்றைய போலிகளைப்போல அவர் அவைகளி லிருந்து விலகி ஓட முயற்சிக்கவில்லை. விலகி விட்டதாகக் கூறிக்கொள்ளவும் இல்லை.

மாவீரர் அலெக்ஸாந்தரின் வரலாற்றைப் பிரமிக்கத்தக்க முறையில் எழுதிய ப்ளூடார்க், 'ஒரு சரித்திர மனிதன் தனி வாழ்வில் சின்னஞ்சிறு செயல்களை எவ்வாறு செய்தான், சிறிய பெரிய துயரங்கள் வாழ்க்கையில் எதிர்ப்படும்போது அவைகளை எவ்வாறு சமாளித்தான் என்று உன்னிக் கவனிப்பது சுவை மிகுந்ததொரு செயல்,' என்று கூறுகிறார். இந்த மாவீரரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அந்தக் கோணத்திலிருந்து காணும் போது தீரரின் பெருந்தன்மை மிக நன்றாகப் புலப்படும்.

குளித்தலையை அடுத்த மருதூரில் திரு கே. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் வீட்டில் அவர் விருந்தினராகத் தங்கியிருந் தார். கே. வி. எஸ். அவர்கள் பண்புடைய பரம்பரைச் செல் வந்தர். அதிதிசத்காரத்தில் எல்லையற்ற ஈடுபாடு உடையவர். சத்தியமூர்த்தியின் ருசிக்கேற்ற உணவு வகைகளைத் தம் இல்லத் தில் தயாரிக்கச் செய்திருந்தார்.

இடைவேளைச் சிற்றுண்டி உண்ண மற்றப் பிரமுகர்களுட னும் அவரும் அமர்ந்திருந்தார். அன்றைய உண்டியில் இனிப் புக்குப் பிறகு முந்திரிப் பருப்பினாலான நெய்வடை வழங்கப் பட்டது. உளுந்தை நீரில் ஊறவைத்து அறைத்துச் சுடுவது போல் முந்திரிப் பருப்பு மாவின் விழுதை உள்ளங்கை அகலத் திற்குப் பரப்பி நல்ல நெய்யில் பொன்னிறத்திற்குச் சுட்டு எடுத்திருந்தார்கள். வடையுடன் வழங்கப்பட்ட தேங்காய்ச் சட்டினியைச் சுவைத்தார் சத்தியமூர்த்தி. 'இந்த வடைக்கான சட்டினியை வாதுமைப் பருப்பினால் செய்திருக்க வேண்டும்,' என்றார் புன்முறுவலுடன்!

பொதுக் கூட்டங்களில் பங்குபெறும் பொருட்டு கரூர் நகரத் திற்கு வரும்போதெல்லாம் அவர் வழக்கறிஞரும், தேச பக்தரு மான திரு சந்திரசேகரன் அவர்கள் வீட்டில் தங்குவது வழக்கம். உணவு பரிமாறப்படுவதற்கு முன்பு நேராக அவர் சமைய லறைக்குள்ளேயே சென்று விடுவார். "புளிக்காத நல்ல தயிராக ஆடையோடு இருக்கிறதா. அம்மா," என்று அந்த இல் லத் தலைவியைக் கேட்பார். திருமதி சந்திரசேகரனின் உள்ளம் நெகிழ்ந்துவிடும்.

சிறைவாசம் செய்யும்போது அவரைக் காணச் செல்லு பவர்கள் கொண்டுபோகும் பொருள்கள் விசேஷத்தன்மை வாய்ந்தவையாக இருக்கும். "கையில் என்ன கொண்டு வந் திருக்கிறாய்?" என்று அவர் வினவியதும், 'சந்தனம்', அல்லது 'மல்லிகைப்பூ' என்று பதில் வரும். அவருடைய முகம் குழந்தை யுடையதைப்போல மலரும்.

“ இந்த ஊருக்குக் கே. பி. எஸ். வந்திருக்கிறார் போலிருக்கிறதே, அவரை அழைத்துச் சிறைக்குள் ஒரு கச்சேரி செய்யச் சொன்னால் என்ன ?” என்று அவர் கேட்டதாகத் தீரருடன் சிறைவாசம் செய்தவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. தம் ஒரே மகள் லட்சுமியிடம் அவர் கொண்டிருந்த பாசத்தையும், அவர் அதை பகிரங்கமாக வெளிப்படுத்துவதையும் நண்பர்கள் நன்கு கண்டு வியந்திருக்கிறார்கள்.

மலரின் மணம், தீங்குரல், நல்லொளி, பல்சுவை உணவு, ஆகியவைகளில் எல்லோராலும் மனத்தைப் பறிகொடுத்து விட முடியாது. அதற்கு பக்குவப்பட்ட உள்ளம் தேவை. அத்தகைய உள்ளம்தான் தீனர்களுக்காகக் கதறும். அவர்களுடைய துயரங்களைக் கண்டு கசியும், அன்னார் படும் துன்பங்களைத் தன்னுடலில் வீழும் கசையடிபோல் உணரும்.

விடுதலை இயக்கத்தில் தீரர் நிகரற்ற மதி நுட்பம் காட்டினார். மக்கள் பிரதிநிதி சபையில் தம் சொல் வன்மையினால் எதிராளியை மடக்கினார், பொதுக் கூட்டங்களில் மக்களைக் கட்டி வைத்தார், திட்டமிட்டுச் செயல்புரிந்தார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய அகவாழ்வின் மலர்ச்சிதான். அச்செயல்களில் அவருடைய கவிதை உள்ளம் தெற்றெனப் புலப்பட்டது. உள இயல் நிபுணர் ஃப்ராயிட் குறிப்பிடுவதும் இந்த உண்மை தானே! கோக் கவிஞர் பாரதி இந்த இயல்புகளின் அடித் தளத்தை வெகு அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

...இன்பம்
மோதி விழிக்கும் விழியினார் – பெண்மை
மோகத்தில், செல்வத்தில், கீர்த்தியில்,
ஆடுதல், பாடுதல், சித்திரம் – கவி
ஆதியனைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார்......

பாரத நாட்டிற்குள் தமிழக அமைச்சரவை நிகரற்ற செயல் திறனுடன் பணி புரிவதற்குக் காரணம் நமது அமைச்சர் தலைவராகும். பாமரர்களிடையே இருந்த தொண்டர் தங்கத்தைத் தேர்ந்தெடுத்துப் புடம்போட்டு மெருகூட்டி அவரைத் தலைமைப் பதவிக்கு உருவாக்கிய பெருமை சத்தியமூர்த்தியையே சேரும் என்பதில் ஐயமென்ன ?

இந்த உலகத்தில் பலர் பிறந்து விட்டதினால் வாழ்கிறார்கள். சிலர் வாழ்வதற்காகவே பிறக்கிறார்கள்.

பின் வகையைச் சேர்ந்த தீரர் சத்தியமூர்த்தி ஒரு கவிதை மனிதர். அதனால்தான் அவருக்கு விழா எடுத்துக் கௌரவிக்கிறோம்.

பட விளக்கம்

I

காங்கிரஸ் அங்கத்தினர்கள் வேறு எந்த அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்கக்கூடாது என்ற வகையில் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அமைப்பு விதிகளுக்குத் திருத்தம் செய்வது அவசியம் என்று குறிப்பிட்டு ஸ்ரீ சத்தியமூர்த்தி எழுதிய கடிதத்திற்கு காந்திஜி எழுதிய பதில்.

''அன்புள்ள சத்தியமூர்த்தி, காங்கிரஸ்காரர்கள் வேறு எந்த அரசியல் கட்சியிலும் சேரக்கூடாது என்று நீங்கள் கூறுவதை நான் ஆதரிக்கிறேன். ஆயினும் ஒருவரும் அம்மாதிரி செய்யமாட்டார்களென்றும் நினைக்கிறேன். நீங்கள் குறிப்பிட்ட மற்ற யோசனைகளும் ஆராயப்படவேண்டியவைதான். என் மட்டில் என்னுடைய செல்வாக்கு அவ்வளவு அதிகமாகவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் இப்பொழுது எனக்கு அதிகத் தொடர்பில்லை. உங்களுடைய யோசனைகளை நீங்கள் அ இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் ஸமர்ப்பித்து வற்புறுத்த வேண்டும். ஆனால் உங்கள் உடல்நிலை சரியாக இல்லாவிட்டால் நீங்கள் கூட்டத்துக்கு வரக்கூடாது. உங்களுடைய கடிதத்தை ராஜேன்பாபு முதலியவர்களிடம் நான் காண்பிக்கிறேன்.''

II

1948ஆம் ஆண்டு, சத்தியமூர்த்தி தினம், தில்லித் தமிழ்ச் சங்கம் கொண்டாடிய போது எடுத்த படம். விழாத் தலைவர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் (மாலையுடன்), இறை வணக்கம் பாடிய ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மி, சங்கத்தின் ஸ்தாபகரும் முதல் தலைவருமான ஸ்ரீ எஸ். சுப்பிரமணியன் (சத்தியமூர்த்தி படத்தின் இடது பக்கம் கண்ணுடியின்றி நிற்பவர்) முதலியோரைக் காணலாம்).

III

1953 இல் அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் தலைமையில் சங்கத்தில் நடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஸ்ரீமதி. மரகதம் சந்திரசேகரன் (மத்திய அரசாங்கத்தில் தமிழ்நாட்டு ஹரிஜனப்பெண்மணி முதல் முதலாக உதவி மந்திரியாய் நியமிக்கப்பட்டவர்) பேசுகிறார். ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் (தற்காலம் தமிழ்நாட்டு அமைச்சர்), ஸ்ரீ ஒ. வி. அளகேசன் (அப்பொழுது உதவி மந்திரி) ஸ்ரீ பி. நடேசன் எம்.பி., முதலியவர்கள் வீற்றிருக்கிறார்கள். நிற்பவர்களில் (இடமிருந்து வலம்) காலஞ்சென்ற மாபெரும் சமூக ஊழியர் கே. ராமமூர்த்தி, 'சுடர்' நிர்வாக ஆசிரியர் அனந்தஸ்வாமி, ஒ. என். நாகரத்தினம் (தற்காலம் வாஷிங்டனில் வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவில் பணி செய்பவர்), பல வருஷங்களாய் ''சுடர்'' வெளியீட்டில் உதவி புரிந்து வரும் ஸ்ரீ கே. எஸ். ஜம்புநாதன் முதலியோரைக் காணலாம்.

IV

இந்தியாவின் தலைநகரில் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஞாபகச்சின்னமாக 1946 ஆம் ஆண்டு முதல் விளங்கும் இலவச வாசகசாலையும் தமிழ்ச் சங்க நூலகமும்.



நாவன்மையையும் பாண்டித்யத்தையும் ஜீவனோபாயமாக்கி ஆங்கில ஆசிரியர் வேலையில் நிலைக்கக் கருதின ஸ்ரீ சத்தியமூர்த்தியை அரசியல் வாழ்க்கைக்குக் கொண்டு வந்து பல வசதிகளையும் செய்து கொடுத்தவர் ஸ்ரீமான் எஸ். சீனிவாஸ அய்யங்கார். அப்படிக் கிடைத்த சத்தியமூர்த்தியை அன்புடன் பாராட்டியவர் மஹாத்மா காந்தி. மூவரும் 1925இல் சென்னை கடற்கரை (திலகர் காட்) கூட்டமொன்றில் மேடையிலிருந்தபோது எடுத்த படம்.

(புகைப்படம் கொடுத்துதவியவர் ஸ்ரீ சீனிவாஸய்யங்காரின் புதல்வி ஸ்ரீமதி அம்புஜம்மாள்).

18-6-39

SEGAON, WARDHA

My dear Satyamurti,

I am quite at one with you about Congressmen not being able to belong to any other political organisation. But nobody will go so far. Your other suggestions are also worthy of consideration. My influence is limited as it should

i.e. After all I am
not in touch with
the working of the
organisation. I
suggest your
pressing your
points at the A.I.C.C.
meeting. But you
must not come
at the sacrifice
of your health.
I am keeping
your letter with me.
I shall let Rajen
Babu & others
see it

Yours sincerely
M.K. Gandhi



II



III

1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி
சென்னை நகராண்மைக் கழக அலுவலகத் திடலில்
பாரதப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு
ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வெண்கலச்சிலையை
திறந்துவைத்து அரியதொரு
பாராட்டுரை வழங்கினார்.



IV

தில்லித் தமிழ்ச் சங்கம்

செயற்குழு 1963

தலைவர் :	திரு. கே. வி. வெங்கடாசலம்
துணைத் தலைவர் :	,, வை. ஆறுமுகம்
நிருவாகத் துணைத் தலைவர் :	,, சாலை இளந்திரையன்
பொதுச் செயலாளர் :	,, ஆர். எஸ். வெங்கடேசன்
இணைச் செயலாளர் :	,, சு. ஜெயராம்
பொருளாளர் :	,, ரா. விசுவநாதன்

வட்டாரச் செயலாளர்கள்: கரோல்பாக் பகுதி திரு. சேது கிருஷ்ணமூர்த்தி
விநயநகர்ப் பகுதி ,, வீ. செ. கந்தசாமி

(கனாட் பிளேஸ் தலைமை நூலகம், விநயநகர், கரோல்பாக் கிளை நூலகங்கள்)

நூலக நிர்வாகிகள் : திரு. சி.என். ரங்கநாதன், திரு. எஸ். குருசுவாமி
,, எஸ். கிருஷ்ணமூர்த்தி, ,, ஏ.என். நாகராஜன்
திரு. எல். எஸ். எஸ். மணி

உறுப்பினர்கள் :

திரு. எம். என். சுப்பிரமணியன், திருமதி ஹா. கி. வாலம்
திரு. ஆர். ரங்கராஜன், டாக்டர் எம். ஜெ. கெ. தவராஜ்
திரு. பி. எஸ். கிருஷ்ணசாமி, திரு. பி. பி. ஜீவன்ராவ்

கணக்குத் தணிக்கையாளர்கள் : திரு. வே. பார்த்தசாரதி
,, எஸ். எஸ். வேங்கடராமன்

'சுடர்' நிருவாக ஆசிரியர் : திரு. தி. கோ. அனந்தசுவாமி

தமிழ் ஓசை

எம். பக்தவத்ஸலம்

தமிழ் இனிமையான மொழி. தன்னிகரில்லாத பண்டைப் பெருமொழி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனிச் சிறப்போடு விளங்கிய ஒரு உன்னதமான நாகரிகத்தைத் தன்னுள் பொதிந்து வைத்திருக்கும் மொழி. பெருமையோடு விளங்கிய தமிழ்ப் பண்பும் தமிழர் வாழ்க்கை நெறியும் உலகமெல்லாம் பரவ வேண்டுமென்ருல், அதற்காக உலகெங்கும் தமிழோசை ஒலிக்கும்படி செய்வது அவசியமாகும்.

தமிழ்மொழியும் தமிழ்ப் பண்பும் வளரவேண்டும் என்ற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு பார்த்தாலும் கூட, இந்தியாவின் இதர பகுதிகளுக்கும் நமக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இருப்பது அவசியமாகும். டில்லியில் இன்று தமிழ்ச் சங்கம் பணியாற்றுகிறது. பல முக்கியமான நகரங்களில் இத்தகைய சங்கங்கள் இருக்கின்றன. வெளிநாடுகளில் பல்வேறு இடங்களில் தமிழ் அறிந்த மக்கள், தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பையும் வெகு அருமையாகப் பேணிப் பாதுகாத்து வருகிருர்கள்.

தென்னுட்டில் இந்தி பிரச்சார சபை நல்ல பணியாற்றி வருகிறது. இந்தியைப் பரப்பும் அவர்கள், வெளியூர்களில் தமிழின் பெருமையை எடுத்துக் கூறச் செய்யும் முயற்சிகள் கொஞ்சமல்ல. தமிழின் தொன்மை பற்றி, தமிழின் சிறப்புப் பற்றிப் பல புத்தகங்களை அவர்கள் இந்தி பேசும் மக்களுக்காக வெளியிட்டிருக்கிருர்கள். நான்கு வேதங்கள் எவை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். இந்தி பேசும் மக்கள் தமிழ் வேதம் எது என்பதையும் அறிவார்கள். திருக்குறளுக்குத்தான் அவர்கள் தமிழ் வேதம் என்று பெயரிட்டிருக்கிருர்கள்.

இந்தி, மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஆவதால் தமிழின் சிறப்பு குறையும் என்று சிலர் அறியாமல் பேசுகின்றனர். கடல் கொண்ட போதும் அழியாத தமிழ், தமிழர் துயில் கொண்ட போதும் அழியாத தமிழ், இணைந்து வாழும் ஒரு சக மொழியினுல் அழிந்து விடும்

GRADED No. 1
by DGS & D
Govt. of India

Designed for
Greater
Efficiency

IEC

MOTOR DRIVEN
PRECISION
LATHES

with automatic change Gear box, quick acting controls. All geared and cone pulley type.

MANUFACTURERS:
CHANANA BROS.
26, OKHLA INDUSTRIAL ESTATE
NEW DELHI-20. PHONE: 72832



SOLE SELLING AGENTS

CHANANA SALES CORPN.
53, HANUMAN ROAD, NEW DELHI.
Phone 44538

என்று சொல்வது வேடிக்கையான வாதமே யாகும்.

தமிழின் ஒளியை எத்தனையோ தடவை கருமேகங்கள் மறைத்தன. கடைசியாக ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் போது தமிழ் வளப்பம் குன்றி நலிந்திருந்தது. ஆனால் அந்த நிலைமைக்குக் காரணம் என்ன என்பதைச் சரியான முறையில் ஆராய்ந்து அறிய வேண்டும். அன்றைய ஆட்சியினர் தமிழின் அருமை பெருமை தெரியாதவர்கள். அன்று ஆளுவோருக்கு அருகாமையில் இருந்தவர்களும், தமிழின் பெருமையை எடுத்துக் காட்டத் துணியவில்லை. புதைக்கப்பட்ட பொன் குவியல் போல், தமிழின் பெருமை மறைந்து கிடந்தது. ஆனால் இன்றைய நிலைமை அப்படி இல்லை.

சென்ற நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவே இந்தப் புண்ணிய நாட்டில் பல்வேறு பிராந்தியங்களில் அந்தந்தத் தாய் மொழிகள் ஏற்றம் பெற்றுச் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்துள்ளன. விடுதலைப் போராட்டத்தை நடத்திய காங்கிரஸ், தாய் மொழி வளர்ச்சியை தன் நிர்மாண வேலைகளில் ஒன்றாகக் கொண்டது. மக்களிடையே விடுதலை உணர்ச்சியைப் பரப்ப, தாய் மொழி மூலமே அவர்களை அணுகியது. நாடு விடுதலையடைந்தவுடனே தமிழும், இதர தாய்மொழிகளும் அந்தந்த மாநிலங்களில் அரியாசனம் பெற்றுள்ளன. தமிழ் இன்று வளர்கின்றது. ஆட்சி மொழியாக அரியாசனம் பெற்றதோடு, கலைக் களஞ்சியம் என்ற செல்வத்தைப் பெற்றது. சட்டமன்றத்தில் தமிழ் ஒலிக்கிறது. கல்லூரிகளில் தமிழைப் போதனு மொழி ஆக்கும் முயற்சியில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. சிறந்த தமிழ் நூல்கள் சாகித்ய அகாடமி பரிசு பெறுகின்றன. பல நூல்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன.

தமிழ் நிலம் பல்வேறு வளங்கள் நிறைந்தது. இந்த வளங்களும், மக்களின் வாழ்க்கை வசதிகளும் நிறைவு பெற வேண்டுமானால், பல்வேறு பகுதிகளுக்குமிடையே இணக்கமான ஒத்துழைப்பு பலமடைய வேண்டும். இதன் மூலம் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குறை நிறைகள் சமன்படவும் நாடு வலிமை பெறவும் வழி ஏற்படும்.

இந்திய பூபாகத்தின் அமைப்பே மிக அருமையானது. வடக்கே, வெண்பனிக் காற்றும் வரமுடியாதபடி, இமயமலை இந்த நாட்டின் வட எல்லையாக உயர்ந்து நிற்கிறது. மூன்று பக்கங்களிலும் அழகிய கடல்கள் உள்ளன. மலரத் தொடங்கும் தாமரை மொக்குப்போல விளங்குகிறது இந்த ஞான பூமி. சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரியில் நின்றபடி, ஒரே ஏக நிலப் பரப்பாக இதைத் தம் மனக் கண்ணில் கண்டு வணங்கியதில் வியப்பில்லை.

நமது மொழி, நமது வளங்கள், நமது பொருளாதாரம், பாதுகாப்பு, இந்த நாட்டின் பண்டை ஞானச் சிறப்பு எல்லாம் முழுமையாக வளர வேண்டுமானால், பல்வேறு பகுதிகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை அவசியம். அந்த ஒற்றுமைக்கு வகை செய்யும் எல்லாச் சாதனங்களையும் கருத்துடன் பாதுகாப்பது நமது கடமையாகும். ✻

MORE PEOPLE
SMOKE **SIMLA** THAN ANY
OTHER FILTER CIGARETTE



ISSUED BY
THE IMPERIAL TOBACCO COMPANY OF INDIA LIMITED

மலராள்!

சு. கிருஷ்ணமூர்த்தி, புதுதில்லி.

அது ஒரு நறுமலர்ப் பூங்கா. பல் வகை மலர்கள் மலர்ந்து வரும் இடம். அவற்றில்தான் எவ்வளவு வகை! எத்தனை நிறங்கள்! பசும் புல்லின் நிறம், கரு மேகத்தின் நிறம், குங்கும நிறம், சந்தன நிறம், பஞ்ச வர்ணம் இன்னும் எத்தனையோ! மணம் நிறைந்தவை, மணமற்றவை, முள்ளில் மலர்பவை, மலர்ந்த உடனே வாடி மடிபவை, வாடாமலே இருப்பவை, பூசைக்குகந்தவை, பூவைக்குகந்தவை என்றெல்லாம் பல் வேறு வகைகள்.

நம்மைப் பொறுத்தவரை அவை வெறும் மலர்கள் தான். ஆனால் பரமன் படைப்பிலே உணர்ச்சிகளெல்லாம் மனித சாதிக்கு மாத்திரந்தான் சொந்தமா!

மலருடலிலே மலருள்ளங்கள் கொண்டு பல்லாயிரக் கணக்கான உயிர்கள் வாழும் நகரம் அந்தப் பூங்கா. சொல்லவொண்ணாத பல்வகை ஆசாபாசங்களை உள்ளடக்கிக் கொண்டு தாங்கள் மலரும் நாளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் மொட்டு உள்ளங்கள்; அப்போதுதான் மலர்ந்து உலக இன்பத்தை நுகரத் தொடங்கியிருக்கும் மலர்கள்; இன்பந்துய்த்து உலர்ந்து கருகிய மலர்கள்; இவையெல்லாம் இருந்தன அங்கே.

நம் கதாநாயகியான மலராளுக்கு அன்று பெரு நாள். அவளுக்குக் கன்னி கழியும் நாள் அது. அவளழகை எப்படி வருணிப்பது! மிருதுத் தன்மைக்கு மலரை உவமையாகச் சொல்லுவார்கள். மலருக்கு எதை உவமை சொல்வது! மலராளின் நுண்ணிடையைச் சுற்றிப் பச்சை பசேலென்ற காம்பு. அதில் தான் எவ்வளவு 'வளைவுகள்'! மனித இனத்தில் இத்தகைய 'வளைவுகளை' இயற்கையாகப் பெருத பெண்கள் அவைகளைச் செயற்கையாக உண்டாக்கிக் கொள்ள எவ்வளவு சிரமப்படுகிறார்கள்!

தூய்மையின் பிரதி பலிப்புப் போன்ற வெண்ணிற இதழ்கள்; இன்னும் அவை சரியாகத் திறக்கக் கூட இல்லை. பொழுது விடியவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் மலராள் மலர்ந்து விடுவாள். அவளகத்தை இலேசாக மறைத்திருக்கும் இதழ்த் திரை விலகி விடும். பிறகு அவள் தான்

இத்தனை காலமாகச் சேர்த்து வைத்திருக்கும் மகரந்தத்தையும் தேனையும் தன்னை நாடி வரும் காதலனுக்கு வாரி வழங்குவாள். அவனுடைய அணைப்பின் இன்பப் போதையில் மயங்கி உலகத்தையே மறந்து விடுவாள். தன் வாழ் நாள் முழுவதும் அவனுக்கே அடிமை செய்வாள். இது அவளது நெடு நாள் கனவு. மொட்டாயிருக்கும்போதே தன்னுள்ளே ம க ர ந் த ம் வளர்வதையும் தேன் ஊறுவதையும் உணரும் போதெல்லாம் அவளது மனத்தில் ஒரு குறுகுறுப்பு தோன்றும், உடல் புல்லரிக்கும். தேனும் மகரந்தமும் அவளுக்காகவல்ல, அவரது கரம் பிடிக்கப் போகும் காதலனுக்கு. அவற்றை அவள் அவனுக்குக் காணிக்கையாக அளிப்பாள். அவனடையும் மகிழ்ச்சியில் தானும் மகிழ் வெய்துவாள்.

அவள் இவ்வளவு காலமாக எந்த நாளுக்காகக் காத்திருந்தாளோ, அந்த நாள் வந்து விட்டது. இன்னும் கொஞ்ச நிமிடங்கள் தான் அவள் கனவு நனவாக. இவ்வளவு நாட்கள் காத்திருந்தவளுக்கு இன்னும் சில நிமிடங்கள் பொறுத்திருப்பது கஷ்டமாகத் தான் இருந்தது!

ஆனல் ஆவலினிடையிலும் அவளுக்கு உள்ளூற ஒரு விவரிக்க முடியாத பயம், முன்பின் தெரியாத ஒரு அனுபவ உலகத்தில் முதல் முதலாகக் காலெடுத்து வைக்கும் போது பெண்மைக்கு இயல்பாக உண்டாகும் கூச்சம். அவள் பெண்மையின் பூரணப் பொலிவை எய்தி விட்டாள். அதை அனுபவிக்க வரப்போகிறவன் யார்? அவள் அவனைப் பார்த்ததில்லை. அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. எங்கிருந்து வருவான்? என்னென்ன பேசுவான்? அவள் அவனிடம் என்ன சொல்ல வேண்டும்? மலராளின் மெல்லிய இதழ்களில் சிந்தனைக் கோடுகள் படர்ந்தன.

"காதல் சொல்லித் தெரிவதல்லடி!"

மலராள் திடுக்கிட்டுத் திரும்பினுள். அவளுடைய எண்ணங்களை யாராவது கண்டு கொண்டு விட்டார்களா?

பக்கத்திலிருந்த வாடா மல்லிகையாள் அவளைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மலராளுக்கு அளவிட முடியாத நாணம். அவள் தன் சிவந்த முகத்தை இலைச் சோதரனின் பின்னல் மறைத்துக் கொண்டாள்.

மலராள் பருவ மெய்திவிட்டாள். சிறிது குவிந்திருந்த அவளுடைய மெல்லிதழ்கள் நன்கு விரிந்துவிட்டன. பளபளக்கும் அவ்விதழ்களின்மேல் வான வெளியிலிருந்து பனித் துளிகள் விழுந்து அவளுடைய அழகுக்கு அழகு செய்தன. அ ம் மெ ல் லி டை யாளுக்கு வானத்துச் சீமாட்டி மணப் பரிசாக அளித்த முத்தாரமோ அது!

பிறந்தது முதல் தான் கனவிலும் நனவிலும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த காதலனின்

ர்வுக்காக, உள்ளத்தில் ஆசை வாங்க இதழ்களில் நாணங் கலந்த முறுவல் தவழ மலராள் காத்திருந்தாள். வாழ்வின் பேற்றைப் பெறப் போகிறோம் அப்படிப் பெறும் போதே வேறொருவருக்கும் இன்பந் தரப் போகிறோம் என்ற பெருமிதம் அவளது கண்களில் மின்னியது......

திடீரென்று அவளது மெல்லுடல் இதுவரை அவள் அறியாத ஒரு உணர்ச்சியால் சிலிர்த்தது. ஆடை மெல்ல நெகிழ்வது போன்ற உணர்ச்சி; தேகத்தில் ஒரு புது மாதிரியான குளுமையை உண்டாக்கின கிளர்ச்சி; ஒரு இனம்புரியாத சலனம்... அவள் இப்போது தனியளல்ல. ஆமாம், அவள் தன் காதலனை அடைந்துவிட்டாள். அவளது வாழ்வு பூரணத்துவம் பெற்றுவிட்டது. வாயு தேவனின் ஆலிங்கனம் அவளை ஒரு புது உலகத்துக்கே அழைத்துச் சென்றுவிட்டது.

அது வாயு தேவனுக்குப் பிடித்தமான வேளை. உலகத்தின் பார்வையால், பரிசத்தால் மலர்க் கன்னியரின் தூய்மை கெடுவதற்கு முன்னால், அவர்கள் சிறுமிப் பருவங் கழிந்து இளமையின் வாயிலில் காலெடுத்து வைக்கும் போதே அவர்களது அழகைச் சுவைக்க அதைவிடச் சிறந்த சமயம் வேறு எது ?

அவன் அவளைத் தழுவிக் கொண்ட போது அவனிடமிருந்து வந்த மணத்தின் போதையில் மலராளின் உள்ளங் கிறுகிறுத்தது. அந்தப் போதையின் தன்மையை விவரிக்க இயலாது. பாறையின் மேல் மோதிச் சிதறும் நீர்த் திவலைகளின் மீது இளஞ் சூரியனின் கிரணங்கள் பிரதிபலிக்கும் போது அவற்றின் நிறம் என்னவென்று யார்தான் திட்டமாகச் சொல்ல முடியும்? வாயு தேவன் கொணர்ந்த மணத்தின் தன்மையும் அப்படித்தான். வாயு தேவன் சற்றுமுன் நுகர்ந்த பல்வேறு மலர்களின் மணங்களின் கலவை அது. அதில் ஒரு இனம் புரியாத கவர்ச்சி இருந்தது. மலராள் அந்தக் கவர்ச்சியில் மயங்கிவிட்டாள். ஆறறிவு படைத்த மனிதஇனத்தைச் சேர்ந்தவளாக இருந்தால் மலராள் இப்படி மயங்கியிருக்க மாட்டாள். பரஸ்திரீயைத் தீண்டி விட்டுவரும் காதலன் தன்னை அணுகும்போது அந்த மோசத்தைக் கண்டு பிடித்து விடும் திறமை மானிடப் பெண்ணுக்கு இருக்கிறது. வஞ்சகம் நிறைந்த இவ்வுலகில் ஆடவரின் சாகசத்தில் ஏமாறித் தங்கள் கற்பைப் பெண்கள் இழந்து விடாமல் இருக்க இயற்கை அவர்களுக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு இந்தத் திறமை...ஆனால் பாவம், மலராள் என்னகண்டாள்! அனுபவம் கொஞ்சமும் இல்லாத பேதை அவள். மற்றவர்களும் தன்போலவே கள்ளமற்றவர்கள் என்று அவள் எண்ணியதில் வியப்பு என்ன இருக்கிறது !...

மலராள் எவ்வளவு நேரம் வாயுதேவனின் மடியில் மயங்கிக் கிடந்தாளோ, அவளுக்கே

தெரியாது. அவள் விழித்துக் கொண்டபோது வாயுதேவன் அங்கில்லை. அவனுக்குக் காதலி கள் எத்தனையோ! அவன் சபல புத்திக்காரன். அவனதுகுணமே சலனந்தான். அவன் விரும் பினுல்கூட அவனுல் ஒரே இடத் தில் நிலையாக இருக்கமுடியாது. மலராளுக்கு இதெல்லாம் எப் படித்தெரியும்? அவள் அவன ளித்துச் சென்ற இன்பத்தின் மயக்கத்தில் தன்னை மறந்திருந் தாள். தன்னுடைய மகரந்தச் செல்வத்தின் பெரும் பகுதியை அவன் எடுத்துக்கொண்டு சென்று விட்டதைக்கூட அந் தப்பேதை உணரவில்லை...

திடீரென்று ஒருபுதுமாதிரி அனுபவம் ஏற்பட்டது அவ ளுக்கு. தன்னை யாரோ தீண்டு வதுபோன்ற உணர்ச்சி; வெம் மை நிறைந்த ஸ்பரிசம்; அவளு டைய உடலின்மேல் காதலார் வம் செறிந்த மூச்சின் தாபம் ...மலராளின் இதழ்க்கன்னங் கள் நாணத்தால் சிவந்தன. ஆம், அவனும் ஒருகாதலன். அவன் அருணனை முன் கொண்டு கீழ்வானத்தில் எழுந்து கொண்டிருந்தான் அவன் பெயரே 'மலர் அரசன்' அல்லவா! மலராளின் இதழ் களில் படர்ந்திருந்த பனித் துளிகள் பளபளத்தன, காத லனின்வரவு கண்ட காதலியின் கண்களில் மின்னும் ஆனந்தக் கண்ணீர்த்துளிகள் போல சூரி யன் சிவந்த ஒளிப்பிழம்பாகத் திகழ்ந்தான். அவளுக்கு அவனை நிமிர்ந்து பார்க்கக்கூட அச்சம். அவன்தேவன். வான வெளியில் கம்பீரமாகப்பவனி வருபவன். நக்ஷத்திரங்களின் கணவனுன சந்திரனுக்கே ஒளிப்பிச்சை யளிக்கும் வள்ளல். பூமியின் ஒரு மூலையில் வளர்ந்து கொஞ்சநேரத்தில் வாடிவதங்கி மண்ணுடன் மண் ணுக மடியப் போகும் மலராள் எங்கே, ஊழிஊழி காலமாக எண்ணற்ற உலகங்களுக்கு ஒளி யும், உயிரும் வாரிவாரி வழங் கும் சூரியதேவன் எங்கே! அவ் வளவு தூரத்திலிருந்து அவன் தன் ஒளிக்கிரணங்களால் அவளை அணைத்துக் கொள் கிறுனே, அதுவே அவள் பாக்கியம். அவனுக்குக்காணிக் கையாக அளிக்க அவளிடம் என்ன இருக்கிறது? அவளிடம் இருப்பதெல்லாம் வானமாகிய அன்னை அவளுக்குப்பரிசாக அளித்திருக்கும் அந்தப் பனி மாலைதான். அதைஅவள் அவ னுக்கு வாரிவழங்கினுள். அவ னும் அதை ஆர்வத்துடன் பரு கினுன்...அந்தப் பனியாகிய அணிபோய் விட்டால் அவள் மூளியாகிவிடுவாள். அவளது மெல்லிய உடல்காய்ந்து போய் விடும். இருந்தாலென்ன? அவள் வாழ்வது பிறருக்கு இன்பமளிக்கத்தானே! அந்த இன்பமே அவள் வாழ்வு!...

இனிய கீதமொன்று மல ராளின் செவிகளில் பாய்ந்தது. வெறுங்கீதமா அது! கீத மிசைத்தவனின் உள்ளத்தின் ஆர்வத்தையெல்லாம் ஒருங்கே திரட்டிய ஒலிச்சித்திரம் அது! காதற் சுழலில் சிக்கித்தத் தளிக்கும் ஒரு உயிரின் உள்ள முருக்கும் வேண்டுகோள் அது? கீதமிசைத்தவன் வேருெருவரு மில்லை, வண்டுக் காதலன் தான். அவன் மலராளை நோக்கி

ஆர்வத்துடன் வந்து கொண்டிருந்தான்.

மலராளுக்கு அந்தக்கீதத்தின் அர்த்தம் புரிந்து விட்டது. அந்தக்கீதம் அவளுக்கு ஒன்றும் புதிதல்ல. அவள் மொட்டாக இருக்கும் போது வண்டு அதே கீதத்தை இசைத்துக் கொண்டு ஒரு மலரிலிருந்து வேறுரு மலருக்குப் பறந்து போவதை அவள் கண்டிருக்கிருள். ஆனுல் அப்போதெல்லாம் அவளுக்கு அந்தப்பாட்டின் அர்த்தம் தெரியாது. அந்தப் பாட்டு அர்த்தமற்ற ஒருசொற்குவியல் என்றுதான் அவள் இதுவரை நினைத்திருந்தாள். இப்போது அவளுக்குப் புரிந்தது அது காதலின் அழைப்பு என்று! இவ்வளவு காலமாகப் புரியாதிருந்த அந்தப்பாட்டு இப்போது மட்டும் தானுகவே எப்படிப்புரிந்து விட்டது என்பது அவளுக்கே தெரியவில்லை....

வண்டுக்காதலன் அவளை நோக்கிவந்து கொண்டிருந்தான். அவன் கண்களில் ஆர்வம்; இறக்கைகளில் பரபரப்பு; குரலில் வேண்டுகோள். அவள் மொட்டாயிருந்தவரை அவன் அவளை அணுகவில்லை. ஆயினும் அவனுக்கு எப்போதும் அவள்மேல் ஒருகண். அவள் பருவமெய்தும் நாளை அவன் வெகுகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்த இன்பம் இன்று அவனுக்குக் கிடைத்துவிடும். அவன் ஒரு காரியவாதி. வாயுதேவன்போல் ஒருசில மகரந்தத்துளிகளால் மட்டும், அல்லது சூரியன் போல் சில பனித்துளிகளால் மட்டும் திருப்தியடைந்து விடுபவன் அல்ல அவன். அவன் விரும்பியது மலராளின் அகத்தில் தேங்கியிருந்த மதுவை. அந்த இன்பக்கருவூலந்தான் அவனது இலட்சியம்....

குரு பக்தி !

ஒருசமயம் சென்னை கார்ப்பரேஷன் காமராஜருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்க முன்வந்தது. " எங்கள் தலைவர் சத்தியமூர்த்தியின் ஞாபகார்த்தமாக பூண்டி நீர்த்தேக்கத்திற்கு சத்தியமூர்த்தி சாகரம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை தோற்கடித்தவர்கள் நீங்கள்தானே? உங்கள் உபசார பத்திரம் எனக்கு வேண்டாம்" என்று காமராஜ் கூறிவிட்டார். உபசார பத்திரத்தை வேண்டாம் என்று சொன்னவர் கார்ப்பரேஷன் சரித்திரத்திலேயே காமராஜ் ஒருவர் தான்.

— ஆனந்த விகடன்

அவன் மலராளின் மேல் உட்கார்ந்தான். அவளுடைய இதழ்கள் இன்பத்தில் படபடத்தன. அடுத்தநிமிடம் அவன் அவளகத்துள்ளே நுழைந்து விட்டான். மலராள் நாணித் தன்னிதழ்களைக் குவித்துக் கொண்டாள். அவனுடைய மெல்லிய கால்களும், பட்டுப் போன்ற இறக்கைகளும் அவளுடைய உடலில்பட்ட இடமெல்லாம் அவளுக்குப் புல்லரிப்பு. அந்த இன்பமயக்கத்தில் அவள் கொஞ்சமும் தயக்கமின்றித்தன்னிடமிருந்த மதுவை அவனுக்கு வாரிவழங்கினாள்....

மதுவுண்டபிறகு அவள் காதலனுக்கு அங்கென்னவேலை? அவன் வெளியே வந்தான். போகிற போக்கில் மலராளிடம் எஞ்சியிருந்த கொஞ்சநஞ்சம் மகரந்தத்துளிகளையும் தன் உடலில் ஒட்டிக்கொண்டு போய் விட்டான் அவன்....

மலராள் மதுவிழந்து, மகரந்தமிழந்து, தன்னையணி செய்த பனியையிழந்து, பொலிவிழந்து நின்றாள்....

யாரோ ஒருவன் அந்தப் பூங்காவுக்கு மலர்கொய்ய வந்தான். அவன் மலராளுக்கு அருகே வந்தான். அவளைப் பறித்தான். பிறகு "சீ! என்ன மலர் இது! மணமுமில்லை, அழகுமில்லை, வாடிவதங்கிக் கிடக்கிறது" என்று சொல்லித் தரையில் எறிந்து விட்டுச் சென்றான்.

அவள் தன் நிலையைப்பற்றி வருந்தவே இல்லை. அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்...

யாரோ இருவர் அந்தப் பக்கம் வந்தார்கள். ஒருவன் சொன்னான், "நான் விஞ்ஞானி, நான் கடவுளை நம்பவில்லை, ஆனால் மனிதனை நம்புகிறேன். இயற்கை, மனிதனை ஒரு முக்கிய நோக்கத்துடன் தான் படைத்திருக்கிறது என்றுதிடமாக நம்புகிறேன் நான்...அந்த மலரைப்பார், இன்று காலைதான் மலர்ந்தது அது. சில மணிநேரத்தில் வாடிவதங்கி மண்ணுடன் மண்ணாகி விட்டது. அதன் வாழ்வுக்குப் பொருளில்லை. மனிதவாழ்வும் இதைப்போன்று அர்த்தமற்றதா? இல்லவேயில்லை, மனிதவாழ்வுக்கு ஏதோ ஒரு இலட்சியம் இருக்கிறது"...

அவர்கள் பேசிக்கொண்டே போய்விட்டார்கள்.

மலராள் மறுபடி சிரித்துக் கொண்டாள் "இந்த மனிதர்கள்தான் எவ்வளவு விசித்திரமானவர்கள்! வாழ்வின் பொருள், வாழ்வின் இலட்சியம், கால அளவில் அளக்கப் படக் கூடியதல்ல; அது இன்பத்தை யனுபவிக்கும் அளவில், இன்பத்தைப் பிறருக்கு அள்ளிக் கொடுக்கும் அளவில் தான் இருக்கிறது என்ற சிறு உண்மையை நம்மைவிட அறிவில் சிறந்த அவர்கள் உணரவில்லையே, என்ன ஆச்சரியம்!"...

வாடி வதங்கி மண்ணில் மாசுபட்டுக் கிடந்த மலராள் மனிதகுலத்தின் அறியாமைக்கு இரங்கினாள்....

With Best Compliments

from

NESTLER BOILERS PRIVATE LTD.,

LOVE LANE, BYCULLA,

BOMBAY - 27.

now

FOTON

MADE IN POLAND

BRIGHTER WHITE

PHOTOGRAPHIC PAPER

- RICH CONTRAST
- PACKED IN FOIL SEAL PACKING
- FOTOPAN SUPER ROLL FILMS
  with Extraordinary latitude of exposure
  to ensure sure snaps

INSIST ON FOTON For Photographic Requirements

For further Particulars, please contact:

CHOKSI BROTHERS PRIVATE LTD.

Western India House,
P. M. Road, Fort, Bombay-1.

66, Ganesh Ch. Avenue,
Calcutta - 13.

5/17, Mount Road,
Madras - 2.

சிலப்பதிகாரத்தில் இலக்கியம்

ராஜம் ராஜாமணி

ஆழிசூழ் உலகத்திலே மனிதன் என்று பேச ஆரம்பித்தானோ அன்று பிறந்தது மொழி. மனித நாகரீகத்தின் முதல் சின்னமாக விளங்குவதும் அதுவே. வாழ்க்கையில் கருத்தை விளக்குவதற்காகப் படைத்த மொழியை வளர்க்க ஆரம்பித்தான் மனிதன். வாழும் மொழியை வளர்க்க அதில் இலக்கியங்களை ஆக்கிப் படைத்தான். உண்மையில் மொழியால் மனிதன் வளர்ந்தான். மனிதனால் மொழி வளர்ந்தது. இந்த மொழியை வளர்க்கும் இலக்கியம் என்றால் என்ன? இந்தக் கேள்விக்குப் பல நாட்டார் பல காலம் பலவிதமாக விடை பகர்ந்து வந்திருக்கின்றனர். எனவே இதுதான் இலக்கியம் என்று நாம் திட்டமாகக் கூறமுடியாது. இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி (Literature is the mirror of the age) என்று Mathew Arnold கூறுகிறார். மனித உள்ளத்து உணர்ச்சிகளின் நாகரீக வடிவமே இலக்கியம் (Literature is the refined outcome of one's emotions!) என்கிறார் ஹட்சன் (Hudson). "பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளத்திலே ஊற்றெடுத்து ஓர் உருவெடுக்க முடியாமல் தத்தளிக்கும் உணர்ச்சியைக் கட்டிப் பிடித்து அதைத் தன் சொற்களிலே வடித்தெடுத்து அதற்கோர் உருவம் கொடுப்பவனே எழுத்தாளன். அந்தச் சொற் சித்திரமே இலக்கியம். அதோடு, தான் வாழும் காலத்து மக்களின் உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டி எதிர் காலத்தையும் எட்டி நோக்கிச் சொல்லும் இலக்கியமே இலக்கியம்." இது வங்கம் தந்த தங்க மேதை தாகூர் இலக்கியத்திற்களிக்கும் விளக்கம். எவ்வாறாயினும் இலக்கியம் என்பது காலம் கடந்தது. காலத்தைக் காட்டுவது.

ஆயினும் இலக்கியம் மொழியை வளர்ப்பது எனில், அதனால் விளையும் பயன் என்ன? இலக்கியம் என்பது பயனுள்ளதா? மனித வாழ்க்கைக்கு வளமூட்டுவதா அல்லது இலக்கியம் பயில்வது வெறும் பொழுது போக்குத்தானா? ஒரு கவிஞன் தனது காலத்தையும், கருத்தையும் வெறும் இன்பம் ஒன்றையே கருதி பயனற்ற ஒன்றைப் படைப்பதில் செலவிட்டிருப்பானா என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலக முழுவதிலுமுள்ள எல்லா மொழிகளிலும் காணக் கிடக்

With Best Compliments

from

CAREWAYS TRAVEL AGENTS

F - 47, CONNAUGHT PLACE,

NEW DELHI - I.

Telephone : 43222

கின்ற இலக்கியங்கள் எல்லாம் வெறும் பொழுது போக்குப்பற்றி மட்டுமே படைக்கப்பட்டவை என்று கூறின் அது நகைப்பிற்கிடமாகும். வள்ளுவன் வகுத்த ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட் பாக்களும் மாலை நேரத்திலே மன மகிழ்ச்சிக்காக மட்டுமே படிப்பதற்காகப் படைக்கப் பட்டனவா ? மனித வாழ்வை வளமாக்கும் கலங்கரை விளக்கங்களன்றோ அவை ! தான் வாழும் காலத்து மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் காணும் கவிஞன் தனது இலக்கியத்தில் லட்சிய உலகைப் படைத்து, எதிர் காலம் எப்படி இருக்க வேண்டுமென்ற தனது சீர்திருத்தக் கொள்கையைக் காட்டி விடுகிறான். எனவே அந்த இலக்கியம் பயிலும் ஒவ்வொருவரும் அவன் காட்டிய வழியைப் பின்பற்ற முயலும் போதுதான் அந்த இலக்கியம் பயனுள்ளதாகிறது. அதோடு வீணையில் நாதம் போல, மலரில் மணம் போல, தென்றலில் ஸ்பரிசம் போல அந்த விழுமிய உணர்ச்சி இலக்கியத்தினூடே பரவி நிற்கும் போதுதான் அந்த இலக்கியம் “ இலக்கு இயம் ” என்ற பெயருக்கேற்ப இலக்குடையதாகி அழியா அமர நிலை அடைகிறது.

கம்பன் காப்பியம் ராம கதை மட்டுமல்ல, ஆண் மகனின் லட்சியப் பாதையையும், பெண்மையின் பெரு வெற்றியையும், சமுதாயத்தின் சீர்திருத்த வழியையும் காட்டும் வாழ்க்கை இலக்கியம்.

> **“ வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
> **திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்**
> **உண்மை இல்லை போய் உரை இலாமையால்...”** என்ற

கம்பன் காட்டும் அயோத்திய நகரம் எதிர் காலத்தில் ‘ முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடமை,’ “ தனி ஒருவனுக்குணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்” என்ற அமர கவியின் கனவுக்கு அஸ்திவாரமிடுவதோடு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயக் கனவை நிர்மாணிக்கிறது.

சிந்தையள்ளும் சித்திரச் சிலம்பும் பொழுது போக்குக் காவியமல்ல. தமிழ் மகள் மேனியில் தளராது ஒலித்துக்கொண்டிருக்கும் சிலம்பில் உண்மைகள் நிரந்தரமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கோவலன் — கண்ணகி கதையில் புரட்சிக் கவிஞனின் புதுமைக் கொள்கைகளை பரக்கக் காண்கின்றோம்.

இலக்கியம் என்பது முன்னர் குறிப்பிட்டது போன்றுதான் வாழும் காலத்து மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்ட வேண்டும். பண்டைத் தமிழகத்தின் தலை சாயாத் தனிப் பெருவாழ்வை சிலம்பு வித்தரித்துக் காட்டுகின்றது. புகார் நகரின் பெருமையையும், வஞ்சியின் வளத்தையும், மதுரையின் மாண்பையும் காண்கிறோம். கோல் நிலை பெயராக் காவிரி நீத்தத்தில் களிக்கின்றோம்; வையை என்னும் பொய்யாக்

தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு
எங்கள் வாழ்த்துக்கள்

★

தி மேட்டூர் கெமிகல் அண்ட் இன்டஸ்டிரியல்
கார்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை. ஆர். எஸ்.
சேலம் ஜில்லா.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்:
சேஷஸாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி.

★

தில்லி பிரதிநிதி:
ரா. சக்கரவர்த்தி, M.A., B.L.,
3/1, இராணி ஜான்ஸி ரோடு,
புது தில்லி - 1.

தொலைபேசி எண்: 40622
தந்தி: "காமதேனு"

தபால் பெட்டி
எண்: 89.

குலக்கொடியின் வளத்தை வியக்கின்றோம். பெருமலை விலங்கிய பேரியாற்றைக் கண்டு பூரிக்கின்றோம். நாட்டின் நலம் மட்டுமன்றி மக்கள் வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகின்றார் சீர்திருத்தச் செம்மல். ஆய்ச்சியர், வேட்டுவர், அரசர், வணிகர், என்று எல்லாவிதமான மக்கள் வாழ்வையும் கண்டு வியக்கின்றோம். எனவே சித்திரச் சிலம்பின் இலக்கிய நயம் மறுக்க முடியாத தொன்று.

அடுத்து, இலக்கியத்தை துன்பியல் இலக்கியம், இன்பியல் இலக்கியம் என்று இரு பிரிவாகப் பிரித்த பெர்னாட் ஷா, துன்பியல் இலக்கியம் அமையும் முறைக்கு மூன்று வழிகள் கூறுகிறார். முதலாவது, தலைவனை நல்லவனாகப் படைத்து, சுற்றியுள்ள ஒரிருவர் தீமையால் அழிவு காண்பது. இரண்டாவது, தலைவன் தீயவனாகி, தானும் அழிந்து பிறரையும் அழிப்பது. மூன்றாவது, தலைவன் நல்லவனாகி, சந்தர்ப்ப வசத்தால் தீயவனாக மாற்றப்பட்டு அழிவது. இவற்றுள் முதலாவது முறை தான் தலை சிறந்ததாகக் கருதப் படுவது. இம் முறையைக் கையாண்டுதான் மேலை நாட்டு இலக்கியச் சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர் தனது வெற்றிகரமான துன்பியல் இலக்கியங்களான "Othello," "Hamlet" முதலியவற்றைப் படைத்தார். நல்லவனான Othello, தீயவனான Iagoவின் சூழ்ச்சிக்கு இரையாகி தனது அழிவைத் தேடிக் கொள்ளும் வகையைக் காண்கின்றோம். ஆனால் நமது பைந்தமிழ்ப் பாவலரான இளங்கோவோ இம் மூன்று முறையிலும் அல்லாத, அவற்றினும் கடினமான, சிறந்த முறையை ஷேக்ஸ்பியருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கையாண்டு மகத்தான வெற்றியைப் பெற்று விட்டார் என்று கூறும் போது தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவருடைய நெஞ்சமும் பெருமிதத்தால் விம்மிதம் எய்தும்.

இளங்கோவின் காப்பியத்தில் தீயவரே கிடையாது. அதில் எல்லோரும் நல்லவர்கள். கோவலன் நல்லவன். கண்ணகி நல்லவள். பாண்டியன் நல்லவன். எல்லோரும் நல்லவர்கள். தீயவர்களோடு போராடவில்லை, நல்லவர்களோடு போராடியே மடிகின்றனர். கோவலன் கொலையுண்ணப் படுகின்றான், மதுரை தீக்கிரையாகிறது, பாண்டியன் மடிகின்றான், பாண்டி மாதேவி இறக்கின்றாள். கோவலனின் தாயும் மாமியும் துறவு கொள்ள, தந்தையும் மாமனும் இறக்கின்றனர். துன்பியல் காப்பியத்தின் மாபெரும் வெற்றித் தூணாக சிலப்பதிகாரம் துலங்குகிறதன்றோ!

வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்திரிக்கும்போதுதான் இலக்கியம் வளம்டைகிறது. உலகின் எந்த மகத்தான இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும், தொன்று தொட்டு நடந்து வரும் நன்மை தீமைப் போராட்டத்தின் சித்திரத்தைக் காணலாம். Milton எழுதிய "Paradise Lost" நன்மை தீமைப்

தந்தி: சென்டெக்ஸ் போன்: 32 & 38

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

சென்னிமலை.

★

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், அழகான கெட்டிச்சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் சிறந்தவை.

★

சென்னை அரசாங்கத்தாரால் முதற் பரிசுகளும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்,

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.
தலைவர்.

போராட்டத்தின் நாடக வடிவே. கம்பன் காட்டுகின்ற ராம – ராவண யுத்தம் நன்மை தீமைப் போராட்டத்தின் கற்பனை வடிவம். உண்மையை அப்படியே கூறினால் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கசப்பாகத்தான் இருக்கும். எனவே மருத்துவர்கள் மருந்தை வாழைப் பழத்திலிட்டுக் கொடுப்ப தைப் போன்று, சமுதாயத்தின் மருத்துவர்களான இலக்கியக் கர்த்தாக்கள் உண்மையைக் கதை வடிவிலும் காவிய வடிவிலும் தருகிறார்கள். இம் முறையிலும் புரட்சி செய்கிறார் இளங்கோ. கோவலன் கண்ணகி கதையில் நன்மை தீமைப் போராட்டத்தை காட்டவில்லை. நன்மைக்கும் நன்மைக்கும் ஏற்படும் போராட் டத்தையே காட்டி, வாழ்வின் மிக நுண்ணிய பகுதியைத் தொட்டு விடுகிறார்.

கோவலன் நல்லவன்தான். கருணை மறவனாகவும், செல்லாச் செல்வனாகவும், இல்லோர் செம்மலாகவும் விளங்கும் வள்ளல் தான். ஆயினும் அவனிடமிருந்த ஒரே குணம் கலையார்வம், நிலையற்ற மனம். அதுதான் அவனது துன்ப முடிவிற்குக் காரணம். புகாரில் மாலை வேளையில் வீசிய தென்றல் கோவல னின் மனம் போல நிலையற்று, "சோலையினுள்ளும், மலர்ப் பொதும்பரிலும், மாளிகையின் சாளரங்களிலுள்ளும் புகுந்து புகுந்து வந்தது" என்ற அழகான உவமையின் மூலம் அவனது நிலையற்ற மனதைக் காட்டுகின்றார். ஏனையோரும் நல்லவரே. ஆயினும் அவர்கள் எல்லோரும் மனிதர்களே என்பதற் கேற்ப ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு குறையிருக்கிறது. எனவே முடிவு துன்பமாகிறது. ஒருவனை முற்றிலும் நல்லவனாகவோ, முற்றிலும் தீயவனாகவோ மனித வாழ்க்கைக்குப் புறம்பான முறையில் சித்திரிக்காது, வாழ்க்கைக்கு ஒட்டிய முறையில் காட்டுவதன் மூலம் சிலம்பு உள்ளம் கவரும் உயர்ந்த இலக்கிய மாகிறது.

இலக்கியம் என்பது மொழியை வளர்க்கும் சொல்லலங்கார மாக மட்டும் இருந்தால் போதாது. அறிவை, ஆன்மாவை, இலட்சியத்தை வளர்க்கும் நல்லதொரு படைப்பாக இருக்க வேண்டும். மனிதனுடைய லட்சியப் பண்புகளின் விளக்கமாக இருக்க வேண்டும். பெண்மையின் தன்மையை, பெண்ணினத் தின் பண்பு விளக்கத்தைக் கண்ணகியிடம் காண்கின்றோம்.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகி" என்ற அறி

முகத்திலேயே பெண்மையின் பெருங் குணமான கற்பு நெறியின் சால்பைக் காட்டி விடுகிறார். அதனால்தான் கணவனின் பிரிவுக்கு

our childern will know each other better . .

As part of her Five Year Plans, India is spending hundreds of crores in a great effort to improve and extend her network of transport and communications. Apart from the material benefits, this will help to bring closer together the many peoples in this vast land, with different cultures and creeds, emphasising their communion of interest in the midst of diversity. Mutual understanding will prevail over distance and our children will know each other better . . .

Since bringing the first pneumatic tyres to India in 1898, Dunlop have played a vital part in the development of transport facilities in the country. The Dunlop factory near Calcutta — the largest tyre plant in Asia — produces a wide range of tyres and equipment for transport and industry. In 1959, a second Dunlop factory went into production at Ambattur to cater to the rapidly increasing needs of transport.

DUNLOP

SERVING INDIA'S TRANSPORT SINCE 1898

DC-444E

மருந்தாக சோம குண்டம், சூரிய குண்டம், துறை மூழ்கிக் காம வேள் கோட்டம் தொழலாம் என்று கூறிய தோழிக்குப் "பீடன்று" என்று விடையிறுத்த கண்ணகியிடம் தெய்வம் தொழாது, கொழுநன் தொழுதெழுது மழை பெய்யெனப் பெய் விக்கும் பேராண்மையைக் காணும் போது பேருவகை கொள் கின்றோம்.

"சலம்புணர் கொள்கைச் சலதியோடாடி
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு" என்று வந்து நின்ற கோவலனிடம் மாறாப் புன்னகையோடு "சிலம்புள கொண்ம்" என்று கூறிக் கண்ணகி நிற்கும் போது நம்மெய் சிலிர்க்கின்றது. காதலன் பின்னோடு காட்டு வழி ஏகும் போதும், தன் துயர் காணுத் தகைசால் பூங்கொடியாக, "மாதவி தீதிலள்" என்று கூறும் மாண்புடையவளாக அவளைக் காணும் போதும் பெண் மைக்குத் தலைவணங்குகிறோம் நம்மை அறியாமலேயே. "பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா" என்று "ஜெய ஜெய போற்றி" என்று பெண்மைக்கு அஞ்சலி செய்கின்றோம். கற்பு நெறி பிறழாக் கண்ணகியால் சிலம்பு அஞ்செஞ் சிலம்பாக ஒலிக்கின்றது எனில் அது மிகையாகாது.

அடுத்து, ஒன்று இலக்கியம் என்று கூறப்பட வேண்டுமானல் அதில் இலட்சியம் இருக்க வேண்டும். உண்மையைத் துணிந்து கூறும் ஆற்றல் எந்தக் கவிஞனுக்கு இருக்கிறதோ, தான் சரி யென்று நினைத்த கருத்தை நல்ல முறையில் கூறும் கற்பனைத் திறம் எவனிடம் மிளிர்கிறதோ அவனுடைய காப்பியம்தான் காலம் கடந்த இலக்கிய வளம் நிறைந்ததாக இருக்க முடியும். புரட்சி மனப் பான்மையும், புதுமைக் கொள்கைகளும் கொண்ட இளங்கோ தனது காப்பியம் முழுவதிலும் தனது கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறத் தயங்கவே யில்லை.

ஏனையோர் சிவனுக்கும் திருமாலுக்கும் வணக்கம் கூறி நூலைத் தொடங்கிக் கொண்டிருந்த அற்றை நாளில், "திங்களைப் போற்றுதும்," "ஞாயிறு போற்றுதும்," "பூம்புகார் போற்று தும்" என்று முதல் முதல் இயற்கையைப் பாடி இலக்கியத்தில் முதலிலேயே புதுமையைப் புகுத்தி விடுகிறார். உலக முழுவ திலும் முடி மக்கள் காப்பியங்கள் முழங்கிக் கொண்டிருந்த நேரத்திலே முதன் முதல் குடிமக்கள் காப்பியமாக முரசு கொட்டுகிறது. அதுவும் முடி மன்னர்கள் ஆட்சியிலே சிலம்பு. அதில் சோழனைச் செந்தமிழில் வாழ்த்துகிறார், பாண்டியனைப் பாடுகிறார், சேரனை சிறப்பிக்கின்றார். ஆனல் இவர்கள் யாரும் நாடக இலக்கியத்தின் தலைவர்கள் அல்ல. அவர்கள் சாதாரண குடி மக்கள். கோவலன் – கண்ணகி என்ற சாதாரணக் குடி மக்கள் இல்லையேல் சிலப்பதிகாரம் இல்லை. ஏனைய முடி

Savlon
TRADE MARK
Satin-soft, feather-light, fragrant 'Savlon' Baby Powder.
Savlon BABY POWDER
'Savlon' Liquid Antiseptic —the most powerful antiseptic. Does not sting.
Savlon LIQUID ANTISEPTIC
'Savlon' Antiseptic Cream for minor cuts, burns and common skin complaints.
Savlon
Savlon ANTISEPTIC LOZENGES
SAVLON
'Savlon' Antiseptic Lozenges for the prevention and relief of sore throats and mouth infections.
• All these Savlon' products contain I.C.I.'s new discovery 'Hibitane'
Made and distributed in India by
IMPERIAL CHEMICAL INDUSTRIES (INDIA) PRIVATE LTD.
ICI
ISC-29

மன்னர்கள் யாவரும் உடுக்களே! அது மட்டுமா? ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவ வரி என்று பாமரர்களைப் பாடுவதில் பெருமையடைகிறார் இவ்வரச குலத் தோன்றல். தமிழகம் பிளவு பட்டிருந்த நேரத்திலே மூவேந்தரையும் இணைத்து, முத்தமிழ் நாட்டையும் படம் பிடித்து, முத் தமிழிலே முத்துத் தமிழ்க் காப்பியத்தைப் படைத்து, இன்றும் விடை காண முடியாத "தேசீய ஒற்றுமை"க் குழப்பத்திற்கு மருந்தாகப் புரட்சிக் காப்பியமாக இலக்கிய விருந்தை அளிக் கின்றார்.

சீர்திருத்தம் என்னும் பெயரில் தனக்குச் சரியென்று தோன்றுகிறதே என்று எந்தக் கருத்தையும் கூறி சமுதாயத் தைப் பாழாக்க முயலும் நூல்கள் இலக்கியங்களாகா. அவை மொழியின் பெயரால், கலையின் பெயரால் சமுதாயத்தில் வள ரும் காளான்கள். எந்த நாட்டவரும், எக்காலத்தும் மறுக்க முடியாமல் ஏற்றுக் கொள்ளும் நல்ல அறிவுரைகள் பகரும் இலக்கியமே மக்கள் மனதில் நிலைத்த இடத்தைப் பெறமுடியும். இந்த உண்மையையும் சிலப்பதிகாரத்தில் காண்கின்றோம்.

> "அரைசியல் பிழைத்தோர்க் கறம் கூற்றுவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
> சூழ்வினைச் சிலம்பு காரணமாக நாட்டுதும்
> யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்று சிலம்பின் மூலம் தான் விளக்க வந்த உண்மைகளை முன்னரே தொகுத்துக் கூறி இலக்கியத்தின் மேன்மையை நாம் முன்பே உணர்ந்து கொள்ளும்படி செய்து விடுகிறார். மக்களுக்கு அறவாழ்க்கை யின் அவசியத்தை ஆங்காங்கே அறிவுறுத்தவும் மறக்கவில்லை. அறநிலை வழுவிய மன்னனின் அழிவையும், மதுரையின் நிலையை யும் காணும் போது ஒவ்வொருவரும் அறத்தினின்றும் வழுவு வதை அறவே மறந்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

"பத்தினிப் பெண்களை துறவிகளும் தொழுவார்கள்" என்ற கருத்தைக் கண்ணகி வாழ்வில் காட்டுகிறார். "மாதரார் தொழு தேத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்......" என்று முதலிலேயே மாதர்கள் தொழும் மாண்பைக் காட்டுகிறார். "நாணின் பாவாய், நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி" என்று கோவலன் புகழ்கிறான். "இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து" என்று தெய்வமேறிய சாலினி சாற்று கின்றாள். "தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி" என்று

கவுந்தி அடிகள் கழறுகின்றார். படிப்படியாக அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றார். தெய்வமும் ஏவல் கேட்கும் மனித தெய்வமாக்கி, இறுதியில் தெய்வ நிலைக்கே கொண்டு செல்கின்றார். புகார்க் காண்டத்தில் பேதையாகக் கண்ட கண்ணகி, மதுரைக் காண்டத்தில் மாண்புடை மனிதத் தெய்வமாகி, வஞ்சிக் காண்டத்தில் வரந் தரும் தெய்வமாகி, சேரனால் கற்கோயிலும் இளங்கோவால் சொற் கோவிலும் எடுக்கப் பெற்று, தமிழ் மக்கள் நெஞ்சக் கோயிலில் நிலை பெற்ற தெய்வமாகும் நிலையை படிப்படியாக நம்பும் வகையில் அமைத்துக் காட்டி வருகின்றார்.

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே விளையும்'' என்ற உண்மையை, ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்று வலியுறுத்தி கருணை மறவன் கோவலன் அழிவுக்கும், கற்புச் செல்வி கண்ணகி துயருக்கும், மாண்புடை மாதவி மனக் கலக்கத்திற்கும் காரணம்

காட்டித் தீவினையின் விளைவை நாம் மறக்க வொண்ணுத் வண்ணம் செய்துவிடுகின்ருர்.

அதோடன்றி, "தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்" என்று இறுதி வாழ்த்துக் காதையில் வாசகர்களை விளித்து, "பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் பொய்யுரை அஞ்சுமின் புறஞ் சொல் போற்றுமின்," என்றெல்லாம் தனது கருத்துக்களை தனது காப்பியம் வடிக்கின்றவர் தான் படைத்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு நடக்கவேண்டிய அவசியத்தை அதனுல்ஃஅடையும் பயனை, "அல்லல் நீங்கி" மல்லன் மா ஞாலத்து வாழ்வீரீங்கென்"று வாழ்த்தி முடிக்கின்ருர். எனவே சிந்தையள்ளும் சிலம்பு சிறந்த இலக்கியமாகத் துலங்குகிறதென் ருல், மனித வாழ்க்கையை மாண்படையச் செய்ய வேண்டிய நல்ல கருத்துக்கள் அதில் மலிந்து கிடக்கின்றன ; மொழியை வளர்க்கஃஇயல், இசை, நாடகம் என்னும் நற் கனிகளின் சாறு பிழிந்தெடுத்த தமிழமுதமாகத் துலங்குகின்றது. புதுமைக் கருத்துக்களும், சமுதாய சீர்திருத்தத்திற்கு வேண்டிய புரட்சிக் கொள்கைகளும் கொண்ட புதுப் புனல் வெள்ளமாகத் திகழ் கின்றது. வாழ வேண்டிய முறையைக் காட்டும் லட்சிய பாத் திரங்கள் உலவுகின்றன. முற்றிலும் இதுவரை காணுத முதலும் முடிவும் கொண்டதாக இலங்குகின்றது. எனவே எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சிந்தையள்ளும் சிலம்பு தமிழ் மகள் மணியாரமே. தமிழர்கள் உன்ன உன்ன விம்மிதம் எய்தும் உயர் இலக்கியமே. இளங்கோ தந்த இலக்கியக் கடலில் மூழ்கியவர்கள் வாழ்வை வளமாக்கும் வலம்புரி முத்தைக் காண்பார்கள். அவரது இன்சுவை அமுதை மாந்தியவ்ர்கள் சாகா வாழ்வு பெறுவார்கள். வாழ்வாங்கு வாழ்ந்து இலக்கியத் தமிழிசையின் இனிமையை உணர்ந்தவர்கள், சுநாதத்தின் செம்மையை அறிவார்கள். எனவே இனிமை யெனும் மேகலை யணிந்து தமிழ் மகள் இன்ப நடம் புரியும் சிலம்பு, தமிழர் களுக்கு "மாசில் வீணையாய், மாலை மதியமாய், வீசு தென்ற லாய், வீங்கிள வேனிலாய், மூசு வண்டறை பொய்கையாய்" விளங்குவது. சிலப்பதிகாரமெனும் இலக்கியம் படைத்துத் தமிழ் மகளைப் பன்மீன் நடுவண் பான்மதியாய் துலங்கச் செய்த அச் செந்தமிழ்ச் சிற்பிக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு சிலம்பினெலி பாரெங்கும் கேட்கச் செய்து, இளங்கோ காட்டிய இனிய பாதையிலே நடந்து மனித குலத்தின் மாண்பை உயர்த்துவதே ! கலைக் கோயிலில் குடி கொண்டுள்ள கண்ணகித் தெய்வத்தை இன் தமிழ் நாட்டின் இலக்கியச் செல்வங்களுக்கு எல்லாம் காவல் புரியும் கன்னித் தெய்வமாகத் துலங்கி தமிழ் மொழிக்கு உலக அரங்கிலே உன்னத கோயில் கட்டிக் குடி யேறிய இளங்கோவை வாழ்த்தி தமிழனென்று சொல்லித் தலை நிமிர்ந்து நின்று பீடு நடை போடுவோமாக !

HEALTHY DIET
FOR A
HEALTHY FAMILY

MODI MILLS'
MANDIR BRAND
WHOLEMEAL WHEAT
GRANULOUS
ATTA

Every Grain is cleaned, washed, dried and then milled at our modern Mills. In the process of grinding, heat is eliminated to maintain all the natural vitamins of wheat and thus provide a healthy diet

MODI FLOUR MILLS

INDUSTRIAL ESTATE, OKHLA
PHONE : 72760, 73367
GRAMS : "MODIMILLS"

BA/MF-4

கருமி

S. நாராயணன் ('தமிழன்') புதுதில்லி

டமாரென்ற பெருத்த சத்தத்தைத் தொடர்ந்து 'கிரீச்' சென்று பிரேக் போடும் ஒலியும் கேட்டது. அவ்வளவுதான் அஜ்மல்கான் ரோடில் அலைந்து கொண்டிருந்த அத்தனை கால்களும் நின்றன. அத்தனை கழுத்துகளும் திரும்பின. அத்தனை கண்களும் நோக்கின.

இருபத்தேழாம் நம்பர் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன் நான்.

''யாரோ மதராசி போலிருக்கிறது பாவம்'' என்ற குரல் கேட்டது. நமது நண்பரே யாராவது கூட இருக்கலாம்.

* * *

அஜ்மல்கான் ரோடும், ஆர்ய சமாஜ் ரோடும் சந்திக்குமிடத்தில் ஒரு லாரியும் டாக்சியும் ஒன்றையொன்று முறைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தன. அவற்றிற்கிடையே சமாதானம் செய்யப் புகுந்தவரே போல் படுத்துக் கிடந்தார் ராமபத்ரன். காயம் எங்கே என்று தெரியாதபடி ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

''இந்த அஜ்மல்கான் ரோடில் போக்குவரத்தையே தடைப்படுத்த வேண்டும்'' இப்போது தான் ஒருவர் வேதாந்தம் பேசுகிறார்!

'உய்ங்' 'உய்ங்' என்று ஊளையிட்டுக் கொண்டே வந்தது ஃப்ளையிங் ஸ்குவாட் போலீஸ். பின்னாலேயே ஒரு ஆம்புலன்ஸ் வந்தது.

ராமபத்ரனுக்கு முதலுதவி செய்யப்பட்டது. பிறகு அவர் வண்டியில் ஏற்றப்பட்டார்.

''உமது நண்பரா இவர்?'' என்று பஞ்சாபி கலந்த ஹிந்தியில் அந்தப் போலீஸ் அதிகாரி கேட்டதற்கு 'ஆமாம்' என்றேன் தமிழிலே! நம்மை மறந்து நாம் இருக்கும்போது தானாக வரும் பதில், தாய் மொழியில்தான் வருகிறது!

* * *

இன்று வரை கருமி கருமி என்று அவரைக் கரித்துக்கொண்டிருந்த எனக்கு இப்போது எப்படி ராமபத்ரன் மேல் இரக்கம் பிறந்தது? மனிதன் ஒழுங்காக இருக்கும் வரை அவனிடம் அன்பு காட்டுவதில்லை. அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டாலோ அவன்மீது அனுதாபப் படுகிறோம். சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் நன்றாகத்தான் வளைந்து கொடுக்கிறது மனம்!

எங்கள் சேவை

உங்களுக்குத் தேவை

❋

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414

மதருஸ்–5.

தந்தி: "EVERMANS" போன்: 85834

❋

தில்லி கிளை அலுவலகங்கள் :

(1) "கான்ஸன் ஹவுஸ்"
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி-1.

(2) "பாலுஸேரி பில்டிங்"
14-A/4, W.E.A., கரோல் பாக்
புது தில்லி-5.

(3) 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி,
புது தில்லி-3.

கருமி என்ற சொல்லைக் கேட்டாலே எங்கள் வட்டாரத்தவருக்கு ராமபத்ரன் தான் மனதில் தோன்றுவார். கருமி என்ற வார்த்தையே அவருக்காகத்தான் பிறந்ததோ என்று தோன்றுகிறது.

இத்தனைக்கும் அவருக்குப் பிள்ளையா, குட்டியா? உறவா, ஒட்டா? ஒண்டிக் கட்டை என்ருல் சரியான ஒண்டிக்கட்டை அவர். தேவ் நகரில் ஒரு அறை எடுத்துக்கொண்டு வாழும் அவரை எப்போதும் சைக்கிள் வாகனத்தில்தான் காணலாம்.

பிள்ளையாருக்கு மூஞ்சூறு; முருகனுக்கு மயில், விஷ்ணுவுக்குக் கருடன், ராமபத்ரனுக்கு சைக்கிள். அவரது சைக்கிளுக்கு அவரைவிட அதிக வயது ஆகி இருக்கும் என்று நினைக்கிறேன். மனிதன் பஸ்ஸுக்காக நயா பைசா செலவழிக்க மாட்டார். போன வருஷம் அவர் மெட்ரூஸ் போனது கூட இந்தச் சைக்கிளில் தான் என்று எல்லோரும் சொல்லிக்கொள்கிருர்கள். ஜி. டி யில் என் நண்பன் அரிச்சந்திரன் போய்க் கொண்டிருந்த போது, அவர் நாக்பூர் அருகே சைக்கிளில் போய்க் கொண்டிருந்ததாகச் சொல்கிருன்.

'என் ஆயுசில் பேண்ட் போட்டு அறியேன்' — எதையோ பெரிதாகச் சாதித்துவிட்டது போல் அவர் அடிக்கடி சொல்வார். எப்போதும் இருபதாம் நம்பர் வேஷ்டியும், ஒரு முக்கால் கை ஜிப்பாவும் தான் அணிந்திருப்பார். அவர் ஒரு இன்ஷூரன்ஸ் ஏஜண்டிடம் வேலை செய்து கொண்டிருந்தார். கமிஷனுகவே லட்சக்கணக்கில் சம்பாதிக்கும் அந்த வங்காளி கச்சம்தான் கட்டுவாராம்.

"நாம் ஏன் வெள்ளைக்காரனைக் காப்பியடித்து கோட்டும், பேண்டும் அணிய வேண்டும்? நமது நாட்டு உடையான வேஷ்டியை ஏன் ஒதுக்க வேண்டும்" என்று உணர்ச்சியுடன் கூறும் அவருக்கும் வேட்டி கட்டும் ராமபத்ரனை ரொம்பப் பிடிததுத் தான் இருந்தது

அந்த வேட்டியையும் ராமபத்ரன் எங்கே வாங்குவார் தெரியுமோ? சில சாஸ்திரிகளிடமிருந்து! புரோகிதர்கள் அடிக்கடி சடங்கு செய்விக்கப் போவார்கள். அவர்களுக்குப் பெரும்பாலும் சம்மானம்வேட்டியாகத்தான் கிடைக்கும். அவர்களுக்கும்தான் எத்தனை வேட்டி தேவைப்படும்? தேவைக்கு மிஞ்சியதை அவர்கள் மலிவான விலைக்கு விற்று விடுவார்கள்.

சினிமா, டிராமா வெல்லாம் தான் அவருக்குப் பரிச்சயமில்லாதவை என்ருல், ஓட்டல் என்ருல் எப்படி இருக்கும் என்று கூட அவருக்குத் தெரியாது.

ஒரு நாள் நானும் அவரும் வாக்கிங் போயிருந்தோம். நடுவழியில் தாகமாக இருக்கிறது என்ருர். அருகே ரிஃப்ரிஜரேடட் தண்ணீர் விற்றுக் கொண்டிருந்த ஒருவனை நான் நெருங்கிய போது 'நோ, நோ,' என்று என்னைத் தடுத்து விட்டார்.

"காசைக் கொடுத்துத் தண்ணீர் வாங்குவதாவதையா?"

சுற்றும் முற்றும் பார்த்தார். குதிரைகள் தண்ணீர் குடிப்பதற்காகத் தொட்டி ஒன்று இருந்தது. அதை நிரப்பிக் கொண்டிருந்த குழாயில் கையை வைத்து மடக் மடக் கென்று இரண்டு வாய் குடித்தார்.

இன்னொரு சமயம், இறந்து விட்ட நண்பர் ஒருவரின் அந்திமக் கிரியைக்காக யமுனைகாட் போயிருந்தோம். பிறகு வாங்கச் சென்ற ராமபத்ரனை அரை மணி நேரம் பேரம் பேசிக் கொண்டிருந்தார். கொஞ்சமாவது சமய சந்தர்ப்பம் தெரிய வேண்டாம் மனிதனுக்கு?

மார்கழி மாதம் அதிகாலையில் பஜனை கோஷ்டி வந்தது. இந்த டில்லிக் குளிரில் கூடவா பஜனை என்று எண்ணிக் கொண்டே மாடியிலிருந்து எட்டிப் பார்த்தேன். கும்பலோடு கோவிந்தா போட்டுக் கொண்டிருந்தார் ராமபத்ரனும்.

"உமக்கேதையா பஜனையும் பாட்டும் திடீரென்று" என்று கேட்டேன். "சும்மாதானய்யா, போகிற வழிக்காக" என்று அப்போது மழுப்பியவர் பின்னால் ஒரு சமயம் என்னிடம் உள்ளதை ஒப்புக் கொண்டு விட்டார். பஜனை கோஷ்டிக்காரர்களுக்கு தினம் ஒவ்வொரு வீட்டில் காபி சப்ளை நடக்கிறதாம். 'ஒரு மாதத்துக்குக் காபிச் செலவு கிடையாது பாருங்கள்' என்றவர், 'இந்தக் காபியை நிறுத்தி விட வேண்டுமென்று பார்க்கிறேன், முடியவில்லையே' என்று பேச்சை மாற்றினர்.

* * *

ராமபத்ரனுக்கு பிரக்ஞை வந்து விட்டது.

"யாரது, முத்துசாமியா?" என்று சொன்னவர் சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒரு நாலணா நாணயத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். அவருக்கு ஒரு வேளை ஜன்னி கண்டு விட்டதோ என்று குழம்பினேன்.

சத்தியமூர்த்தியின் ஆலோசகர்

காங்கிரஸ் மகாசபை கூட்டங்களுக்கு அதன் பிரதிநிதியாக காமராஜ் செல்வதேயில்லை. 'நீங்கள் போகவில்லையா?' என்று கேட்டால் 'எனக்கு அங்கு என்ன வேலை?', தலைவர்கள் கூடி முடிவு செய்யட்டும். அதை நிறைவேற்றி வைக்க வேண்டியது நமது கடமை என்று பதில் சொல்லி விடுவார். இவர் திரு. சத்தியமூர்த்தி அவர்களின் வற்புறுத்தலின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராக 1936இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்த ஆண்டு காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் லட்சுமணபுரியில் ஜவஹர்லால் நேரு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காமராஜ் வடநாடு செல்வது அதுவே முதல் தடவை. அப்போது சத்தியமூர்த்தி தில்லியில் இருந்தார். காமராஜ் தில்லிக்கு வந்ததில் சத்தியமூர்த்திக்கு அளவில்லாத மகிழ்ச்சி. தன்னுடைய சட்டசபை சகாக்களுக்கு காமராஜரை அறிமுகப்படுத்தி வைத்து 'காமராஜ் தமிழ் நாட்டின் தலைசிறந்த ஊழியர். எனது சகா. அது மட்டுமல்ல என்னுடைய ஆலோசகர் அவர்' என்று கூறினர்.

— **ஆனந்தவிகடன்**

"கிருஷ்ணு மார்க்கட்டில் ஒரு சக்கிலியன் உட்கார்ந்து கொண்டிருப்பான் பார், அவனிடம் இதைக் கொடுத்து விடு. வரும் போது அவனிடம் செருப்பு ரிப்பேர் செய்து கொண்டேன் பத்து ரூபாயாக இருந்தது. சில்லறை இல்லை. ஏழையின் பணம் எனக்கு எதற்கு ?"

தான் என்னதான் கருமியாளுலும், பிறத்தியார் பணம் காலணு கூடத் தன்னிடம் தங்கிவிடக் கூடாது என்று எவ்வளவு நல்ல எண்ணம் இவருக்கு!

உடம்பில் பல பாகங்களில் எலும்பு முறிந்து விட்டதால் ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

"முத்துசாமி,, இப்படிக் கிட்டே வாருங்கள்......இவ்வளவு நாளாய் வாயை ஒடுக்கி நான் பணம் சேர்த்தேனே அதன் ரகசியம் உங்களுக்கெல்லாம் தெரியாது.

"என் சொந்த ஊர் தேப்பெருமாள் நல்லூர். அங்கே உள்ள கோயிலைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று எனக்கு வெகு நாளாக ஆசை. நோட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு வீடு வீடாகப் போனேன். சீட்டாட்டத்திலும், இன்னும் எதுவெதிலோவெல்லாம் பணத்தைக் கரைக்கும் பெரிய மிராசுதார்கள் கூடக் கை விரித்து விட்டனர்.

"பிறகு பிழைப்புக்காக இங்கே வந்த போதும் பல பேரை யாசகம் கேட்டேன். சினிமா பார்க்கப் போய் ஒன்றே கால் ரூபாய் டிக்கெட் இல்லை என்ருல் இரண்டு ரூபாய் டிக்கட் வாங்குகிருர்கள். பஸ் கிடைக்காவிட்டால் மூன்றும் நான்கும் செலவழித்துக் கொண்டு டாக்சியில் போகிருர்கள். ஆனுல் ஒரு நல்ல காரியத்துக்குத் தலைக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூட மனசு வரமாட்டேன் என்கிறது.

"சரி, இந்த மனிதர்களை நம்பி ஒரு காரியத்தில் இறங்க முடியாது என்று நானே தனி மனிதனுக அந்தப் புண்ணிய காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டேன். இன்றுவரை கிட்டத்தட்ட முப்பதாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கிறது.

"ஒருவேளை நான் பிழைக்காவிட்டால் நீங்கள்தான் இந்தப் புண்ணிய கைங்கரியத்தை ஏற்று நடத்த வேண்டும்."

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் கட்டாயம் பிழைத்து விடுவீர்கள். அவன் கோயில் கும்பாபிஷேகம் நடக்க வேண்டுமே. அவன் எப்படியும் உங்களைப் பிழைக்க வைத்துவிடுவான். டாக்டர்களும் மிகவும் நம்பிக்கையோடு தான் இருக்கிருர்கள்."

சில மணி நேரங்கள் கழிந்தன. இரண்டு பாக்கெட் சிகரெட்டும் சாம்பலாயிற்று. சோப்புப் போட்டு அலம்பிய கையைத் துவாலையில் துடைத்துக் கொண்டே வந்த டாக்டர் என் தோளை அமுக்கிவிட்டு, "ஐ ஆம் சாரி, பிரதர்" என்ருர்.

ஒரு நல்ல காரியத்துக்காகத் தன் வருமானம் முழுவதையும் சேர்த்து வைத்த அந்தப் புண்ணியவான் மறைந்து விட்டார்! ஆனுல் அந்தப் புண்ணிய காரியத்தை நடத்தும் பாக்கியமோ அவரைக் கருமி என்று தூற்றிய இந்தப் பாபிக்குக் கிடைத்திருக்கிறது! இந்தப் புண்ணியச் செயலாலாவது என் பாவம் தொலையுமா?

1st *India's* Vacuum Coated Sealed Beams



RACMANN

SEALED BEAM

Racmann Sealed Beams are vacuum evaporative coated, a revolutionary technique for the deposition of thin film of metal.

RACMANN KOSHATKINN (Regd.)
53, Najafgarh Industrial Area, New Delhi-15.

யாரே கண்டார்!

நா. வேணுகோபால் நாயகர்

இதோ! இந்த ஊர்வலத்தைப் பாருங்கள்! இதுதான் மிதிலா நகரத்து ராஜ வீதி! ஆம்! ஜனக மகாராஜர் தர்ம ஆட்சி செலுத்தும் பாக்கியம் பெற்ற மிதிலா நகரம்தான்! "ஆனுல், இந்த ஊர்வலத்தில் வரும் "புள்ளிகளைப் பார்த்தால்; மிதிலா நகரத்தைச் சேர்ந்தவர்களாக இல்லை!", என்று தானே சொல்கிறீர்கள்? உண்மைதான்! இவர்கள் மிதிலை மக்கள் அல்லதான். உற்றுப் பாருங்கள்! உங்களுக்கே தெரியும்! இவர்கள் அணி நகர் அயோத்தியின் மக்கள்தான்! தருகை நீண்ட தயரதச் சக்ரவர்த்தி தன் குடும்ப பரிவார சகிதம் பவனியாக எழுந்தருள்கிறுர்! இருகை வேழத்து இராகவனும் மாப்பிள்ளைக் கோலத்தில் வீற்றிருக்கிறுன்! கலியாண மாப்பிள்ளை ஊர்கோலம்தான் வெற்றிச் சேனைபோல் ஜய கோஷமிட்டு முன்னேறிக் கொண்டு செல்கிறது! மிதிலைப் பெரு நகரின் ராஜ வீதியிலே!

ஊர்வலத்தைப் பார்க்க வேணுமென்று துடிக்கின்றீர்கள்! அது கிடக்கட்டும்! வைத்த கண் வாங்காமல், ஊர்வலத்தைப் பார்த்துக் கிடப்பவர்களைப் பாருங்கள்! இதை நான் சொல்லவில்லை. 'ரசிக கிரீடம் தரித்த கவிச்சக்ரவர்த்தியான கம்பரே கூறுகிறுர்! ஊர்வலத்தின் பெருமையை அறிய வேணுமானுல்; ஊர்வலத்தைக் கண்டு களிப்பவர்களைத்தான் காணவேணுமாம்! இதற்கு அவர்கள்தான் சரியான அளவுகோலாம்!

தயரத ராமன், கலியாணராமனுக எழுந்தருள்கிறுன். சீதா ராமனுகக் காட்சி அளிக்கப் போகிறுன்! மிதிலை மக்களுக்கு ஆனந்தம் பொழிந்து வழிகிறது! மாப்பிள்ளை ஊர்வலத்தைப் பார்க்க வந்தவர்கள், வந்தார்கள்! நின்ருர்கள்! கண்டார்கள்! கண்டார்கள்!! கண்டார்கள்!!! அவ்வளவு தான்! வேறு ஒன்றும் செய்யக்கூடவில்லையாம்!

மாப்பிள்ளை ராமனின் முழு உருவத்தைக்கூடப் பார்க்க வில்லையாம்! ஒரே அங்கத்தைக் கூட முழுவதும் பார்த்து ஆனந்திக்க முடியவில்லையாம்! ராமனுடைய வடிவழகு அப்படி இருக்கிறதாம்!

சிலர், இராமனின்

"தோள் கண்டார்!"

சரி, வேறு என்ன கண்டார்கள்?

"தோளே கண்டார்!"

இவர்கள் இருக்கட்டும்; வேறு கூட்டத்தைப் பார்க்க லாம். இந்தக் கூட்டம் எதைப் பார்த்துக் கிடக்கிறது?

அவர்கள், இராமனின்,

"தாள் கண்டார்!"

திருவடிகளைப் பார்த்தார்களாம்! அவர்கள் தான் என்ன செய்தார்கள்!

"தாளே கண்டார்!"

ஏன் அப்படித் திருவடிகளையே நோக்கிக் கொண்டிருந் தார்கள்? சாதாரண திருவடிகள்தானு அவைகள்! தாமரை மலர்களே மலர்ந்த மாதிரி அழகு சொட்டுகின்ற திருவடிகள் அல்லவா அவைகள்! அதனுல்தான் தாமரைக்கு நிகரான, அம்மலர்புரையும் திருவடிகளைப் பார்த்தபடியே இருக் கின்ருர்கள்!

"கமலம் அன்ன
தாள் கண்டார், தாளே கண்டார்!"

அழகு மட்டுமா காணப்படுகிறது அத்திருவடிகளில்! வீரமும், வெற்றியும் அல்லவா பின்னிக் கிடக்கின்றன அத் திருவடிகளில்! வீரத்திற்கும் அதன் விளைவான வெற்றிக்கும் சின்னமான கழல்கள், அத்திருவடிகளைத் தொட்டுக் கொஞ்சுகின்றனவே! அதனுல்தான் வேடிக்கைப் பார்க் கிருர்கள் ஜனங்கள் இமைகொட்டாமல்!

தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார், தாளே கண்டார்!

இராமனின் திரு உருவை, மேல் இருந்து பார்க்க ஆரம் பித்தவர்கள், மேலேயே பார்த்து நின்ருர்கள். அடியிலிருந்து

பார்த்தவர்கள், அடிகளையே கண்டு நின்றூர்கள். இடையில் பார்த்தவர்களோ? தன்னுடைய திருக்கைகளை ஒய்யாரமாக மடியிலே வைத்தபடி வீற்றிருக்கின்றான் மாப்பிள்ளை இராமன். இந்தக் கைகள் விசாலமான கைகள்தான்! எந்தக் காரியத்தையும் சாதிக்கக் கூடியவைகள்! இராமனின் இப்படியான தடக்கை கண்டாரும் என்ன செய்தார்கள்?

மேலே குறித்த இருசாராரையும் போல் 'கண்ட கண்கள், மற்றொன்றினைக் காணுவே!' என்று அக்கைகளையே பார்க்கும் நிலையில் இருந்தார்களாம்!

தடக்கை கண்டாரும் அஃதே!

இந்த ஊர்வலத்தில் நடு நாயகமாக எழுந்தருளிய இராமனின் உருவத்தில், ஒரு அங்கத்தைப் பார்த்து, அந்த அங்கத்தின் அழகையே ரசித்து நின்றவர்கள்; தங்கள் கண் பார்வையின் குறைவின் காரணமாக, வேறு அங்கத்தைப் பார்க்க முடியாமல் தவித்தார்களா? அப்படிப் பார்த்தவர்கள் எத்தகைய கண்களை உடையவர்கள்? பார்வையின் வீச்சிலே வெட்டி வீழ்த்தும் கூர்மையும், வசீகரிப்பும் கொண்ட கண்களை உடையவர்கள்தான் அப்படிப் பார்த்து பிரமித்து நின்றூர்கள்! இந்தக் கண்களை வாள்கள் என்றே சொல்லிவிடலாம் எனவே அவர்கள்,

''வாள் கொண்ட கண்ணூர்''தான்!

இத்தகைய வாள் கொண்ட கண்ணூர் பங்கு போட்டுக் கொண்டு ஒவ்வொரு அங்கமாகப் பார்த்தார்களே, அப்படி யாவது அந்தச் சுந்தர ராமனின் வடிவழகை முற்றும் பார்த்து முடித்தார்களா? கம்பர் பெருமான் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் கூறிவிடுகிறூர், ''இல்லை'', என்று முற்றும் பார்த்து விட்டவர்கள் ஒருவரும் இல்லையாம் அந்த வாள் கொண்ட கண்ணூர் கூட்டத்திலே!

''வாள் கொண்ட கண்ணூர் யாரே
வடிவினை முடியக் கண்டார்!''

இப்படியும் தோற்க முடியுமா இராமனின் வடிவழகைக் காணும் முயற்சியில் என்று சந்தேகப்படுகிறேம் அல்லவா? ''சந்தேகமே வேண்டாம், இதுதான் முடிவு!'' என்று. கவிச் சக்ரவர்த்தி நம்மைச் சமாதானப் படுத்துகிறூர்!

With Best Compliments

from

Cardboard Box Manufacturing Co.,

38, COLOOTOLA STREET,

CALCUTTA - 7.

CARDBOARD BOX BEST IN THE FIELD OF PACKAGING

அநாதி காலமாக சமய அறிவு ஒரு காரியத்தைச் செய்து வருகிறது. இன்றுவரை அந்தக் காரியம் பூர்த்தியாகவில்லை. அந்த முயற்சி இன்னும் வெற்றியும் அடையவில்லை! அந்த முயற்சிதான், இறைவனின் முழுத் தன்மையையும் அறிந்து விடுகிற காரியம்! எனவே, மிதிலை நகரின் "வாள் கொண்ட கண்ணார்"கள் இராமனின் "வடிவினை முடியக் காணமல் தவித்ததைப் பார்த்தால், யாரைப் போன்று காணப் பட்டார்கள்?

ஊழ்கண்ட சமயத்து, அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்!

அருமையான உதாரணம்!

*   *   *

உதாரணம் அருமையானதுதான்! இறைவனுடைய முழு வடிவழகை, ஊழி ஊழியாக வளர்ந்து வரும் சமயமும் முடிவாக அறியவில்லை என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால், இராமனாகிய மனித உருவை, அதிலும் அவ்வுருவில் அமைந்துள்ள அங்கங்களைப் பார்த்து முடிப்பதற்கு, "வாள் கொண்ட கண்ணார்கள் தவித்தார்கள்," என்றால், அதைச் சுலபமாக நம்ப முடியாமல் இருக்கிறதே! ஏதோ உணர்ச்சி வசப்பட்டு, அதிகமாக 'அளந்து கொட்டி' யிருப்பதாகவும் காணப்படுகிறது! கவிச் சக்ரவர்த்தியான கம்பன், சாதா ரண சீட்டுக்கவி விடும் புலவர்களைப் போல், பொருத்தமில் லாத புகழ்ச்சியில் ஈடுபட்டு, இப்படிச் சுவையற்றதாகக் காணப்படும் நிகழ்ச்சிகளையும், உதாரணத்தையும் தீட்டி இருப்பானா என்று சந்தேகமும் ஏற்படுகிறது.

இதை ஆராய்வோம்; இனி, " நீங்கள் இதைச் செய்ய முடியுமா?"என்று நண்பரைக் கேட்கிறோம்." இது என்ன பிரமாதம்! இது என்ன கம்ப சூத்திரமா' என்று நண்பர் நம்மைக் கோபமாகத் திருப்பிக் கேட்கிறார்! எனவே, கம்ப சூத்திரம் என்றால் செய்வதற்கு அரிய செயல் என்று தெரி கிறது. ஒருவிஷயம் எளிதில் புலனாகாவிட்டாலும், "இது என்ன கம்ப சூத்திரமாக இருக்கிறதே!" என்று வியப்படை வதும் சகஜம். மேலெழுந்தவாரியாகப் படிக்கும்போது ஒரு விதமாகப் பொருள் தந்து, ஆழ்ந்து ஆராயும்போது, மிக விசேஷமான பொருளைத்தரும் செயற்கரிய கவிகளைச் செய் யும் பெருமை நமது கவிச் சக்ரவர்த்திக்கே உள்ளது. மற்ற புலவர்களிடம் கவிச் சித்திரம் காணலாம். ஆனால் கம்பர்

ஒருவரிடமே கவிச் சித்திரத்துடன், சூத்திரமும் காணலாம். கம்பருடைய பெயரைத் தவிர மற்றக் கவிகளுடைய பெயர்களை இணைத்து அவர்களுடைய சூத்திரம் என்று சொல்ல முடியாது.

இது, கம்ப சூத்திரம் நன்கு மிளிரும் பாடல்.

இராமனுடைய தோள் கண்டவர்கள் ஏன் தோளையே பார்த்து வியந்து கிடந்தார்கள்? தாள் கண்டவர்களும், தடக்கை கண்டவர்களும் அவ்விதமே அதிசயித்துக் கிடந்தது ஏன்?

விஸ்வாமித்திர முனிவருடன், இராம லட்மணர்கள் மிதிலா நகரம் வந்தபோதே மக்களின் மனதைக் கவர்ந்தார்கள். ஜனக மகாராஜரது சபைக்கு எழுந்தருளி சிவ தனுசை முறித்த அதிசயத்தையும் கண்டார்கள் மக்கள். சீதையை மணம் புரியும் இம்மாப்பிள்ளையின் வீர தீரச் செயல்களை எல்லாம் அறிந்து கொண்டு; ஆனந்தமும், பெருமையும் அடைந்தார்கள்.

இவ் வண்ணம் தங்களுடைய மாப்பிள்ளையான இராமனைப் பற்றி அறிந்து கொண்ட சேதிகளில் மூன்று நிகழ்ச்சிகள் மகத்தானவையாகும். இந்த மாபெரும் முச் செயல்களை செய்து முடித்தவை, தங்களுடைய மாப்பிள்ளையின் மூன்று திரு அங்கங்களாகும். அவைகளைச் சரியாகப் பார்த்துக் களிக்க வேண்டு மென்றுத் தவித்திருந்தார்கள் மிதிலை மக்கள். தங்கள் கண்களை வாள் கொண்ட கண்களாக தீட்டிக் கொண்டும் காத்திருந்தார்கள். கூர்மையும், பிரகாசமும் கொண்டு துடித்துக் கொண்டிருந்தன அவர்களுடைய கண்கள், இராமனின் புகழ் பொருந்திய அங்கங்களைச் சேவிப்பதற்கு!

அந்த அங்கங்கள் யாவை? அவைகள் அடைந்த புகழ் என்ன?

தாடகை என்னும் அரக்கியின் கூட்டத்தால், மக்களும் முனிவர்களும் பல காலம் பல துன்பங்களை அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு முடிவே இல்லாமல் இருந்தது. இந்தத் தாடகை விஸ்வாமித்ர முனிவரின் பெரு வேள்வியைக் குலைப்பதற்கு வந்த சமயம் அவளைக் கொன்று ஒழித்தன இராமனது தோள்கள். கரிய செம்மலான இராமனது தோள்களால் ஏவப்பட்டக் கடிய வேகச் சுடுசரம்



அவர் அணிந்திருப்பது WB 275 X பின்னி டிரில் தான், சந்தேகமில்லை

என்ன குளிர்ச்சி, என்ன சுகம்! பின்னியின் WB 275X வெள்ளை டிரில் அணியும் சொகுசுக்கு ஈடே கிடையாது. 'மெர்ஸரைஸ்ட்' செய்யப்பட்டுள்ள இவ்வுயரிய துணியில் "ஸான்போரைஸ்ட்" என்ற ரிஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க் பொறிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கொடுக்கும் விலைக்கு இணையற்ற மதிப்பளிக்கிறது இந்தத் துணி.

BINNY'S FABRICS
BINNY & CO. (MADRAS) LTD.

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் எங்களது அனுமதி பெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி லிமிடெட்
பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்
ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT/BC/D/2275

ராம்கோ குழு தொழில் ஸ்தாபனங்கள்

இராஜபாளையம் (தென்னிந்தியா)

ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(நவீன நூற்பு ஆலை)

ஜெயராம் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(பழுப்பு காடா தயாரிப்பாளர்கள்)

தி ராமராஜு
சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

(கிருமிநாசன பஞ்சு, துணி தயாரிப்பாளர்கள் & உரிமையாளர்கள்)

சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ்

கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்

இராஜபாளையம்

(மர ஸ்க்ருக்கள் & இரும்பு ஆணிகள் தயாரிப்பாளர்கள்)

மதராஸ் ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

இராஜபாளையம்

போர்ட்லண்ட் ஸிமெண்டு உற்பத்தியாளர்கள்,

தொழிற்சாலை : துலுக்கப்பட்டி, (சாத்தூர் தாலுகா)

ராம்கோ சிமெண்ட் டிஸ்ட்ரிபியூஷன் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

இராஜபாளையம்

"ராம்கோ" பிராண்டு போர்ட்லாண்டு சிமெண்ட் விநியோகஸ்தர்கள்

இந்திய தொழில் அபிவிருத்திக்கு எமது சேவை

ஸ்தாபகர் :

P. A. C. ராமசாமி ராஜா

அல் ஒக்கும் நிறத்தளான தாடகையின் வயிரக் கல் ஒக்கும் மார்பில் தைத்து புல்லோர்க்கு நல்லோர் சொன்னப் பொருள் என நெஞ்சில் தங்காது போயிற்ரும்! எனவே, இந்த தீரச் செயலைப் புரிந்த வீரத்

தோள் கண்டார்! தோளே கண்டார்!!

இராமனின் வேறு அங்கத்தில் கண்ணை மாற்ற விரும்பாமல் தவித்தார்கள் தோளைப் பார்த்தவர்கள்! தாடகையை வதம் செய்த பெருமையையும், அருமையையும் நினைந்து, நினைந்து; சொல்லிச் சொல்லி; அவைகளைப் புரிந்ததற்குக் காரணமான தோள்களைப் பார்த்துப் பார்த்து; அதே செயலாகவே கிடந்தார்களாம்!

இன்னொரு அதிசயத்தையும் இராமன் புரிந்ததாகக் கேள்விப்பட்டார்கள் மிதிலை மக்கள். முன்னையதைவிட இதுவே பெரிய காரியம் என்பது ஒரு பிரிவினரின் எண்ணம். தீவினை நயந்து செய்த தேவர் கோன் செய்கையால், அநியாயமான பழியும் சாபமும் ஏற்பட்டு விட்டன பத்தினியான அகலிகைக்கு. கவுதம முனிவரின் சாபத்தால் கல்லாகிக் கிடந்தாள். இந்தப் பரிதாபத்தை மக்களால் சகிக்க முடியவில்லை. இதற்கு விமோசனம் ஏற்பட வேணுமென்று பிரார்த்தித்துக் கொண்டே இருந்தார்கள். நெஞ்சினுல் பிழைத்திலாத இந்த உத்தமியான அகலிகையும் முக்கணுன் அனைய ஆற்றல் முனிவன் தந்த சாபம் நீங்கித் தன் முன் உருவை அடையப் பெற்றது, தாடகையை வதம் செய்து தழைத்து வண்டு இமிறும் தண் தார் (ஜயமாலை) அணிந்து வந்த தசரத இராமனின் கால் துகள் பட்ட பெருமையினுல் தான்! எனவே, இந்த அஞ்சன வண்ணத்தான் தன் அடிகளைக் காண்பதற்குத் துடித்துக் கொண்டிருந்தார்கள் மற்ருெரு சாரார்!

மாப்பிள்ளைக் கோலத்தில் இராமன் எழுந்தருளிய சமயம் இவர்கள் அவனுடைய,

"தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார்!"

பிறகு வேறு ஒன்றைப் பார்க்கவும் மனம் வருமா? எனவே,

"தாளே கண்டார்!"

இவைகள் எல்லாம் தூர தேசத்தில் நடந்தவைகளே! மிதிலை மக்கள் பார்த்ததில்லை. கேட்டதோடு சரி. இவை

Relief in a sip..!
An ideal drink for stomach disorders. This delicious and sparkling ginger beverage gives you the appetite to eat heartily and aids digestion. It helps you feel fine and fit.
MOHUN'S
Ginger Tonic
KEEP A BOTTLE HANDY
DYER MEAKIN BREWERIES LTD.

களில் அவர்களுக்கு ஏதும் தொடர்பும் கிடையாது. ஆனால் மூன்றுவதாக நடைபெற்ற நிகழ்ச்சி. இவைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தது போல் அமைந்து விட்டது! அதுமட்டு மல்ல, மிதிலை மக்களின் வாழ்க்கையிலே, 'மகிழ்ச்சிப் பொங் கலையே' உண்டாக்கிவிட்டது. இதுவே சீதையின் திருமண மாகும்!

'சிவ தனுசை ஒடிக்கிறதாவது! சீதைக்கும் மணம் முடிக்கிறதாவது!' என்று மிதிலை மக்கள் மனம் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். நல்ல காலமாக இராமனுன மாப் பிள்ளையும் கிடைத்தான். வள்ளல் (இராமனும்) மணத்தை மகிழ்ந்தனன் என்றுல்; "கொள்க" என முன்பு (சீதையைக்) கொடுப்பது அல்லால்; (ஜனகனுன) வெள்ளை மனத்தவன், வில்லை எடுத்து, இப் பிள்ளை முன் இட்டது பேதமை!" என்று, மிதிலை மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள்! அதிர்ஷ்டம் அடித்தது இவர்களுக்கு! போர் ஏறு போன்ற இராமனும், அந் நெடுஞ் சிலையை நோக்கினுன். பொழிந்த நெய் ஆகுதி வாய் வழி பொங்கி, எழுந்த கொழுங் கனல் என்ன எழுந்தான். அச்சமும் ஆச்சரியமும் கலந்த மனத் துடன், மிதிலை மக்கள், "என்ன நடக்குமோ?" என்று

With Best Compliments

from

❋

❋

❋

HINDUSTAN MOTORS LIMITED

த்டுத்து இமையாமல் இருந்தார்கள். இப்படி இருந்தும், இராமன் சிவ வில்லைக் காலால் தரையில் ஊன்றிக்கொண்டு, வளைக்க முற்பட்டதைக் கூடச் சரியாகக் கவனிக்க முடிய வில்லையாம்!

கடுப்பினில் (வேகத்தில்) யாரும் அறிந்திலர்; ஏன்? இராமன் வில்லைக் கையால் எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்!

பார்ப்பதற்குள் அந்தக் கவனத்தைக் கலைத்து விட்டது வில் முறிந்து ஒடிந்த போது எழுந்த ஓசை! இப்படியாக நேரில் பார்த்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட ஓசை யால் கலைக்கப்பட்ட கண்கள், தோளைப் பார்க்க வேண்டு மென்றும், தாளைப் பார்க்க வேண்டுமென்றும் துடித்துக் கொண்டிருந்தவர்களுடைய கண்களைப் போல்; சிவ தனுசை முறித்த அந்தக் கைகளையும் காண வேணும் என்றே துடித் துக் கொண்டிருந்தனவாம்! அதனால்தான் கவிச் சக்ரவர்த்தி கூறுகின்றார்:

"தடக்கை கண்டாரும் அஃதே!"

அதே கைகளை மறுபடியும் காணக் கிடைத்த பிறகு, மற்றவைகளையா பார்ப்பார்கள் மிதிலை மக்கள்!

இராமனைப் பார்த்து வியந்து கொண்டிருந்த, சாதாரண மக்களின் கண்களைச் சித்தரிக்கும் கம்பர் பெருமான், அவை களையும் இப்பாடலின் கடைசியில், சதா காலமும் சர்வேஸ் வரனை இறைவனின் பெருவடிவைக் காணும் சமயத் தலைவர்களுடைய மனக் கண்களையும் சம்பந்தப்படுத்துகிறார்! மகா வீரன் ஒருவனைக் கண்டால், அவன் புரிந்த செயல்களை எண்ணி எண்ணி, அவைகளைச் சாதித்த அவனுடைய அங் கங்களையும், அவைகளின் வலிமை, வண்ணங்களையும் தனித் தனியாகக் கண்டு களிக்கும் ரசிக இயல்பை; நாம் சரியாக அறிந்து கொள்ள வேணும் என்பது கவிச் சக்ரவர்த்தியின் நோக்கம். எனவே சமயத் தலைவர்களுடைய மனக் கண் களை நமக்கு நினைவு படுத்துகிறார். பல காலமும் சமயத்தின் தலை நின்றவர்கள் செய்கிற காரியம் என்ன? இறைவனின் பெரு வடிவை, அங்கம் அங்கமாக, அவன் பெருமைகளை விளக்கும் அவைகளை, அநுபவித்துச் சுவைத்துக் கொண் டிருக்கிறார்கள் அல்லவா? '*நீ நிலாய வண்ணம் நின்னை யாவர் காணவல்லரே!*' என்றல்லவா கண்டு வியக்கின்றார் கள்! இப்படித்தான் மிதிலை மக்களும், சிவ தனுசை முறித்து, சீதையை மணம் புரிய வந்த இராமனைத் தங்களுக்கு

விமோசனம் அளித்த கடவுளாகவே போற்றி, அவ்வண்ணத்து அவன் நிலைமை கண்டும் அவன் உருவில் அமைந்த அங்கங்களை தனித் தனியாக அநுபவிக்க முயன்று முழுவதும் கண்டு களிக்க முடியாமல் தவித்தார்களாம்! எனவே, மிதிலை மக்கள்,

"ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்!"

ஸ்ரீ வைணவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை இப்பாடலில் கவிச் சக்கரவர்த்தி மிக நுட்பமாக அமைத்திருப்பதை, தனிக் கட்டுரையாக ரசிக்க வேணும்.

இப்போது முழுப் பாடலையும் பார்க்கலாம்:

தோள் கண்டார்!
தோளே கண்டார்!!
தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார்!
தாளே கண்டார்!!
தடக்கை கண்டாரும் அஃதே!
வாள் கொண்ட கண்ணார்
யாரே வடிவினை முடியக் கண்டார்!
ஊழ்கண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்!

திருமண ஊர்வலத்தையே எவ்வளவு நேரம் அநுபவித்துக் கிடக்கிறது? திருமணமும் நடைபெற வேண்டாமா? அதோ ஜனக மகாராஜா குடும்ப ஜன சமேதரான தம் பரிவாரங்களுடன் திருமணப் பேரவையில் பூரண கும்பங்களுடன் காத்துக் கிடக்கிறாரே!" என்ற உங்கள் குரலும் கேட்கிறது!

மத்தளம் கொட்ட, வரி சங்கம் நின்றூத, முத்துடைத் தாம நிரை பந்தரின் கீழ்; இதோ திருமணம் நடைபெறுவதையும் காணுங்கள்!

மன்றலின் வந்து மணைத் தவிசு ஏறி,
வென்றி நெடுந் தகை வீரனும், ஆர்வத்து
இன் துணை அன்னமும் எய்தி இருந்தார்!
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்!

With Best Compliments

of

NESTLE'S PRODUCTS (INDIA) LTD.,

NEW DELHI : CALCUTTA : BOMBAY : MADRAS

ஆராய்ச்சியும் ஆதாயமும்

"தூன்"

ஆர்க்கிமிடிஸ் அவ்வளவு துடிப்புடன் அரசனை நோக்கி விரைந்து ஓடியிருக்கமுடியாது. ஏனெனில் ஆர்க்கிமிடிஸ் காலத்தில் மோட்டார் கார் ஏது?

விஞ்ஞானி தினகரன் தன்னுடைய புதிய கண்டுபிடிப்பை மோசடிலால் காசடிலால் கம்பெனியின் தலைவரான பங்காராமிடம் சொல்ல சட்டம் மீறிய வேகத்துடன் காரை ஓட்டிக் கொண்டு சென்றான்.

மோசடிலால் காசடிலால் கம்பெனியின் ஆய்வு களத்துக்கும் தலைவர் வீட்டுக்கும் முப்பது கிலோ மீட்டர்கள் இருக்கும். இரவு மணி பன்னிரண்டுக்கே தினகரன் தன் கண்டுபிடிப்பை முடித்தான். ஆகையால் சாலையிலும் அதிக ஆள் நடமாட்டம் இல்லாததால் முப்பது கிலோ மீட்டரையும் பதினெட்டு நிமிடங்களில் சீறிப் பாய்ந்து வந்தான்.

தினகரன் சாதாரணப்பட்ட விஞ்ஞானி அல்ல. அவன் ரசாயனத்தில் எம். ஏ. பெற்றான். பௌதிகத்தில் பி.எச்.டி., கணிதத்தில் டி.எஸ்ஸி. கணக்காய் ரசாயனக் கோவை செய்து இந்த பௌதிக உலகையே அழித்து சக்தி வடிவமாக லயிக்கச் செய்து விடுவான். அவன் அப்படி இதுவரை செய்யாதது ஏன் என்றால் அவன் மனைவி சக்தி என்று பெயருடையவளை பௌதிகமாக காணாமல் அவன் இருக்க முடியாதே, அதனால்தான். அவன் தன் மனைவியின் மேல் வைத்த காதலால் உலகம் இன்னும் பிழைத்திருக்கிறது—என்னோடும், உங்களோடும் கூட!

தினகரனின் திறமையைக் கேட்டு பங்காராம் அவனைத் தன் கம்பெனி தலைமை ஆராய்ச்சியாளனாக நியமித்தான்.

தினகரன் அமெரிக்காவில் ஒரு ஆய்வு களத்தில் மாதம் மூவாயிரம் டாலர் ஊதியத்துக்குப் பணியாற்றி வந்தான். அவன் தன் சேவையைத் தாய் நாட்டுக்குத் தர எண்ணி வந்த போது அவனை ரூ 750 — 1200 கிரேடில் வேலை செய்கிறாயா? என்று கேட்டனர். தாய்நாட்டில் வேலை செய்ய ஊதியம் குறைவானாலும் பாதகமில்லை என்று நினைத்தான். ஆனால் இங்கு விஞ்ஞானிகள் நிருவாகிகளுக்கு தாக்குக் கொடுக்க

உங்கள்
வீட்டிற்கு
தேவை
உலகத்தில் 40 நாடுகளில் வசிக்கும் லக்ஷக்கணக்கானவர்கள் திறமைக்கும் துல்யமான எந்திர வேலைப்பாடடுக்கும் உஷா விசிறிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்.
இந்தியாவில் மிக அதிகமாக விற்பனையாகும் உஷா விசிறிகள் ஸிங்கின் யூனிட் தொழிற்சாலைகளில் உலகத்திலேயே பெரிதான தொழிற்சாலையில் திறமை வாய்ந்தவர்களால் செய்யப்பட்டவை
நீங்கள் ஒரு விசிறி வாங்கும் போது நம்பிக்கையுடன் உஷாவை வாங்கலாம் . அதுதான் இன்று விற்பனையிலிருக்கும் விசிறிகளில் ஜனங்களால் மிக விரும்பப்படுவது
மிக சிறந்ததே
எல்லா ஸிலிங் விசிறிகளும் நீண்ட காலம் தொல்லையின்றி சேவை செய்ய டபிள் பால் பேரிங்ஸ் பொருத்தப்பட்டவை.
உஷா விசிறிகள்
தி ஜே எஞ்சினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31
JF-68 TAM

முடியாமல் தவிப்பதைக் கண்டு மறுபடி வெளிநாடு போக தினகரன் தீர்மானம் செய்தான்.

பங்காராம் இந்த உயர்ந்த விஞ்ஞானியை விட்டுவிட மனமில்லாமல் தன் கம்பெனியில் ஐயாயிரம் ரூபாயில் அமர்த்திக் கொண்டார்.

கடந்த ஒரு ஆண்டாக இரண்டு இலட்சம் ரூபாய்களை தினகரன் ஆராய்ச்சியில் செலவிட்டுப் பல நுட்பமானவையும் வியாபாரத்துக்கு இலாபகரமானவையுமான கண்டு பிடிப்புக்களைக் கம்பெனிக்கு அளித்து விட்டிருந்தான். ஆயினும் தன் பெயரைச் சூடிக் கொண்டு நீடித்து விஞ்ஞான சரிதத்தில் ஏற்றக் கூடிய புதிய கண்டுபிடிப்பை இந்த ஆய்களத்துக்கு வந்து அவன் கண்டு பிடிக்கவில்லையே என்ற வருத்தத்துடன் இரவு பகலாய் முனைந்து ஆராய்ச்சி நடத்தி வந்தான்.

பல சோதனைகளுக்குப் பிறகு இப்போது தான் உண்மையில் ஒரு பெரிய விஷயத்தை, புரட்சிகரமான கண்டுபிடிப்பைச் சாதித்து விட்டோம் என்று அவனுக்கு உறுதிப்பட்டது. அவன் மனம் நட்ட நடு நிசியிலும் நிலை கொள்ளவில்லை. உடனே பங்காராமிடம் இதுவரையில் இட்ட செலவின் பயன் கிட்டி விட்டது என்று போய்ச் சொல்லாவிட்டால் அவன் தலை வெடித்து விடும் போலிருந்தது.

பங்காராம் இன்னும் தூங்கவில்லை. அந்த ஆண்டு அவருக்கு ஏகப்பட்ட இலாபம். இதற்கு ஏராளமான வரியல்லவா தலையில் வந்து விடியும். இந்த இலாபத்தை நஷ்டமாக கணக்கில் காட்டுவது எப்படி என்ற சிந்தனையில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். நல்ல யோசனை தட்டினால் உடனே ஒரு சலவைக் கற் கோவில், எல்லாம் வல்ல இறைவனுக்கு லஞ்சமாகக் கட்டிவிடுவதாகவும் சங்கல்பம் செய்து கொண்டார்.

யோசனை தட்டவில்லை. தினகரன் வாசல் கேட்டைத் தட்டினான்.

கூர்க்கா அவனை உள்ளே அனுமதித்தான். "கண்டு பிடித்து விட்டேன் சேட்ஜி! கண்டு பிடித்து விட்டேன்" என்றான் தினகரன் பங்காராமைக் கண்டதும்.

"இலாபத்தை நஷ்டமாக்கவா" என்று சேட்ஜி தன் மனதில் உள்ளதை ஒளிக்க மாட்டாது வெளியிட்டார்.

பங்காராம் கூறியது உணர்ச்சி கொப்பளிக்கும் தினகரன் காதில் சரியாகப் படவில்லை.

"புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்பு" என்றான் தினகரன்.

"புதிய பிடிப்பா?"

"மிகப் பெரிய, அரிய, புரட்சிகரமான கண்டுபிடிப்பு.

"அப்போது அதற்கு 'பங்காராம் பிரயத்தனம்' என்று

With Compliments

Shree

BAIDYANATH AYURVED BHAWAN PRIVATE LTD.

CALCUTTA - PATNA - JHANSI - NAGPUR - ALLAHABAD

Baidyanath Chyavan Prash

Basant Kusumakar Rasa

Sidha Makar Dhwaj

Baidyanath Drakshasava

Ashokarishta

Janam Ghuti

Leading Ayurvedic and Patent Medicines Manufacturers in India.

பெயர் சூட்டி விடுங்கள் '' என்ருர் பங்காராம்.

தினகரன் மூஞ்சியில் ராகு கிரஸ்தம் ஏற்பட்டது.

"என்ன கண்டு பிடிப்பு அது" என்று முதலாளி தொடர்ந்து கேட்டார்.

" நம்ம கம்பெனி செய்யும் சுரைகளும் மரைகளும் இனி மேல் தேய்வே அடையாது. புதுரக இரும்பு ஒன்றைக் கண்டு பிடித்து விட்டேன். எனக்குத் தெரிந்த கணிதம், பௌதிகம், ரசாயனம் எல்லாம் அதில் பிரயோகமாகி விட்டது. அந்த இரும்பு குதப்மினர் பக்கத்தில் உள்ள இரும்புத் தூண் இரும்பை விட உயர்ந்தது. அனவரத அயஸம் இறப்பில்லா இரும்பு, என்று பெயர் அதற்கு. ஒரு சுரை, மரை செய்துவிட்டால் இருபது பிரளய காலத்துக்குப் பிறகும் சற்றும் தேயாமல், துரு வேருமல் இருக்கும்" என்று உணர்ச்சி வேகத்தில் கட கட வென்று தினகரன் பொரிந்து தள்ளினன்.

" தினகர்! ஐயாயிரம் சம்பளம் கொடுத்து உமக்கு ஆய்வுக்கு இரண்டு இலட்சம் செலவழித்தேன். என் குடியைக் கெடுத்து விட்டீரே விஞ்ஞானியே, இந்த விபரீதக் கண்டு பிடிப்பால்" என்று தலையில் போட்டுக் கொண்டார் முதலாளி.

தினகரன் திகைத்து நின்ருன். தலையில் போட்டுக்

அறிமுகம்

1936ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற நகரசபைகள், ஜில்லா போர்டுகள் ஆகிய தேர்தல்களுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கும் பொறுப்பை சத்தியமூர்த்தி காமராஜரிடமே விட்டுவிட்டார். தேர்தல்களில் காங்கிரஸுக்கு அமோக வெற்றி, சத்தியமூர்த்தியின் பேச்சு வன்மையும், காமராஜரின் நிர்வாகத் திறமையுமே முக்கிய காரணம்.

ஜவஹர்லால் நேரு 1936இல் காங்கிரஸ் அக்கிராஸனர் என்ற முறையில் தமிழ் நாட்டில் பத்து நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். சத்தியமூர்த்தி தன்னுடன் காமராஜரையும் அழைத்துச் சென்ருர். காமராஜரின் உழைப்பு, திறமை மற்றும் அவருடைய பண்புகள் இவற்றை நேருவிடம் கூறி சத்தியமூர்த்தி அறிமுகம் செய்து வைத்தார். அன்று முதலே காமராஜ் நேருஜியின் கவனத்தையும் அன்பையும் கவர்ந்து விட்டார்.

காமராஜரின் அறிவு ஆற்றலைக் கண்ட சத்தியமூர்த்தி அவரையே தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக்கி, தான் காரியதரிசியாக இருந்து சேவை செய்தார்.

— ஆனந்த விகடன்

TATA-FISON *are happy to be with you this evening*

கொண்டதால் மண்டை ரத்தம் குழம்பி பங்காராமும் கண்ணிருட்டக் கண காலம் கம்மென்று நின்றார்.

"விஞ்ஞானிக்கு வியாபாரம் வருமா? ஒரு தடவை மரை சுரையை ஒருவர் வாங்கிவிட்டால் பிறகு மேலும் அவைகளை வாங்க வேண்டிய கட்டாயம் இல்லாமல் போனால் நான் கடையைக் கட்ட வேண்டியது தான், நீங்களும் சீக்கும நடையைக் கட்ட வேண்டியது தான். விரைவில் வீணாகும் சாமானை ஆக்கி விற்பதல்லவா வியாபாரம், விஞ்ஞானியே. அதில் தானே லாபம். இது தெரியாமல் இப்படி சாச்வதப் பொருளை நீர் கண்டு பிடித்து விட்டீரே! என்ன செய்வேன்" இப்போது முதலாளி வயிறு தண்டனை பெற்றது. அவருடைய சொந்தத் திருக் கரங்கள் த்வயத்தால்.

தினகரன் தன் கரங்களால் தன் பொட்டை நொறுக்கிக் கொண்டான்.

"போய் அந்தக் கண்டு பிடிப்பை அழித்து ஒழி, தினகரன். இப்போது ஆறு மாதம் தாங்கி வரும் திருகும், ஆணியும் நான்கு மாதம் தான் தாங்கி வரவேண்டும். ஆனால் பாக்கி கம்பெனிச் சரக்கைவிட பார்க்கப் பகட்டாக இருக்க வேண்டும். அப்படி கண்ணில் மண் தூவி பொன் குவிக்கும் ஒரு கண்டுபிடிப்பைக்கொண்டு வாரும். விரைவில் உன் சம்பளம் ஆறுயிரம் ஆகும்" என்றார் சேட்ஜி.

இத்தகைய சேட்ஜி உள்ள உலகம் இருந்து பயனில்லை, இதை ஒழித்துவிட வேண்டும்; பொல்லார் ஒருவர் உளரேல் பொழியுமாம் அவர் பொருட்டுத் தீ மாரி என்ற தீர்மானத்துடன் தினகரன் திரும்பக் காரில் ஏறி ஆய் களத்தை ஒன்பதே நிமிஷத்தில் அடைந்தான். வழியில் அவன் கார் அடியில் ஒரு பூனையும், நாயும் அடிபட்டு மாண்டது அவனுக்கு எப்படித் தெரியும்!

ஆய்கள வாசலில் அவன் வண்டியை விட்டு உலகத்தை ஒழிக்க வழி செய்யும் எண்ணத்துடன் இறங்கிய போது அவன் மனைவி சக்தி அவனை எதிர் கொண்டு வந்தாள்.

இரவு வெகு நேரம் ஆகியும் கணவனைக் காணுமல் அவனைத் தேடி வந்து விட்டிருந்தாள் மனைவி சக்தி.

சக்தியைக் கண்டதும் உலகத்தை ஒழிக்க வேண்டும் என்ற வேகம் அவனுக்குத் தளர்ந்தது. மனைவி சக்தி சந்தோஷமாக இருக்கத் தன் ஊதியம் ஆறுயிரம் ஆகவேண்டும் என்றும் பட்டது.

உடனே மட்ட ரக இரும்பு செய்ய ஆராய்ச்சியில் இறங்கினான் தினகரன்.


PRODUCTS
OF DISTINCTION
KNOWN
THROUGHOUT
THE WORLD
MAHLE
PISTONS
KNOWN FOR THEIR RELIABILITY,
EFFICIENCY, DURABILITY
AND HIGH
PERFORMANCE
ORIGINAL
GOETZE
PISTON RINGS
ENGINEERED TO OUTPERFORM
AND OUTLAST ALL
OTHER RINGS
Manufactured under Licence;
Sole Selling Agents :
ESCORTS LIMITED
AUTOMOTIVE DIVISION,
BLOCK H, CONNAUGHT CIRCUS,
NEW DELHI
CPH/GM/289

தியாகி யார்?

'தமிழன்'

காட்சி 1.

இடம் : ஒரு பூங்கா நேரம் : மாலை

[வானொலி இசை கேட்கிறது. அதை ரசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீதரை நோக்கி சம்பத் வருகிறான்]

சம்பத் : டேய் பழி, இங்கே உட்கார்ந்து கொண்டு கர்ண கொடூர சங்கீதம் கேட்டுக் கொண்டிருக்கிறாயா நீ? உன்னை நான் எங்கெங்கெல்லாமோ தேடிவிட்டு வருகிறேன்.

ஸ்ரீதர் : போடா இடியட்! உனக்கு கர்நாடக சங்கீதம் புரிய வில்லை என்றால் அதற்கு அதன்மேல் கோபப்பட்டு என்னடா பயன்? அதன் பெயரைக் கூடச் சரியாகச் சொல்லத் தெரியவில்லையே உனக்கு. போய் அந்தப் பைப்பில் உன் வாயைக் கழுவிக்கொண்டு வா.

சம்பத் : முதலில் இந்த நல்ல சமாசாரத்தைக் கேளடா. எங் கப்பா உன்னை என்னை இரண்டு பேரையும் மெட் ராசுக்கு அனுப்ப முடிவு பண்ணிவிட்டார்.

ஸ்ரீதர் : மெட்ராசுக்கா, எதற்கு?

சம்பத் : அங்கே சினிமாவில் சேருவதற்கு! போடா முட்டாள். நாம்தான் இப்போ ஸ்கூல் படிப்பை முடிச்சுட் டோமே எதற்காக இருக்கும்?

ஸ்ரீதர் : ஓ காலேஜில் சேருவதற்கா, உன்னை அனுப்புவது சரி, நான்தான் நம்ம ராமனுதன் பிள்ளை மரவாடியில் வேலைக்குச் சேரலாமென்றிருக்கிறேனே.



INDIAN HANDICRAFTS . . . made to serve

a positive need in the daily life of the people . . express a great national heritage . . nevertheless essentially articles of utility . . . A finely decorated vase . . a humble water pot of clay . . a silver filigree bracelet . . a colourful durable carpet . . . Every piece a work of art . . and tradition . . provide distinction and charm to your home at prices within your reach.

ALL INDIA HANDICRAFTS BOARD

சம்பத் : ஐயோ ஐயோ! உனக்கு ஆண்டவன் அளவுக்கு மீறிய அறிவைக் கொடுத்திருக்கிறனே தவிர, அதைக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவதற்கான சாமர்த்தியத்தைக் கொடுக்கலேயடா. ஒவ்வொருத்தன் கொஞ்ச நஞ்ச அறிவு இருந்தால் கூட அதைக் கொண்டு எவ்வளவு தூரம் உயரலாம்னு பார்க்கிறன். நீ என்னடாவென்றல்......

ஸ்ரீதர் : நான் இவ்வளவு காலம் உங்கள் குடும்பத்தின் தயவில் படித்தது போதும். நாஞே யாரும் இல்லாத அனதை. மரவாடியில் வேலைக்கு இருந்துகொண்டே ஒழிந்த நேரத்தில் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்னு இருக்கேன். நீ சொல்கிற மாதிரி, காலேஜில் படித்துப் பட்டம் வாங்கினல்தான் அறிவா என்ன? மேலும், நான் வேலையில் சேர்ந்து விட்டால், இவ்வளவு நாளாக என் படிப்புக்காக நீங்கள் செய்த செலவைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுக்கலாமே.

சம்பத் : நாங்க உங்கிட்ட வட்டிக்குக் கடன் கொடுத்தோமா என்ன? என்னைப் போலப் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் படிப்பு ஏறமாட்டேன் என்கிறது. கெட்டிக்காரஞன நீ பணம் இல்லை என்ற காரணத்தால் படிப்பை நிறுத்த இருந்தாயே என்றுதான் உனக்குப் பணம் கொடுத்து உதவினர், எங்க அப்பா. உன் படிப்பை நிறுத்திவிட்டு சம்பாதித்து நீ அந்தப் பணத்தைத் திருப்பிக்கொடுக்காவிட்டால் நாங்க என்ன சாப்பாட்டுக் கில்லாமலேயா போய்விடுவோம்.

ஸ்ரீதர் : என்னை இவ்வளவு தூரம் ஆதரிக்கும் உங்களுக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை!

சம்பத் : தெரியாட்டா எங்கிட்டே கேளுடா, நான் சொல்றேன், படிப்பு விஷயத்தைத் தவிர வேறு எதுவாயிருந்தாலும், எங்க குடும்பத்துக்கு உன் நன்றியைத் தெரிவிக்க இதோ ஒரு சந்தர்ப்பம் உனக்கு, நாளைக்கே என்னேடு பட்டணத்துக்குக் கிளம்பிவிடு. அங்கே இரண்டு பேரும் காலேஜில் சேர்ந்துவிடுவோம். உன் சாப்பாட்டுச் செலவு, படிப்புச் செலவு எல்லாம் என் பொறுப்பு. நீ செய்ய வேண்டியதெல்லாம் நீயும் படிச்சுண்டு, அப்பப்போ

With the Compliments

of the makers of

Delbis

BREAD

THE BRITANNIA BISCUIT COMPANY LIMITED

RAM BAGH ROAD, DELHI

JWTBC 3347

என்னையும் படிக்கச் சொல்லித் தார்க்கு போடணும்.

ஸ்ரீதர்: சம்பத், உன் பெருந்தன்மைக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

சம்பத்: பெருந்தன்மையுமில்லை, சிறிய தன்மையுமில்லை. என் கூட நீ இருந்தால் எனக்குங் கொஞ்சம் படிப்பு வாசனை ஏறுதா என்றுதான் உன்னையும் என்னோடு அழைத்துப் போக ஏற்பாடு செய்தேன். இதுதான் என் பெருந்தன்மையோட ரகசியம்.

காட்சி 2.

இடம்: சம்பத்தின் வீடு நேரம்: காலை

[சம்பத்தின் தாயாரும் கல்யாணியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்]

ச. தாயார்: கல்யாணி, கடுதாசி ஒன்று வந்திருக்கிறது படிச்சுச் சொல்லம்மா.

(கல்யாணி கடிதத்தைப் படிக்கிருள்)

கல்யாணி: அண்ணாதான் அம்மா எழுதியிருக்கிறன். அவனுக்கு பி. ஏ. பாஸ் ஆகிவிட்டதாம். ஒரு பெரிய கம்பெனியில் வேலையும் கிடைச்சுட்டுதாம். போன வருஷம் அவன் அங்கே வந்தபோது, ஹீராசந்து என்று தன் கூடப் படிக்கும் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்தானே, அவன் அப்பாதான் அந்தக் கம்பெனிக்குச் சொந்தக்காரராம். முதல் இரண்டு வருஷத்துக்கு கல்கத்தா, பம்பாய், தில்லி என்று நிறையச் சுற்றுப் பயணம் செய்ய வேண்டியிருக்குமாம். அங்கேயுள்ள அவர்கள் கம்பெனி பிராஞ்சுகளிலெல்லாம் பயிற்சிபெற வேண்டுமாம். அப்புறம் அவனை மெட்ருஸ் பிராஞ்சுக்கு மானேஜராகப் போட்டுவிடுவார்களாம்.

ச. தாயார்: அப்படி இரண்டு வருஷம் அங்கேயும் இங்கேயுமா அலைஞ்சால் அவன் உடம்பு கெட்டுப் போய்விடுமே.

கல்யாணி: அதெல்லாம் ஒன்றும் ஆகாதம்மா. அலைச்சலுக்கு பயப்பட்டா, இந்த மாதிரி வேலை எங்கே கிடைக்கும்? அவனோடு கூட இருக்கிறாரே ஸ்ரீதர் அவருக்கும்

PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HAND!!

★

USE

ALMOND BENZOIN
GLYCERINE
HANDLOTION

★

BLISS & COTTON

DISPENCING & FAMILY CHEMISTS,

12-E, CONNAUGHT PLACE,

NEW DELHI.

PHONE: 42170

அண்ணு அந்தக் கம்பெனியிலேயே வேலை வாங்கித் தரேன் என்ருனும். ஆனுல் அவர்தான் வேண்டா மென்று சொல்லிவிட்டு எம். ஏ. படிக்கிருராம்...... அம்மா, என் சினேகிதி ஒருத்திக்கு இன்று கல்யாணம். போய்விட்டு சாயங்காலம் வருகிறேன்.(போகிருள்)

ச. தாயார் : இந்த வருஷமாவது இவளுக்குக் கல்யாணம் செய்து விட்டால் தேவலை. ஒரு கணம் நிற்காமல் இப்படி சுற்றிக்கொண்டே இருக்கிருளே !

காட்சி 3.

இடம் : சம்பத்தின் அலுவலகம் நேரம் : பிற்பகல்

சம்பத் : மிஸ்டர் ஸ்ரீதர் எம்.ஏ, உங்கள் வரவு நல்வரவாகுக.

ஸ்ரீதர் : உன் டூரெல்லாம் நல்லபடியா முடிஞ்சுதாப்பா ?

சம்பத் : எப்படாப்பா முடியப் போகிறது இந்த டூர்னு ஆயி டுத்து, ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மாதிரிச் சாப்பாடு, ஒவ்வொரு பாஷை. எப்படாப்பா மெட்ருஸ் வந்து சேருவோம் என்று ஆகிவிட்டது... ஆமாம், நீ இப்போ எம். ஏ. யும் பாஸ் செய்துவிட் டாய். இனிமே கிருகஸ்தா சிரமத்திலே புக வேண் டியது தானே ?

ஸ்ரீதர் : எங்கப்பா பெரிய மனுஷா, ஊருக்கெல்லாம் உபதேசம் செய்கிருயே, உன் உடம்பையும் கொஞ்சம் பார்த் துக் கொள்வதுதானே !

சம்பத் : முதலில் என் தங்கைக்குக் கல்யாணம் நடக்க வேண் டும். அது விஷயமாகத்தான் உன்னைக் கூப்பிட்ட னுப்பினேன்.

ஸ்ரீதர் : என்ன செய்ய வேண்டும் சொல். கல்யாண ஏற்பாடு களா ? இல்லை, இனிமேல்தான் மாப்பிள்ளையே தேட வேண்டுமா ? அப்படி என்ருல் எப்படிப்பட்ட மாப் பிள்ளை வேண்டும் ? பெரிய வேலையில் இருக்கிறவனு, இல்லை, ஒரு மிராசுதாரா, அல்லது ஒரு இண்டஸ் டிரியலிஸ்டா ?

சம்பத் : நீ அதெல்லாம் ஒன்றும் சிரமப்பட வேண்டாம். நீ செய்ய வேண்டியதெல்லாம் பேசாமல் வந்து என்

அதிகச் சலுகையில் மலிவாக

மாதந்தோறும் புத்தகங்கள் கிடைக்கும்.

கலைமகள்

குடும்ப நூல் நிலையம்

அங்கத்தினர் ஆகும்போதே நன்கொடையாகப் புத்தகம் கிடைக்கிறது.

விவரங்களுக்கு எழுதுக

கலைமகள் காரியாலயம் தபால் பெட்டி 604

மயிலாப்பூர் :: சென்னை-4.

தங்கையின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட வேண்டியதுதான்.

ஸ்ரீதர்: டேய், என்னடா சொல்கிறாய்? உன் தங்கையை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளணுமா?

சம்பத்: ஏண்டா, அவளுக்கென்னடா? அழகில்லையா, படிப்பில்லையா, இல்லை பிறந்த வீட்டில்தான் சொத்தில்லையா? அவளுக்கென்னடா குறைச்சல்?

ஸ்ரீதர்: அவளுக்கு ஒன்றும் குறைவில்லை. இனிமேலும் ஒன்றும் குறைவில்லாமல் வாழட்டும். அதனால்தான் வேறு யாராவது பணக்காரப் பையனைப் பார்த்துக்கொடு என்று சொல்கிறேன். எனக்கு இன்னும் வேலைகூட ஆகவில்லை......

சம்பத்: அதற்கென்னடா, நாளைக்கே ஒரு காலேஜில் லெக்சரர் வேலை கிடைக்காதா என்ன?

ஸ்ரீதர்: அப்படி ஒரு லெக்சரர் வேலை கிடைத்தால் கூட மிஞ்சி மிஞ்சிப் போனால் ஐநூறு ரூபாய் கிடைக்குமா?

சம்பத்: அது போதுமடா. மேலும், நிறையப் பணமுள்ள இடத்தில் என் தங்கையைக் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறேன் நான். என் அக்கா இரண்டு பேரையும் என் அப்பா பணக்காரப் பையன்கள் கழுத்தில்தான் கட்டினார். ஒருவன் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான். என் தமக்கையைத் திரும்பிக் கூடப் பார்ப்பது கிடையாது. இன்னொருவன் என் அக்காவையும் அழைத்துக் கொண்டு அமெரிக்கா போய்விட்டான். எங்களுக்குக் கடிதம் கூட எழுதுவது கிடையாது. அவர்கள் இருக்கிறார்களா, செத்தார்களா என்பது கூடத் தெரியாது எங்களுக்கு, கண்யமாக வாழ்க்கை நடத்துமளவுக்கு சம்பாதிப்பவனாக இருந்தால் போதும். ஆனால் அவன் நிச்சயம் நல்லவனாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவனுக்குத்தான் என் தங்கையைக் கொடுப்பதாக இருக்கிறேன். இதற்குத் தகுந்தவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. இதற்கு நீ ஒப்புக்கொண்டால் என் வாழ்க்கையில் நிம்மதி ஏற்படச் செய்தவனாவாய். மற்றபடி, கல்யாணியை உனக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடு. நான் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன்.

A FRIEND IN NEED !

To millions in India and abroad, Janta torches are ideal companion in every day life.



JANTA

Another quality product from makers of well known GEEP torches



SHERVANI ENTERPRISE

GEEP FLASHLIGHT INDUSTRIES LTD.
ALLAHABAD

Sterling-GF-44

ஸ்ரீதர்: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சம்பத். உனக்கு நான் இது கூடச் செய்யாவிட்டால் நன்றியற்றவனாவேன்.

சம்பத்: நீ நட்புக்கே இலக்கணமடா, ஸ்ரீதர்.

காட்சி 4.

கல்யாணி: அண்ணா, மெட்ராசிலிருந்து எனக்கென்ன அண்ணா கொண்டு வந்திருக்கே?

சம்பத்: இந்தா! இதோபார் (பையிலிருந்து ஒருபோட்டோவை எடுத்துக் கொடுக்கிறான்)

கல்யாணி: இது யார் போட்டோ அண்ணா இது?

சம்பத்: இங்கே நம் வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தானே ஸ்ரீதர் அவனைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா நீ?

கல்யாணி: இல்லை அண்ணா, என்னை மன்னித்துவிடு.

சம்பத்: அவனுக்கென்ன குறைச்சல்? எம். ஏ. படித்திருக்கிறான். காலேஜ் லெக்சரர் ஆகப் போகிறான். சீக்கிரத்தில் டாக்டர் பட்டமும் வாங்கி விடுவான். ஆளும் அழகாகத் தானே இருக்கிறான்.

கல்யாணி: இல்லை அண்ணா, என் க்ளாஸ்மேட் சங்கரைத்தான் நான்...... (அவர்கள் தாயார் வருகிறாள்)

ச. தாயார்: என்னடா, இரண்டு பேரும் உம்மென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்?

சம்பத்: கல்யாணியை ஸ்ரீதருக்குக் கொடுக்கலாம்னு நினைத்தேன். அவனை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தேன். இப்பொழுது இவள் என்னவென்றால் வேறு யாரையோ காதலிக்கிறேன் என்கிறாள்.

ச. தாயார்: என்னமோ இந்தக் காலத்துப் பெண்களெல்லாமே இப்படித்தான் இருக்கு. காதல்னும் கத்திரிக்காயன்னும். நல்லதுக்குக் காலமில்லை...... ஸ்ரீதருக்கு என்னடி குறைச்சல்? அவன் மாதிரி ஒரு புத்திசாலிக்கு வாழ்க்கைப்படக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

சம்பத்: அம்மா, அவளைக் கட்டாயப் படுத்தாதே. அவள் எதுக்கு இஷ்டமில்லாதவனைக் கல்யாணம் செய்துக்கணும்? எப்படியாவது அவள் சந்தோஷமாக

இருக்க வேண்டுமென்பதுதான் எனக்கு வேண்டியது. அந்த சங்கரைப்பற்றி விசாரிக்கிறேன். தகுந்தவன் தான் என்ருல் இந்த மாதமே கல்யாணத்தை முடித்து விடலாம். ஆனுல் என் கவலையெல்லாம் ஸ்ரீதரின் முகத்தில் எப்படி விழிப்பது என்பதுதான். அவன் அந்தஸ்து வித்யாசம் காரணமாக கல் யாணியை மணந்துகொள்ள ஒரேயடியாக மறுத்து விட்டான். நான்தான் அவனைக் கட்டாயப்படுத் தினேன். அதன் பேரில் அவனும் ஒப்புக்கொண் டான். என்ன சொன்னுலும் அவன் உத்தமன்!

காட்சி 5.

சம்பத் : புரொபசர் ஸ்ரீதரா, வாங்க வாங்க.

ஸ்ரீதர் : என்னடா சம்பத், தொழில் முறையில் போகிற இடங் களிலெல்லாம்தான் மரியாதை வார்த்தைகள் கேட் டுக் கேட்டுப் புளித்துவிட்டதே, நீ ஒருத்தனுவது வாடா போடாவென்று ஒரு சகோதரனைப் போல் அழைத்து அன்பு மழை பொழிவாய் என்று இங்கு வந்தேன். ஆனுல் இங்கும் மரியாதை வெயில் காய் கிறதே சுடச் சுட. மரியாதை மனிதர்களுக்கிடையே இருக்கும் இடைவெளியை அதிகப்படுத்திவிடுகிறதே தவிரக் குறைப்பதில்லை.

சம்பத் : என்றைக்குமே உன் வழி தனியடா ஸ்ரீதர். அதிருக் கட்டும் என் கல்யாணத்துக்கு வரச் சொல்லி உன் கல்கத்தா விலாசத்துக்கு எழுதிய கடிதம், பத்திரிகை ஒன்றுமே கிடைக்கவில்லையா என்ன?

ஸ்ரீதர் : நான்தான் மூன்று மாதமாக ஒரு மகாநாடு சம்பந்த மாக ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறேனே.

சம்பத் : என்னடா அந்தப் படத்தை அப்படி வெறித்துப் பார்க் கிருய்? அது என் திருமணப் போட்டோடா. என் பக்கத்திலிருப்பவள் என் மனைவியடா.

ஸ்ரீதர் : சம்பத்......

சம்பத் : என்னடா

ஸ்ரீதர் : சம்பத்......

சம்பத் : திடீரென்று உனக்கு என்னடா ஆயிற்று?

ஸ்ரீதர் : நான்தான் உன் சகோதரியை மணந்து கொள்ளக் கொடுத்து வைக்கவில்லை. நீயாவது என் சகோதரியை மணந்து கொண்டாயே !

சம்பத் : என்னடா சொல்கிறாய் நீ, மீனு உன் சகோதரியா ?

ஸ்ரீதர் : ஆமாம், அவள் என் சகோதரிதான் இரண்டாண்டுகளாக...

சம்பத் : அதற்குமுன் ?

ஸ்ரீதர் : அதை என்னவென்றடா சொல்வேன்? நாமும் ஒருவளைக் காதலிக்க வேண்டும் என்ற வேகத்தில் நான் அப்போது மீனுவின்மீது பற்றுக்கொண்டேன். ஆனால் ஒரு நாள், நான் உன் தங்கையை மணக்க வேண்டும் என்று நீ வற்புறுத்தினாய்......

சம்பத் : என்ன காரியம் செய்தாய் ஸ்ரீதர் ! நீ மீனுவைக் காதலிப்பதை என்னிடம் சொல்லியிருக்கலாமே.

ஸ்ரீதர் : எப்படியும் நான் உன் தங்கையைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீ துடித்துக் கொண்டிருந்தாய். மீனுவிடம் போய்ச் சொன்னேன், என் உயிர் நண்பன் ஒருவனுக்கு நான் உதவி செய்ய வேண்டியிருக்கிறது, என்று. அவள் எதுவும் செய்யத் தயார் என்றாள், என்னை அவள் இதயத்தில் இருத்திக் கொள்ளும் உரிமையை இழப்பதைத் தவிர, "மீனு, நீ என்னை உன் இதயத்தில் இருத்திக் கொள்ளலாம், ஆனால் ஒரு சகோதரனாக, தூய நண்பனாக" என்றேன். அதற்கும் அவள் ஒப்புக் கொண்டாள். பிறகுதான்......

சம்பத் : இந்தப் பாவி தன் தவறை உணர்ந்தேன், என் தங்கையின் மனத்தைத் தெரிந்து கொள்ளாமல் உன்னைச் சம்மதிக்க வைத்த தவறை...... ஆமாம் ஸ்ரீதர், என் தங்கையைத் தான் நீ மணந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று ஆகிவிட்டதே. பிறகாவது...

ஸ்ரீதர் : என்னடா உளறுகிறாய். ஒருமுறை அவளைப் பார்த்து என்னைச் சகோதரனாகப் பாவி என்று சொல்லிவிட்டு, அவளைப் பற்றி வேறு விதமாக எப்படியடா எண்ண முடியும் ?

சம்பத் : ஸ்ரீதர்......

ஸ்ரீதர் : என்னடா

சம்பத் : ஸ்ரீதர்......

ஸ்ரீதர் : என்னடா ஆயிற்று உனக்கு திடீரென்று?

சம்பத் : நான் செய்த சிறு தவறினால் உன் வாழ்வே பாழாகி விட்டதே. நீ பரம தியாகி; நான் மகா துரோகி!

ஸ்ரீதர் : சீ, சீ, உளறுதேடா சம்பத். என் வாழ்க்கையில் அப்படி ஒரு திருப்பம் நேர்ந்திராவிட்டால் நான் கல்யாணி யையோ மீனாவையோ மணந்துகொண்டு ஒரு சாதா ரண குடும்பஸ்தனாக ஆகியிருப்பேன். எனக்கு இரு வரும் இல்லை என்று ஆனபின்தான் அது ஒரு அற்ப ஆசை என்று உணர்ந்தேன். அதை மறக்க வேண் டித்தான் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

சம்பத் : நீ மகா தியாகி மட்டுமல்ல, மகா ஞானியும் தானடா. இதோ வருகிறாள் பார், மீனா.
(அண்ணா என்று சொல்லிக்கொண்டே வருகிறாள் மீனா.)

ஸ்ரீதர் : (தன் காலில் விழவரும் மீனாவிடம்) என் காலில் விழுந்து ஒருவர் வணங்குமளவுக்கு நான் ஒன்றும் பெரியவனல்ல. எழுந்திரம்மா. சீக்கிரத்தில் எனக்கு ஒரு மருமகனைப் பெற்றுக்கொடு!

சண்டையும் அன்யோன்யமும்

'கேள்வி நேரம் சத்தியமூர்த்திக்கு சர்வ சாமான்யம். அடிக்கேள்வி மிகவும் சாதாரணமாக இருக்கும். பதில் சொல்ல வேண்டியதுதான். புதைவாணம் போல் புறப்படும் உப கேள்விகள். மழுப்ப முடியாது; ஏய்க்க முடியாது. மடக்கி விடுவார்.

கேள்வி நேரம் சோதனை காலம் அதிகாரிகளுக்கு. சத்திய மூர்த்தியைக் கண்டால் சிம்ம சொர்ப்பனம். இவ்வளவுக்கும் அதிகாரிகளுக்கு இவரிடத்தில் அலாதி மதிப்பு. வேலை தெரிந் தவர்; விஷயம் தெரிந்தவர்; பொறுப்பை உணர்ந்தவர் என்பதே காரணம்.

சட்டசபைக்குள் பொக்கிஷ மெம்பர் கிரெக்கும் பொது ஜன மெம்பர் சத்தியமூர்த்தியும் நரியும் நாயும் போலச் சண்டை போடுவர். சபைக்கு வெளியே இருவரிடம் காணும் அன்யோன்யம் ஆச்சரியமாக இருக்கும். அந்தரங்கத்தை அறிந்து கொண்டால் ராஜீய வாழ்வில் கசப்பு காணாது.

— ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீனிவாசன் 'தராசு' கட்டுரையில்

REGD. No. 111866 PHONE No. 2

ஸ்வஸ்திக்

வேதாரண்யம் புகையிலை

யாவரும்

விரும்புவது

பிளாஸ்டிக்
15 நயா பைசா பொட்டலங்கள்
தனிச்சிறப்பு வாய்ந்தவை.

G. T. ஈரண்ணு
மைசூர் ஸ்டோர்ஸ்
லோடி காலனி
நியூடெல்லி.

ஸ்வஸ்திக்
புகையிலைத் தொழிற்சாலை
வேதாரண்யம்.

பாராட்டுக்குரிய கவிதை

மேகம் விடு தூது

'பத்மம்'

வெண்நுரையாய் விண்கடலில் விளையாடித் தவழ்கின்றாய்!
பெண்ணிங்கே உள்உருகிப் பிரிவுற்று வாடுவதைக்
கண்டிலையோ வெண்முகிலே? கான்கடந்து மலைகடந்து
பண்பாடும் தலைவர்க்குப் பரிந்தோதிச் செல்லாயோ! 1

வாராயோ வாராயோ வண்முகிலே எனவுன்னைப்
பாராதே ஊணின்றிப் பரிதவித்து நின்றேனே!
சேராயோ என்னுரையைச் சீர்பதிவாழ் ஐயனிடம்?
சோராதே, இளமுகிலே சொன்னதெலாம் உரையாயோ? 2

நெஞ்சத்துத் தோணியிலே நெடும்பயணம் செய்கின்றேன்
எம்சொல்லும் கேளாத இடத்தெங்கோ உறைகின்றான்;
பஞ்சன்ன மென்முகிலே! பறந்தோடி ஐயனிடம்
'துஞ்சாளே உனையெண்ணித் துடைப்பாயே துயரென்பாய்! 3

மலைமுகட்டுப் புனல்பொழிந்து மண்தவழ்ந்து, பதுமத்தின்
இலைமுகட்டு முத்தாகி இன்பமுறும் தண்முகிலே!
கலைமுகட்டுப் புகழுற்ற கவியோன்தன் நினைவுற்று
முலைமுகட்டு நீர்சோர முன்வாயில் கிடப்பேனே! 4

கடல்தந்து வான்வளர்ந்து கடன்செய்யும் நன்முகிலே,
உடல்தங்க உளம்செல்ல உத்தமனை உடன்புணரத்
தொடர்கின்றாள் நங்கையெனத் தூதுரைத்துச் சென்றேஎன்
இடர்தீர்த்துப் பிரிவென்னும் இன்னலினைத் துடைப்பாயே! 5

சந்தனமும் தழலாகும்; சங்கோசை துயரூட்டும்;
வெந்தணலை மிகைப்படுத்தும், வீசுகின்ற தென்றலுமே;
சுந்தரனை உளமுன்னிச் சூழ்த்தனளே துன்பமெனச்
சிந்தனையில் கொண்டவர்க்குச் செப்பிடுவாய் தண்முகிலே! 6

'கவிபாடி உளக்காதல் காட்டுமுனை உளங்கொண்டு
தவித்தோடித் தேடுவளே, தண்மலர்சேர்ப் பொழிலெல்லாம்;
''அவியாதோ பிரி''வெனவே அலங்கொண்டாள் தைய'லென்றே
புவிபோற்றும் மன்னனிடம் போந்தேநீ ஆர்ப்பாயோ! 7

காவிரியில் விளையாடிக் கங்கையிலே தவழ்ந்தோடிப்
பூவிரித்த பெருஞ்சோலைப் புகுந்தேறும் மென்முகிலே!
பாவிரித்துக் கவின்செய்யும் பதுமனையான் உன்னுவதை
நீவிரித்தே உரைசெய்யாய் நீர்விரிக்கும் நன்முகிலே! 8

நிலம்வளர்த்துத் தண்பெருக்கி நில்லாது புகழ்வெறுத்துக்
கலம்வளர்த்தே எமைக்காத்து கருணைசெயும் கார்முகிலே!
வலம்பிடித்துக் காபுகுந்து வான்சிறக்கக் கவிபாடி
நலம்வளர்க்க வாவென்று நயமிகவே சொல்லாயோ! 9

HALLMARK
OF
High Standard QUALITY



DALMIA CEMENT (BHARAT) LIMITED

DALMIAPURAM (MADRAS STATE)

Head Office : 4, SCINDIA HOUSE, NEW DELHI-1

MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

SINGLE YARN IN COUNTS 16s TO 100s, CARDED AND COMBED, IN HANKS AND IN CONES FOR WEAVING AND HOSIERY FACTORIES AND GREY GADA. GREY AND BLEACHED MULLS, LONG-CLOTH, DYED CLOTH Etc

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai, Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

Jewellery that flatters beauty

Latest Creations
in Classical and
Modern Jewellery
in 14 Carat Gold
that keeps a
Dazzling shine.

Re-sale value Guaranteed

Manufacturing Jewellers

KAPUR-DI-HATTI

16-L, CONNAUGHT PLACE
NEW DELHI-1, Phone: 43955

NEWFIELDS

சுதந்திர இந்தியாவில் விஞ்ஞான வளர்ச்சி

பெ நா. அப்புஸ்வாமி

முன்னாளில்

பண்டைப் பழங்காலத்தில் நமது நாடு ஆன்மீகத் துறையில் போலவே அறிவியல்துறையிலும் சிறந்திருந்தது. நமது நான்மறைகளின் சிறப்பை அறிஞர் - உலகு அறியும். 'அந்த மந்திரங்களில் சிலவற்றுக்கு மறைவான வேறொரு பொருளும் இருக்கிறது. அவை விஞ்ஞான விஷயங்களை—உதாரணமாக, இரசாயனம்,உயிரியல், ஆகியவற்றை—விளக்குகின்றன' என்று பரமேசுவர ஐயர்,ரேலே, முதலிய சிலர் கூறுகின்றனர். இதன் உண்மை எவ்வாறாயினும், அக்காலத்தில் கணிதப் பயிற்சியும், வான நூல் பயிற்சியும், ஓரளவு இருந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்போது மனம் என்பதே சோதனைச் சாலை; அறிவே சோதனைக் கருவி. இக்காலத்தில் போல் ஆய்வுக் கூடங்களும், நுட்பத் திறமை வாய்ந்த கருவிகளும் அப்போது இல்லை. கணாதர் முதலியோர் அணுவைப் பற்றிக் கூறியவை வியக்கத் தக்கவை. தங்கள் கற்பனையைத் தெளிந்த மனத்தால் கட்டுப்படுத்தி அவர்கள் கண்ட நுட்பங்கள் பல.

இடைக்காலத்தில்

ஆனால் இம்முயற்சிகள் தொடர்ந்து மேன்மேலும் பெருகிவளர்ந்து பயன் அளிக்கவில்லை. ஆயினும், கணித - இயல், வான-இயல், மருத்துவ -இயல், ஆகிய துறைகளில் சில பேரறிஞர்கள் அரிய நூல்களை வெளியிட்டார்கள். ஆரிய பட்டர், சரகர், சுசுருதர், முதலியோர் அவர்களில் சிலர். இரசவாதமும் காய கல்பமும் ஓரளவு தூண்டு கோல்களாக உதவின. விஞ்ஞானம் அரேபியாவில் நன்கு பயிலப்பட்டு, மேற்கத்திய நாடுகளை அடைந்தது. பின்னர் விஞ்ஞானத்துறையில் கற்பனையாக கொண்ட முடிவுகளைச் சோதனைகளை நடத்தி மெய்ப்பிக்கும் முறை தொடங்கப்பட்டது. அதன் பின் மிக

PLOT OF LAND ?
CAR ??
SCOOTER ???
REFRIGERATOR ????

Oh ! No !!

money

(All-Time Buyer of Everyday Needs)

THRU

Smart's

and the choice.........

WHAT TO BUY !
WHEN TO BUY !!
WHERE TO BUY !!!

.........is yours

AND

It Saves You Of The MIDDLE PROFIT Too !

to SAVE, BORROW or INVEST
join only the BEST

SMART'S PRIVATE LIMITED

READING ROAD, NEW DELHI-1. (Phone : 43600)

BRANCHES : **— Jangpura, — KANPUR — LUCKNOW**
NEW DELHI 33660 27570
76122 35516

PRATAP-8/63

விரைவாக விஞ்ஞானம் அங்கு வளர்ந்து முன்னேறிற்று.

இக்காலத்தில்

திடீர்திடீரென்று அண்மைக் காலத்தில் பல புதிய துறைகள் தோன்றின, பல புதிய யுகங்கள் ஏற்பட்டன. நீராவி யுகம், மின்சார யுகம், அணு யுகம், அணுவின் உட்கரு யுகம், விண்வெளி யுகம் என்று பல யுகங்களாக விஞ்ஞானத்துறை மிக விரிந்துவிட்டது. விஞ்ஞானம் மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் புகுந்து துணை செய்யக் காத்து நிற்கிறது. அதை மேன்மேலும் பயன்படுத்த அறிவாளிகள் முயன்று வருகிறார்கள்.

இரண்டு துறைகள்

விஞ்ஞானத்தில் தூய - விஞ்ஞானம் (அல்லது அடிப்படை விஞ்ஞானம்) என்றும், பயன்படு - விஞ்ஞானம் என்றும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. விஞ்ஞான அறிவை அந்த அறிவின் பொருட்டே பெறவும், அதை மேன்மேலும் வளர்க்கவும், கருதுவது தூய விஞ்ஞானம். ஆழ்ந்த கல்வியும், பரந்த நோக்கும், சீரிய கற்பனைத் திறமையும், கூரிய கவனமும், நுண்ணிய அறிவும், அதற்கு இன்றியமையாதவை. தூய-விஞ்ஞானத்தால் பெறப்பட்ட அறிவை, குறித்த பயன் கிடைக்கும் பொருட்டுப் பயன்படுத்த முயலும் முயற்சியே பயன்படு-விஞ்ஞானம் எனப்படுவது. தூய - விஞ்ஞானம் வளர்க்கப் பெறு விட்டால் பயன்படு - விஞ்ஞானம் பயன் தராது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அதன் அறிஞர்கள் இந்த இரண்டு துறைகளிலும் ஈடுபடுவது அவசியம். இவற்றோடு நுண் - தொழில் துறையிலும் வளர்ச்சி ஏற்பட வேண்டும்.

நமது நாட்டில்

பிற நாடுகளில் போலவே நம் நாட்டிலும் இந்த இரண்டு துறைகளிலும் (அதோடு நுண் -தொழில் துறையிலும்) பல வகையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. தூய-விஞ்ஞானம் தலைசிறந்ததாகையால் அதில் அதிகக் கருத்து செலுத்தப் படுகிறது. நமக்கு இக்காலத்தில் பயன்படு - விஞ்ஞானமும் தேவை. அதிலும் நமது அறிஞர்கள் நிரம்ப ஈடுபட்டிருக்கிறார்கள். இவற்றைச் சற்றே கவனிப்போம். தமிழ் நாட்டைச் சற்று அதிகமாகவே குறிப்பிடுவோம். அவ்வளவுதான் இங்கு இயலும்.

மூன்று வகை ஆய்வுக் கூடங்கள்

மேற்கூறிய முயற்சிகள் முக்கியமாக மூன்று வகையில் அடங்கும். ஒன்று, நமது அரசாங்கம் நிறுவிய கூடங்கள் முதலியவை; இரண்டு, பல்கலைக் கழகங்கள், தனி ஸ்தாபனங்கள், முதலியவை; மூன்று, தொழில் துறை நிறுவனங்கள் அமைத்த ஆய்வுக் கூடங்கள். முன்னால் எல்லாம் இம்முயற்சிகள் சிற்சில அறிஞர்களால் தனித்தனியே நடத்தப்பட்டு வந்தன. சில வேளைகளில் ஒரே முயற்சியில், ஒருவரை ஒருவர் அறியாமல், சில அறிஞர்கள் தனித்தனியே பாடுபட்டு வந்த

With Best Compliments

of

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

TOBACCO HOUSE :: VILE PARLE

BOMBAY-56 - AS

" INDIA'S LARGEST NATIONAL ENTERPRISE OF ITS KIND "

தும் உண்டு. இவற்ருல் நேரமும் முயற்சியும் பணமும் வீணுயின. இப்போது பலர் ஒருமிக்க, அநேகமாகப் பலர் அறிய, முயன்று வருகிருர்கள். விஞ்ஞானப் பத்திரிகைகள் இம்முயற்சிகளின் விளைவுகளை உலகுக்கு அறிவித்து வருகின்றன. விரைவின் பலன்கிட்ட இது ஏதுவாகிறது.

நமது நாட்டு அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒருவகை ஆய்வுக்கூட வகைக்கு 'நாஷனல் லாபரட்டரி' (தேசீய ஆய்வுக் கூடம்) என்று பெயர். உதாரணமாக, பௌதிகம் (பிஸிக்ஸ்) டில்லி; இரசாயனம் (கெமிஸ்ட்ரி) பூனு; உணவு (ஃபூட் - டெக்னுலஜி) மைசூர்; மருந்து (ட்ரக்ஸ்) லக்ஷ்மணபுரி; எரி பொருள் (ஃபூயெல்) தான்பாட்; கண்ணுடி (க்ளாஸ்) கல்கத்தா; தோல் (லெதர்) மதராஸ்; மின் - இரசாயனம் (எலக்ட்ரோ கெமிஸ்ட்ரி) காரைக்குடி; மின் - அணுத்துறை (எலெக்ட்ரானிக்ஸ்) பிலானி; எலெக்ட்ரானிக் ஆராய்ச்சி, பங்களூர்; உலோக இயல் (மெடலர்ஜி) ஜாம்ஷெட்பூர்; ஆகியவற்றைக் கூறலாம். மற்றவையும் பல உண்டு. சீனுவினுல் ஏற்பட்ட போர் நெருக்கடி நிலை காரணமாகச் சில பாதுகாப்பு ஆய்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்பும் சில இருந்தன. கொச்சியில் கப்பற்படை ஆராய்ச்சிகளும் (நேவல் ரிஸர்ச்), கிர்க்கியில் போர்த் தளவாட ஆராய்ச்சியும் (ஆர்மமெண்ட்ஸ் ரிஸர்ச்). பூனு, டில்லி, ஹைதராபாத் முதலிய நகர்களில் வேறுபல ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. நமது நாட்டில் டைரெக்டர்-ஜெனரல் ஒருவர் விஞ்ஞானத் தொழில் துறை ஆராய்ச்சிக் கழகத்தின் (கௌன்ஸில் ஆஃப் ஸையன்டிபிக் அண்ட் இண்டஸ்ட்ரியல் ரிஸர்ச்) தலைவராக இருந்து பலவற்றை மேற்பார்த்து வருகிருர். அடாமிக் எனெர்ஜி கமிஷன் (அணு சக்திக் கமிஷன்) ஒரு முக்கியமான ஸ்தாபனம். விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் பண்பாட்டுத் துறைக்குமாக ஓர் அமைச்சகம் இருக்கிறது. அதற்கு இப்போது ஹுமாயூன் கபீர் தலைவராக இருக்கிருர்.

இவற்றைத் தவிர, உட்கருப் பௌதிக ஆராய்ச்சியை நடத்திவரும் ஸாஹா நிறுவனம் (கல்கத்தா); இந்திய விஞ்ஞான நிலையம், பெங்களூர்; ஏ. சி. நுண்-தொழில் துறைக் கல்லூரி, சென்னை; இந்திய நுண் தொழில் துறை நிலையம், சென்னை; (கான்பூர், பம்பாய், கரக்பூர், முதலிய நகர்களிலும் இவ்வகை நிலையங்கள் உண்டு); டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம், பம்பாய்; இந்திய விஞ்ஞான வளர்ச்சிக் கழகம், கல்கத்தா; அகில இந்திய மருந்துச் சரக்கு விஞ்ஞான நிலையம், டில்லி; மத்தியக் கட்டிட ஆராய்ச்சி நிலையம், ரூர்க்கி; முதலியவையும் அருந்தொழில் புரிந்து வருகின்றன.

தொழில்கள்

தொழில் துறையில் எத்தனையோ வகையான பொருள்கள் இப்பொழுது நமது நாட்

டில் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில் எல்லாம் விஞ்

டாக்டர் ஜி. என். இராமசந்திரன்

ஞானம் பயன்படுகிறது. உதாரணமாகச் சிலவற்றைக் கூறுவோம். கருவிகள், சிமென்டு, அலுமினியம், குழாய்கள், செயற்கை உரங்கள், பலவகை இரசாயனப் பொருள்கள், இரும்பு, எஃகு, வார்ப்பிரும்பு. கறைபடா எஃகு; சைகிள், மோட்டார் கார், மோட்டார் சைகிள், டிரக், ரயில் வண்டி, எஞ்சின், தண்டவாளம், கணக்கிடு கருவிகள், துணிமணிகள், செயற்கை ரத்தினங்கள், காகிதம், பென்சில், பேனா, மை, டயர், ரப்பர்க் குழாய், மெத்தை, டெலிபோன், இன்னும் எத்தனை எத்தனையோ.

தூய ஆராயசசி

முன்னால் கூறியபடி, தூய ஆராய்ச்சிகள் பல இடங்களில் பல துறைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகங்களே அவைகளின் முக்கிய கேந்திரங்கள். சென்னையில் நடத்தப்பட்டு வரும் ஒரு சில ஆராய்சிகளின் தன்மையையும் அவற்றை நடத்திவரும் புகழ்பெற்ற அறிஞர்களையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். விஞ்ஞான உலகால் கொண்டாடப்படும் சிலரை நாம் பெயர் - அளவிலாவது தெரிந்துகொள்ள வேண்டாமா ?

நோபல் பரிசு பெற்று, அற்புத ஆராய்ச்சிகளைத் தமது சொந்த ஆய்வுக்கூடத்திலேயே இப்போதும் நடத்தி



கொல்லாஜென் என்னும் புரோட்டின் பொருளின் மூலக்கூறு இன்னவாறு அமைந்திருக்க வேண்டும் என்பதை விஞ்ஞானமுறையில் ஆய்ந்து, அதன் அமைப்பின் 'மாடல்' (மாதிரிகை) ஒன்றைச் செயற்கையாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பௌதிக ஆராய்ச்சித் துறைத் தலைவர் ஜி. என். இராமசந்திரன் அமைத்தது.

வரும் சி. வி. ராமனை அறியாதார் இல்லை. அவரோடு பழகி, பௌதிகத் துறையில் தலை சிறந்த நிபுணரான கே. எஸ். கிருஷ்ணன் விஞ்ஞானத் துறையில் போலவே தமிழிலும் மிக்க பற்றுடையவர். இவர்களை எல்லாம், விஞ்ஞான உலகம் மட்டும் அன்றி, பாமர உலகமும் நன்கு அறியும்.

சென்னையில் இப்போதும், சற்று முன்பும், பல்கலைக் கழகத்திலும். அரசாங்கக்கல்லூரிகளிலும் ஆராய்ச்சிகளை நடத்திய சிலரை விஞ்ஞான உலகம் போற்றுகிறது. அவர்களில் சிலருடைய பெயரை இங்கே குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். நமது பல்கலைக்கழகத்தின் பௌதிக ஆராய்ச்சித் துறைத் தலைவரான டாக்டர் ஜி. என். இராமசந்திரன் என்பவர் ஸி. வி. ராமன், ஸர். லாரென்ஸ் பிராக், என்னும் நோபல் பரிசினர் இருவரின் சீடர். 'கொலாஜென்' என்னும் புரோட்டீன் வகையையும், பிற புரோட்டீன்களையும் ஆராய்ந்து, அவற்றின் அமைப்பை அறிந்து, செயற்கையில் அமைக்க முயல்பவர். உலகப் புகழ்பெற்றவர். உயிரியல் தொழில்கள் எனக் கருதப்படுபவை பல, உண்மையில், இரசாயன - பௌதிகத் தொழில்களாகவே காணப்படுகின்றன என்பதை இவரது ஆராய்ச்சிகள் மேலும் துலக்குகின்றன. இவர் பயிற்றுவித்திருக்கும் சீடர்கள் பலர்.

இரசாயனத் துறையில் அரசாங்கக் கல்லூரியில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரிய ஆராய்ச்சிகளை நடத்தி, இப்பொழுது பம்பாயில் உள்ள ஸீபா ஆராய்ச்சி நிலையத் தலைவராக இருந்து, இன்னும் ஆராய்ச்சிகளை நடத்திவரும் பேராசிரியர் டி. ஆர். கோவிந்தாச்சாரியார் விஞ்ஞான உலகம் பாராட்டும் அரிய நிபுணர். நமது நாட்டில், முக்கியமாக வைத்தியத்துக்குப் பயன்படும் இயற்கைப் பொருள்களான தாவரங்களின் இரசாயன இயலை நன்கு ஆராய்ந்தவர், இன்னும் ஆராய்ந்து வருபவர்.

நமது பல்கலைக் கழகத்தில் டாக்டர் எஸ். சுவாமிநாதன் என்பவர் அங்கக - ரசாயன (ஆர்க்கானிக் கெமிஸ்ட்ரி) துறையில் - அதாவது, கரிமப் பொருள்களைச் சார்ந்த துறையில்-ஸ்டீராய்டு என்னும் (பதினேழு கார்பன் அணுக்கள் கொண்ட) பொருள்களின் அமைப்பை ஆராய்ந்து அவற்றைச் செயற்கையில் அமைக்க

டாக்டர் டி. ஆர். கோவிந்தாச்சாரி

It's a new experience in motoring with the STANDARD Herald !

A thoroughly practical car that is designed to give trouble-free motoring under any conditions.

- *Easy to handle*
- *Independent suspension on all four wheels*
- *Twenty-five feet turning circle*

Manufactured by
STANDARD MOTOR PRODUCTS OF INDIA LTD.
MADRAS-2

SMZ-1117B

முயன்று வருபவர். அப்படிச் செய்துவரும் போது, சாதார

டாக்டர் எஸ். சுவாமிநாதன்

ணமாக ஆறு - அணு- வளைய மாக அமைந்து காணும் பகுதி ஒன்று திடீரென்று விரிந்து, எட்டு-அணுக்கொண்ட வளைய மாக அமையக் கண்டார். இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. இதன்விளைவுகளும் பயன்களும் என்ன என்ன என்று விஞ்ஞா னிகள் கவனித்து வருகிறார்கள். இவை பெரிதாக இருக்கக் கூடும்.

சென்னையில் உள்ள மத்திய-தோல்-ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் டாக்டர் நாயுடம்மா என்பவர். இந் நிலையத்தில் தோலைப்பற்றிய ஆராய்ச்சிகள் பலவகையில் நடத்தப்படுகின் றன. தோலைப் பதனிடுதல் என்னும் எளிய செயல் நிகழும் போது, எவ்வளவு விந்தை யான உயிரியல் இரசாயனத் துறைச் செயல்கள் நடைபெறு கின்றன! தோலில் உள்ள புரோட்டீன் பொருளின் மீது சிற்சில இயற்கைப் பொருள் களையோ, செயற்கைப் பொருள்களையோ செயல்படச் செய்வதே பதனிடுதல் எனப் படுகிறது. அங்கக, அனங்கக பௌதிக, உயிரியல், இரசா யனத் துறைகளிலும்; நுண் ணுயிர், திசு, பாசி, பூச்சி, தாவ ரம், மருத்துவம், போன்ற துறைகளிலும்; சிறந்த அறிவும் பயிற்சியும் இம்முயற்சிக்குத் தேவை. தோலோடு ஒட்டிய மயிர், கம்பளி, தசை, முதலிய பொருள்கள் கழிவுபட்டு வீண் போகா வண்ணம் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் ஆராயப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்புப் படைக்கு வேண் டிய கையுறை, காலணி, உடற் சட்டை, முதலியவற்றிலும் கருத்துச் செலுத்தப்பட்டு வரு கிறது. 'கொலாஜென்' முதலிய புரோட்டீன்களைப் பற்றிய

டாக்டர் நாயுடம்மா

THE CHAIN SETS A CHAIN REACTION...

Have you ever considered the consequences of alarm chain pulling ? Perhaps not.

When an alarm chain is pulled, it throws out of gear for some moments the entire life-line of the Nation. Trains arrive late at their destinations. Many a passenger is inconvenienced and 'misses the bus' and the Railways in their turn incur heavy losses. The alarm chain is an emergency device. If anybody misuses it for trivial reasons, please hand over the culprit to the authorities. You will be doing a National Service.

SOUTHERN RAILWAY

- YOUR PROBLEMS IN QUALITY CONTROL CAN BE SOLVED BY OUR INSTRUMENTS
- OUR SPECIALITY IS SERVICE AFTER SALE
- CAN INSTALL AND REPAIR ALL TYPES OF LABORATORY AND INDUSTRIAL INSTRUMENTS

PLEASE ASK FOR DETAILS

Toshniwal

MARYRAM BROS. (Pvt.) LTD.

3E/8, JHANDEWALAN EXTENSION

NEW DELHI-I.

Head Office:
BOMBAY

Branches at:
CALCUTTA, AJMER & MADRAS

ஆராய்ச்சியும் இந்நிலையத்தில் நடைபெறுகிறது.

வேறு சில துறைகள்

கோடைக்கானலில் சூரியனைப் பற்றிய ஆராய்ச்சியோடு வேறு பல ஆராய்ச்சிகளும் நடந்து வருகின்றன. தாவரத் துறையில் பாசி வகைகளைப் பற்றி முன்னால் எம்.ஒ. பார்த்தசாரதி அய்யங்கார், சிலஅற்புதமான ஆராய்ச்சிகளை நமது பல்கலைக் கழகத்தில் நடத்தி, தமக்கும் கழகத்துக்கும் நற்பெயர் கிடைக்கச் செய்தார். இப்பொழுது தாவர - இயல் ஆராய்ச்சித் தலைவரான டாக்டர் சதாசிவம், நிலத்திலிருந்து தாவரங்கள் பெறக் கூடிய நோய்களைக் குறித்து அரிய ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார். பறங்கிப் பேட்டையில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சேஷையா கடல் நீர் பொங்கிக் கலக்கும் கழிமுகப் பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துகிறார். இவற்றோடு பௌதிக-இராசாயனத் துறையில் ஈடுபட்டுள்ள டாக்டர் சாந்தப்பன், இரசாயன நுண்-தொழில் துறையில் முயன்று வரும் டாக்டர் லத்தா, இந்திய நுண்-தொழில் நிலையத் தலைவரான டாக்டர் ஸேன் குப்தா ஆகியோரும், துணைவர்கள் ராமசேஷன், சம்பத், முதலியோரும் குறிப்பிடத் தக்கவர்கள். இன்னும், குறிப்பிட வேண்டிய அறிஞர் பலரை இங்கே கூற இடம் இல்லை.

தொழில் துறை ஆராய்ச்சிகள் முதலியவை

இரும்பு, எஃகு முதலிய உலோக ஆராய்ச்சிகள் ஜாம்ஷெட்பூரிலும், நுண்ணுயிரியல் ஆராய்ச்சி பிம்ப்ரியிலும்,ஸீபா கம்பெனியின் ஆராய்ச்சிகள் பம்பாயிலும், கால் நடை விவசாயம் முதலிய ஆராய்ச்சிகள் கோயம்புத்தூரிலும்,பிறஇடங்களிலும், நடக்கின்றன. பாற்பண்ணை, கோழிப்பண்ணை, முதலியவையும், பொருள்களின் தர ஆய்வு நிலையமும் (டில்லி), வான - நிலை - ஆய்வு நிலையங்களும், ஹைதராபாத்தில் உள்ள போஷணை ஆராய்ச்சி நிலையமும், இன்னும் மிகப் பலவும், நமது நாட்டு மக்களின் நலத்தை நாடியே அமைக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர, வேறு எத்தனையோ வகையான பெரு முயற்சிகளும் விஞ்ஞானத்தை ஒட்டி நிகழ்த்தப்படுகின்றன.

டாக்டர் சதாசிவம்

நெய்வேலி பழுப்புக் கரி, மண்ணெண்ணெ, வடித்துப் பிரித்தல், சோப்பு முதலியவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள், பற்பல வகையான அற்புதக் கருவிகளை அமைப்பதற்கான ஆய்வுகள், நம் பொருட்டே செய்யப்படுகின்றன. அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, முதலிய நாடுகள் அளித்துவரும் உதவி பெரிது.

நமது கடமை

நமது தாய் நாட்டின் மக்களாகிய நாம் அனைவரும் இந்த முயற்சிகளையும், இவற்றை நடத்துவோரையும், பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், விஞ்ஞான மன நிலை நமக்கு ஏற்படக் கூடும். அது நமது பண்பை உயர்த்தும். நாட்டின் வளத்தைப் பெருக்கும். அரசியல் நிலையையும் சீராக்கும். நமது நாட்டை உலகப் பெரு நாடுகளோடு முன்னணியில் கொண்டு நிறுத்துவதற்கு விஞ்ஞானமே தலை சிறந்த துணை. ❋

உபயம் – தினமணி



கலைமான்

குச்சி போன்ற கால்கள் — அதுவோ
குளம்பு உள்ள மிருகம்
உச்சி மீதில் கொம்பு — இரண்டு
உயர நோக்கி வளரும்.

வேக மாக ஓடும் — அதில்
வேங்கைப் புலியும் தோற்கும்
தேகம் செம்மண் வர்ணம் — அதில்
சின்ன வெள்ளைப் புள்ளி.

புல்லும் இலையும் தின்னும் — காட்டின்
புதரில் மறைந்து வாழும்
கள்ள மில்லா மிருகம் — தம்பி
கலைமான் என்றே அறிவாய்.

— வண்ணமுத்து

'PREMA'

WATER METERS

MANUFACTURED BY

KOVO

CZECHOSLOVAKIA

1½" to 8" SIZES AVAILABLE

EX-STOCK OR INCOMING SHIPMENTS

(FOR ACTUAL USERS ONLY)

SOLE SELLING AGENTS IN INDIA

HANSRAJ GUPTA & CO. PRIVATE LTD.

77/1, MAHATMA GANDHI ROAD,

CALCUTTA-9

TELEPHONES: 343077, 228224

With Best Compliments

from

THE NAGPAL WOOLLEN MILLS

PROPRIETORS :

KARAMCHAND THADARAM,

ATLAS MILLS COMPANY, REAY ROAD

BOMBAY-10.

●

MANUFACTURERS OF HOSIERY

KNITTING & WEAVING YARN

●

Gram: 'NAGPAL'

Phone: Office: 42955
Mills: 42529

வெண்ணிலா

❋

வெள்ளிக்கப்பல் போல் மிதக்கும்
வெண்ணிலாவே
அங்கு துள்ளிவர வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
நள்ளிரவி லேமிளிரும்
வெண்ணிலாவே
உன்றன் நட்பைப்பெற ஆசை கொண்டேன்
வெண்ணிலாவே
கள்ளமில்லாமல் சிரிக்கும்
வெண்ணிலாவே
அந்தப் பிள்ளையுள்ளம் வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
கிள்ளை போலக் கொஞ்சி வரும்
வெண்ணிலாவே
இந்தக் கீழ்மை நிலை வேண்டுகிலேன்
வெண்ணிலாவே !
உலகத்துக் கப்பாலே
வெண்ணிலாவே
நானும் உன்னைப்போல வாழவேண்டும்
வெண்ணிலாவே
பலகற்றும் பயன் என்ன ?
வெண்ணிலாவே
பந்த பாசமற வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
கலகப் புயல் நடுவினிலே
வெண்ணிலாவே
உன்போல் கலக்கமின்றி இருக்க அருள்
வெண்ணிலாவே
அலையின் மிசை எழும்பிவரும்
வெண்ணிலாவே
அந்த அற்புத நிலை விழைந்தேன்
வெண்ணிலாவே.

— ஹா. கி. வாலம்

Selective Advertising Means

RICH DIVIDEND

❋

NORTHERN RAILWAY OFFERS YOU

VALUABLE SITES

At

RAILWAY STATIONS

For

HOARDINGS,

POSTERS,

NEON SIGNS ETC.

❋

For Full Particulars Write to:

PUBLIC RELATIONS OFFICER

NORTHERN RAILWAY

State Entry Road,

NEW DELHI.

நன்றி . . .

நமது "சுடரி"ன் 12-ஆவது மலர், சத்தியமூர்த்தி மலராக வெளிவருகிறது, அதற்கேற்ப திரு. சத்தியமூர்த்தி அவர்களைப்பற்றி பல பெருமக்கள் வழங்கிய கருத்தோவியங்கள் மலரில் அடங்கியுள்ளன. வேறு பல கட்டுரைகள், கவிதைகள், கதைகள் மலருக்கு மேலும் நிறைவைத் தருகின்றன.

"சுடர் வெளியீட்டையொட்டி, இந்த ஆண்டு சிறுகதை, கவிதை, கதைப்போட்டி ஒன்றையும் சங்கம் நடத்தியது. பரிசு பெறும் கருத்தோவியங்கள் இந்த மலரில் இடம் பெறுகின்றன. தலைநகர் அன்பர்கள் மட்டும் போட்டியில் கலந்து கொண்டனர்.

திரு. சத்தியமுர்த்தி அவர்களது புதல்வியார் திருமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரிய கட்டுரை ஒன்றை அளித்திருக்கிறார்கள்.

துவக்கத்திலிருந்து உற்சாகமூட்டி, பல வகைகளில் உதவிகள் செய்து மலர் வெளியீட்டிற்குத் துணை புரிந்துவந்தவர் 'ஆனந்த விகடன்' அதிபர் திரு. வாசன் அவர்கள். மலரின் முகப்போவிய மூவர்ண பிளாக்கும் மற்றும் பல பிளாக்குகளும் திரு. வாசன் அவர்களது உபயம்.

அரசாங்கத்தினரும், வணிகத்துறை பெருமக்களும் ஏனைய தொழிற்துறையினரும் விளம்பரங்கள் வழங்கி உதவியளித்தனர்.

மலரின் வெற்றிக்குக் காரணமாக இருந்த திரு. பாலன், திரு. ஏ. ஜி. வி. சுப்பிரமணியம், திரு. இராகவன், திரு. இராமசுவாமி, திரு. எஸ். ஸ்ரீநிவாசன், திரு. எம். பாலசுப்பிரமணியம், திருமதி இந்திராணி ஆகியோரது சேவை குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீ பி. ஜி. சுந்தரராஜன் அரிய விஷயங்கள் சில தந்தார். மலருக்கான வேலைகளைச் சென்னையில் கவனித்து வந்தவர்கள் 'சுடரி'ன் நிர்வாக ஆசிரியர் திரு. தி. கோ. அனந்தஸ்வாமியும் திரு. கே. எஸ். ஜம்புநாதன், அவர்களும்.

"சுடரை"த் தமது சொந்த வெளியீடாகவே கருதி அழகுற அச்சிட்டுத் தந்து உதவியவர் 'இமயப் பதிப்பக'த்தின் உரிமையாளரான திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள்.

போட்டிகளுக்கு நடுவர்களாக இருந்து கருத்தோவியங்களைத் தேர்ந்தெடுக்க உதவிய அன்பர்கள் "சுடர்" ஆசிரியர் விளம்பரக் குழுவில் பணிபுரிந்த அன்பர்கள் இவர்களது சேவை மிகப் பெரிது.

இந்தத் தமிழன்பர்கள் அனைவரின் ஊக்கத்தையும், முயற்சியையும் நயந்து பாராட்டுகிறோம். எங்கள் இதயங்கனிந்த நன்றியை அவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது எல்லா முயற்சிகளுக்கும் ஊக்கம் தந்து உதவிவரும் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

— தில்லித் தமிழ்ச் சங்கச் செயற் குழு.

With Best Compliments

from

INTERADS

4/5-B, ASAF ALI ROAD,

NEW DELHI.

Phones: **271382 & 272565**

BOMBAY — CALCUTTA — JULLUNDUR & LONDON

With the Compliments

of

✻

THE EAST ASIATIC Co. (India) PVT. LTD.

BOMBAY - MADRAS - DELHI - CALCUTTA

DO YOU HAVE
A
SAVINGS ACCOUNT
WITH

The Indian Overseas Bank ?

● WE OFFER FRIENDLY, HELPFUL & EFFICIENT SERVICE

●● YOU CAN START WITH AS LITTLE AS Rs. 5/- NO ACCOUNT IS TOO SMALL FOR US

●●● YOUR MONEY EARNS INTEREST AT 3% PER ANNUM

●●●● YOU CAN WITHDRAW MONEY THRICE A WEEK

Call today for full particulars from your nearest branch

M. CT. MUTHIAH
Chairman.

S. R. V. ARASU
General Manager.

Contains world-famous G-11* that is deodorant.

* Trade Mark of L. Givaudan et Cie., S.A.

நூலகங்களுக்கு ஏற்ற

சிறந்த தமிழ் நூல்களுக்கு...

புதிய வெளியீடுகள்

ராதா
— தாரா சங்கர் பானர்ஜி

அவசரம், டாக்டர்!
டாக்டர்
ரத்தினவேலு சுப்பிரமணியம்

ராய் எழுதுகிறார்
— வை. சாம்பசிவம்

கொய்யா மலர் ,,

ஒதிசியம்
— மகாகவி ஹோமர்

துணைவி
— ஆண்டன் செகாவ்
— டி. என். இராமச்சந்திரன்

அழகுச் சிறுமி
— ஆழி. வே. இராமசாமி

விடுமுறை வந்தது! ,,

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம்

கிளை: 61, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

விலைப்பட்டிக்கு எழுதுக.

நிதி தாரீர்!

1946 ஆம் ஆண்டு ஜனவரிமீ *1*௳ முதல் தில்லித் தமிழ்ச் சங்கம் தலைநகரில் தமிழ் மணம் வீசும்படி அரிய பணி செய்து கொண்டிருக்கிறது. சங்கத்தின் பல்வேறு பணிகளின் விபரங்கள் வாசகர்களுக்கெல்லாம் தெரியுமென்றே நம்புகிறோம். *1000* புத்தகங்களுடன் தொடங்கிய நூலகத்தில் இப்பொழுது *4000* புத்தகங்களுக்கு மேலிருக்கின்றன. வாசகசாலையில் அநேகர் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளில் தினசரிகள், வாரப் பத்திரிகைகள், மாத சஞ்சிகைகள் முதலியன வாசித்துப் பயனடைகிறார்கள். சங்கத்தின் புகழ் ஓங்கி நிற்கிறது. ஆனால் ஒரே ஒரு குறையிருக்கிறது – அது இட வசதிக் குறைவுதான். சங்கத்துக்கென்று ஒரு கட்டடம் நிர்மாணிக்க வேண்டுமென்பது எங்கள் அவா. கட்டட நிதியொன்று ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழகத்தில் செல்வம் படைத்தவர்கள் தாராளமாய்ப் பண உதவி செய்து ஊக்குவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் சங்கம் உதவிக்குகந்த தென்பதை மத்திய அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு இருப்பதை வருமான வரி இலாகாவின் கடிதத்திலிருந்து (பக்கம் 7) அறியலாம். சங்கத்துக்குக் கொடுக்கும் நன்கொடைகளை, வரி கொடுக்கக் கட்டுப்பட்டவர்களின் நியாயமான செலவாக அவ்விலாகாவினர் கருதுவார்கள்.

நன்கொடைகள் அனுப்புகிறவர்கள் செக்காகவோ, மணி ஆர்டர் மூலமோ அனுப்பலாம். செக்குகளையும் மணி யார்டர்களையும் ''காரியதரிசி, தில்லித் தமிழ்ச் சங்கம், பாராளுமன்ற வீதி, புது தில்லி – *1*.'' என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

15–8–63. தில்லித் தமிழ்ச் சங்க செயற்குழு.

INDEX TO ADVERTISERS

Name	Page
A. I. Handicrafts Board ...	152
Baidyanath Ayurved ...	146
Balussery ...	124
Binny ...	135
Bliss and Cotton ...	156
Brittania ...	154
Cardboard Box ...	132
Careways Travel ...	110
Central News Agency ...	87
Chanana ...	98
Chennimalai ...	114
Dalmia Cements ...	168
D. G. L. (P) Ltd.	3rd Cover
Dhrangadhra ...	50
Dunlop ...	116
East Asiatic ...	188
Escorts Ltd ...	150
Everest Hand-looms ...	90
Foton Films ...	108
Geep ...	160
Gemini Studios	4th Cover
Ginger Tonic ...	138
Godrej ...	189
Golden Tobacco ...	174
Hadensa ...	91
Harvey A and F.	2nd Cover
Hindustan Motors ...	139
I. C. I. Ltd. ...	118
Imaya Pathippagam ...	190
Imperial Tobacco ...	100
India Cements ...	70
Indian Overseas Bank ...	189
Interads ...	188
Iris Ink ...	76
Jay Engineering ...	144
Jeewanlal (1929) Ltd. ...	94
Kalaimagal ...	158
Kapur-di-Hatti ...	170
Madras Cements ...	136
Madras Hotel ...	86
Mahindra and Mahindra ...	43
Meenakshi Group ...	169
Mettur Chemicals ...	112
Modi Mills ...	122
Mohd. Ebrahim ...	74
Mount Mettur ...	84
Nagpal ...	184
National Savings ...	2
Nestler Boilers ...	107
Nestles Products ...	142
Northern Railway ...	186
Pankajam Stores ...	55
Prema Meters ...	183
Racmann ...	128
Rallis (India) Ltd. ...	66
Sakthi Pipes ...	62
Smarts ...	172
Southern Railway ...	180
South India Boarding ...	15
Standard Motors ...	178
Swadesamitran ...	80
Swastik ...	165
Tamil Nadu Handloom ...	3
Tata-Fison ...	148
Toshniwal ...	180
Union Dairy ...	1
Voltas ...	120
White Horse Soap ...	16
Zenith Tin Works ...	64

ADDRESS FOR

Service of notices, marriage invitations and

despatch of horoscopes of lonely hearts

(South Indian bachelors employed in Northern India)

T. G. ANANTASWAMI,

Regd. Trade Marks Agent,

38/Vth Trust Cross St., Madras-28.

Edited and Published by Sri T. G. Anantaswami, for *Delhi Tamil Sangam, New Delhi*. Printed by T.N. Veeraraghavan, at *The Thara Press, Nagapattinam.*

HIGH PRECISION

TOOL ROOM LATHE

TYPE SSSC - 280



Manufactured under licence of WEILERS, of West Germany, rigidly conforming to Dr. Schlesinger's specifications.

★ A wide range of speeds and feeds to ensure the maximum versatility.

Manufactured by

PROTOTYPE PRODUCTION-CUM-TRAINING CENTRE

(Indo-German Collaboration)

OKHLA, NEW DELHI

Marketed by

THE NATIONAL SMALL INDUSTRIES CORPN. LTD.

(Marketing Division)

NEW DELHI ● BOMBAY ● CALCUTTA ● MADRAS

NEWFIELDS

எங்கள் தமிழோசை எல்லோர்க்கும் இனிமை தரும்

ஜெமினி
ஸ்டுடியோஸ்

இன்பமளிக்க இனிய
படங்களைத் தயாரிப்பவர்கள்

COVER PRINTED AT GNANODAYA PRESS, MADRAS-1